# இஸ்லாமியக் கலைகள்



09 . 151
ம்ஸீ
L|PR

முஹம்மது சரீப் - றம்ஸீன்

# "இஸ்லாமியக் கலைகள்"

(ஆய்வு இலக்கியம்)

முஹம்மது சீப் - றம்ஸீன்

மதார் உம்மா வெளியீடு

Title :- "Islamiyak - kalaikal"

Subject :- Research literature

Author:- Mohamed Shariff Ramzeen
B.A (Cey) S.P. Maths (Tr)
Paddanichchipuliyamkulam
Vavuniya
Sri Lanka

Number of Pages:- 125

First Edition :- November 1999

Print by :- Jeyniga Centre, Vavuniya.

Copy Right :- Mrs. R. Ramzeen
B.A (Cey) SP. Maths (Tr)
Paddnichchipuliyankulam
Vavuniya- Srilanka

Price :- 100/=



# அணிந்துரை

**காவியமாமணி**
**தமிழ்மணி அகளங்கன்**

**வவுனியாவில்** இருந்து வவுனியா எழுத்தாளர் நூலிற்கு ஆக்கமாக **வெளிவரும்** இஸ்லாமியக் கலைகள் நூலிற்கு அணிந்துரை வழங்குவதில் **அளவு கடந்த** மகிழ்ச்சி அடைகின்றேன்.

வவுனியாவைச் சேர்ந்த இஸ்லாமிய எழுத்தாளர் ஒவருவரின் முதல் **நூலும்** இஸ்லாம் சம்பந்தமான முதல் நூலும் இதுவேயாக இருக்கும் என்று **எண்ணி** மகிழ்கின்றேன்.

என் மகிழ்ச்சிக்குக் காரணங்கள் நிறையவே இருக்கின்றன. 'இஸ்லாமியக் **கலைகள்**' என்னும் இந்நூலை எழுதியவர் வவுனியா பட்டாணிச்சி புளியங் குளத்தை சேர்ந்த ஜனாப் முஹம்மது சரீப் றம்ஸீன் அவர்கள் கலைப் பட்டதாரி மட்டுமல்ல , கணிதத்தில் சிறப்பு பயிற்சி பெற்ற சுறுசுறுப்பான திறமை மிக்க நல்லாசான்.

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளத்தில் உள்ள வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கணித ஆசிரியராக கடமையாற்றும் அவரின் கணிதப் பயிற்சிக்கான தொலைக் கல்விப் போதனாசிரியராக நான் கடமையாற்றிய காலத்திலிருந்து அவர் என்னோடு நெருக்கமான பழக்கத்தை வைத்துக் கொண்டார். பின்பு இப்பாடசாலையிலேயே இருவரும் ஆசிரியர்களாகக் கடயைமாற்றியதால் நெருக்கம் அதிகரித்தது.

அவருக்குள்ளிருந்து இலக்கிய தாகத்தையும், எழுத்தார்வத்தையும் ஆற்றலையும் , எதையும் ஆய்வுக் கண்ணோடு பார்க்கும் தன்மையையும் கண்டு அவரை இத்துயைில் உற்சாகப்படுத்துவதில் முன்னின்றேன்.

இன்று அதன் வெற்றியை அனுபவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவப் பருவத்திலேயே கட்டுரை , கவிதை , சிறுகதை , பேச்சு விவாதம் , நாடகம் முதலான பல துறைகளிலும் ஈடுபட்டு மாவட்டம் மாகாண மட்டங்களில் முதலிடங்களைப் பெற்ற இவர் ஜனாதிபதி இளைஞர் விருது முதலான பல பரிசில்களைப் தேசிய மட்டத்திலும் பெற்றிருக்கின்றார்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை ஒட்டி அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் (1997) இவர் 1ம் இடத்தைப் பெற்ற பின்பு அவரது திறமைகளை பலரும் கண்டு கொண்டனர்.

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் , தங்கப்பதக்கம் சூட்டி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. வவுனியா நகர சபை , வவுனியா முஸ்லிம் மகாவித்தயாலயம் , வ/அரபா முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவையும் பொன்னாடைகள் போர்த்திக் கௌரவித்தன.

பல மாணவர்களையும் கலை இலக்கியத்துறையில் ஈடுபடுத்தி மாவட்ட மாகாண, தேசிய போட்டிகளில் பரிசில்களை வெல்லும் தகுதி படைத்தவர்களாக உருவாக்கி வரும் ஜனாப் றம்சீன் அவர்களது நூல் வடிவம் பெறும் முதல் ஆக்கம் இதுவே ஆகும்.

இஸ்லாமியக் கலைகள் சம்பந்தமன பல்வேறு கட்டுரைகளை பல்வேறு தலைப்புகளில் ஆராய்ந்து எழுதி அமைக்கப்பட்ட இந்நூல் இஸ்லாமியக் கலைகள் சம்பந்தமாக இஸ்லாமியர்கள் அல்லாதவர்களும் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றது.

இஸ்லாமியக் கலைகளுக்குள் இலங்கை முஸ்லிம்களின் கலைப் பாரம்பரியம் தனியாக ஆராயப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருப்பது ஒரு சிறப்பம்சம் எனக் கொள்ளத்தக்கது.

இதில் மாப்பிள்ளை வாழ்த்து என்ற ஒரு பகுதியில் மட்டக்களப்பு கலைப்பாரம்பரியம் ஒன்று பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

“பெண்வீட்டுக்கு மாப்பிள்ளை வந்து சேர்ந்தவுடன் , அங்கு முன் வாசலில் அமைக்கப்பட்ட பந்தலின் கீழ் ஓர் ஆசனத்தில் அவர் அமர்ந்த பின்னர் ஒருவர் வாழ்த்துப்பாட ஆரம்பிப்பார். பந்தலின் கால்கள் வண்ணபபட்டுப் புடவைகளால் சுற்றப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். தென்னங்குருத்தோலை, இளநீர்க்குலை , பூவரி என்பனவற்றாலும் சோடிக்கப்பட்டிருக்கும்.

மாப்பிள்ளை வாழ்த்தில் அவரின் சிறப்பு பெண்ணின் சிறப்பு வழங்கப்படும் சீர்வரிசைகள் , சபையிலே இருக்கும் முறைகாரார் சிறப்பு என்பவற்றையெல்லாம் சிலாகித்துப் பாடுவார் புலவர். இவ்வாறு பாடிக் கொண்டு போகும் போது அவருக்குப் பல பரிசுகள் வழங்கப்படும். பொன்னாடையும் போர்த்தப்படும். அச்சால்வையினால் மாப்பிள்ளையின் முகத்தில் வீசி புகழ் படிப்பார்.

மாப்பிள்ளையுடன் வருபவர்கள் வெடிகொளுத்துவதுடன் மௌலிது பாடலும் பாடும் வழக்கமும் கொண்டிருந்தனர். வவுனியா போன்ற பிரதேசங்களில் மேள தாள வாத்திய வரவேற்பு மாப்பிள்ளைக்கு அளிக்கப்பட்டிருந்தது.



தனக்கு அளிக்கப்படும் பரிசு நிறைவுடையதாய் இல்லாத பட்சத்தில் புலவர் மனக்குறையைப் பாடலிலே வெளிப்படுத்துவார். நான் மணம் நொந்து போவது சரியல்ல என ஆரம்பித்து , மாப்பிள்ளையின் தரத்தையும் சிறிது குறைத்து குறை கூறத் தொடங்குவார். உடனடியாகவே மணமக்களின் உறவினர் அவருக்கு மேலும் பரிசுகளை வழங்குவர். அவ்வாறு கிடைத்தவுடன் புலவர் “யாரப்பா இந்த மாப்பிள்ளை எனக் கேட்டுக் கேட்டு மிக ஏற்றி புகழ்வார். இப்பழக்கமே பிற்காலததில் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தலாக மாறியது”

இஸ்லாமியப் பெருங்கவிஞராகிய உமர்கய்யாம் அவர்களது தத்துவப் பாடல்களின் விளக்கம் பெருங்கவிஞர் உமர்கய்யாம் எனும் தலைப்பில் ஆராய்நது எழுதப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை காத்தான் குடியில் பிறந்த அப்துல் காதர் லெப்பை அவர்கள் உமர்கய்யாமின் ருபாய்யாத் கவிதைகளை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

அம்மொழி பெயர்ப்பில் இருந்து ஜனாப் றம்ஸீன் அவர்கள் சில சுவையான பகுதிகளை எடுத்துக் காட்டியள்ளதோடு அப்துல் காதர் லெப்பை பற்றிய குறிப்பையும் தந்துள்ளார்.

ருபாய்யாத்தை தமிழில் பாடிய முன்னவர்களான கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ச.து.சு. யோகியார் ஆகியோரின் பாடல்களுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றியும் ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார்.

“ஆடும் பந்து தெரிந்திடுமோ
ஆட்டந் தோல்வி வெற்றியதைச்
சாடும் வீரன் அடிக்கேற்பச்
சார்வ தல்லால் வலமிடமாய்

ஒடும் படியாய் நிமீதில்
உருட்டி விட்டா னுன்னையவன்
நாடும் ஒருவன் நன்கறிவான்
நாளும் அறிவான் நலமறிவான்”

இப்பாடல் தத்துவக் கருத்தச் செறிந்த பாடல். உமர்கய்யாமின் பாடல்களில் மேலோட்டமாக பார்க்கும் போது உலகியல் தோன்றினாலும் ஆழமான ஆன்மீகக் கருத்தை அவை கொண்டிருப்பதைப் பலரும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

"இசையும் இஸ்லாமியரும்" என்ற கட்டுரையில் இஸ்லாத்திற்கும் இசைக்கும் உள்ள தொடர்பைப் பின்வருமாறு ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

இசையின் ஆத்மீக விளைவுகள் பற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். மனித இதயத்தின் சர்வ சக்தியான இறைவன் இரகசியப் பொருளான நெருப்பு பொறியொன்றைப் புதைத்து வைத்துள்ளான். அது பாடலாலும் இசையாலும் கிளர்ந்தெழுந்தது சாதாரண நெருப்பு பஞ்சில் பற்றிக் கொள்வது போல இதயத்தைப் பற்றி எரியச் செய்கின்றது. அதனால் மனிதன் தன்னை மறந்து பரவச நிலைக்கு ஆளாகி விடுகின்றான். இந்த இசை நாதம் நம் ஆத்மாக்களின் உலகம்( ஆலமுல் அர்வாஹ்) என்கிறோமே அந்தச் சௌந்தரிய உலகிலிருந்து எழும் சப்தத்தின் எதிரொலியாய் இருக்கின்றது.

பொது விஞ்ஞானம் , இயற்கை அமைப்பு , வானியற் கலை , கணிதம் , இரசாயனவியல் , மருத்துவக்கலை முதலான பல துறைகளிலும் இஸ்லாம் உலகுக்கு வழங்கிய பங்களிப்பு பற்றி கட்டுரை ஆசிரியர் தரும் தகவல்கள் மிகவும் சிறப்பாகவுள்ளன.

மருத்துவக்கலை வளர்ச்சியில். முஸ்லிம்களின் பங்களிப்பு என்ற தலைப்பிலான கட்டுரையில் அவர் குறிப்பிடுவதை இங்கு நோக்குவோம்.

இந்த வகையில் முஸ்லிம்கள் மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு துரித வேகத்தில் முன்னேறிச் செல்லும் வேளையில் மேற்குலகம் இத்துறையில் மிகவும் பின்தங்கி காணப்பட்டது. உதாரணமாக தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தனியான மருத்துவ மனைகளில் வைத்து அரச செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த வேளையில் வலித் பின் அப்துல் மலிக் காலத்தில் , பிரான்சிய மன்னர் அந்நோயாளர்கள் அவர்கள் செய்த பாவம் காரணமாகவே இவ்வுலகில் கடவுளின் சாபத்திற்குள்ளாகி நோயுற்றிருப்பதாக கூறி அவர்களைத் தீயிட்டு எரிக்கும் படி கட்டளையிட்டான்.

மன நோயாளர்களைப் பொறுத்தவரை ஐரோப்பியர் அவர்களைப் பாவிகள் எனக் கருதி அவர்களின் கால்களைச் சங்கிலியால் பிணைத்து உணவு உடை கொடுக்காது வதைத்த வேளை இஸ்லாமிய உலகில் மனநோயாளர்கள் அனுதாபத்துடன் நோக்கப்பட்டு நபி மருத்துவ முறைப்படி சிகிச்சையளிக்கப்பட்டனர்.



இவர்களுக்கென தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு அறையிலும் இரு பணியாளர்கள் இருந்து அவர்களைப் பராமரித்தனர். தினமும் அவர்களுக்கு தூய உணவும் உடையும் வழங்கப்பட்டன. இறைவழிபாட்டில் ஈடுபடவும் குர்ஆனைச் செவியுரவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

பல் துறைகளிலும் ஆற்றல் மிக்கவரான ஜனாப் றம்ஸீன் அவர்களின் இந்நூல் இஸ்லாமிய நாகரீகம் கற்கின்ற மாணவர்களுக்கு மட்டுமன்றி பலருக்கும் பயனளிப்பது உறுதி.

ஜனாப்றம்ஸீன் அவர்களின் இப் பெரு முயற்சி இறையருளால் பெருவெற்றி பெற என் நிறைமன வாழ்த்துக்கள்.

பம்பைமடு
வவுனியா.

அகளங்கன்
(என்.தர்மராஜா)

## வாழ்த்துச் செய்தி
## க.கணேஷ் (அவர்கள்)
## வவுனியா அரச அதிபர்

ஜனாப் முஹம்மது சரீப் றம்ஸீன் (B.A) (Cey) Sp Maths (Tr) அவர்கள் வன்னி மண்ணில் ஒளிச்சுடராகப் பிரகாசிக்கும் இலக்கிய வாதிகளில் முக்கியமானவர். இஸ்லாமியர்களின் கலை , இலக்கியம் , பாரம்பரியம் , அறிவியல் , பண்பாடு , போன்ற அம்சங்களை மிக அழகாக இஸ்லாமியக் கலைகள் எனும் ஆய்வு இலக்கிய நூல் எடுத்துக் காட்டுகின்றது.

இந்நூலானது இஸ்லாமிய சகோதரர்களுக்கும் ஏனைய பிற சமய சகோதரர்களுக்கும் வரப்பிரசாதமாய் அமைவதில் ஐயமில்லை. எனவே இந்நூலானது இலக்கியத்துறையில் பிரகாசமாக சுடரொளி பரப்பி சமூகத்தவர்களிடையே புரிந்துணர்வு உண்டாக எனது மனமார்ந்த நல்லாசிகள் வாழ்த்துக்கள்.

இஸ்லாமியரது இலக்கியப் படைப்புக்களில் இந்நூலுக்கு தனிச்சிறப்பிருக்கும். இந்நூலாசான் இலக்கியத்துறையில் பிரகாசமான அத்தியாயத்தை உருவாக்குவார் என்பதில் சந்தேகமில்லை என்று கூறி மீண்டும் என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.



## நல்லாசானுக்கு நல்லாசிச் செய்திகள்

**இ.விசாகலிங்கம்**
வலயக் பணிப்விப்பணிப்பாளர்,
வவுனியா.

ஜனாப் முஹம்மது சரீப் றம்ஸீன் (ஆசிரியர்) வன்னி மண்ணில் ஒளிச்சுடராகப் பிரகாசிக்கும் இலக்கிய வாதிகளில் குறிப்பிடத்தக்கவர். "சமூகங்கள் ஒவ்வொன்றிலும் பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் , கலாச்சாரங்கள் , பாரம்பரியங்கள் , வாழ்க்கை நெறிமுறைகள் என பண்டு தொட்டு இன்று வரை பேணப்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். இவற்றைக் கொண்டு தான் ஒவ்வொரு சமூகமும் தத்தம் வரலாற்று தொன்மையை , தனித்துவத்தை, பெருமையை , உயர்வினை , நிலைநாட்ட முயற்சிக்கின்றது. இந்த வகையில் இஸ்லாமியரின் மேற்குறிப்பிட்ட பண்புகளை "இஸ்லாமியக் கலைகள் ஆய்வு இலக்கிய நூல் எடுத்துக் காட்டி நிற்கின்றது."

இந்நூலானது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் மற்றும் அவர்களின் பாரம்பரியத்தையும் மிகத் துல்லியமாக எடுத்தியம்பியதுடன் உலகளாவிய முஸ்லிம்களின் அறிவியல் சார்ந்த கலைப்பாரம்பரியங்களையும் இலக்கியத்துறையில் ஒளிச்சுடராக எடுத்தியம்புகின்றது. என்பதில் ஐயமில்லை.

இந்நூல் எழுதிய "நல்லாசான்" என் வலயத்தில் கடமை புரியும் சிறந்த ஒழுக்கமுள்ள விழிப்புணர்வு உள்ள ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது எனவே இந்நூலுக்கு நல்லாசிச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

# என் இதய உரை

உறங்கும் எரிமலைகளைப் பேனா என்கின்ற ஒற்றை சுட்டி விரலைக் கொண்டு உசுப்பிவிடும் எனது கன்னி முயற்சி இது. பல நூற்றாண்டுகளின் கலை, கலாசாரம், பாராம்பரியம், அறிவியல், பண்பாடு போன்ற பரப்புக்களை என் சின்னப்பேனா முனையின் ஒரு சிறுதுளி மையால் மட்டுமே ஈரப்படுத்தமுடியும்.

எனினும் இறந்த காலங்களில் மேல்பறக்கின்ற ஒரு பறவையின் உச்சிப் பார்வையில் இந்நூலை நான் பார்த்து விட ஆசை. ஒரு ராஜாளி உயரத்தைப் பறந்து எட்டவில்லை ஆயினும் ஒரு ஈசல் பறக்கும் அளவு உயரத்திற்கு பறந்தேனும் இ.ந்நூலைப் பார்க்க என் இதய ஆசையாகும்.

ஒரு சமூகம் எப்படி வாழ்ந்தது என்ற கேள்வி இப்போது தேவையில்லை. அச்சமூகம் எப்படி அடுத்த சமூகத்திற்கு நல்லுதாரணமாக திகழ்ந்தது என்பது தான் இப்போதைய கேள்வி. இந்நோக்கத்தை அடையவே என் இலட்சிய பயணம் இரண்டு வருடங்கள் எடுத்துக் கொண்டது.

இன்று மேற்கத்திய நாகரீகத்தை மெச்சிப்புகழுகின்றோம். ஆனால் அதற்கு அடித்தளமிட்டவர்கள் யாராக இருக்கலாம்? என்ற வினாவுக்கு விடையாக இந்நூல் உங்கள் முன் புறப்பட்டு வருகின்றது.

. வரலாறு படைத்த வல்லவர்களில் முஸ்லிம்களே! முதன்மையானவர்கள் என்ற உண்மையை எடுத்துக் காட்டவும் மனித குல மேம்பாட்டிற்கு அவர்கள் சேவை தேவை என்ற உண்மையை உணர்த்தவும் இந்நூல் முற்பட்டுள்ளது. ஆனால் ஒரு குறை, எம்முன்னோர்கள் தந்த அற்புதக் கனியை நம் பின்னோர்கள் சுவைக்கவில்லை. என்பதுதான் மனவேதனையாகும்.

எனவே என் இதயப்பரப்பில் கூவிக் கொண்டிருந்த குயில் இப்போதுதான் பறக்கப் போகின்றது. இதற்காக உறுதியுடன் துணை நின்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

என் இதய உரையில் இறுதி வசனம் என் இதய பூமியின் ஊற்றெடுத்த அருவிகள் இப்போதுதான் அணையில்லாமல் நடைபோடப்போகின்றது.

என் இலட்சியம் விளக்கு எரிந்து வெளிச்சம் கொடுப்பது மட்டுமல்ல இன்னும் பலவிளக்குகளை அது எரியத் துணை புரிய வேண்டும். இவ் இலட்சியம் மனிதகுல மனங்களில் எப்போதும் மலர்ந்து பூத்துக் குலுங்க வேண்டும். கல்வியிலும் சிந்தனையிலும் உறங்கிக் கொண்டிருக்கும் மக்களை (மாணவர்களை) எழுப்பி விடும் எந்தன் முயற்சியின் முதற்படியே இந்நூலாகும்.

நூலாசான்.

**(முஹம்மது சரீப் நம்ஸீன்)**



## இவர்களுக்கு என் நன்றி........

RDS பட்டாணிச்சி புளியங்குளம் , வவுனியா.
ப.நோ.கூ சங்கம் வவுனியா.
அமரர் M.J. றஜப்டீன் (Tr)
எஸ்.எச்.எம். ஜெமீல்
புரவலர் நகுலேஸ்வரன்
கவிஞர் கண்ணையா
ஜப்பார் (கல்லூரி முதல்வர்)
முஹம்மது சரீப் (வைத்திய கலாநிதி)
அப்துல் நஸார் (B.A)
பாலசிங்கம் (பிரதி அதிபர்)
அகளங்கன் (தமிழ்மணி)
அப்துல் சமட் (B.A)
சேவாலங்கா கிளை வவுனியா
Dr.M.A.M. கலாநிதி சுக்கிரி
சீ.எம்.ஏ அமீன்
பிலிப்ரோஷன்
திக்குவளை கமால் (ADE) வவுனியா.

"என் தாயின் நினைவில் மலர்ந்த மலர் இது"

**அனைத்து புகழும் அல்லாவுக்கே!**

**நூலாசிரியர்**

**(முஹம்மது சரீப் – நம்ஸீன்)**

# பொருளடக்கம்


* நுழைவாயிலிருந்து உங்களுடன் சில விநாடிகள் ...... i
* உலகின் பல்வேறு நாகரிகங்களுக்கு இஸ். வழிகாட்டியுள்ளது ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் ii
* இஸ்லாமிக் கலைகள் ஓர் கண்ணோட்டம் 01
* இலங்கை முஸ்லீம்களின் குடியேற்றம் கலாசாரம் தொல் பொருள் பற்றி ஆய்வு 10
* இலங்கை முஸ்லீம்களின் கலைப்பாரம்பரியம் 15
* முஸ்லீம்களும் வரலாற்றுக் கலையும் 25
* இஸ்லாமும் கவிதையும் 36
* கவிஞர்களும் இஸ்லாமும் 39
* பெரும் கவிஞர் உமர் கய்யாம் 45
* உலக மகாகவி அல்லாமா இக்பால் 52
* இசையும் இஸ்லாமியரும் 56
* கீழைத்தேய இசைக்கலையும் புகழ் பெற்ற முஸ்லீம் இசைக் கலைஞர்களும் 65
* இஸ்லாமியக் கட்டிடக் கலை 69
* அழகிய இஸ்லாமும் அழகியற் கலையும் 78
* பொங்கும் இஸ்லாமும் பொது விஞ்ஞானமும் 85
* இயற்கை அமைப்பும் அல் குர் ஆனும் 90
* புவியியல் துறைக்கு முஸ்லீம்களின் பங்களிப்பு 95
* வானியற் கலை வளர்ச்சிப் பாதையிலே முஸ்லீம்கள் 10[illegible]
* கணிதக் கலைச் சோலையிலே முஸ்லீம்கள் 10[illegible]
* இஸ்லாமியரும் இரசாயனவியலும் 10[illegible]
* ஜார்ச் சாட்டனின் பகுப்பு முறை 10[illegible]
* மருத்துவக் கலை வளர்ச்சியிலே முஸ்லீம்களின் பங்களிப்பு 11[illegible]
* அறிவியல் பாதையிலே இஸ்லாமிய அரசுகள் 12[illegible]




## நுழைவாயிலிருந்து உங்களுடன் சிலவிநாடிகள் ........!

கலையானது கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் அழகிய கட்டமாக காட்சியளிக்கலாம். ஓவியமாக ஒளிரலாம். இன்னிசையாக இதயத்தை ஈர்க்கலாம். கவிதை , நாடகம் சிறுகதை , பாட்டு , நடனம் போன்றவையாகவும் இருக்கலாம். பேச்சு மொழியாகவும் இருக்கலாம். பிறவாகவும் இருக்கலாம். எனவே வாழ்வானது ஒரு கலையெனலாம். ஒவ்வொரு பிரதேசத்தில் வாழும் மக்கள் அங்குள்ள இறைவனின் இயற்கையைக் கண்டு இன்புற்று அதனை கலைவடிவமாக அம்மக்களே கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

வாழ்க்கையில் களைப்பாறுவதற்கு மகிழ்ச்சியுடன் கிடைக்கும் உன்னதமான நந்தவனங்களே இலக்கியங்கள்! அங்கே தென்றல் உண்டு. உணர்ச்சி அலை உண்டு. உயிர் துடிக்கும் இதயமுண்டு, நெகிழ்ந்து பொங்கி எழும் சுனை உண்டு. நிழல் தரும் மரங்கள் உண்டு , மணம் வீசும் மலர்கள் உண்டு, கண்ணுக்கு இனிய காட்சிகள் உண்டு. சுவைக்க இனிய கனிகள் உண்டு. இதயம் கவரும் இயற்கை உண்டு. நரம்பை சுண்டியிழுக்கும் நட்சத்திரப் பூக்கள் உண்டு. மலரும் சோலையில் காதல் கவிதை பேசும் கிளிகள் உண்டு. நிலாமகள் வருவாள். வருடி விடுவாள். இனி என்ன வேறு வேண்டும்.

வாருங்கள் உள்ளே அற்புதங்கள்<br>
ஆயிரமுண்டு படிப்போம் !!<br>
அதன்படி செயற்படுவோம்!!

## உலகின் பல்வேறு நாகரிகங்களுக்கு இஸ்லாம் வழிகாட்டியுள்ளது. ஐ.நா.செயலாளர் நாயகம். கொபிஅனான்

மனித வரலாற்றில் பல்வேறு நாகரிகங்களுக்கு இஸ்லாம் வரலாற்றுரீதியாக வழிகாட்டியாக இருந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் பாராட்டியுள்ளார்.

மனித வரலாற்றில் இஸ்லாம் உலகின் மாபெரும் மதங்களில் ஒன்றாகும். "உலகின் உயிர் வாழ் நாகரிகங்கள்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்றில் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளரின் இந்த அறிக்கையை மக்காவில் உள்ள உலக முஸ்லிம் லீக் வரவேற்றுள்ளது.

பிரஸ்தாப கலந்துரையாடல் இஸ்லாமியக் கற்கைக்கான ஓர் ஒக்ஸ்போட் நிலையத்தில் நடைபெற்றது.

உலக முஸ்லிம் லீக்கின் செயலாளர் நாயகம் கலாநிதி அப்துல்லா சாலின் அஸ் ஒபெய்ட் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் கருத்துக்கள் தொடர்பாக பாரீசில் வைத்து அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

கொபி அனானின் அறிக்கைகள் ஆறுதலாக இருப்பதாக அவர் சொன்னார்.

அன்னாரின் கூற்றுக்கள் பக்கச் சார்பற்றவை. உண்மையானவை. இஸ்லாமிய ஆராய்ச்சியாளர்களும் இஸ்லாமிய விஞ்ஞானிகளும் இன்றைய ஐரோப்பாவின் பல்வேறு விஞ்ஞானிகளுக்கும் முன்னோடிகளாக இருந்துள்ளார்கள். என்று செயலாளர் நாயகம் தொடர்ந்து தெரிவித்துள்ளார்.

(ஆதாரம் தினகரன் 30.07.1999)

மேலும் அமெரிக்க காங்கிரஸ் தெரிவிக்கையில் இஸ்லாம் உலகின் உன்னத சன்மார்க்கம் ஆகும். கணிதம் , விஞ்ஞானம் , மருத்துவம் , சட்டம், தத்துவ விஞ்ஞானம், கலை இலக்கியத்துறையில் உலகம் முன்னேற்றம் காண வழிகாட்டிய மதம் இஸ்லாம் ஆகும். (ஆதாரம் தினகரன் 10.09.1999)



## இஸ்லாமியக் கலைகள் – ஓர் கண்ணோட்டம் .

அல்லாஹ் மனிதனைத் தனது அதிவிசேடப் படைப்பினமாகவும் இப்புவியில் தனது ஏக பிரதிநிதியாகவும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றான். இப்பாரினில் சகல விடயங்களும் நடைபெறுவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறு பல நுண்ணிய ஆற்றல்களையும் உணர்வலைகளையும் , இரசிக்கும் இரசனையையும் வழங்கவல்ல அல்லாஹ் அவனது அன்புக்குரிய தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழி முறையையும் வாழ்க்கையையும் பயன்படுத்த வேண்டுமென்பது இறைவனது அன்புக்குரிய கட்டளையாகும்.

இஸ்லாமானது இயற்கையில் மலர்ந்து பூத்துக் குலுங்குகின்ற அற்புதமான அழகிய நேர்வழியான மார்க்கமாகும். மனித இனத்தின் அறிவையும், ஆற்றலையும் திறமைகளையும் உள்ளுணர்வுகளையும் எவ்வாறு பல்வேறு வழிகளில் பயன்படுத்த வேண்டுமோ அவ்வாறு பயன்படுத்துவதற்கு இஸ்லாம் இஸ்லாமியருக்கு வழங்கியது மகத்தான் அருட்கொடை என்றால் மிகையில்லை. இந்த இடத்தில் மனித இனத்தின் அழிவுக்காகவும் பல்வேறு வழிகேடான தீமைகளுக்கும் இயற்கை மார்க்கமான புனித இஸ்லாம் அனுமதி தரவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். இந்த வகை வழிகளில் தான் இஸ்லாமியக் கலைகள் கட்டியமைக்கப்படுகின்றன. இந்த வழிகளில் தான் கலைகள் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம் வளர்ச்சி அடைந்து கொண்டே வந்துள்ளது எனலாம்.

இஸ்லாமியக் கலை என்னும் போது இஸ்லாத்தைப் பற்றிய பேச்சுக்களாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அது ஒரு வழிகாட்டியோ உபதேசமோ அன்று. மாறாக அது கலைஞன் தான் காணும் இயற்கைப் பொருட்களை அவதானித்து துல்லியமான முறையில் வெளிப்படுத்தும் உணர்வலைகளே. இது இஸ்லாமிய வரையறைகளை மீறியதாக இருக்கக் கூடாது. வேறு வகையில் இதனை எடுத்துக் காட்டினால் இப்பிர பஞ்சத்தை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் இஸ்லாமியர் கலை வடிவில் வடிவமைப்பதை குறிப்பதாகும்.

கலையானது காலத்தால் அழியாமல் வென்றுவாழும் மனித காவியமாக, கவினுறு கட்டிடமாக பேசும் உயிர்த்துடிப்புள்ள பொற்சிலையாக இதயத்தைக் கவரும் இன்னிசையாக கிளர்ந்தெழும் சமுத்திர அலையாக , பல்வேறு முறைகளில் பரிணமிக்கலாம். மனிதன் அறிவும்

உணர்வலைகளும் உடையவனாக பிணைக்கப்பட்டுள்ளான். அவனது உயரிய சிந்தனையின் உள்ளார்ந்த வெளிப்பாடாக அறிவியல் கலைகளும் , உள்ளுணர்வலைகளின் வெளிப்பாடாக அழகியற்கலைகளும் உருப்பெறலாயின.

உலக வரலாற்று ஏடுகளில் விந்தைகளையும் வியப்புகளையும் பல புரிந்த, ஊரோமர் , கிரேக்கர் , சீனர் , இந்தியர் , பாரசீகர், பண்டைய எகிப்தியர் போன்று இஸ்லாமியரும் கலைத்துறையிலே தமது வரலாற்று முத்திரையை முந்திப்பதித்தவர்களில் முன்னணியில் திகழ்ந்திருக்கின்றனர். பழமை வாய்ந்த பண்டைய கலைகளை பலவற்றைப் புத்துயிர் அளித்து புதுக்கலை களுக்கு புத்தொளி கொடுத்து உலகிற்கு அளித்ததை உலகு இன்று நன்றியுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. இஸ்லாமிய கலைகளும் , நாகரீகமும் , மானிட வாழ்வின் துணைப்பொருட்களை அழகுபடுத்துவதையோ தூய்மையாக்கு வதையோ உரிய நோக்கமாகவும் அதன் குறிக்கோள்களாகவும் கொண்டதல்ல, மாறாக மனித வாழ்வை அழகுபடுத்துவதையும் மென்மேலும் உயர்த்துவதையும் மாபெரும் இலட்சியமாகக் கொண்டதாகும் என்று பிரபல அறிஞர் பிக்தால் சுட்டிக்காட்ட நிற்கின்றார்.

இஸ்லாமானது ஒரு காலாச்சாரமாக, நாகரிகமாக , பண்பாடாக மலர்ந்து மனம் பரப்பிக் கொண்டிருக்கின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் பற்றி நாம் சிந்தித்தால் இஸ்லாம் மிளிர அருட் கொடையாக அண்ணலார் நபிமுஹம்மது (ஸல்) அவர்கள் இப்புவியில் காலடி எடுத்து வைத்த பின்னர் தான் தூய்மையான இஸ்லாமிக் கலைகள் உலகளாவிய ரீதியில் மிக ஆழமாக எட்டிசை எங்கும் வியாபித்து வேரூன்றியதை காணமுடிகின்றது. நபிகளாரின் மரணத்திற்குப் பின்னர் கலீபாக்கள் ஆட்சியில் புனித இஸ்லாத்தை எங்கும் வியாபிப்பதில் பூரண கவனம் செலுத்தினர். அதன் பின்னர் ஒரு நூற்றாண்டு காலமாக உமையாவம்ச ஆட்சியிலும் பொற்கால ஆட்சியென வர்ணிக்கப்படும் அப்பாஸிய வம்ச ஆட்சியும், பின்னர் வந்த சிற்றரசுகள் , மொகால ஆட்சி , உதுமானிய ஆட்சி மற்றும் இஸ்லாமிய மன்னராட்சிகளிலும், கலைகள் வளர்ப்பதிலும் முஸ்லிம்களின் பங்களிப்பை இன்றும் இவ்வுலகம் மறக்காது. நன்றி கூறுகின்றது.

அரேபியாவே இஸ்லாமியக் கலையின் தாயகம். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் வருகைக்கு முன்னர் அரேபிய சமூகம் மிகவும் பின்தங்கிய பல மூடநம்பிக்கைகளையும் கொள்கைகளையும் கொண்டிருந்தது. அவர்களின்



மொழியைத் தவிர பெருமை தரக் கூடிய கலாசார முதுசம் (Cultural Heritage) எதனையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

ஆனால் இஸ்லாமிய எழுச்சியும் உள்ளுணர்வும் உத்வேகமும் , பெற்று இஸ்லாமியர் மத்திய கிழக்கு , மத்திய ஆசியா , அண்மைக்கிழக்கு , ஐரோப்பா , ஆபிரிக்கா ஆகிய பிரதேசங்களில் தமது அரசியல் ஆதிக்கத்தை வியாபித்தனர். அவர்கள் வெற்றியீட்டிய பிரதேசங்கள் முழுவதும் ஒரே இஸ்லாமிய கொடி நிழலில் ஒன்றுபடலாயின.

அன்று வல்லரசுகளாக திகழ்ந்த ரோம் , பாரசீகம் , கிரேக்கம் , ஸ்பைன் (அந்துலூசியா) எகிப்து , சிரியா , சீனா , இந்தியா போன்ற நாடுகள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டதாலும் மேலும் வாணிபத் தொடர்புகளினாலும், அவர்களிடம் காணப்பட்ட கலையம்சங்களில் வியப்படைந்த முஸ்லிம்கள் தமக்கும் தனியானதொரு நாகரீகத்தையும் கலை பண்பாட்டு அம்சங்களை கட்டியெழுப்பி உலகளாவிய முயற்சியை மேற் கொண்டனர். இவ்வாறு தான் இஸ்லாமியரது கலை வியாபிக்க காரணமாயிற்று.

இஸ்லாமியக்கலையானது இஸ்லாமியரது ஓர் பிரிக்க முடியாத அம்சமாகும். கூருணர்வு படைத்த முஸ்லிம்களது உள்ளமானது ஆத்மீகத் தோட்டத்தின் வெளிப்பாடு அது. கூருணர்வுடைய அவர்களது இதயநெஞ்சங்கள் கலாச்சாரம் , பண்பாடு கலைகளில் ஆணித்தரமாகப் பதியப்பட்டவையே. நாகரிகமும் , பண்பாடும், கலாச்சாரமும் தூங்கிக் கொண்டிருந்த மத்தியகாலப்பகுதியில் முஸ்லிம்களே உலகிற்கு அறிவியல் , நாகரீகம் , கலை, கலாச்சாரம் , பண்பாட்டு அம்சங்களை உலகின் நாலாப்பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்தார்கள்.

இஸ்லாமிய உலகில் பல்வேறு பட்ட கலைவடிவங்கள் , வானத்தை எட்டிப் பிடித்தாலும் , இஸ்லாமியருக்கு , ஈமானே (நம்பிக்கை) அதற்கு புத்தூக்கமும் புது எழுச்சியும் கொடுத்தது. இவ்விடத்தில் இஸ்லாமியக்கலைகள் என்பன முஸ்லிம் கலைஞர்கள் , கைவினைஞர்களது பொதுப் போக்கின் விளைவான ஒரு கலை அல்லது கலையம்சம் என வரைவிலக்கணமாக கூற முடியும். ஒரு இஸ்லாமியன் தன் உணர்வலைகளின் அறிவுச் சிந்தனைகளில் கருவுற்று கருவாக உருப் பெற்றதை கலையாக இருக்கலாம். அதில் ஈடுபாடு கொண்டவர்கள் முஸ்லிம்களாகவோ அல்லது

வேறு இனத்தவர்களாகவோ இருக்கலாம். உதாரணமாக தாஜ்மகால் கட்டிடக் கலையைக் குறிப்பிடலாம். மேலும் உலகளாவிய கட்டிடக் கலைகளை குறிப்பிட முடியும். இவ்வாறு தான் முஸ்லிம்கள் தமக்கென தனியானதொரு கலை கலாச்சாரம் நாகரீகம் பண்பாட்டு முறைகளை காலத்தால் அழியாது உலகம் வாய்பிழந்து பார்க்கும் படி அன்றைய முஸ்லிம்களின் விழிப்புணர்ச்சியின் பயனாக இக்கலைகள் இன்றைய முஸ்லிம்கள் வரை பேணிப்பாதுகாத்தே வரப்படுகின்றதை நாம் அவதானிக்கலாம்.

அல்குர் ஆன் அவனியில் அவதரித்த வேளையில் நாகரீகம் , கலை பண்பாடு , அம்சங்களுக்கு வித்திடப்பட்டது. புனித குர் ஆன் ஒரு வேத நூலாக மட்டும் மிளிரவில்லை. கலை மறுமலர்ச்சி நூலாகவும் அது சுடர்விட்டுக் கொண்டு அதன் சக்தியை நாலாதிசை எங்கும் பரப்பிக் கொண்டிருக்கின்றது. கல்வியின் முக்கியத்துவத்தை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது, இத்திருமறை (குர்ஆன்) என்றால் மிகையில்லை. விஞ்ஞானக் கருத்துக்களை விந்தையாகவும் வியப்பாகவும் விழிப்படையச் செய்வதில் குர்ஆன் முன் நிற்கின்றது. இதனாலே தான் முஸ்லிம்கள் மட்டுமன்றி அன்னியர்களும் அறிவுத் தீபத்தை உலகிற்கு வழங்கக் கூடியதாக அமைந்திருக்கின்றது.

கலை , கலாச்சாரம் , நாகரீகம் போன்றவற்றிற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு தான் என்ன? இஸ்லாமிய நாகரீகமும் பண்பாடும் கலைகளும் எங்கு காணப்படுகின்றன என்ற கேள்விகளுக்கு குர்ஆன் மட்டுமே போதும் விடையாக அமைய, எனவே நாடுகளின் அறிவியல் புரட்சியின்பசிக்கு அடிநாதமாக குர்ஆன் காணப்பட்டது.

ஏனைய கலைகள் இஸ்லாத்தில் புகுந்தாலும் அதை முஸ்லிம்கள் வெறுக்கவில்லை. நல்லதை எடுத்துக் கொண்டார்கள் இஸ்லாமியக் கட்டிடக்கலை நோக்கினால் பல்வேறு மதத்தை , நாட்டை , மொழிகளைப் பேசுகின்ற சகோதரர்களால் உருவாக்கப்பட்டதாகும். இதில் முஸ்லிம்களும் வேற்று மதத்தவர்களும் பங்கு கொண்டவர்கள். வேற்றுமையில் ஒற்றுமையும், சாதி , மத சமூக வேறுபாடின்றி மக்கள் என்ற மகுடத்தில் ஒன்றுபட்டு இஸ்லாமியக்கலை அம்சங்களை உருவாக்கினாாகள்.



அறிவியல் ஓவியம் , சிற்பம் , இசை , கவிதை, இலக்கியம் கலைகள் இவற்றை இஸ்லாம் வரவேற்றாலும் அதன் எல்லை வரம்புகளை இறைகட்டளையாகவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையாகவும் இஸ்லாம் வரையறை செய்துள்ளதை கோடிட்டுக் காட்டுவது இவ்விடத்தில் பொருத்தமாகும்.

அந்நிய கலாச்சார மோகம் கொண்ட சில இஸ்லாமியர் இவ்வரையறைகளை உடைத்தெறிந்து விட்டு இஸ்லாத்தை மாசு கற்பிக்க முற்பட்டதைக் காணலாம். இருண்டகாலம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறும் அக்காலத்தில் அரேபிய தீபகற்பத்தில் , அதனைச் சூழவுள்ள பிரதேச தொடர்புகளும் , வணிகத் தொடர்புகளும் வேற்று நாட்டவர்கள் தொடர்பாலும் அழகியற்கலையானது மதசார்ந்த நம்பிக்கை அடிப்படையிலும் இச்சைகளையும் இரசனைகளையும் உருவாக்கும் அமைப்பிலேயே அழகியற்கலை அரேபியாவில் வளர்ச்சியடைந்தது. எனவே அறிவியல் சார்ந்த உணர்வலைகளுடன் மக்கள் பயனடையும் பாங்கில் கட்டியமைக்கப்படுவதே கலைகள் ஆகும்.

ஓவியங்கள் , சிற்பங்கள் மனித உருவச்சித்திரங்கள் பல தெய்வ வழிபாட்டை நினைவூட்டும் சின்னமான கலைஅம்சங்களாக அரேபியாவில் காணப்பட்டது. இறைவனால் படைக்கப்பட்ட பொருட்களை வணங்குவதை தடை செய்த இஸ்லாம் அதன் உயரிய இலட்சியத்தை நிலைநாட்டவே செய்ததை காணலாம்.

இதனால்தான் கஃபா ஆலயத்தில் தொங்கவிடப்பட்ட நூற்றுக்கணக்கான விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்டு ஏக தெய்வங் கொள்கையினை நிலை நாட்டியது இஸ்லாமாகும். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் கலைக்கும் அறிவியலுக்கும் புத்தெழுச்சியைவழங்கியது. இன்று நவீன விஞ்ஞானம் என அழைக்கப்படுவதற்கு அன்று அத்திவாரமிட்டவர்கள் முஸ்லிம்களாவர். அன்றைய காலகட்டத்தில் உலகின் பல பாகங்களிலிருந்தும் கல்விமான்கள் பலரும், தமது அறிவுத்தாகத்தை தீர்த்துக் கொள்வதற்காக முஸ்லிம்களின் கலைப்பீடங்களின் நிழல்களில் ஒதுங்கலாயினர்.

கலை மறுமலர்ச்சியில் மேற்குலகு இருளில் அகப்பட்ட நேரத்தில் முஸ்லிம்களின் அறிவு , கலை , பண்பாடு நாகரீகங்கள் , கலாசாரங்கள் , உலகின் நாலாபாகங்களிலும் சென்று அதன் ஒளிச்சுடரை பரப்பலாயிற்று. "ஐரோப்பியர் எமது வரலாற்றுக் காட்சிகள்" என்ற நூலில் ஜீ.பீ ஸ்மித், 'முஹம்மது காலஞ் சென்றதன் பின்னர் இருநூறு ஆண்டுகளுக்குக் குறைவான

காலப்பகுதியில் அவரைப் பின்பற்றியோர் விரைவாக நாகரீகமிக்க மனிதர்களாக மாறியது போன்று வேறெதுவும் வரலாறிலில்லை. என்று கூறுகின்றார். பிரசித்தி பெற்ற இன்னொரு வரலாற்று ஆசிரியரான லேன்பூல் ஸ்பெயின் மூர்கன் (The moons in Spain) என்ற தனது நூலில் அவர்களது கொர்டொவின் மாளிகைகளும் பூந்தோட்டங்களும் எழில் மிகுந்தவைகளாக விளங்கியது. போன்று, உயர் விவகாரங்களுக்கான போற்றுதலும் பெருமையும் நிறைவு பெற்று விளங்கின. உடல் போன்று உள்ளமும் நிறைவாக இருந்தது. அதன் ஆசிரியர்களும் , பேராசிரியர்களும் அதனை ஐரோப்பிய காலாசார நிலையாக மாற்றினார்கள். அதனது புகழ் பூத்த மருத்துவக் கலாநிதிகளிடம் பயில்வதற்காக மேற்குலகிலிருந்து அங்கு மாணவர்கள் படை வந்து குவிந்தது. அறிவியலின் ஒவ்வொரு துறையும் மிக அவதானத்துடன் அங்கு பயிலப்பட்டது. கலவுடைய காட்சிகள் அஸ்தமணமான போது முஸ்லிம்களே மருத்துவத்துறையில் அப்போது பிரகாசித்தனர். பல மருத்துவர்களையும் , கலை மறுமலர்ச்சியையும் உலகிற்கு வழங்கியதுடன் மருத்துவ நூல்களும் அறுவைச் சிகிச்சை முறைகளையும் முஸ்லிம்கள் வழங்கத் தவறவில்லை என விபரிக்கின்றார்.

முஸ்லிம்களின் அறிவையும் , கலைகளையும் கலாச்சாரத்தையும் மேற்குலகு உறிஞ்சிக் கொண்டதுடன் அவர்கள் அறிவுத் துறையிலே பாரிய முன்னேற்றமடைய முஸ்லிம்களின் கலைகள் பெரிதும் பயன்பட்டதை சுட்டிக் காட்ட முடியும். அதற்காக மேற்குலகு சந்திரமண்டல சமவெளி மலைகளிலே முன்னைய அறிவுசார்ந்த முஸ்லிம்களின் பெயர்கள் பதின்மூன்றையும் நன்றியுடன் சூட்டப்பட்டிருப்பதை நாஸா விஞ்ஞான ஆய்வு நிலையம் தெரிவிக்கின்றது. மேலும் பல உலக ஆய்வு கூடங்களில் இவர்களின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் கலை அறிவியலில் அநாதையான போது மத்திய காலமான கி.பி. 8ம் நூற்றாண்டு தொடக்கம் 13ம் நூற்றாண்டு வரை முஸ்லிம்கள் கலை , அறிவு மலர்ச்சியிலே முன்னனியில் திகழ்ந்தார்கள். பேராசிரியர் நஜீபுல்லா இது குறித்து எழுதுதம் போது உமையாக்கிகளின் ஆட்சிக் காலத்தில் டமஸ்கஸ் தலைநாராக இருந்த போது கிரேக்க , பாரசீக , சீன , இந்திய , ரோம கலை கலாச்சார செல்வாக்குகள் அங்கு புகலடையலாயின. அப்பாஸிய ஆட்சியிலே பக்தாத் தலைநகரான போது தரைக்கடல் நாகரீகமும், ஈரானிய , இந்திய , நாகரீகமும் கலையும் இஸ்லாமியக்கலையின் குடையின் நிழலின் கீழ் இணைந்தன. இவற்றிலிருந்து தமக்கென ஒரு தனியான



நாகரீகத்தையும் கலை , கலாச்சார பண்பாடுகளையும் இஸ்லாமியர் உருவாக்கிக் கொண்டார்கள். இவர்கள் உருவாக்கிய இக்கலைகள் கிரேக்க , உரோம , பாரசீக , இந்திய , சீன கலைகளை விட மேம்பட்டதாபக இருந்தது. (இஸ்லாமிய இலக்கியம் பக்கம் 112)

ஸ்பெய்ன் நாட்டிலே முஸ்லிம்களின் பங்களிப்பு அபரிதமானது. கலை, கலாச்சாரம் , பொருளாதாரம் , அரசியல் ஆகிய எல்லாவற்றிலும் மின்வெட்டு வேகத்தில் பல மாற்றங்கள் தேன்றின. இம்மாற்றத்தின் தாக்கத்தினாலே தான் மேற்குலகுக்கு விடிவு கிடைக்கலாயிறற்று. (டாக்டர் திருமதி அண்ணி பஸந்தி இது பற்றிக் குறிப்பிடும் போது 8ம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய இளைஞர்களின் கைகளிலே விஞ்ஞானம் குடி வாழ்ந்து வளர்ந்தது. அவர்கள் எத்தேசம் சென்றாலும் தம்முடைய கலை , கலாச்சார, பண்பாடு அறிவுகளையும் கூடவே சுமந்து சென்றார்கள். அவர்கள் நாடுகளைப் பிடித்தார்கள் தாம் பிடித்த நாடுகளிலெல்லாம் கல்வி ஸ்தாபனங்களையும் , பல்கலைக்கழகங்களையும் நிறுவினார்கள். எகிப்திய பக்தாத் சர்வகலா சாலைகள் எடுத்துக் காட்டாகும்.)

முஸ்லிம்களின் கல்வி கலை மறுமலர்ச்சியிலே கிரேக்க , உரோம , பாரசீக , லத்தீன் நூல்கள் பலவும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன. இவை அரபு மொழிகளிலே அச்சுக் கோர்வை செய்யப்பட்டது. முஸ்லிம்களும் தமக்குத் தனியான பல நூறு நூல்களையும் அரபு மொழியில் உருவாக்கினார்கள். மத்திய கால இஸ்லாமிய ஆட்சியிலே ஸ்பெய்ன் நாடு, ஐரோப்பிய நாடுகளுக்கு கலை , அறிவியல் கலாச்சாரங்களை ஏற்றுமதி செய்தது. அரபு மொழி பேசும் முஸ்லிம்களே இதன் முன்னோடிகள் என்று பேராசிரியர் ஹிட்டி 557 ஆம் பக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

மேலும் பிலிப் ஹிட்டி குறிப்பிடும் போது ,மத்திய காலத்தின் துவக்கத்திலே அரேபியரைப்போல வேறு எந்த இனத்தவரும் மனித முன்னேற்றத்திற்கு வழியமைக்கவில்லை. பிரான்சிஸ் சார்லமேன் மன்னரும் அவரது சபையும் தங்களது பெயர் நாமங்களை எழுதிப் பழகி உச்சரித்த வேளையில் அரபிய மாணவர்கள் அரிஸ்ரோட்டில் ஹிப்போ ஹிரட்டீஸ் , கெலன் , பிளட்டோ, சோக்கிரட்டீஸ் , போன்ற பல்வேறு அறிஞர்களின் நூல்களை ஆராய்ந்தனர். நான்கு லட்சம் நூல்களுடன் பதினேழு நூல்நிலையங்களை கொண்டிருந்த "குர்துபா" சர்வகலாசாலையின் விஞ்ஞானிகள் சகல

வசதிகளுடனும் குளித்து வந்த நேரம் ~ ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையினரே உடலைத் தண்ணீரால் கழுவுவதும் ஆபத்தான பழக்கம் என்று கருதி வந்தனர் என விபரிக்கின்றார்.

ஓவியம், சிற்பம்போன்ற சித்திரக்கலைகளை இஸ்லாம் வரவேற்றமையால் முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் கருத்துப் பொருட்கலைகளில் ஈடுபாடு கொண்டமை பற்றி நாம் வரலாற்றில் காணமுடியும். பேராசிரியர் இ.ஹ. குறைஷி கூறுவது போல "வேறெந்தக் கலைகளை விட பூரணத்துவமும் முழுமையும் வாய்நத கருத்தும் பொருட் கலையாக அரபு எழுத்தணிக்கலை இருந்தமையால் முஸ்லிமகள் தமது கலைவெளிப்பாட்டு வடிவின் அடிப்படை ஊடகமாக அதனைத் தெரிவித்திருந்தனர் என்றார்.

இஸ்லாம் மனிதனைச் சித்திரமாக, சிற்பமாக சிலை வடிப்பதற்கும் ஊக்கம் காட்டவில்லை. சித்திரக்கலை (சிற்பக்கலை) காரணமாக இறைவனுக்கு இணைகற்பிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டதால் இஸ்லாம் அதனை நிராகரித்து பிறவகையான கலைகளைப் பொறுத்தவரை அவ்வாறு நடந்து கொள்ளாது அவற்றின் வெளிப்பாட்டு எல்லைகளை மட்டும் வரையறை செய்தது. ஆனால் நடைமுறையில் சிற்பம், ஓவியம், இசை போன்ற கலைகளில் ஈடுபட்டோர் பிறகாலாசார உந்துதலால் இஸ்லாமிய ஷரீஆ சட்டதிட்டங்களுக்கு அப்பால் ஈடுபாடு கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

கலைபற்றிய பி.சி. கணேசன் கூறியதை சுருக்கமாக எடுத்து இப்பகுதியை முடிக்கின்றேன். கலையுணர்வு என்பதுமனிதனிடம் இயற்கையில் அமைந்திருக்கும் ஒரு தன்மையாகும். இந்த உணர்வு மனித வாழ்க்கையில் இன்பமானதாகவும் சுவையுடையதாகவும் ஆக்குகின்றது என்பதில் சந்தேகம் இல்லை. இந்தக்கலை உணர்வை எந்தளவுக்கு மனிதன் வளர்த்துக் கொள்கிறானோ! அந்தளவுக்கு வாழ்க்கையை அனுபவிக்கவும் கற்றுக் கொள்கிறான்.

ஜும்மா மசூதி , முத்துமசூதி (பள்ளிவாசல்) போன்ற படைப்புக்களை மொகாலாய மன்னர்கள் உயரிய கலைப் படைப்புகளாகத் தந்திருக்கிறார்கள். மனித உணர்ச்சியின் ஆரத்தை வெளிப்படுத்துகின்றவைகளாக என்றென்றும் கலைப்படைப்புகள் விளங்கி வந்ருக்கின்றன. மும்தாஜ் மீது தான் கொண்ட ஒப்பற்ற காதலை வெளிப்படுத்த ஷாஜகான் எண்ணிய போது உருவான அரிய ப்டைப்பு ஆக்ரா நகரில் யமுனை ஆற்றங்கரையில் காண்போர்வியக்கும் வண்ணம் காட்சியளித்துக் கொண்டிருக்கும் தாஜ்மஹால் ஆகும் என்கிறார் அவர்.



........" ஒழுக்கத்தைப் போதிக்க சக்தி இல்லாத எதையும் கலைப்படைப்பாக ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறார் ரஷ்யஞானி டால்ஸ்டாய் கூறுகின்றான்

....கலை கலைக்காகவே என்கின்ற விதத்தில் ஆழமான பொருள் எதுவும் இல்லை மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாகத்தான் கலையைக் கருத வேண்டும். கலை கலைக்காகவே என்ற வாதத்தை ஜார்ஜ் பெர்னாட்ஷா ஏற்றுக் கொள்ள வில்லை. "மனித சமுதாயச் சிந்தனையில் பாதிப்புகளையோ! மாற்றதையோ ஏற்படுத்த வல்லதாக கலை இருக்க வேண்டும். என்கிறார் அவர்.

கலைகளால் மனிதனுடைய பசியைத் தீர்த்து விட முடியுமா? என்று சிலர் கேட்கிறார்கள் பசியைத் தீர்த்துக் கொள்வதோடு மட்டும் வாழ்க்கை நோக்கம் முடிந்து விடும் என்றால் மிருகங்கள் போன்ற ஜீவராசிகளை விட உயர்ந்தவர்களாக மனிதனைக் கருத முடியாது. இதர பிராணிகளுக்கில்லாத அழகுணர்ச்சி மனிதனுக்கு இறைவன் அளித்துள்ள அற்புத பரிசே என்றே கருத வேண்டும். "கலைகளை ரசிக்கும் மனோபாவத்தை ஒருவன் பெறுகின்ற போது வாழ்க்கையை நேசிக்கவும் கற்றுக் கொள்கிறான்.

* * *

# இலங்கை முஸ்லிம்களின் குடியேற்றம் கலாசாரம், தொல் பொருள் பற்றிய ஓர் ஆய்வு.

ஈழத்தில் இன்று பல இனத்தவர்கள் , பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள். ஈழநாட்டு மக்கள் என்ற முறையில் அனைவரும் ஈழத்துப் பழங்குடி மக்களாக காணப்படுகின்றனர். இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் குடியேற்ற அமைப்பைக் கணிப்பீடு செய்கின்ற பொழுது ஈழத்துச் சோனகரின் மூதாதையர் அரேபியர் என்பதே பலரின் முடிவு. கலீபா அப்துல் மலிக்கின் ஆட்சிக் காலத்தில் ஹாசிம் கிளையைச் சேர்ந்த சிலர் அரேபியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டனர். அவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையிலும் குடியேறியதாக வரலாறுகளில் காணமுடிகின்றது. அவற்றுள் பர்பரின் (பேருவளை), காலி போன்றன குறிப்பிடத்தக்கவை.

மேலும் இலங்கையினுடனான அரபு மக்களின் தொடர்பு மக்கள் மத்தியில் இஸ்லாம் தோன்றுவதற்கு அதிகம் முன்பிருந்தே ஆரம்பமானது. இந்த உண்மையை ஐரோப்பிய ஆரம்ப எழுத்தாளர்களில் ஒருவரான 'பிலினி' எடுத்துரைக்கின்றார். இன்னோர் எழுத்தாளரான 6ம் நூற்றாண்டைச் சேர்ந்த "கொஸ்மஸ்" இலங்கையுடன் அரேபியர் நேரடித் தொடர்பு வைத்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். எனவே இஸ்லாமிய கலாச்சாரத்தால் பூரணமாக அன்றேல் பெரிதும் உந்தப்பட்ட அரேபியர் மூலமே இலங்கையானது இஸ்லாமிய உலகுடன் காலாசார உறவுகளைத் தாபித்துக் கொண்டது.

9ம் நூற்றாண்டில் வாழ்ந்த அறபு எழுத்தாளரான வணிகர் சுலைமான் என்பவரும் , அதற்குப் பிந்திய கால எழுத்தாளரான மஸ்ஊதி , அல்பிரூனி இப்னுபதுதா போன்றோரும் இலங்கையைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையின் அரச முறை , அதன் உற்பத்திகள் , அதன் வர்த்தகம் என்பன பற்றி மாத்திரம் இக்குறிப்புக்கள் குறிப்பிடவில்லை. முத்துக் குளிப்புத் தொழில், சங்குத் தொழில் , 'ரூபி' போன்ற மாணிக்கக்கல் சுரங்கத் தொழில் என்பவற்றின் பலவித அம்சங்கள் பற்றிய விரிவான குறிப்புக்களை இந்த எழுத்தாளர்கள் எடுத்துள்ளனர். 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த அல் இஸ்தக்ரீ என்பார் தமது சரித்திரப் புவியியல் எனும் நூலில் இப்பொழுது அதி முக்கியத்துவம் கொடுக்காத 'கித்துல் பாணி' பற்றிக் குறிப்பிடும் போது அதைத் 'துஸ்ரப்'



எனக் குறிப்பிடுகின்றார். ஒரு பூரண ஊக்கமான ஆராய்ச்சியின்றி அவ்வரேபியர் இவ்வித ஒரு சிறிய விபரத்தைக் கூட கொடுக்கக் கூடிய நிலைக்கு வந்திருக்க முடியாது.

அரேபியர்களின் குடியேற்றம் இலங்கையில் எவ்வாறு இடம் பெற்றது என்பதைக் காணும் போது சேர் ஜான் எமர்சன் டென்னட் , சர் ஸைமன் காஸி கிட்டி , சர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோர் இலங்கையில் அரேபியர்களின் முதற் குடியேற்றம் கி.பி. 1024 இல் நிகழ்ந்ததாக சரித்திர ஆதாரங்களுடன் கூறியுள்ளனர். கீழ் வருவன அத்கைய கருத்துக்களில் சிலவாகும்.(புரொஹியர் டிலிட்)

இலங்கைச் சோனகர்கள் தங்கள் இனத்தின் முதல் இடம் காயல் பட்டினம் என மதிப்பிடுகின்றனர். கி.பி. 1024 இல் களுத்துறை மாவட்டத்திலுள்ள பர்பரின் என அழைக்கப்படும் பேருவளையில் முதன் முதலாக வந்திறங்கியதாகவும் இந்தத் தீவில் இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குடியேற்றம் எனவும் மதிப்பிடுகின்றனர்.
(டாக்டர் டென் ஹாம்)

கெச்சிமலைப்பள்ளி தென்மேல்ப்பருவக்காற்று தாக்குதலுக்கு இடமில்லாத ஒரு நிலத்தின் நுனியில் அமைந்துள்ள ஒரு மூலையில் எழுப்பப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தான் கி.பி. 1024 இல் 'மூர்' கள் என்று தவறாக அழைக்கப்படும் யவனர்களைக் கொண்ட ஒரு கூட்டம் கன்னியா குமரிக்கு வடகிழக்கே அமைந்துள்ள காயல் பட்டணத்திலிருந்து வந்து குடி புகுந்து இந்தத் தீவில் தங்களின் முக்கிய சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த குடியேற்றமாக கொண்டனர். என கர்ண பரம்பரையாகக் கூறப்படுகின்றது. அவர்களின் வழித்தோன்றல்கள் தான் இன்றைய இலங்கைச் சோனகர்கள்.

(டாக்டர் ஆர். எல். பரோஹியர் டிலிட்)

இலங்கை டெய்லி நியூஸ் பத்திரிகையின் 3.3.1964 ஆண்டைய இதழில் டாக்டர் ஆர். எல். பரோஹியர் டிலிட் எழுதிய 'பாய்சுருட்டிய பேருவளை' என்ற கட்டுரையில் கெச்சிமலைப்பள்ளி கி.பி. 1024 இல் கன்னியா குமரிக்கு வடக்கேயுள்ள காயல் பட்டணத்திலிருந்து இங்கு வந்து குடியிருந்த சோனகர்கள் என தவறாகப் அழைக்கப்படுகின்ற யவனர்களின் சந்ததியினர்களால் கட்டப்பட்டுள்ளது என்றும், தங்களின் மிக முக்கியமானதும் , சரித்திரப்

பெருமை வாய்ந்ததுமான குடியேற்றமாக இது இலங்கையில் திகழ்ந்தது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இக்கால சோனகர்கள் காயல் பட்டண முஸ்லிம்களின் வழித்தோன்றல்கள் என்று அவர் தர்க்கிக்கின்றார். டாக்டர் ஆர். எல். பரோஹியர் டிலிட்டின் கூற்றுப்படி இக்குடியேற்றம் 940 வருடங்களுககு முன் நிகழ்ந்துள்ளது. திரு. ஜோன் எமர்சன் டெனனட் , சர் ஸைமன் காஸி சிட்டி மற்றும் பிரபல சரித்திர வல்லுனர்களின் கூற்றுக்களின் படி முஸ்லிம்களின் முதற் குடியேற்றம் 8ம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. என்றும் இலங்கை முஸ்லிம்களின் மத்தியில் நிலவும் கர்ணபரம்பரைக் கூற்றுக்களின் படி அவர்களின் முன்னோர்கள் அரேபியாவிலிருந்து இங்கு வந்து குடியேறினர் என்றும் தெரிகின்றது.

கி.பி. 1024 இல் காயல்பட்டணத்திலிருந்து முஸ்லிம்கள் குடிபுகுந்தது பற்றியும் 'யவனர்' என்ற வார்த்தைக்கு பதிலாக சோனகர் என்ற வார்த்தை உபயோகத்துக்கு வந்தது பற்றியும் புள்ளி விபரங்களுடன் டாக்டர் ஆர். எல். பரோஹியர் குறிப்பிடுகின்றார். டென்ஹாம் எழுதியுள்ள Census of Ceylon என்ற நூலின்படி இலங்கைச் சோனகர்கள் தமது இனத்தின் தாயகம் காயல் பட்டணம் என்னும் களுத்துறை மாவட்டத்திலுள்ள பர்பரீன் அல்லது பேருவளையில் கி.பி. 1024 இல் வந்திறங்கினார்கள் என்றும் இதுவே அவர்களின் மிக முக்கியம் வாய்ந்த சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த குடியேற்றம் என்றும் அவர்களே மதிக்கின்றனர்.

இலங்கைச் சோனகரின் ஆரம்பத்தை கி.பி. 8ம் நூற்றாண்டு வரை அறியக் கூடியதாக இருக்கின்றது. அப்துல் மலிக்பின் மர்வானின் துன்புறுத்தல்களிலிருந்து தப்பிய சில அரேபியர்கள் இலங்கையை அடைந்து பேருவளை , காலி , திருகோணமலை , மன்னார் , புத்தளம் , கொழும்பு , யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர். மரக்கல என்னும் கப்பல் துறை சிங்களவர்கள் நன்கு அறிந்திருந்த ஓர் இடமாதலால் புதிதாக வந்தவர்களை இவர்கள் "மரக்கல" எனப் பெயரிட்டனர். ஹிஜ்ரி 402 இல் அரேபியாவிலிருந்து இன்னொரு குடிப்பெயர்ச்சி ஏற்பட்டது. சிங்கள மன்னர்கள் சோனகர்களை மோசமாக நடத்தவில்லை. எனவே, அவர்களில் பெருந்தொகையினர் பேருவளையை அடைந்தனர். அவர்களின் முன்னேற்றத்தை எவரும் தடுக்கவில்லை. கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை வரை அவர்கள் தம்மை வர்த்தகத்தில் ஸ்திரப்படுத்திக் கொண்டனர். கி.பி.



1850ம் ஆண்டளவில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வருமான வரி செலுத்தியதன் மூலம் அவர்கள் மிகவும் செல்வாக்கு வாய்ந்த சமுதாயமாக விளங்கினர். பேருவளையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டாவது அப்பாசிய காலத்திற்குரியதான பாரசீக நாணயங்கள் புதுமைகளைக் கொண்டதாக விளங்குகின்றன. உதாரணமாக 'அல்லாஹ்வின் அருளாலே அப்பாஸ் ஸானி பெயராலே சம்ராஜ்ய நாணயமே பாரெங்கும் பரந்ததே' என்னும் வரிகள் அந்நாணயங்களில் காணப்பாடுகின்றன.

ஏறக்குறைய இக்கால கட்டத்தில் (கி.பி. 1350) மரிக்னொல்லி என்பார் குப்லாய்ககானின் தர்பாரிலிருந்து உரோமாபுரி நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பேருவளைக்கருகில் அவரது கப்பல் நொருங்கியது. அவர் 'வெறுக்கப்பட்ட அரசனான' சோனகத் தலைவன் கோயர் ஜானால் கொள்ளையடிக்கப்பட்டார். ஜான் பெரும் ஐசுவரியங்களுக்கு அதிபதி என்றும் முறையற்ற விதத்திலேயே அதிகாரத்திற்கு வந்ததாகவும் கூறப்படுகின்றது. பரவி சந்தேசாய் என்னும் காவியமானது 15ம் நூற்றாண்டில் பேருவளையில் வாழ்ந்த சோனகர்கள் கொடிய , கட்டுப்பாடு அற்ற மக்கள் எனக் குறிப்பிடுகின்றது.

வரலாற்றின் படி சோனகரின் மிகப் பெரும் வருகையானது புவனேகபாகுவின் எட்டாம் ஆளுகை ஆண்டான கி.பி. 1280 ஆம் ஆண்டிலே நடைபெற்றது. இந்த மன்னன் அப்புதியவர்கள் புத்தளத்திலிருந்து பேருவளை வரையிலான கடற்கரையோரக் கிராமங்களில் குடியமரவும் 'நைதே' குலப் பெண்களை மணம் முடிக்கவும் அனுமதியளித்தான். அது காலவரை சோனகர்களின் வருகையை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் 1505ம் ஆண்டு ஒரு பெருந் தொகையான சோனகர்கள் பலாத்காரமாக சிலாபத்திலிருந்து 9ம் பராக்கிரமபாகு வால் தாக்கப்பட்டு துரத்தப்பட்டனர்.

முதலாம் புவனேகபாகுவுக்கு (கி.பி. 1272 ~ 1283 ) அவனுடையது இரண்டாவது இராணியான , குருநாகல் நகருக்கு அருகாமையில் உள்ள மெதகெட்டிய கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிரபத்துவ சோனகப் பெண்மணிக்கும் பிறந்தவனே வஸ்துஹிமியாவான் எனக் குருரல் விஸ்தரய கூறுகின்றது.

இலங்கைச் சோனகர்கள் பணிக்கர்களாகவும், பட்டு , மாணிக்கக்கற்கள், பாக்கு மற்றும் பொருட்களில் சிறந்த வர்த்தகர்களாகவும் விளங்கி வந்துள்ளனர்.

இனி நாம் இலங்கை மக்களின் கலாசாரம் பாரம்பரியம் கலைகளை ஆராய்வோம். பெரும்பான்மை இன மக்களான தமிழர் , சிங்களவரது கலாசாரம் முஸ்லிம்களிடம் இருந்துள்ளதை காணமுடிகின்றது. உதாரணமாக மணமகனை ஆராத்தி (ஆலாத்தி) எடுப்பது போன்றவை குறிப்பிட முடியும்.

இது சம்பந்தமான ஆய்வுகளை எஸ்.எச்.எம்.ஜெமீல் (பண்பாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகர்) மூன்று வகையாக இலங்கை முஸ்லிம்களின் பண்பாடுகளை பாரம்பரியங்களை வகுக்கின்றார்.

அடுத்த அத்தியாயம் இவ்விடயம் ஆராயப்படுகின்றது. வாருங்கள் சற்று உறங்கவிடாமல் கண்களை அகலமாக்கிப் பாருங்கள்.....



# இலங்கை முஸ்லிம்களின் கலைப்பாரம்பரியம்

இலங்கை முஸ்லிம்களின் கலைப் பாரம்பரியத்தை மூன்று வகைகளாக பகுத்து நோக்கலாம்.

1. ஆடல் கலைகள்
2. பாடல் கலைகள்
3. எழுத்தணிக்கலை

ஆடல் வகையைச் சார்ந்ததாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

1. பொல்லடி
2. பக்கீர் பைத் , றபான் , குத்துவெட்டு
3. சீனடி
4. சிலம்படி
5. வாள்வீச்சு
6. மெத்தைவீடு கட்டல்
7. நாடகம்
8. ஊஞ்சல்
9. புலிவேஷம்
10. ஆராத்தி

பின்வருவன பாடல் வகையைச் சேர்ந்தனவாகும்.

11. கவி பாடுதல்
12. பதம் படித்தல்
13. புத்தகம் படித்தல்
14. மாப்பிள்ளை வாழ்த்து
15. குரவை

வேறுவகை

16. எழுத்தணிக்கலையும் சுவரோவியமும்
17. பன்மூலம் நுன்கலைப்பொருட்களை செய்தல் என்பனவாகும்.

இவை ஒவ்வொன்றினதும் தோற்றத்தினையும் , வளர்ச்சியையும் மக்களிடையே பெற்ற செல்வாக்கையும் ஆராய்தல் பயனுடையது. முஸ்லிம்களின் பாரம்பரியம் சுவைமிக்கது. இனிமையானது. எழில் மிக்கது. பயனுடையது. என்று சிங்களவர் , தமிழர் மத்தியில் புகழப்பட்டது.

1. பொல்லடி :- இது கோலாட்ட , கழிகம்பு எனவும் கூறப்படும். கிராமத்தில் முக்கிய வைபவங்களான பெருநாட்கள் , கலியாணம் , கத்னா , காதுகுத்துதல், பிரமுகர் வரவேற்பு என்னும் சந்தர்ப்பங்களில் இடம் பெறும்.

பொல்லடிக் குழுவில் பெரும்பாலும் 16 பேர் இருப்பர். இத்தொகை 24 வரை அதிகரிக்கும். ஓரிடத்தில் நின்று வட்டமாக வருவர். அல்லது வீதி நெடுகிலும் ஊர்வலத்தின் முன்னே நடந்து செல்வர். அல்லது இரட்டை மாட்டு வண்டியின் இரு புறத்திலும் அமர்ந்து பொல்லடித்துக் கொண்டு செல்வர். ஓரிடத்திலே நிற்கும் போது உள்வளையம் புறவளையம் என இரு வட்டங்களாக நிற்பர். புறவளையத்திலுள் ஒருவரும் உள்வளையத்தில் உள்ள ஒருவரும் சோடியாவர். அதன் பின் வட்டமாகச் சுற்றி வந்தும் , நின்றும் , வேகமாக ஓடியும் , உள்ளும் புறமும் மாறியும் , குந்தியும் எழும்பியும் பல விதமான ஆட்டங்களில் ஈடுபடுவர். அவ்வேளையில் பாட்டும் பாடப்படும். இதன் தருவினை அண்ணாவியார் பாடுவார். அதனைத் தொடர்ந்து குழுவினர் அனைவரும் இணைந்து பாடுவர். பொல்லடியின் சத்தமும் பாட்டின் தாளமும் இணைந்திருக்கும்.

பொல்லடியில் 18 வகைகள் உள. தண்ணால், கீச்சான் போர் , தரித்தடித்தல், பள்ளியீட்டு , நாலுவீட்டுக்குச் செல்லுதல் , தேன்கூடு , மான்வளையம், ஒற்றை மல்லிகை , இரட்டை மல்லிகை , திருமல்லிகை , ஐந்து வெட்டு , நாலடி , ஒன்பதடி, தாளம் என்பன அவற்றுட் சிலவாகும்.

ஒரு காலத்திற் கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு ஊரிலும் பொல்லடி தத்திகள் இருந்தனர். குறிப்பாக கடலில் கரைவலை மீன் பிடிக்கும் ஒவ்வொரு தோணிக்கும் ஒரு குழுவினர் இருப்பர். அவர்கள் தமது ஓய்வு வேளைகளில் பொல்லடிப்பதில் ஈடுபடுவர்

ஒவ்வெர்ரு குழுவுக்கும் ஓர் அண்ணாவியர் தலைவராயிருப்பார். இத்தத்தியின் சேவையினைப் பெறவிரும்புவோர் அவருக்கு வட்டா வைத்து அழைத்து அனுமதி பெறல் வேண்டும். வட்டாவில் வெற்றிலை , பாக்கு சுண்ணாம்பு , கைப்பு , புகையிலை, ஏலம் , கராம்பு , சுக்கிரிப்பல்லி (வசம்பு) முதலிய பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும்.

பொல்லடிக்கு உபயோகிக்கப்படும் தடிகள் விப்பனை மரத்தினால் செய்யப்பட்டவையாகும். அவை உடையாது , வளையாது நின்று பிடிக்கக் கூடியவை. அத்துடன் மிகச் சத்தமாக ஒலி எழுப்புக் கூடியவையுமாகும். ஒரு பொல்லின் நீளம் ஒரு பிடியாகும். ஒரு பிடி என்பது கையைப் பொத்திப் பிடித்து முழங்கை வரையுள்ள நீளம். இந்நீளத்துக்கு அதிகமானால் தனக்கு முன்னால் நிற்பவரின் முகத்தில் பொல் தாக்கிக் காயம் ஏற்படலாம். நீளம் குறைவாக இருந்தால் , பொல்லைப் பிடித்திருக்கும் கையில் அடி விழலாம். எனவே பொல்லின் நீளம் எப்பொழுதும் ஒரு பிடி சரியாயிருக்க வேண்டும்.



ஒவ்வொரு பொல்லின் அடியிலும் இரு சலங்கைகள் பொருத்தப் பட்டிருக்கும். இது வெண்டயகளேயம் என வழங்கப்படுகின்றது. இனிமையான ஓசையை எழுப்புவது இவ் வெண்டயகளேயாகும். பொல்லுக்குப் பல வர்ணங்களும் தீட்டப்பட்டிருக்கும். பொல்லடிப்போரும் மிகப் பகட்டான உடை அணிந்திருப்பர்.

தென் மாகாணத்தில் கோலாட்டம் எனும் ஒரு வகையுண்டு. பொல்லுகளின் ஒரு பக்க முனைகள் கயிற்றினால் கட்டப்பட்டு , மேலே மத்தியில் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கும். வளையமாகச் சுற்றிப் பொல்லடிக்கும் பொழுது எல்லாக் கயிறுகளும் சேர்ந்து இறுகி ஒரு கயிறாகும். மறுபக்கம் வளையமாகச் சுற்றும் போது அவை பிரிந்து வெவ்வேறாகும். இது பின்னல் களிகம்பு எனவும் அழைக்கப்படும்.

2. பக்கீர் பைத் , றபான் , குத்து வெட்டு விளையாட்டு

பக்கீர் பாவாக்கள் எனப்படும் குழுவினரின் கைதேர்ந்த கலைகள் இவையேயாகும். அனேகர் எண்ணுவது போன்று பக்கீர் பாவாக்கள் எனப்படுவோர் இரந்துண்ணும் ஒரு கூட்டத்தினரல்ல. மாறாக மிகவும் பழமையான பாரம்பரியம் உடைய சூபித்துவத்தின் வாரிசுகளே அவர்களாவர். ஒருவர் பக்கீராகப் பிரகடனம் செய்யப்பட்டு , அக்குழுவிலுள் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு பல கடினமான படிமுறைகளைத் தாண்ட வேண்டும். 'நான்' என்ற மமதையை அடக்கி எதுவுமே சொந்தமில்லை எனும் பக்குவ நிலையை அடையவேண்டும்,. அதனாற்தான் அவர்கள் வீடு வீடாகச் சென்று இரந்து வாழ்தலும் எளிய வாழ்க்கை முறையைக் கைக்கொள்தலும் இவற்றின் பாற்பட்டதே.

பக்கீர் பைத் அல்லது றபான் அடித்தல் என்பது கெட்டிப் பிடித்தல் எனவும் அழைக்கப்படும். ஒருவரோ , பலரோ சேர்ந்து றபானை அடித்துக் கொண்டு நூறு மசாலாப் பாடல்களைப் பாடுவர்.

குத்து , வெட்டு விளையாட்டென்பது மிகவும் நுட்பமான ஒரு கலையாகும். முகத்தின் ஒரு கன்னத்தில் இரும்பு ஊசியை ஏற்றி , வாய்க்குள்ளால் அதைச் செலுத்தி , மறுபக்கம் கொண்டு வருதல் , மண்டைத் தோலிலுள் இரும்பாணியை ஏற்றுதல் , ஓர் ஆளை இரு துண்டுகளாக வெட்டுதல் , பாரமான பொருட்களைக் கண்ணிமைகளில் கொழுவிக் கொண்டு வலம் வரல், நாக்கை வெளியிழுத்து அதனூடே ஊசி ஏற்றுதல் போன்ற பலவற்றைச் செய்வர். அவ்வேளையில் உடம்பிலிருந்து ஒரு சிறிதேனும் இரத்தம் வெளிவராது. ஊசியை கழற்றியவுடன் அவ்விடத்தில் வெறும் ஊதுபத்தித் தூளையே தடவி விடுவர்.

காரைதீவிலுள்ள பக்கீர் சேனைப்பள்ளி வாசல் எனும் இடமே ஒரு காலத்தில் பக்கீர் பாவாக்களின் தலைமையாக இருந்தது. வன்செயல் மூலம் அது அழிவுற்றதின் பின் இன்று அக்கரைப்பற்றின் தைக்கா நகர் அவர்களது தலைமையாயுள்ளது. இவர்களது நிகழ்ச்சிகள் வருடாந்தம் அங்கும் கல்முனைக்குடி கடற்கரைப்பள்ளிவாசல், போர்வைப்பள்ளிவாசல் , தப்தர் ஜெய்லானி எனுமிடங்களில் நடைபெற்று வருகின்றன. பக்கீர் பைத் றபான்களுடன் நோன்பு காலங்களில் ஸகர் வேளை(அதிகாலை உணவு) யில் ஒருவரோ பலரோ ஊர்வலம் வந்து மக்களை எழுப்புவர்.

மலை நாட்டில் முஸ்லிம் கிராமங்களிலே பெருநாட்களின் பெண்கள் பெரிய ரப்பான்களை அடித்து மகிழும் வழக்கமும் இருந்துள்ளது.

3. சீனடி

இதுவொரு தற்காப்புக் கலையாகும். கைகளையும் கால்களையும் உபயோகித்து எதிரியின் தாக்குதலிலிருந்து தப்புவதோடு , அவனை அடித்து விழ்த்துவதற்குமான நடப்பங்களைக் கொண்டது.

இதன் பூர்வீகம் சீனாதேசம் என்பதைப் பெயரே சுட்டி நிற்கின்றது. ஜீடோ, கராட்டே , குங் – பூ எனும் வகையைச் சேர்ந்தது.

நாட்டின் பல பாகங்களிலும் இக்கலை பரவலாயிருந்தாலும் , திருகோணமலை மாவட்டம், குறிப்பாக கிண்ணியாப் பரதேசமே இதற்குப் பெயர் பெற்றதாகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தூரகிழக்கு நாடுகளிலிருந்து இந்நாட்டிற் குடியேறிய மலாயர் இதனை பிரபல்யப்படுத்தியிருக்கக் கூடும். அவ்வாறு வந்த மலாயருள் கணிசமானோர் கிண்ணியாப் பிரதேசத்திற் குடியமர்ந்த காரணத்தினால் , இது அங்கு பிரபல்யம் பெற்றிருக்கவும் கூடும்.

4. சிலம்படி

கம்பு வீச்சு எனவும் இது அழைக்கப்படும். ஒருவர் தனியாகவும் , பலர் கூட்டாகச் சேர்ந்தும் விளையாடுவர். ஒரு கம்பின் நடுப்பகுதியை பிடித்துக் கொண்டு மிக இலாகமாக கம்பை பல பக்கமும் மிக வேகமாகச் சுழற்றுவர், தென்னிந்தியக் கிராமங்களிலும் இது மிகப் பிரசித்தமானதாகும். கிண்ணியா வாழ்மக்கள் சிலம்படியில் சிறந்து விளங்கினர்.



5. வாள்வீச்சு

இருவர் தமது கைகளினாலே வாள்களை ஏந்திக் கொண்டு யுத்தகளத்திலே மோதுவது போன்று பாவனை செய்தல் இதுவாகும். இது இமாம் ஹுசைன் (ரலி) அவர்களின் நினைவாக முஹர்ரம் மாதம் பிறை 10ல் இவ்வாள்வீச்சு இடம் பெறும்.

அரபு நாடுகளிலும் உற்சவங்களின் போது விளையாடப்படும் ஒரு பிரபல்ய நிகழ்ச்சி இதுவாகும். அராபிய தீபகற்பத்திலிருந்து இந்நாட்டிற் குடியேறியோரோடு இக்கலையும் வந்து சேர்ந்தது.

சுருள் வாள்வீச்சு எனும் ஒரு வகையுமுண்டு.

இன்று கத்னா வைபவங்களோடு அடையாளப்படுத்தப்படும் உஸ்தாதுமார் எனும் குழுவினரே இக்கலையின் முன்னோடிகளாயிருந்தனர்.

6. மெத்தை வீடு கட்டுதல்.

கிராமப் புறங்களில் மாடிவீடுகள் எதுவுமே இல்லாதிருந்த காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த கலை இதுவாகும். நோன்பு , ஹஜ்ஜுப் பெருநாட் காலங்களில் , பலகைகளையும் , மரத்தூள்களையும் கொண்டு ஒரு மாடி அல்லது இரண்டு மாடிகளையுடைய வீடொன்றைக் கட்டுவர். இதனைப் பார்ப்பதற்கும் , மேலேறிச் செல்வதற்கும் பெருந்தொகையாக மக்கள் பல நாட்களுக்கு பல ஊர்களிலிருந்தும் வருவர். பல வர்ண மின் வெட்டுத் தாள்கள் , சருகு பித்தளைத்தாள்கள் , கஞ்சான் தகட்டுத் தாள்கள் என்பவற்றினால் அழகுறச் சோடனைகள் செய்யப்பட்டு , குளோவர் விளக்கும் தொங்கவிடப்படும். இதற்குள் செல்வதற்குக் கட்டணமும் அறவிடப்படும்.

7. நாடகம்

இவ்வாறு கட்டப்படும் மெத்தை வீடுகளில் அல்லது விசேடமாக அமைக்கப்படும் மேடைகளில் நாடகங்களும் மேடையேற்றப்படும். இஸ்லாமிய வரலாற்று நாடகங்களே இடம் பெறும். அலிபாதுஷா நாடகம் , அப்பாஸ் நாடகம் , பப்பரத்தி நாடகம் என்பன முக்கியமானவையாகும்.

கோடு ~ கச்சேரி எனும் நிகழ்ச்சியும் நடைபெறுவதுண்டு. அசல் நீதிமன்றம், போல் நீதிபதி , வழக்கறிஞர்கள் , முதலியார் , காவலாளர் , எதிரி, வழக்காளி , சாட்சிகள் என வேடமேற்றோரைக் கொண்டு வழக்குகள் நடைபெறும்.

இவ்வாறான நிகழ்ச்சிகள் இரவு பத்து மணியளவில் ஆரம்பித்து சுபஹு நேரம் வரை நடைபெறும். பார்வையாளர்கள் பாய் , தலையணை , வெத்திலை வட்டா, வறுத்த கடலை , கச்சான்கொட்டை , சோளகக் கொட்டை, என்பவற்றோடு சென்று ஆற அமர முற்றவெளியில் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை இரசிப்பர். இடையிடையே நித்திரையும் செய்வர். எழும்பியதும் பக்கத்திலுள்ள வர்களிடம் நடந்து முடிந்த கட்டங்களைக் கேட்டு அறிந்து கொள்வர்.

8. ஊஞ்சல்

தொட்டில் ஊஞ்சல் , பெரிய ஊஞ்சல் , கிறுக்கு ஊஞ்சல் என இது மூவகைப்படும்.

தொட்டில் ஊஞ்சல் என்பது இன்றுள்ள மெரிகோரவுண்டைப் போலாகும். பாரிய தூண்கள் நடப்பட்டு , இரும்பு அச்சுகளிலே கதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். இரும்பு அச்சைக் கைகளால் சுழற்றும் பொழுது கதிரைகள் மேல் கீழாகச் சுற்றிச் சுற்றி வரும்.

நிலத்திலிருந்து சுமார் ஐந்தடி உயரத்தில் ஊஞ்சல் பலகை இருக்கக் கூடியதாகப் போடப்படுவதே பெரிய ஊஞ்சல் எனப்படும். பலகை மிக நீளமானதாயும், அகலமானதாகவும் இருக்கும். அதிற் சிலர் அமர்ந்திருக்க , இரு முனைகளிலும் இருவர் நின்று உந்தி உந்தி எழும்ப ஊஞ்சல் மிக வேகமாக ஆடும். இதில் ஏறி ஆடுவதற்கு மிகவும் மனோபலம் வேண்டும்.

கூரான முனையுடைய காலொன்றினை நாட்டி , அதன் உச்சியில் துலாவொன்று பொருத்தப்பட்டிருக்கும். துலாவின் இரு தொங்கல்களிலும் கயிறுகளில் இரு பலகைகள் தொங்கவிடப்பட்டிருக்கும். துலாவைச் சுழற்றுவதனால் கிறுக்கு ஊஞ்சல் வளையமாக ஆடும்.

9. புலி வேஷம் போடுதல்

இந்திய கண்டத்திலும் இது பிரசித்தி பெற்றது. ஒருவர் புலி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு உலாவித் திரிவார். சிலர் பயந்தோடுவார்கள். பலர் பெருங் கூட்டமாக அதன் பின்னால் போய்க்



கொண்டிருப்பார்கள். பெண்களும் வீட்டு வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு புலி வேடிக்கை பார்ப்பார்கள். அவருக்கு பண அன்பளிப்பு வழங்கப்படும். இவ்வேசம் ஆஸூரா தினத்தில் போடுவதும் வழக்கம். இது சூடுவெந்த புலவிலும் (வவுனியா) இருந்தது.

10. ஆராத்தி

ஆலாத்தி எனவும் அழைக்கப்படும். அரசிலைவட்டா எனப்படும் அழகான பெரிய வட்டாவில் பல வர்ணச் சோடனைகள் செய்து அமைக்கப்படும். கல்யாண மாப்பிள்ளை - பெண் சுன்னத்து மாப்பிள்ளை , பிரமுகர் யாரையாவது நடுவிலிருத்தி , நான்கைந்து பெண்கள் சூழ வர நின்று ஆராத்தியைச் சுற்றிச் சுற்றி எடுப்பர். அந்நேரம் குரவையும் ஒலிக்கப்படும். வெடிகளும் சுடப்படும். ஆராத்தி எடுப்பதை அனேகமாக பெண்களே செய்வர். பகிரங்க இடங்களில் ஆண்கள் ஆராத்தியைச் சுற்றும் வழக்கமுண்டு. இப்போது இவ்விடயம் முற்றாக உலகமக்களால் தடை செய்யப்பட்டுள்ளது.

11. கவிபாடுதல்.

கிழக்கிலங்கையும் , மன்னார் மாவட்டமும் இத்துறையிற் பிரபல்யமானவையாகும். மட்டக்களப்பார்க்குத் தோளிலுங்கா , நாவிலுங்கா என்பது முதுமொழி. அதே போன்று ஆடவர் தோளிலுங்கா, அரிவையர் நாவிலுங்கா என்பது போன்று 'கா' என்னும் அசைச் சொல்லும் கவியும் இரண்டறக் கலந்தவையாகும்.

கவி பாடும் சந்தங்கள் அனேகமுண்டாயினும் , ஒய்வு வேளைகளில் நிழல் மரங்களின் கீழே கூடியிருந்து கோஷ்டியாகவும் , தனியாகவும் கவிபாடுதல் ஒரு தனிக்கவியாகவே பேணப்பட்டு வந்துள்ளது. சுன்னத்துக் கல்யாண வீடுகளில் இரவு நேரத்தில் விழித்திருப்பதற்கு பக்கீர் பாவாக்களின் நாறு மசாலாவும் , கவிக்கு மிகவும் பயன்பட்டன. இறக்காமத்திற் பிறந்து அக்கரைப்பற்றை வதிப்பிடமாகக் கொண்ட கவி மீராஉம்மா இத்துறையில் தனது அழியாத முத்திரையை பதித்தவராவார். சிறப்பிடமாக மட்டக்களப்பு கல்முனை மாவட்டங்கள் திகழ்ந்தன.

12. பதம்படித்தல்

பதம் படித்தல் , வாது கவி , பஜனை , கஸீதா என்பன இவற்றுள் அடங்கும். நாடளாவிய ரீதியல் பல ஊர்களிலும் இவை நடைமுறையிலிருந்துள்ளன.

கந்தூரிக் களரிகள் , மௌலூதுகள் , திருமணவீடுகள் எனுமிடங்களில் பதம்படித்தல் நடைபெற்றுள்ளது. கம்பீரமான இனிய குரல் வளமுடையவரே இதில் ஈடுபடுவர். ஒருவர் தனியாகவும் பாடுவார். சிலர் கூட்டாகவும் பாடுவர். சாஸ்திரிய சங்கீத மெட்டில் இஸ்லாமியப் பாடல்களே பாடப்படும். மணங்கள் மாலை, திருப்புகழ், கப்பற்பாட்டு , ஊஞ்சற்பாட்டு , தாலாட்டு என்பன பிரலபல்யமான பாடல்களாகும். விசேட வைபவங்களில் மௌலூது, பாடல் படிப்பது ஒரு சடங்காகும். தற்போது மௌலூது பாடல் தவிர்க்கப்பட்டு வருகின்றது.

மௌலூது களரிகளில் பதம்படித்தல் பிறிதொருபயனையும் கொண்டிருந்தது. மௌலூது ஓதி முடிந்தவுடன் , இடத்தை ஆயத்தப்படுத்தி , உணவு பரிமாறச் சிறிது நேரம் எடுக்கும். அவ்விடைவேளையில் பதம் படிக்கும் பொழுது , பலர் உணவையே மறந்து அதில் லயித்திருப்பர். பதம் மிகச் சிறப்பாயிருந்தால் , உணவு பரிமாறுதலைத் தாமதப்படுத்துமாறு ஏகோபித்த வேண்டுகோள்கள் விடுக்கப்படுவதுமுண்டு.

இரு குழுக்கள் எதிரெதிரே அமர்ந்து வினா – விடையான மாறிப்பாடுதல் வாதுப் பாடல் எனப்படும். இது சில வேளைகளில் வசைப்பாடலாக மாறி , கூட்டத்தாரிடையே அடிதடியில் முடிவதும் உண்டு.

பஜனை என்பது இன்றைய இன்னிசைக் கச்சேரி , மத்தளம் , பிடில், சல்லாரி , ஹார்மோனியம் ஆகிய வாத்தியக் கருவிகளும் உபயோகிக்கப்படும்.

## 13. புத்தகம் படித்தல்

எழுத, வாசிக்கத் தெரிந்தோர் தொகை குறைவாயிந்த அக்காலத்தில், புத்தகம் படித்தல் என்னும் இக்கலை அறிவு வளர்ச்சிக்கு உதவுவதாயும் அமைந்திருந்தது. கற்றறிந்த ஒருவர் ஒரு நூலினைப் பாடி அல்லது வாசித்து அதற்குரிய விளக்கமும் அளிப்பார். சிலவேளை அவருக்குதவியாக ஓிருவரும் வியாக்கியான மளிப்பதில் உதவுவர். முஹியீதீன் மாலை , இறசூல் படைப்போர் , சைத்தூன் கிஸ்ஸா போன்றன வாசிக்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் மிகவும் சரைஞ்சகமாயிருந்த சீறாப் புராணம். வருடத்திலொரு முறை சீறாப்புராணத்தை முழுவதுமாக வாசித்து அதற்கு விளக்கமளிக்கும் வழக்கம் மிகச் சமீப காலம் வரை அங்கு இருந்தது.

றம்ழான் காலத்தில் தராவீஹ் தொழுகையின் பின்னர் மஆனி, பத்ஹூத்தையான் , கன்சுல்அன்பியா , ராஜமணிமாலை என்பவற்றைப் படிக்கும் பழக்கமும், நாட்டின் பல பாகங்களிலும் இருந்துள்ளது. தற்போது வாராந்தம் அனேக வீடுகளில் குர்ஆன் ஓதுவது தஃலீம் வாசிப்பது வழக்கமாயுள்ளது.



## 14. மாப்பிள்ளை வாழ்த்து.

பெண்வீட்டுக்கு மாப்பிள்ளை வந்து சேர்ந்தவுடன், அங்கு முன் வாசலில் அமைக்கப்பட்ட பந்தலின் கீழ் ஓர் ஆசனத்தில் அவர் அமர்ந்த பின்னர் ஒருவர் வாழ்த்துப்பாட ஆரம்பிப்பார். பந்தலின் கால்கள் வண்ணப்பட்டுப் புடவைகளால் சுற்றப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும், தென்னங்குருத்தோலை , இளநீர்க்குலை , பூவரி என்பனவற்றாலும் சோடிக்கப்பட்டிருக்கும்.

மாப்பிள்ளை வாழ்த்தில் அவரின் சிறப்பு , பெண்ணின் சிறப்பு , வழங்கப்படும் சீர்வரிசைகள் , சபையிலேயிருக்கும் முறைகாரர் சிறப்பு என்பவற்றையெல்லாம் சிலாகித்துப் பாடுவார் புலவர். இவ்வாறு பாடிக் கொண்டு போகும் போது. அவருக்குப் பல பரிசுகள் வழங்கப்படும். பொன்னாடையும் போர்த்தப்படும். அச்சால்வையினால் மாப்பிள்ளையின் முகத்தில் வீசி வீசிப் புகழ் படிப்பார்.

மாப்பிள்ளையுடன் வருபவர்கள் வெடி கொளுத்துவதுடன் மௌலிது பாடலும் பாடும் வழக்கமும் கொண்டிருந்தனர். வவுனியா போன்ற பிரதேசங்களில் மேள தாள வாத்திய வரவேற்பு மாப்பிள்ளைக்கு அளிக்கப்பட்டிருந்தது.

தனக்கு அளிக்கப்படும் பரிசு நிறைவுடையதாய் இல்லாத பட்சத்தில் புலவர் மனக்குறையைப் பாடலிலே வெளிப்படுத்துவார். நான் மனம் நொந்து போவது சரியல்ல என ஆரம்பித்து மாப்பிள்ளையின் தரத்தையும் சிறிது குறைத்துக் குறை கூறத் தொடங்குவார். உடனடியாகவே மணமக்களின் உறவினர் அவருக்கு மேலும் பரிசுகளை வழங்குவர். அவ்வாறு கிடைத்தவுடன் புலவர் "யாரப்பா இந்த மாப்பிள்ளை" எனக் கேட்டுக் கேட்டு மிக ஏற்றி புகழ்வார். இப்பழக்கமே பிற்காலத்தில் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தலாக மாறியது.

மாப்பிள்ளை வாழ்த்துப் பாடுவதற்கு பாலமுனைப் புலவர் முஹம்மது லெவ்வை, ஒரு காலத்தில் புகழ் பெற்றவராயிருந்தார்.

அட்டாளைச் சேனையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவில் மேடையேற்றப்பட்ட மாப்பிள்ளை வாழ்த்து நிகழ்ச்சி நாடாளவியரீதியில் மிகவும் புகழப்பட்டது.

அக்கரைப்பற்று ஓய்வு பெற்ற அதிபர் ஏ. எல். அஹமதுலெப்பை யினால் தயாரிக்கப்பட்டு , தேசியக் கல்லூரி மாணவர்களினால் அளிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி, கொழும்பு, மல்வானை, ஆகிய இடங்களில் நடைபெற்ற போதும் பலத்த ஆதரவைப் பெற்றது.

15. குரவை.

கிழக்கு மாகாணத்துக்கே உரித்தானவொரு கலை இதுவாகும். பெண்கள் தங்கள் மேவுதட்டில் விரலை வைத்து நாக்கசைப்பினால் ஏற்படுத்தும் இனிய ஒலியே குரவையாகும். கலியாணவீடுகளிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் இது முக்கிய இடம் பெறும். ஒரு காலத்தில் ஊரிலுள்ள ஏனைய பெண்களுமே கூடியவராயிருந்தனர்.

அராபியப் பூர்வீகத்தையுடையது இக்குரவையாகும். அராபியத் தீபகற்பம், ஈரான், எகிப்து போன்ற நாடுகளில் இன்றும் குரவையிடும் வழக்கமுண்டு. மார்கிரட் மீட் என்னும் மானிடயவியலாளர் தனது நூலொன்றில், நைல்நதிக்கரைக் கிராமங்களிற் குரவையிடும் பழக்கம் பூர்வீக காலத்திலிருந்தே வழக்கிலுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

16. எழுத்தணி

முஸ்லிம்களுக்கேயுரிய சிறப்புக்கலை இதுவாகும். அரபு, பாரசீகம், உருது ஆகிய எழுத்துக்களை கொண்டு சித்திரங்கள் வரைவதே இக்கலையாகும். இவற்றிற்கேற்ப அராபிய, ஈரானிய, இந்திய வடிவங்கள் இதற்குண்டு. இவை எமது நாட்டிலும் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளன. கூபிக், துல்க், றிஹானி, தௌக்கி மஹாக்கிக், றிகா, தக்ரா, நாஷ்க், நஷ்டலிக், ஷிகஸ்தா லார்ஸா மன்ஸீர், குலார், ஸீல்ப் ஈ ஆருஸ் என இவ்வெழுத்தணியிற் பலவகையுண்டு. இந்நாட்டில் இன்று பிரபல்யம் பெற்று வரும் ஒரு கலை எழுத்தணியாகும்.

வன்னி முஸ்லிம்கள் சுவர்களில் கோதுமை மா , அரிசிமா , போன்றவற்றால் கோலம் போடுவார்கள். தற்போது இஸ்லாமிய எழுச்சியின் வேகத்தினால் மேற்படி விடயங்கள் மக்களைத் தவறான இறைசிந்தனைக்கு உட்படுத்துகின்றபடியால் இவை தவிர்க்கப்பட்ட வருகின்றன.

17. பன்மூலம் நுண்கலைப் பொருட்கள் நெய்தல்

குளத்தில் இருந்து பெறப்படும் இப்பொருளினால் பாய் நெய்தல் மற்றும் பனையோலையில் பெட்டி பாய் இழைத்தல் இஸ்லாமியரிடம் இவ்வாறு பல்வேறு பாரம்பரியங்கள் காணப்படுகின்றன.



# முஸ்லிம்களும் வரலாற்றுக் கலையும்.

இஸ்லாத்தில் வரலாற்றுக் கலையானது இஸ்லாமியக் கருத்துக்கள், உணர்வுகளின் தூண்டுதலின் அடிப்படையிலேயே தோன்றி வளர்ந்தது. "இஸ்லாம் வரலாற்று உணர்வு மிக்கதொரு மதம்" (Islam is a Religion with a strong sense of history) எனப் பேராசிரியர் Bernarb lewis குறிப்பிடுவது உண்மையில் மிகப் பொருத்தமானதொரு கருத்தாகும். மனிதனின் அறிவைப் பெறத் துணை புரியும் மூலாதாரங்களாக இயற்கை (nature) வரலாறு (history) உள்ளுணர்வு (Intension) ஆகிய மூன்று அம்சங்களையும் அல்குர் ஆன் குறிப்பிடுகின்றது. அதாவது அல்குர் ஆன் முன்னைய நபிமார்களின் வரலாறுகளையும் முன்னைய சமூகங்களின் சரித்திர நிகழ்வுகளையும் குறிப்பிடுவதன் மூலமும், பூமியில் பயணம் செய்து முன்னைய சமூகங்கள் இறைவனின் வழிகாட்டலைப் புறக்கணித்ததனால் அவர்களுக்கு நிகழ்ந்த பயங்கரத் தண்டனைகளையும் சித்தரிக்கும் சின்னங்களைப் பார்த்துப் படிப்பினை பெறும் படியும் மனிதர்களைப் பணிப்பதன் மூலமும் முஸ்லிம்கள் வரலாற்றுக் கலையில் ஆர்வம் செலுத்தத் தூண்டுதலாக அமைந்துள்ளது.

இஸ்லாத்திற்கு முன்னர் அரபு மக்களின் மத்தியில் மரபு வழிப் பாரம் பரியக் கதைகளும், "அய்யாமுல் அரப்" எனப்படுகின்ற அவர்களது "வீரச் செயல்கள்" பற்றிய போர் வர்ணனைகளும் காணப்பட்டதேயன்றி, வரலாறு எனக் காணக் கூடிய ஒரு கலை மரபு அவர்களிடம் இருக்கவில்லை. இஸ்லாத்தின் வருகையின் பின்னர் நபி (ஸல்) அவர்களின் வாக்குகள், வாழ்க்கையின் நிகழ்வுகள், அவர்கள் பங்கு பற்றிய போர்கள் பற்றிய தொகுப்புகளே ஒழுங்கான வரலாற்று நூல்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன. "மகாஸீ", "ஸீரா" என அழைக்கப்பட்ட இந்த கவிச் சரிதைக் கலை தோன்றி வளர்ந்த மத்திய தளமாக மதீனா விளங்கியது. ஹிஜ்ரி 2ம் நூற்றாண்டின் பின்னர் ஏனைய இஸ்லாமிய நகர்களில் இத்துறையிலான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இவ்வாறு வரலாற்றுக் கலை ஹதீஸோடும் மகாசி, ஸீரா என்பனவோடும் தொடர்புற்று வளர்ந்தமையானது வரலாற்று நிகழ்வுகளை விமர்சன ரீதியாக ஆராயும் தன்மையினை இஸ்லாமியவரலாற்று மரபில் தோற்றுவித்தது.

முஸ்லிம்கள், நபி (ஸல்) அவர்களின் மறைவின் பின்னர் அல்குர்ஆனின் சில அம்சங்களை விளக்குவதற்கு, அவற்றோடு தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகள் பற்றிய அறிவு இன்றியமையாததாகக் காணப்படுவதை உணர்ந்தனர்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று அல்குர்ஆன் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னைய இனங்களோடு தொடர்புடைய பல வரலாற்றுச் சம்பவங்களை மேலோட்டமாகக் குறிப்பிடுகின்றது. வரலாற்றுப் பின்னணி இன்றி இவ்வரலாற்றுச் சம்பவங்களை எவராலும் விளங்கவோ, விளக்கவோ முடியவில்லை.அதே போன்று முன்னைய இறைதூதர்களது வாழ்வில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களை விளக்குவதற்கும் கடந்த கால வராலாறு பற்றிய அறிவு அவசியமாகியது.

இஸ்லாமிய அறிவுத்துறையில் அல்குர்ஆனுக்கு அடுத்த முக்கிய இடத்தை ஹதீஸ் பெறுகின்றது. உண்மையில் இஸ்லாத்தின் ஆரம்ப காலப் பரம்பரையினரின் வரலாறு பற்றிய முயற்சிகளில் அடித்தளமாக ஹதிஸே அமைந்தது. ஹதீஸ்களைத் தேடிப்படிப்பதிலும், அவற்றை ஒன்று சேர்ப்பதிலும் முஸ்லிம் அறிஞர்கள் காட்டிய ஆர்வத்திற்கும் ஈடுபாட்டிற்கும் அர்ப்பணத்திற்கும் நிகரான ஒன்றை மனித இன அறிவு வரலாற்றில் மிக அரிதாகவே காண முடிகின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் ஹதீஸே அனைத்துக் கலையாகவும் அமைந்தது, ஹதீஸ்களைத் தேடி நீண்ட சிரமமான பயணங்களை மேற் கொண்டனர். "அறிவைத் தேடி பயணித்தல்" (ரிஹ்லா பீ தலிபில் இல்ம்) ஒரு பக்தி மிக்க செயலாக கருதப்பட்டது. இவ்வறிஞர்களின் மகத்தான முயற்சியும், தியாகமுமே "அஸ்மாஉர் ரிஜால்' என்னும் புதிய கலையைத் தோற்றுவித்தது. ஹதீஸ் அறிவிப்பாளர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களை மிக நுட்பமாகவும் விமர்சன ரீதியாகவும் விளக்கும் இந்தக் கலையானது, மனித வரலாற்றிலேயே மிக அதிகமான வாழ்க்கைச் சரித்திரங்களைப் பொதிந்த கலையாக விளங்குகின்றது. இனி கலாநிதி எம்.ஏ.எம். சுகரி அவர்கள் பாகுபடுத்திய விமர்சன ஆய்வுமுறையை இனி நோக்குவோம்.

## விமர்சன ஆய்வுமுறை

ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள் பற்றி தகவல்களைப் பெறுவதற்காக ஹதீஸ் கலை அறிஞர்கள் பல கஸ்டங்களையும், சிரமங்களையும் அடைந்தனர். இவ்வறிவிப்பாளர்கள் வாழ்ந்த காலப்பிரிவுகள் , அவர்களின் சமூக அந்தஸ்து, குடும்பப் பாரம்பரியம், குணநலன்கள், அறிவுத்தரம், நம்பகத்தன்மை, ஆகியவற்றைக் கண்டறிவதில் ஹதீஸ் கலை அறிஞர்கள் மிக நுட்பமான விதிமுறைகளையும் விமர்சன உத்திகளையும் கையாண்டனர். இவர்களது மகத்தான இம்முயற்சி பற்றிப் பேராசிரியர் மார்கிகேயோத் (Margolioth)தனது Lecture on arb Histroians எனும் நூலில் "Gratar industry and effeort : tijan in any analogousk case" அதனோடு வேறு எதனையும் ஒப்பிட முடியாத அளவு கடும் ஒத்துழைப்பை புரிந்த மகத்தான முயற்சி எனக் குறிப்பிடுகின்றார். ஒரு ஹதீஸ் அங்கீகரிக்கப்பட முன்னர் அதன் ஆதாரபூர்வமான தன்மையை உறுதிப்படுத்த தேவையான அத்தனை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.



ஹதீஸ் கலை வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட வரலாற்றுக்கும் (History) , வாழ்க்கைச் சரிதைக்கும் (Biography) இடையிலான இடைத் தொடர்பின் பயனாக வரலாற்று ஆசிரியர்கள் ஹதிஸ் கலை அறிஞர்கள் பின்பற்றிய நுட்பமான விதிமுறைகளையும் விமர்சன உத்திகளையும் பின்பற்றத் தொடங்கினர். இந்தச் சூழ் நிலையில் இஸ்லாத்தில் வரலாற்றுக் கலையானது நபி (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்களினதும் வாழ்க்கைச் சரிதைகள் பற்றிய நூற்களின் தொகுப்புகளோடு ஆரம்பமாகியமை இயல்பாகவே அமைந்தது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வரலாற்று ஆய்வாளர்கள் பின்பற்றிய ஹதீஸ் கலை அறிஞர்களின் தகவல் திரட்டும் நுட்பமான உத்திகளின் காரணமாக இரண்டு முக்கிய பண்புகள் இஸ்லாமிய வரலாற்றுக் கலை மரபின் ஆரம்ப கட்டத்திலேயே தோன்றின.

முதலாவது, வரலாற்று ஆசிரியர்கள் தாம் குறிப்பிடும் வரலாற்றுக் குறிப்புகள், நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல்களை தாம்பெற்றதற்கான ஆதாரங்களுடன் குறிப்பிட்டுள்ளனர். இதே காலப் பிரிவில் தோன்றிய ஐரோப்பிய வரலாற்று நூல்களில் வரலாற்றுச் சம்பவங்கள் விளக்கப்படும் போது அதற்கான ஆதாரங்கள் குறிப்பிடப்படும் மரபு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

இரண்டாவது, முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் நிகழ்வுகளைக் குறிப்பிடும் போது அது நிகழ்ந்த காலப்பிரிவையும் திகதியையும் குறிப்பிட்டனர். எனவே தான் முஸ்லிம்கள் வரலாற்றுக் கலையை "தாரிக்" (Ta'rikh) என அழைத்தனர். இது ஆங்கிலத்தில் History என கூறப்படுகின்ற சொல்லுக்கு இணையானதாக அமைய மாட்டாது. முஸ்லிம்களும் ஐரோப்பியரும் வரலாற்றை வெவ்வேறு வித்தியாசமான கண்ணோட்டங்களில் அணுகினர் என்பதற்கு ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்திய இந்த வார்த்தைப் பிரயோகங்கள் வெவ்வேறு கருத்துக்களைக் காட்டி நிற்பது சிறந்த உதாணரமாகின்றது. History என்பது ஒரு நிகழ்ச்சி பற்றி அறிவதற்கு அல்லது ஆராய்வதற்கு முற்படுவதாகும். (Inquiry in to happeningh) மாறாக தரீக் (Tareekh) என்பது ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த மாற்றத்தைக் குறிப்பிடுதல் என்ற கருத்தை உடைய ஒரு பதமாகும். முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் ஒரு நிகழ்ச்சியின் ஆதாரத்தன்மையை மிக உறுதியாக நிர்ணயிப்பதில் தீவிர ஆர்வம் காட்டினார்கள் என்பதையே "தரிக்" என்ற பதம் குறிக்கின்றது. இவ்வாறு நிகழ்ச்சிகளை அவை நடைபெற்ற திகதிகளின் அடிப்படையில் குறிப்பிடும் மரபு கி.பி. 1597க்கு முன்னர்

காணப்படவில்லை என பகில் (Buckle) என்னும் பிரபல வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே ஒரு நிகழ்சசி நடந்த திகதியைக் குறிப்பிடுவதன் மூலமும் அதே நிகழ்ச்சி நடைபெற்றதற்கான ஆதாரங்களை அறிவிப்பாளர்களின் சங்கிலித் தொடர் மூலமும் (Cyhauin of narratous), அதன் மூலம் அறிவிப்பாளரைக் குறிப்பிட்டு அறிவிப்பதன் மூலமும் அறிவியல் ரீதியான வரலாற்றுத் தொகுப்பின் (Scientific History Writing) இரண்டு முக்கிய விதிகளை முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் நிறுவினார்கள். அறிவியல் ரீதியான வரலாற்று ஆய்வு மிக சிறப்பாக வளர்ச்சிடைந்துள்ளது. இன்று கூட இவ்விதிகள் பின்பற்றப்படுகின்றன. எனவே இது முஸ்லிம்கள் வரலாற்றுக் கலையின் வளர்ச்சிக்கு செய்த முக்கிய பங்களிப்பாகும். கி.பி. 16ம் நூற்றாண்டில் கஷ்புஸ்சீனூன்" என்னும் நூலை எழுதிய நூலாசிரியரான ஹாஜீ கலீபா அவர்கள் வரலாறு தொடர்பான நூல்களைத் தொகுத்து 1200 வரலாற்று ஆசிரியர்கள் பெயர்களைப் பதிவு செய்திருப்பதானது இக்கலை முஸ்லிம்கள் மத்தியில் பெற்றிருந்த பிரபல்யத்தை விளக்குகின்றது.

## முஸ்லிம்களின் பங்களிப்பு

இத்தகைய ஒரு சுருக்கமான கட்டுரையில் அத்தனை வரலாற்றாசிரியர்களின் பங்களிப்புகளையும் விளக்குவது அசாத்தியமாகும். எனவே, இத்துறையில் மிகப் பிரபல்யம் வாய்ந்த ஒரு சிலரின் பங்களிப்பைச் சுருக்கமாக ஆராய்வோம்.

வரலாற்றுத்துறை சார்ந்த முஸ்லிம்களின் ஆரம்பாகாலப் பணிகள் நபி (ஸல்) அவர்களின் வாழ்வும் பணியும் பற்றியதாகவே அமைந்திருந்தன. குறிப்பாக அவர்கள் தமது பிரச்சாரப் பாதையில் பங்கு பற்றிய போர்கள் பற்றிய விளக்கமாகவே இந்நூல்கள் அமைந்தன. எனவே நபிசரிதை பற்றிய இந்த ஆரம்பநூல்கள் "மகாஸீ" என அழைக்கப்பட்டன. மகாஸீ என்ற பதம் இராணுவப் படையெடுப்புக்கள் , தாக்குதல்கள் என்ற கருததுக்களையே கொடுக்கின்றன. இத்தகைய நபி சரிதை நூல்கள் பாரிய ஆர்வமும் முயற்சியும் மதீனாவிலேயே அவதானிக்கப்பட்டது. ஹஜ்ரி 2ம் நூற்றாண்டில் மகாஸீ பற்றிய துறையில் ஆர்வம் செலுத்தியோர் மதீனா தவிர்ந்த ஏனைய இடங்களில் காணப்பட்டனர்.

ஆரம்ப காலப்பிரிவில் மகாஸீ பற்றிய துறையில் ஆர்வம் செலுத்தியோர்களாக அபான் பின் உஸமான் (ஹி 100) உர்வா பின் ஸுபைர்



(ஹி ~ 94) ஆகியோர் விளங்குகின்றனர். அதனைத் தொடர்ந்து முஹம்மத் பின் முஸ்லிம் ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி ஆகியோர் இத்துறையில் மகத்தான பங்களிப்பைச் செய்தனர். இவர்களைத் தொடர்ந்து வந்த பரம்பரையில் மகாஸீ பற்றிய நூல்களை எழுதிய மூன்று அறிஞர்களும் அஸ்ரீஹிஸ்ரியின் ஆதாரங்களையும், தகவல்களையும் அடிப்படையாக வைத்தே அவர்களது நூல்களை எழுதினர். இவர்களுக்கு முஹம்மத் பின் இஸ்ஹாக் பின் யஸார் (ஹி ~ 151 கி.பி. 786) எழுதிய புகழ் பெற்ற நூலான "ஹிதாபுல் மகாஸீ" நூலே சிறப்புசரிதை பற்றிய மிக விரிவான விளக்கமான நூலாக அமைந்தது. இப்னு இஸ்ஹாகின் இந்நூல் இரண்டாவது அப்பாஸிய கலீபாவான கலீபா அல் மன்ஸுருக்காகத் தொகுக்கப்பட்டது. ஆனால் இந்த முழு நூல் இன்று எமக்கு கிடைக்கவில்லை. இந்நூலைத் தழுவி இதன் தகவல்களின் அடிப்படையில் இப்னு ஷிஹாம் (ஹி~ 218 ~ கி.பி. 833) தொகுத்த ஸுறத் இப்னு ஷிஹாம் எனப் பொதுவாக அழைக்கப்படுகின்ற நூலே இன்று எமக்கு கிடைக்கின்றது. அதனைத் தொடர்ந்து இத்துறையில் இப்னு ஸஃத் எனும் வரலாற்று அறிஞர் தொகுத்த " தபகாத் என்னும் நூல் சிறப்பம்சம் பெறுகின்றது. எட்டுப் பக்கங்களைக் கொண்ட அவரது இந்நூல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தையும் நபித்தோழர்களின் வாழ்க்கை வரலாற்றுக்குறிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது. இப்னு ஸஃதின் ஆசிரியரான வாகிதி "கிதாபுஸ் ஸீரா", "கிதாபுத் தாரிக் வல் மகாஸீ" ஆகிய இரு நூல்களையும் தொகுத்தார். அல்வாகிதி பெரும்பாலும் யூத மத கதைகளின் பின்னணியில் தனது நூலை ஆக்கியுள்ளதால் புகாஸீ , ஸீரா பற்றிய பொது நூல்கள் அவ்வளவு நம்பகத் தன்மை படைத்தவையல்ல என இமாம் ஷாபிஈ உட்பட பல்வேறு அறிஞர்கள் கருதுகின்றனர்.

கி.பி. 9ம் நூற்றாண்டு அளவில் இப்னு குதைபா , அல்பலாதுரி , தீனாவரி , அல் யாகூபி போன்ற புகழ்மிக்க வரலாற்றசிரியர்கள் பலர் தோன்றினர். அல்பலாதுரி (ஹ~279 கி.பி. 892) "புதூஹீல்" எனும் வரலாற்று நூல் ஆரம்பகால முஸ்லிம்களின் படையெடுப்புக்களையும் இஸ்லாமிய ஆட்சிப் பரவலையும் விளக்குகின்றது. இஸ்லாத்தின் முதலாவது கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களின் காலப்பிரிவில் தோன்றிய நித்தப் போர்கள், சிரியா , எகிப்து, பாரசீகம், ஆர்மோனியா, மொறாக்கோ முதலியபிரதேசங்கள் கைப்பற்றப்படல் என்பன பற்றிய வரலாற்று குறிப்புகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. உண்மையில் இப்னு ஸஅதின் "தபகாதுல் கபீர்" எனும் நூலுக்கு புகழ்

பெற்ற பிற்கால வரலாற்றசிரியரான அத்தபரியின் வரலாற்று நூல்களும் இடையில் இணைப்புபாலமாக பலாதுர்யின் "புதூஹுல் புல்தான்" விளங்குவதாக குறிப்பிடுகின்ற பேராசிரியர் மகாக்கோலியத்தின் கூற்றுஇங்கு குறிப்பிடத்தக்கதாகும். வரலாற்றுக் கலைவளர்ச்சியின் வரலாற்று ஆசிரியர்களைப் பற்றி இனி ஆராய்வோம்.

## அத் – தபரி

முஸ்லிம்களின் வரலாற்று கலைப்பங்களிப்பு அத்தபரி ஒரு முக்கிய வளர்ச்சிப் படிவத்தை அடைகின்றது. வரலாற்றை மிக விரிவாகவும் பகுப்பாய்வு முறையிலும் விளக்கி , வரலாற்று நிகழ்ச்சிகளை அவை நிகழ்ந்த காலப்பிரிவின் அடிப்படையில் வரிசையாகத் தொகுத்தளித்த முதலாவது ஆசிரியராக முஹம்மது ஜரீ அபூஜஃபர் அத் – தபரீ கி.பி. 923) விளங்குகிறார். தப்ஸீருத் தபரீ என அழைக்கப்படும் அவரது அல்குர் ஆனின் விரிவுரையும் கிதாபுல் முலூக்வர் ருஸீல் என்பபடும் நூலும் அவர் முஸ்லிம் அறிஞர்களிடையே சிறப்பிடத்தைப் பெறக் காரணமாக அமைந்தன. ஹி 258ம் ஆண்டு வரை இஸ்லாமிய வரலாற்றைத் தொகுத்து தரும் அவரது நூல் இஸ்லாமிய வரலாற்று நூல்களில் மிக ஆதாரபூர்வமானதாகவும் வரலாற்றுத் தகவல்களைப் பொறுத்தவரையில் மிகச் செறிவுடையதாகவும் காணப்படுகின்றது. வரலாற்று நூல்களின் சிறப்பு வரலாற்று நிகழ்ச்சிகளை அவற்றின் நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைக்கிரமமாகத் தொகுத்து தருவதிலேயேதங்கியுள்ளது.

அத்தபரீ தனது நூலின் இறுதிப் பகுதிவரை இம்மரபைப் பின்பற்றியுள்ளார். இவர் தொகுத்த வரலாற்று நூல் அதன் மூல உருவில் மிகப் பாரிய அளவினதாக அமைந்திருந்தது. இன்று எமது கைகளில் உள்ள வரலாற்று நூலை விட சுமார் பத்து மடங்கு பெரிதாக அது அமைந்திருந்தது. அத்தபரீ தனது நூலில் இஸ்லாத்திற்கு முந்திய வரலாறு பற்றி இரு பகுதிகளில் விளக்கியுள்ளார். ஏனைய பகுதிகளில் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, நாற்பெரும் கலீபாக்களின் வரலாறு, ஹிஜ்ரி 302~ கி.பி.915 வரையிலான உமையாக்கள், அப்பாஸிகளின் வரலாறு என்பவற்றை உள்ளடக்கியுள்ளார். அத்தபரீ எத்தனைகய குறுகிய நோக்கமும் இன்றி எத்தகைய கொள்கைகள் கோட்பாடுகளையும் சாா்ந்திராது வரலாற்றை விளக்கியவொரு மகத்தான வரலாற்று ஆசிரியர். எத்தகைய பதவியையும் ஆட்சியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள விரும்பாத அவர் முற்றிலும் வரலாற்று நூல்களை வாசிப்பதிலும் வரலாறு பற்றி எழுதுவதிலுமே ஈடுபட்டார். இவரைவிட சிறப்பாக வரலாறுகளை எழுதியவர் அப்போது இல்லையெனலாம்.



## 02. அல் – மஸ்ஊதி

அத்தபரிக்கு ~ அடுத்ததாக முஸ்லிம் வரலாற்று அறிஞர்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர் அலி இப்னு ஹுஸைன் அல்மஸ்ஊதி (கி.பி. 956) ஆவார். தனது வரலாற்று நூலுக்கான தகவல்களைப் பல்வேறு நூல்களில் இருந்து பெற்றுக் கொண்டது மட்டுமன்றி தனது நீண்ட பிரயாணங்களின் மூலமும் தான் பெற்ற அறிவு அனுபவங்கள் என்பவற்றின் மூலமாகவும் பெற்றுக் கொண்டார், அவர் ஆர்மோனியா, இந்தியா, இலங்கை, ஸன்ஸிபார் , மடகஸ்கார் ஆகிய இடங்களைத் தரிசித்ததோடு , சீனாவின் கடற்பகுதிகளிலும் கஸ்பியன் கடல் பிரதேசங்களிலும் பயணம் செய்துள்ளார். தனது இறுதிக் காலப்பிரிவில் சிரியாவிலும் எகிப்திலும் வாழ்ந்த அல்மஸ்ஊதி, அக்காலப்பிரிவில் "முருஜீஸ் ஸஹப் " (Murooguz ZahabP எனும் தனது வரலாற்று நூலைத் தொகுத்துள்ளார். புகழ்பெற்ற கிரேக்க வரலாற்றாசிரியர் ஹெரோடெடஸ் (Herodatus) என்பவரோடு அல் ~ மஸ்ஊதியை ஒப்பிடுகின்ற மேற்கத்தேய அறிஞர்கள் "mtou Herodatus the Arabs' அரபு மக்களின் ஹெரோடெடஸ் என அழைக்கின்றனர். கிதாபு அக்பாருஸ் ஸமான் எனப் பெயரிடப்பட்ட அவரது மூலவரலாற்று நூல் முப்பது பாகங்களைக் கொண்டதாக அமைந்தது. இந்நூலின் இரண்டு பாகங்களில் காணப்பட்ட விடயங்கள் "முருஜீஸ் ஸஹப் வமஆதினுல் ஜவ்ஹர்" என்ற பெயரில் அவரால் தொகுக்கப்பட்டன. கி.பி. 947 ஆம் ஆண்டு வரையுள்ள உலக வரலாற்றை இந்நூல் தொகுத்துக் கூறுகின்றது. அவர் தனது நூலின் முன்னுரையில் இந்நூலைத் தொகுப்பதற்காக தான் ஐம்பது வரலாற்று நூல்களை படித்ததாகக் குறிப்பிடுகின்றார். தபரியின் வரலாற்று நூலில் காணப்படுவது போன்று வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலப்பிரிவுகளையும் திகதிகளையும் அடிப்படையாகக் கொண்டன்றி , பேரரசுகள் (Empires) சாம்ராஜ்யங்கள் (Dynasties) என்பவற்றை அடிப்படையாக வைத்து அவர் தனது வரலாற்று நூலைத் தொகுத்துள்ளார்.

அறிஞர்கள் வரலாற்றுக் களத்தில் பிரவேசிப்பார்கள். பின்னர் மறைந்து விடுவார்கள் ஆனால் வரலாறு அவரது அறிவுப்பணிகளை பதிவு செய்துள்ளது. அதன் மூலம் கடந்த காலத்தை நிகழ் காலத்துடன் இணைத்து நிகழ்வுகள் பற்றியும் மனிதர்கள் பற்றியும் பாரபட்சமற்ற தகவல்களை எமக்குத் தருகின்றது.

என அல் மஸ்ஊதி நம்புவதாக டீ பேயர் (De Boar) தனது The History of Phlosophy in islam) எனும் நூலில் குறிப்பிடுகின்றார். அல் ~ மஸ்ஊதி, அல் ~ யாகூபி போன்ற முஸ்லிம் வரலாற்று அறிஞர்கள் சரித்திர ஆசிரியர்களாக மட்டுமன்றி புவியியலாளர்களாகவும் விளங்கினர். அவர்கள் தமது நீண்ட பிரயாணங்கள் மூலம் புவியியல் தகவல்களைப் பெற்றனர். வரலாற்றையும் புவியியலையும் இணைத்து அளித்த அவர்களது விளக்கமானது இவர்களைத் தொடர்ந்து வந்த வரலாற்று அறிஞர்களால் பின்பற்றப்பட்டது.

அல் மஸ்ஊதி முஸ்லிம் வரலாற்றுக் கலைத் துறையில் ஒரு புது யுகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். வரலாற்றை நிகழ்ச்சிகளாகத் தொகுத்து அவை நடைபெற்ற காலப்பிரிவு , திகதிகளின் அடிப்படையில் தொகுக்கும் மரபு முற்றிலும் மாற்றமடைந்து வரலாற்றை அவ்வக்கால ஆட்சியின் நிலைக் களனிலும் சமூகவியல் நிலைக்களனிலும் சமூகவியல் பின்னணியிலும் விளக்கும் புதியதொரு அமைப்பு அல் ~ மஸ்ஊதியுடன் ஆரம்பமாகின்றது. மேலும் வரலாற்று நிலைக்களன் விரிவடைந்து அது ஒரு மானிய நேய நோக்கைப் (Humansatic) பெற்றது. அல்மஸ்ஊதி முஸ்லிமல்லாத இனங்களின் வரலாறு பற்றியும் விளக்கியதோடு பல்வேறு இனங்களினதும் குணநலன்களை உருவாக்குவதில் பௌதீக புவியியல் காரணிகள் வகிக்கும் பங்கையும் ஆராய்ந்துள்ளார். சுவாத்தியத்தைப் பொறுத்தளவிலும் , பருவகாலங்கள் , நட்சத்திரங்களின் தோற்றம் அஸ்தமனமும் , காற்று , ,குறிப்பிட்ட பூகோளப் பிரதேசத்தின் நிலை , கடல்களின் நிலை என்பன மக்களின் தன்மைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கினை வகிப்பதாக அவர் குறிப்பிடுகின்றார். இக்காரணிகள் தாவரங்களின் வாழ்க்கையையும் மிருகங்களின் வாழ்க்கையையும் பாதிப்பதோடு உடனடியாக மனித வரலாற்றில் ஆதிக்கம் செலுத்தும் தன்மையினையும் விளக்குகின்றார். அல் ~ மஸ்ஊதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வரலாற்றுக் கலை மரபு , இஸ்லாம் உருவாக்கிய தலைசிறந்த தத்துவ வரலாற்றாசிரியராகும். (Philospher Historian) சமூகவியலாளருமான இப்னு கல்தூனுடன் பூரண வளர்ச்சியைக் கண்டது.

அல்~மஸ்ஊதி கி.பி. 956 இல் மரணித்ததைத் தொடர்ந்து இப்னுல் அதீர் , இப்னு மிஸ்கவைஹி , அபுல் பிதா , இப்னுல் கல்தூன் , போன்ற வரலாற்றாசிரியர்கள் தோன்றினர்.



அல் ~ மஸ்ஊதியுடன் முடிவடைந்த இஸ்லாத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் இஸ்லாமிய வரலாற்றுக் கலை மரபு சிறப்பான வளர்ச்சியைக் கண்டது. அதனைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் இஸ்லாமிய நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்கும் முஸ்லிம் உலகில் தோற்றமெடுத்த புவியியல் தத்துவங்கள் வானவியல் போன்ற கலைகளும் வரலாற்றுக்கலையில் மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தின.

இப்னு அதிர் , இப்னு மிஸ்க கவைஹி ஆகியோர் அத் ~ தபரியின் உலக வரலாற்றை அடிப்படையாகக் வைத்து தங்களது வரலாற்று நூல்களை எழுதினர். இப்னு அதிரின் “அல் ~ காமில்” என்னும் பெயருடைய உலக வரலாறானது அவருக்கு மங்காத புகழை ஈட்டிக் கொடுத்தது. ஆரம்ப கால சிலுவை யுத்தங்கள் ஸலாஹுதீன் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் என்பன அந்த நூலில் காணப்படுகின்றன.

புவைஹித் ஆட்சியாளர்களின் அரசவையில் ஒரு முக்கிய அதிகாரியாகப் பணிபுரிந்த இப்னு மிஸ்கவைஹி (ஹி ~ 421 கி.பி. 1030) மிக விரிவான பல அரசியல் அனுபவங்களைப் பெறும் வாய்ப்பு பெற்றிருந்தார். அவரது இந்த அனுபவங்கள் அவரது வரலாற்று நூலான கிதாப் தாரிபுல் உமம், வதஆகில் ஹிமம் என்னும் நூலில் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றது. இவரது காலப்பரிபாலன முறைகள் , போர்முறைகள் , ஆட்சியாளர் , பற்றிய குறிப்புகள் , பொருளாதார நிலை போன்றகுறிப்புகள் , அவரது வரலாற்று நூலில் காணப்படுகின்றன. புவைஹித் ஆட்சியில் அதிகாரியாக அவர் பணிபுரிந்த நிலையில் கூட அவர்களிடம் நிகழ்ந்த தவறுகளைச் சுட்டிக் காட்டி அவற்றைக் கண்டிக்க அவர் தயங்கவில்லை.

இஸ்லாம் உருவாக்கிய தலைசிறந்த வரலாற்று அறிஞராக இவர் விளங்குகிறார். நாம் ஏற்கனவே ஆராய்ந்த இப்னு ஷிஹாம் , வாகிதி , பலாதுரி , அத்தபரி , அல் ~ மஸ்ஊதி , இப்னுமிஸ்வைஹி , போன்றோர் இஸ்லாமிய வரலாற்று மரபு ஒன்றை உருவாக்கி அதற்கு அறிவியல் ரீதியான ஒரு அடித்தளத்தை நிறுவினர். அறிவின் எல்லாத் துறைகளிலும் அறிவியல் நோக்கையும் , ஆராய்ச்சி உணர்வையும் பிரதிபலித்த முஸ்லிம்களின் அறிவுக் கோட்பாடானது பல வரலாற்றுக் கலை கடந்த காலச் சம்பவங்களின் வெறும் தொகுப்பாக அமையும் நிலையை மாற்றியமைத்தது. சமூக வளர்ச்சியையும் மாற்றத்தையும் பிரதிபலிக்கும் ஒரு மாபெரும் தத்துவமாக மலரச் செய்வதில் அனைவரும் முன் நின்றனர்.

## இப்னு கல்தூன்

இந்த மாற்றத்தைச் சிறப்பாகப் பிரதிபலிக்கும் ஓர் ஆளுமையுள்ளவராக இப்னு கல்தூன் (1332 / 1402) அவர்கள் விளங்குகின்றார்கள். சமூகவியலின் தந்தையாகவும் மனித வரலாற்று அறிவியல் நோக்கில் அணுகி பகுப்பாய்வு செய்த வரலாற்று மேதையாகவும் வரலாற்றுத் தத்துவத்தை (Philosophy of History) தோற்றுவித்த மாபெரும் அறிஞராகவும் கணிக்கப்படுகின்றார். 'ஹொப்ஸ் (Hobbes) லொக் (Lock) ரூஸோ (Rousseau) போன்ற மேற்கத்திய சிந்தனையாளர்கள் அவருக்கு இணையானவர்களல்லர் என்று குறிப்பிடப்படுவது ஒரு புறமிருக்க , அவரது பெயரோடு இணைத்துக் குறிப்பிடப்பிடப்படக் கூடத் தகுதியற்றவர்கள் என Robet என்னும் அறிஞர் தனது Philosophy of History என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

அவர் உருவாக்கிய வரலாற்றுத் தத்துவம் "முகத்திம்மா" என்னும் அவரது புகழ் பூத்த நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்து. "முகத்திமா" அவரது பெரு நூலான நான்கு பகுதிகளைக் கொண்ட "கிதாபுல் இபர்" என்னும் நூலின் நீண்ட முகவுரையாகவும் அதன் முதலாவது பகுதியாகவும் அமைந்துள்ளது. இந்த "முகத்தி-மா" என்னும் பகுதியில் சமூகம் , ஆட்சி ஆகிய நிறுவனங்களோடு தொடர்புடைய அம்சங்களை விளக்கும் வகையில் அவர் தனது சமூகவியல் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார். கிதாபுல் இபரின் இரண்டாவது பகுதி இஸ்லாத்திற்கு முந்திய அராபியர் பாபிலோனியர் , நபாதியர் , இஸ்ரவேலர்கள், ஆரம்பக் கிறிஸ்தவர்கள் பாரசீகர்கள் , கிரேக்கர் , ரோமர் , துருக்கியர் ஆகிய இனங்கள் பற்றிய ஹிஜ்ரி நான்காம் ஆண்டு வரையிலான வரலாற்றை விபரிப்பதுடன் ஆசிரியரது காலப்பிரிவு வரையுள்ள இஸ்லாமிய வரலாற்றை விளக்குகின்றது. நூலின் மூன்றாவது பாகம் அவரது காலப்பிரிவு வரையுள்ள பெர்பர் இனத்தின் வரலாற்றை விபரிக்கின்றது. நூலின் இறுதிப்பகுதியில் இப்னு கல்தூன் தனது வாழ்க்கை வரலாறு பற்றிய சில குறிப்புக்களை இணைத்துள்ளார்.

இப்னு கல்தூனின் வரலாற்றுத் தத்துவத்தை விளக்கும் "முகத்திமா" வைப் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் மிகச் சிறப்பாகப் பாராட்டியுள்ளனர் இஸ்லாத்தின் மிகச் சிறந்த வரலாற்றாசிரியர் என்ற வகையிலும் நவீன சமூகவியலின் முன்னோடி என்ற வகையிலும் அவரது மகத்தான பங்களிப்பை நவீன அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பேராசிரியர் தொய்ன்



("முகத்திமா" எந்தவொரு இடத்திலும் எந்தவொரு மனிதனும் உருவாக்காத மிக மகத்தான படைப்பு ) The Greatest work of its kind that has been created by any mind in any time orplace என தனது புகழ் பூத்த A study in history எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

இப்னு கல்தூன் சமூகங்கள் , நாகரிகங்களில் தோற்றம் வளர்ச்சி, வீழ்ச்சி , ஆகியவற்றின் பின்னாலுள்ள வரலாற்று விதிகளை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். சுவாத்தியம் , புவியியல் , காரணிகள் , தார்மீக , ஆத்மீக சக்திகள் ஆகியன மனித நாகரிகத்தில் வகிக்கும் பங்கை அவர் ஆராய்ந்துள்ளார். சமூகங்கள் ஆட்சிகளின் நிலைப்பாட்டிற்கும் உறுதிக்கும் அஸபிய்யா என்னும் குழு உணர்வும் மதமும் மிக முக்கிய பங்களிப்பை ஆற்றுகின்றன என்பது அவரது கருத்தாகும். மனித சமூகமானது நாடோடி நிலையிலிருந்து நகர வாழ்வுக்கும் அதனை தொடர்ந்து விசாலமான ஆட்சியாகவும் பரிணமித்து வளரும் படித்தரங்களை அவர் வரலாற்று விதிகளை அடிப்படையாக வைத்து ஆராயும் தன்மையானது அவரது பகுப்பாய்வு உள்ளத்தின் தன்மையைச் சிறப்பாக உணர்த்துகின்றது. ஆட்சியை மனிதனின் உடல் வளர்ச்சியோடு ஒப்பிடும் அவர் ஒரு மனிதன் பிறந்து வளர்ச்சியடைந்து முதுமையை அடைந்து தளர்ந்து மடிவது போல , ஆட்சியும் தோற்றமெடுத்து வளர்ந்து நலிந்து மறைகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

இங்கே மூன்று முக்கிய வரலாற்றுக்கலை வளர்ச்சியின் ஆய்வாளர்களை கண்டறிந்தோம் இவர்களைப் போல் பலர் சேவைகள் புரிந்துள்ளனர்.

* * *

# இஸ்லாமும் கவிதையும்

கவிதை உயிர்த்துடிப்பானது மனதிற்கு இனிமையானது படிப்போர் கேட்போரின் மனதை ஈர்த்து அவர்களிலே மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தும் சக்தி கவிதைக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. சொல் அழகு, எதுகை , மோனை வாக்கிய வளமும் பெற்று பொருள் ஆழம் பொதிந்துள்ள கவிதைகள், அவை எம்மொழிகளில் வடிவமைக்கப்பெற்றிருப்பினும் மனித உள்ளங்களை கவர்ந்து நிற்பதை நாம் அவதானிக்கலாம்.

இஸ்லாமிய உலகிலே கவிதைக்கு முக்கியஇடம் இஸ்லாம் வழங்கியது. அரசியல், விஞ்ஞானம், தத்துவம், புவியியல், மருத்துவம் போன்ற இன்னோரன்ன விடயங்களுக்கு இஸ்லாமியர்கள் பங்காற்றியதைப் போல் கவிதையும் கவிஞனும் இஸ்லாமிய இலக்கிய வரலாறுகளில் முக்கிய இடம் பிடித்து கொண்டுள்ளதை அரேபிய வரலாறு அரேபிய நாகரீகம் போன்ற நூல்களில் ஆசிரியர்கள் இயம்பியுள்ளார்கள்.

இஸ்லாமானது மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அறிவுகளையும், கலை கலாச்சாரங்களையும் விருத்தியடையச் செய்துள்ளதை மறுக்க முயாது. மனித நாகரீகம் பண்பாடு வளர்ச்சியடையவும் செழிப்படையவும் உயிர்த்துடிப்புள்ள சமுதாயம் தோன்றவும் மொழி அவசியம் ஆகும். பெரும்பாலான இஸ்லாமியர் அரபு மொழியைக் கொண்டுள்ளனர். இது ஆதி மொழியாகவும் மனதைக் கவர வல்லதாகவும் இஸ்லாம் துரிதமாக வளர்ச்சியடையவும் காரணமாக அமைந்தது. இவ்வாறு ஏனைய மொழிகளை வளர்க்கவும் பேணிப்பாதுகாக்கவும் இஸ்லாமியர் விட்டு வைக்கவில்லை. அவர்களின் அறிவுத் தாகமே இவற்றிற்கு ஊன்று கோலாக அமைந்தது. தமிழ், உருது, ஹிந்தி, பாரசீகம், ஹிப்ரு, ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் இஸ்லாமியக் கவிஞர்கள் சிறப்பாகப் பங்காற்றியுள்ளார்கள். எமது நாட்டிலும் அயல் நாடான இந்தியாவிலும் இஸ்லாமியக் கவிஞர்களின் கவிதைகளை அளவு கோலால் மட்டிட முடியாது. இந்நாடுகளில் பேச்சு மொழியாகத் தமிழ் மொழியை கொண்டுள்ள இஸ்லாமியர்கள் இம் மொழி வளர்ச்சியில் பங்காற்றி உள்ளமை வரலாற்று உண்மையாகும்.

இஸ்லாம் தோன்றிட முன்னர் அரேபியர்களின் மொழி அரபு மொழியாகவே பெரும் பாலும் காணப்பட்டது. ஆனால் இஸ்லாம் தோன்றியவுடன் அரபு மொழி செழிப்படைய நபி முஹம்மது (ஸல்) அவர்களே பெரும் பங்காற்றி யுள்ளார்கள். இஸ்லாத்தின் காலத்தின் முன்னர் அரபு மொழியானது இலக்கியக் கவிதைகள்,காதல்,போர்,சேர்தல், பிரிதல், ஒற்றுமை,வேற்றுமை,பாலைநில அமைப்பு, ஒட்டகம் போன்ற இன்னோரன்ன இயற்கைஅமைப்புக்கள்கவிதை ஆக்கப்பட்டது.



இது மனிதனை நல்வழியில் செல்லவும் மாறாகத் தீமையைத்தூண்டவும் அமைவதாகக் காணப்பட்டது. ஆனால் இஸ்லாம் தோன்றி விட்ட பின்னர் குர்ஆன் என்னும் வேத நூல் மூலமும் நபி வழி ஷரீஅத் என்னும் சட்ட திட்டங்களுக்கு அமைய கவிதை இயற்றுவதை இஸ்லாம் அனுமதி வழங்கியது. அல்குர் ஆனில் அஷ்ஷீ அறா என்ற அத்தியாயம் அமைந்துள்ளது. கவிஞர்களைப் பாராட்டியும் ஊக்கமளித்துள்ளமையையும் அவதானிக்கலாம். நபி மணி அவர்களும் கவிபாட மேடை அமைத்து கவிஞர்களின் கவிதைகளை ரசித்து உணர்ந்துள்ளதோடு பாராட்டும் பட்டமும் வழங்கினார்கள். நபித்தோழர்கள் கவிபாடும் திறமை உடையவர்கள் இவர்கள் இறைவனையும் நபி மணியையும் புகழ் பாடும் வகையில் இஸ்லாம் வளர்ச்சியடையும் முறைமையிலும் இஸ்லாமியக் கவிகளை இயற்றினார்கள். இஸ்லாமியத் தற்காப்பு யுத்தங்களில் முஸ்லிம்களின் வீரத்தையும், அறிவையும் மறுமையின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் பாணியில் கவிஞர்கள் கவிதை வடித்தார்கள்.

இஸ்லாத்தின் எதிரிகள் கவி பாடும் போது, அவற்றிற்கு எதிராகவும் கவி பாடும் படி கவிஞர்களைப் பணித்தார்கள். கஃஇப்னு சுஹைர் இஸ்லாத்தை ஏற்க முன்னர் இழிவாகக் கவி பாடினார்கள். இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் இறைவனையும் தூதர் அவர்களையும் புகழ் பாட ஆரம்பித்தார்கள். இவர்களின் பாணத் , சுஆத் என்னும் இனிய கவிதை பிரசித்தி பெற்றது. இஸ்லாத்தை பரப்பும் தஃவா புனித பணிக்கு கவிதை முக்கியபங்காற்றியது. அக்காலம் முதல் இன்று வரை கவிதைத் தொகுப்புக்கள், ஏடுகள் , புத்தகங்கள் , போன்றவற்றையும் அரபு மொழியைப் போல் ஏனைய மொழிகளிலும் கோவை செய்தார்கள். ஆண்களும் பெண்களும் பெரும் கவிஞர்களாக காணப்பட்டனர். அவர்களில் கஸ்ஸான் (ரலி), அலி (ரலி), ஆயிஷா (ரலி), அபீவ்வக்காஸ் (ரலி), தாபித் (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி) போன்ற அக்கால அறிஞர்கள் முக்கியமானவர்கள். இவர்களைப் போல ஏனைய கவிஞர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அபூநவாஸ் போன்ற மத்திய காலக் கவிஞர்களும் முக்கியமானவர்கள்.

அகநானூறு சங்க இலக்கியத்தில் காதற்பகுதியை சொல்வதைப் போல் இஸ்லாத்திறகு முன்பு இம்ற உல்கைஸின் முஅல்லகாத் கவிதைகள் அரேபியர்களின் அகத்திணை வாழ்பற்றி எடுத்தியம்புகின்றது. ஹமாஸா போன்ற போர்க்கவிதையும் றயிஷ் பாலை வனத்தைப் பற்றியும் அவர்கள் வாழ்ந்த , அஸ்ஷி உருதீவானும் அரபு மக்களின் வாழ்க்கை பற்றியும் , அனுபவங்கள் மூலமாக ஹஸீதா கவிதையும் மௌலுத் போன்ற பிறந்தநாள் கவிதைகளும் இயற்றப்பட்டன.

கவிதை புனைவது சிறப்பானது, புகழுக்குரியது. ஆனால் இச்சையைக் தூண்டுவது , வசை பாடுவது போன்ற பாவ காரியங்களுக்குரிய கவிதைகளை இஸ்லாம் தடை செய்துள்ளது. தற்காலத்திலும் இஸ்லாமியக் கவிஞர்கள் தாங்கள்பேசும் மொழியிலே கவிதையை இயற்றும் கவிஞர்களாகக் காணப்படுகின்றனர். அந்த வகையில் தமிழ் மொழி இலக்கியவரலாற்றில் தமிழ் சகோதரர்களுடன் சேர்ந்தும் தனியாகவும் தமிழ் இலக்கியத் துறைக்கு இஸ்லாமியக் கவிஞர்கள் ஆற்றிய பங்கை வரலாறு மறக்காது. எனவே எந்தவொரு மொழியும் வெறும் தகவல் பரிமாற்றும் கருவி மட்டுமல்ல அது இனத்தின் அடையாளச்சின்னம். பண்பாட்டின் குறியீடு இவ்வாறு ஒரு விருத்தியடைந்த உலகமொழிதான் அறபு மொழி அதன் சுவை இனிமையானது.

* * *



# கவிஞர்களும் இஸ்லாமும்

இஸ்லாம் இலக்கியத்தையோ , கவித்துறையையோ , விரும்பவில்லை. அவற்றை முழுமையாக நிராகரித்துள்ளது என்ற அளவுக்கு பலர் கூறக் கேட்கின்றோம். ஆனால் உண்மையில் அல்குர்ஆனோ , ஸுன்னாவையோ நல்ல கவிதைகளையோ, ஆளுமையுள்ள கவிஞர்களையோ, இகழ்ந்துரைப்பதைக் காணமுடியவில்லை. மாறாக அண்ணல் நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியிலும் பல ஸஹாபாக்கள் மகாகவிஞர்களாக காணப்பட்டனர் என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

நபி மணி (ஸல்) அவர்கள் நிச்சயமாக "பயானில்" சூன்யத்தன்மையையும் , கவிதையில் "ஹிக்மா" ஞானமும் நிறைய உண்டு என்று அருளினார்கள். (நூல் புகாரி)

ஹிக்மா என்னும் அறிவு ஞானமும் , உணர்வூட்டலும் , இன்னும் பல நன்மைகள் உள்ளதை தெளிவுபடுத்தியுள்ளது. எனவே தான் கவிதை என்பது ஞானமும் , அகிதாவுக்கு மாற்றமில்லாத கருத்துகளும், சமுதாயத்தை விழிப்பூட்டும் வகையிலும் அமைய வேண்டும்.

கவிதை ஏனைய பேச்சுககளைப் போன்று ஒரு பேச்சாகும். ஏனைய பேச்சுக்களிலும் நல்லவை தீயவை என்று உள்ளதைப் போன்று கவிதைகளிலும் உண்டு. எனவே நல்ல கருத்தாழமுள்ள கவிதைகளை எடுப்போம்! படிப்போம்! ஆபாசத்தையும் , பிரிவினையையும் , நோக்காய்க் கொண்டு எழுதப்படும் கவிகளைச் சாக்கடையில் தூக்கியெறிவோம்!

நபிகள் பிறந்த காலம் முதல், இலக்கியப் பூங்காவில் வளர்ந்தவர்கள் என்றே கூற வேண்டும். ஏனெனில் அரபு மக்கள் அந்தளவில் இலக்கிய இன்பமுடையோராய் இருந்துள்ளனர். இதற்கு "பாணுஸீஆத்" , "ஸப்உல்முஅல்காத்" போன்ற கவித்தொகுப்புக்களை ஆதாரமாகக் காட்டலாம். இலக்கிய மண்வாசனை எழுத வாசிக்கத் தெரியாத (உம்மீ) நபி அவர்களையும் கூட விட்டுவைக்கவில்லை. சிறந்த கருத்தும், உபதேசமும், விரமும் , நோக்காய்க் கொண்ட கவிதைகளை விரும்பி ரசித்தார்கள் சிலசமயம் அவர்களும் அவற்றைப் பாடினார்கள். உதாரணமாக பின்வரும் கவிஞரின் கவிதையை நோக்குவோம்.

அகழிப்போருக்குத் தயாரான ஸஹாபாக்கள் கீழ்வரும் கவிதையைப் பாடிக் கொண்டு அகழி தோண்டினர். இது அப்துல்லாஹ் இப்னு றவாஹா (றலி) அவர்கள் பாடிய கவியாகும். எழில் கொஞ்சும் மண்வாசனையும் வீரதீரச் செயலையும், உலகை வெறுக்கும் தன்மையும், ஈமானின் சுவையையும் சுவைபடக் கவியாக்கியிருக்கின்றார்.

"இறையவனே!
நிறைவானதுன்
நாட்டமில்லையாயின்,
நலனறியா ஜென்மங்கள்
நானிலத்தில் ~
நாம் இருந்திருப்போம்!
தொழுகை தெரியாமல் ~
ஸதகா செய்யாமல்
செத்து மடிந்திருப்போம்!
இறையவனே!
உள அமைதியையும்,
எதிரிகளை ~
எதிர்கொள்ளாற்றலையும்
எமக்களி!!
"அபைனா , அபைனா, அபைனா!"
அவர்களில்
ஊறுகளையும் ,
வீறுகளையும்
மறுப்போம் , மறுப்போம் ~
ஏற்கனவே மறுப்போம்!
அவர்களின்
ஊறுகளையேற்க
நாங்கள் என்ன கோழைகளா?

"அபைனா , அபைனா " என்ற சொற்றொடரை அண்ணலவர்கள் மீண்டும் மீண்டும் சப்தமிட்டு சொல்லிக்கொண்டேயிருந்தார்கள்.

அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் பின்வரும் செய்தியைத் தருகின்றார்கள். அண்ணலார் அகழி தோண்டும் இடத்திற்குப் போன பொழுது அன்ஸாரிககளும் , முஹாஜிரீன்களும் அதிகாலையில் அதிகுளிர் வேளையில் அகழி தோண்டிக் கொண்டிருந்தனர். அத்தோழர்கட்குப் பணியாட்கள் யாருமிலர். அவர்களது வீர தீர தியாக உணர்வுகளை கண்ணுற்ற கண்மணி

"அல்லாஹும்ம லா அய்ஷ இல்லா அய்ஷல் ஆகிரா,
பஃபிர் லில் அன்ஸாரி , வல்முஹா ஜிரா!"
என்ற கவிவரிகளைப் பாடினார்கள்.



அதாவது வாழ்வென்றால் மறுமை வாழ்வன்றோ இது
வழிப்போக்கர் பெறும் நிழல் என்றோ
தோழராம் அன்ஸாரி முஹாஜிரீன்களின்!
தீமைகள் அகற்றி அருள் சொரி!

இதற்குப் பதில் அளக்கும் பாங்கில் ஸஹாபாக்களும் பின்வருமாறு பாடினார்கள்.

"நஹ்னுல்லாதீன் பாயஊ முஹம்மதா,
அலல் ஜிஹாதி மா பகீனா அபதா!!"

அதாவது:

பூமித் தாயின்
பூமடியில்
ஈமானைப் பாதுகாக்க
இறுதி மூச்சுவரை~
அறப்போர் செய்வோம் என
"பைஅ" செய்தோம்.
நபியே! ஞாபகமா"... (நூல்கள் புகாரி முஸ்லிம்)

இவைகள் அன்ஸாரிகளும் முஹாஜிரீன்களும் பாடிய ஆழமான, அழகுநிறை கருத்துக்களைக் கொண்டவை. பசி பட்டினிகள் என்பவை எங்கள் தியாக வாழ்வுக்கு சவாலாக அமையா. ஏன் நாங்கள் இஸ்லாத்திற்காய் உயிருள்ள வரை"ஜிஹாத்" செய்வதற்கு "பைஅ" செய்துள்ளதை மறந்துள்ளோம். என்று எண்ணிக் கொண்டீர்களோ நபியே! என்பது போன்ற கருத்தக்களையே அவ்வரிகள் உணர்த்துகின்றன.

நபித்தோழர் பாறாஃ இப்னு ஆஸிப் (றலி)அவர்கள் பின்வரும் தகவலைத் தருகின்றார்கள்.

ஹுனைன் யுத்தத்தின் போது நபி அவர்கள் தன்னுடைய வெண்மை நிறக் கோவேறு கழுதை மீது அமர்ந்திருந்தனர். அதன் கடிவாளம் கண்மணிக் கரத்தில், அபூ ஸுப்யானே அதனை இழுத்துச் செல்கிறார். எதிரிகளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் வேளையானதும், பயங்கரமும் பதட்டமும் சூழ்ந்துள்ள போது "

அனன் நபிய்யு லா கதிப்
அன இப்னு அப்தில் முத்தலிப்!!"

"நான் நன்மையேவும், நபி. நபியேதான் அது பொய்யல்ல, ஏனெனில் நான் பொய் சொல்ல மாட்டேன். நான் அப்துல் முத்தலிப்பின் அன்பின் பேரனும் கூட" என்றார்கள். (நூல் ஸஹீஹுல் முஸ்லிம்.)

அது மட்டுமல்ல அண்ணலார் பொன்னான கவிகளைப் புன்முறுவலுடன் கேட்பதில் அக்கறையுள்ளவர்கள்.

“அல்லாஹ்~
அல்லாதவை
அனைத்தும்
அழிப்பவையே!
அறிவாயா?”

(நூல் :~ ஸஹிஹீல் புகாரி?)

என்ற லபீத் என்ற அறபுலகின் கவியரசு பாடிய பாடசாலை , இதுவன்றோ உண்மை. இந்த லபீத் அல்லவா உண்மை சொன்னார். அவ்வசனங்களைச் செவியுற்ற உமைய்யா இப்னு ஸல்த் என்னும் ஜாஹிலிய்யா மகாகவி கூட இஸ்லாத்தை ஏற்றிடும் அளவுக்கு அவ்வரிகள் ஆளுமையுடையவைகள் என்றார்கள் நபி அவர்கள்.

சில போராட்டங்களில் கலந்து கொள்ளச் சென்ற செம்மல் மா நபி அவர்களின் புனித கால்களின் விரல்கள் கற்கள் , முட்களில் குத்துப்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்தது கண்டு பின்வருமாறு கவிநயமாய் சொன்னர்கள்.

“ஹல் அன்தி இல்லா இஸ்பாஉன் தமைதி:~
வபீ ஸபீலில்லாஹி மா தமைதி!!”
‘நீ ஒரேயொரு விரலுக்குத் தான்
அல்லாஹ்லின் பாதையில்
அறப்போருக்காய்ப் போய்
இரத்தக் காணிக்கைப் பாக்கியம்
அருள்பெற்றதோ ?.....
இது~
அறப்போர் ஜிஹாதில்
ஏற்பட்ட ஒன்றே யன்றி
வேறில்லை விரலே!”

நபித்தோழர் அம்ருஇப்னு ஸஈத்(றழி) அவர்கள் அவர்களது தந்தையூடாகப் பின்வரும் தகவலைத் தருகின்றனர்.“நான் நபிமணி அவர்களுடன் ஒரு பயணம் சென்றேன். ஒட்டகையில் அவர்கள் பின்னால் அமர்ந்து கொண்டேன். அப்போது அண்ணலார் அபூஅம்றி உங்களுக்கு உமையா பின் ஸல்த்துடைய கவிதைகளேதும் தெரியுமா. என்றார்கள். உடனே ஆம் யாறஸூலல்லாஹ்! எனக் கூறி ஒரு கவிதையைப் பாடினேன். அது கேட்ட அண்ணலார் இன்னும் தான் கொஞ்சம் படியுங்களேன் என்றனர். இவ்வாறு பயணம் முழுவதும் சுமார்



100 கவிதைகளைப் பாடினேன். சலிப்பின்றி செவிமடுத்துக் கொண்டே வந்தார்கள் செம்மல் மா நபி” என்று அத்தகவலில் குறிப்பிட்டுள்ளது.
(நூல்:~ஸஹிஹீல் முஸ்லிம்)

நபித்தோழர் யாபீர் இப்னு சம்ரஃ (றழி) அவர்கள் பின்வரும் செய்தியைச் சொன்னார்கள். நான் சுமார் 100 தடவைகளுக்கும் அதிகமாக அருமை நபி அவர்களின் பெருமை மிகு சபையில் அமரும் பாக்கியம் பெற்றுள்ளேன். அப்பொழுதெல்லாம் தோழர் கவிதைகளைப் பாடிக் கொண்டிருப்பர். சில சமயம் ஜாஹிலிய்யா கால நினைவுகளைப் பற்றியும் பேசிக் கொள்வர். அப்பொழுது நபி அவர்கள் மௌனியாகவும் சிலவேளை புன்முறுவலுடனும் காணப்படுவார்கள். இவற்றையெல்லாம் விட அண்ணல் நபி அவர்கள் கவிதைக்கு மிகவும் ஆர்வம், முக்கியத்துவம் அளித்துள்ளார் என்பதற்கு ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (றழி) அவர்களுக்கு பள்ளிவாசல் முன்றலில் ஒரு மிம்பர் மேடை அமைத்து “ஹஸ்ஸானே! தாங்கள் எதிரிகளைத் தாக்கி அடியுங்கள், கவி மூலம் விரட்டுங்கள். ரூஹூ ல் குத்ஸ் எனும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் உங்களுடனேயே உள்ளார்கள் என்றும், அல்லாஹ்! ஜிப்ரீல் மூலமாக இவரை உறுதிப்படுத்துவாயாக என்று துஆ செய்வதும் போதிய சான்றுகள் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்.
(நூல் :~ சுன்னா திர்மிதீ)

கவிக்கோ ஹஸ்ஸான் (றழி) அவர்கள் ஒரு நாள் மஸ்ஜிதில் கவிபாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே சமூகம் அளித்த கலீபா உமர் றழி அவர்கள் கவிக்கோதை கற்று வெறுப்புடனும் , கோபத்துடனும் நோக்கினார்கள். இதைக்கண்ணுற்ற ஹஸ்ஸான் அவர்கள்“உமரே ! நீங்கள் என்னை வெறுப்புடன் நோக்குவது புரிகின்றது இவ்விடம் உங்களை விட மிக உயர்ந்த , சிறந்த கண்மணி (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கும் போது பாடியுள்ளேன் என்று கூறி விட்டு திரும்புகையில் அபூ ஹூரைறா (றழி) அவர்களைக் கண்டு அபூ ஹூரைறாவே! சொல்வீராக என்றார்கள். ஆம் நபிமணி அவர்கள் “யா அல்லாஹ்! ஹஸ்ஸானுக்கு ரூஹூல் குத்ஸ் மூலம் உதவியையும் உறுதியையும் வழங்குவாயாக என்று பிரார்த்திக்கக் கேட்டுள்ளேன். என்று அபூ ஹூரைறா (றழி)அவர்கள் சொன்னார்கள். (நூல் :~ புகாரி முஸ்லிம்)

அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் மா நபி அவர்களோ உம்றாச் செய்வதற்காக மக்கா வந்திறங்கினார்கள். அப்பொழுது அப்துல்லாஹ் இப்னு றவாஹா (றழி)அவர்களுக்கு முன்னிலையில்

“குப்பாரின் குடும்பம்
அவர்களையின்று

அடிப்போம் ; ஈமானிய்ய
துடிப்புடன் ~
அடிப்போம் !
தமது திட்டங்களையும் ~
தவிடுபொடியாக்கி,
தனதில்லத்தாளையும்
துறந்தோடும் படியாக!!"

என்ற கவிதைகளைப் படிக்க உமர் (றழி) அவர்கள் , அப்துல்லாஹ் வே! ஹறம் ஸரீபுக்குள், அண்ணலார் முன்னிலையிலா பாடுகின்றீர்கள் என்று கேட்க நபியவர்கள் "உமரே அவரை விட்டு விடுங்கள் நன்றாகப் பாடட்டும், இந்த வார்த்தைகள் அம்பின் வில் போய் தாக்குவதை விட மிக வேகமாகத் தாக்கும் சக்தி படைத்தவை என்றார்கள்."
(நூல்கள் :~ திர்மிதீ , நஸாஈ)

ஹழ்ரத் ஹைஸம் இப்னு அபூஸினான்(றழி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு அருளினார்கள். உங்களுக்கு ஒரு சகோதரர் இருக்கின்றார். அவர் தீய வார்த்தைகளையோ மட்டகரமான சொற்களையோ பாவிக்கமாட்டார் எனக் கூறி, அப்துல்லாஹ் இப்னு றவாஹா (றழி) அவர்களின் பின்வரும் கவி வரிகளை மா நபி அவர்கள் நயம் பட நவின்றார்கள். அக்கவி வரிகள்.

தினகரன் ஒளி வென்ற
தாஹா நபியவர்கள்;
மனசுத்தி மறையோதினரே
மருநில மக்கள் மன்றத்தின்

அகக் கண் குருடர்களை
ஆத்மீக ஒளி கொடுத்து
அகத்தினிலே நல்லோராய்
எல்லோரால் புகழ் செய்தார்!!

ஆனால், நாம் இன்று அவதானிக்கும் போது பெரும்பாலான கவிஞர்கள் யாரையாவது புகழ்வதாயின் எல்லையே இல்லாது புகழ்வர். இகழ்வதாயின் எல்லையே இல்லாது இகழ்வர். பொய்யும் , இட்டுக்கட்டும் , தங்கள் கவிகளின் லட்சியமாகக் கொள்வர். அடுத்த அத்தியாத்தில் பாரசீக பெரும் கவிஞர் உமர் கய்யாமின் ரூபாய்யாத்திலிருந்து அவரது அற்புத கவிதையை நோக்குவோம்.



# பெரும் கவிஞர் உமர் கய்யாம்

பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் ரூபாய்யாத்தில் இருந்து மனிதனைக் கெடுப்பவனான சைத்தானையும் இறைவன் ஏன் படைத்தான்?

பாரசீகப் பெருங்கவியான உமர் கய்யாமின் 'ரூபாய்யாத்' பாடல்கள் உலகின் பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்ட பெருமையுடையன. இதுவரையும் மூவர் ரூபாய்யாத்தை தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளனர். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை , பாலபாரதி ச.து.சு. யோகி இருவருக்கும் பிறகு கவிஞர் திலகம் (மர்ஹூம்) அப்துல் காதர் லெப்பை தமிழில் விருத்தப்பா வடிவில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார்.

தேசிக விநாயகம் பிள்ளையின் மூலக்கவியின் கருத்தைத் தழுவி தமிழ் நாட்டுப் பெயர்களையும் , சூழலையும் புகுத்தி பெயர்த்துள்ளதாகவும் பாலபாரதி ச.து.சு யோகியார் மூலக்கவியுள்ளத்திற்கு உணர்வூட்டி இன்பப் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் கற்றவர்கள் கருத்துரைத்தனர்.

கவிஞர் அப்துல் காதர் லெப்பை இந்த இரண்டு கவிஞர்களினதும் பார்வைக்கு அப்பால் விலகி , பாரசீகப் பண்பாட்டுச் சூழல் பாடல்களில் புலப்பட வேண்டும் என்ற கரிசனையுடன் பாடல்களை யாத்துள்ளார். என்பது அறிஞர்களது கருத்து.

'மூலக்கவியின் மத நம்பிக்கைகளை அதே நம்பிக்கையுடைய அப்துல் காதர் லெப்பை செம்மையாக விளங்கிக் கொண்டுள்ளார். என்று கருதலாம். இது தொடர்பாகப் பேராசிரியர் கலாநிதி. க. கணபதிப்பிள்ளை உரைத்துள்ள கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

உமர்கய்யாம் என்று உலகனைத்தும் அழைக்கப்படும் கியாஸ் உத்~தின் அபில்பாத் உமர் இப்னு இப்ராகிம் அல்கையாமி கி.பி. 10~48 ஆம் ஆண்டு மேமாதம் 18ம் திகதி பாரசீகத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள நிஷப்பூரிற் பிறந்தார். இவர் 13ம்வயதில் தந்தையை இழந்தார், எனினும் கற்பதில் உறுதி பூண்டிருந்த உமர் தனக்கு மிகவும் விருப்பமான கணித பாடத்தில் அதிக கவனம் செலுத்தினார், அதன் விளைவு கி.பி.1067 இல் தமது பத்தொன்ப தாவது வயதில் 'வர்க்கமூலமும் கனமூலமும் காண்பதற்கு இந்தியமுறை' என்ற முதல் நூலை எழுதினார். கணிதம் , வானசாஸ்திரம் ,

புலன்கடந்த நுண்பொருட் தத்துவம் முதலியவற்றோடு தொடர்புடைய ஒன்பதுக்கு மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். அறபியிற் பல செய்யுள்களை அவர் எழுதியதாகவும் மார்க்க பிரசங்கமொன்றை அறபியிலிருந்து பாரசீக மொழியில் பெயர்த்ததாகவும் மேலும் அறிய முடிகின்றது.

'ரூபாய்' என்பது நாலடிப் பாடலாகும். முதல் இரண்டடிகளும் , நாலாம் அடியும் ஒரே அடியீற்றெதுகை உடையவனவாக இருத்தல் வேண்டும். முதல் மூன்று அடிகளும் பாட்டின் முக்கிய பொருளை உணர்த்த , நாலாம் அடி பொருள் செறியுரையாக அமைதல் வேண்டும். ஆனால் நாலாம் அடி சாதாரண வழக்கில் உள்ள சொற்களைக் கொண்டதாகவும் கடுஞ் சொற்கள் இல்லாததாகவும் அமைதல் வேண்டும். என்று ரூபாய் பாவவடிவம் பற்றி கலாநிதி எஸ். ஏ. இமாம் கருத்துரைத்துள்ளார்.

பாரசீக மொழியில் உமர் கய்யாமின் 'ரூபாய்யாத்' பாடல் அமைந்துள்ள நாலடிகளிலே பிற மொழிபெயர்ப்பு என்பது முடியாத காரியம் , உருவத்தை விடுத்து உள்ளடக்கத்தைப் புலப்படுத்துவதில் தான் எல்லா மொழியெபர்ப்புகளும் இருக்கும். அந்த ரூபாய்யாத் உருவத்தில் தமிழில் கவிதைகள் புனைய முயல்வது புது முயற்சியாக அமையும். ஜப்பானிய ஹைக்கூ வடிவத்தைக் பின்பற்றி கவிதை எழுதுவதைப் போல இந்த வடிவத்தையும் பின்பறறி கவிதை புனைய நமது கவிஞர்கள் முனைவார்களாக.

இனி அப்துல் காதர் லெப்பையால் தமிழாக்கப்பட்ட உமர்கய்யாமின் ரூபாய்யத் கவிதைகளைச் சுவைப்பதற்கு முன், அப்துல் காதர் லெப்பை பற்றிய சிறு குறிப்பொன்றையும் இந்த இடத்தில் குறித்து வைப்பது பொருத்தமுடையதல்லவா?

07.09.1913 இல் கிழக்கிலங்கை காத்தான் குடியில் இக்கவிஞர் பிறந்தார், பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் தமது சேவைக்காலத்தில் பெரும் பகுதியை பதுளை , குருந்தலாவ ஆகிய இடத்தில் கழித்தார், இக்பால் இதயம் , இறைசூல் சதகம் , செய்னம்பு நாச்சியார் மான்மியம் , முறையீடும் தோற்றமும் , கார்வான் கீதமும் , நான் என் சரிதை , பாத்தும்மா சரிதை என்பன இவரது ஏனைய நூல்களாகும். ரூபாய்யத் 1965 இல் கவிஞருக்கு இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசை பெற்றுக் கொடுத்தது. கவிஞர் அப்துல் காதர் லெப்பை 1984 இல் மாத்தளை மாநகரில் காலமானார்.



காலைச்சிறுவன் இரவாக நின்ற ஜாடியினுள் கல்லை வீசவும் நட்சத்திரங்கள் ஓடி மறைந்து விட்டன. கீழ்வானில் சூரியன் தன் கதிர்களைப் பரப்பி உலகுக்கு வெளிச்சத்தைக் கொணர்ந்தான். இருள் அகன்று ஒளி பிறந்து விட்டது. உலகத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் இனி நடக்கத் தொடங்கி விட்டன.... என்று விடியலை விளம்பரப்படுத்துகின்றது முதலாவது பாடல்........

எழுவீர் , இருட்டாம் ஜாடியினுள்
எறிந்தான் காலைச் சிறுவன்கல்;
குழுவாய் நின்ற விண்மீன்கள்
குலைந்தே ஓடி மறைந்தனவால்;

எழுவான் திசையின் வேடனும்
எடுத்தே கதிரின் கண்ணிகளால்
கொழுவிக் கொண்டான் சுல்தானின்
கோபுரத்தின் கொடுமுடியை

விழித்துக் கொண்ட உலகின் ஜீவராசிகளே , இந்த உலகத்தில் நாம் நிரந்தரமாகத் தங்க வந்தவர்கள் அல்ல. ஒரு சில பொழுதின் காலங்கள் மட்டுமே நாம் இங்கு வாழ வந்தவர்கள். அதற்குள் நாம் நம் வாழ்க்கையை வாழ்ந்து தீரவேண்டும். சேவலும் அதற்காகத் தான் கூவி எம்மை துயிலெழுப்புகின்றது. கதவுகளைத் திற, காட்சிகளைப் பார். இந்த இம்மை வாழ்வை முடித்துக் கொண்டால் மீண்டும் இந்த உலக வாழ்க்கைக்கு வரமுடியாது. அதற்கிடையில் துயிலெழுந்து ஆக வேண்டிய காரியங்களைப் பார் என்று அழைப்பு மணி அடிக்கும் அடுத்த பாடல் இது .........

நின்றார் காலை முற்றமதில்
நெடித்தே அழைத்தார் காவலரை
நன்றே கதவைத் திறவீரோ
நாடிச் சேவல் கூறுறதே
ஒன்றே நீரும் உணர்வீரே
ஒரு சிறு பொழுதே தங்கிடுவோம்
இன்றெ வட்டிலி னிங்கினமேல்
இனிமேல் என்றும் வாரோமே.

இந்த உலகம் இரவாலும் பகலாலும் சூழ்ந்ததைப் போல இன்பமும் துன்பமும் நிறைந்தது. ஆயிரக்கணக்கான மலர்கள் மலர்வதும் , மறைவதும் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சி. ஆக இவ்வுலக வாழ்க்கை மிகக் குறுகியது. இக்குறிப்பிட்ட காலத்திற்குள் வாழ்வின் வசந்தத்தை நாம் அனுபவித்தாக வேண்டும். அப்படி அனுபவிக்காமலும் வாழாமலும் விடுவது இயற்கைக்கு மாறானதாகும். பாரசீக யுத்த வீரன் 'கைகோபாத்' கூட இறந்து தானே போய்விட்டான். எனவே, இறப்பு நிச்சயமானது. அது போலவே வாழ்வு நிச்சயமானது. இறப்புக்கு முன் வாழ்தலை நிச்சயப்படுத்திக் கொள்ளத்தயாராகு என்று மனிதனை உசுப்பிவிடுகின்றது கீழ் வரும் பாடல்...........

அலர்ந்த மலர்கள் காலையிலே
அறியி னவைகள் ஆயிரமாம்
உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிரு மவையும் ஆயிரமாம்
புலர்ந்த கோடை மருவியலும்
பொலியும் ரோஜா ஒரு புறமே!
மலர்ந்த ஜாம்ஷீத் , கைகோபாத்
மறைந்து போதல் மறுபுறமே!

இம்மை இன்பமானது என்பார் சிலர். இல்லை மறுமை தான் இன்பமானது என்பார் வேறு சிலர். இரண்டுமே இன்பமானது தான் என்கிறார் உமர் கய்யாம். மறுமையின் சொர்க்கத்தை அனுபவிப்பதற்கு இம்மையின் சொர்க்கத்தை அனுபவித்தாக வேண்டும். இம்மையின் சொர்க்கத்தை அனுபவிப்பவர்கள் தான் மறுமையின் சொர்க்கத்தை அனுபவிப்பார்கள். புலரும் நாளை விட , புலர்ந்த நாள் முக்கியமானதாகும். எதிர் காலத்தை விட , நிகழ்காலமே நிச்சயமானது. நிகழ்காலமே எதிர் காலத்தை உருவாக்கக் கூடியது. எனவே இப்போது கையிலிருக்கும் நிகழ் காலத்தை பிரயோசனப்படுத்து. அது எதிர் காலத்தில் பிரயோசனத்தைத் தரும். என்னும் தத்துவம் ததும்பும் பாடல் இதோ......

சிலர் சொல்வார் இவ்வுலகமது
சிறந்த இன்பச் சிகரமதாம்
பலர் சொல்வார் அப்பரகதியில்
பற்றும் சொர்க்கம் மேலதுவாம்
புலரும் நாளைப் போகவிடு
புலர்ந்த பொழுதைக் கையிலெடு
கழறும் அந்த முரசொலியின்
கருத்து வேண்டாம் தள்ளிவிடு



வருவதும் போவதும் தான் வாழ்க்கை. இன்று நாம் இருக்கும் இடத்தில் வேறு யாரோ இருந்தார்கள். நாம் இன்றுஇருக்கும் இடத்தில் நாளை வேறு யாரோ இருக்கப் போகிறார்கள். ஆனால் நாம் இருக்கும் இன்றைய தலம் நமக்கு நிரந்தரமானதல்ல. நாளை இதை வேறு யாரோ சொந்தம் கொண்டாடப் போகிறார்கள். உலகச் சுழற்சியும் வாழ்க்கைச் சுழற்சியும் இப்படித்தான் மாறி மாறி நிகழும். நாம் வாழும் இன்றைய தலத்தின் தடம் தான் மறுமை வாழ்வின் தடத்தினை உயிர்ப்பிக்கும். அதற்காக வாழ்வை அமைக்க உழைக்க வேண்டியவர்கள் நாங்கள் தான் என்ற கருத்தை ஓதும் கவிதை வரிகள் இது ..........

சென்று போன முன்னோர்கள்
சேர்ந் திருந்த இடங்களிலே
இன்று களித்து விளையாடி
இன்ப விருந்து வைக்கின்றோம்
நன்று நாமும் போனபின்னர்
நாடி வருவார் யார் யாரோ?
ஒன்றுகூடி இதே இன்பம்
உவந்து நகர்வார் யார் யாரோ?

இந்தப் பூமியை ஆள்பவன் நீயா? நானா? என்கின்ற போட்டி மனிதருக்குள்ளே வளர்ந்து வருகின்றது. இறுதியில் நீயும் இல்லாமல் நானும் இல்லாமல் போகின்ற காலமும் மலர்ந்து வருகின்றது. இதைப் புலப்படுத்துகின்றது இப்பாடல்.

கண்டேன் கண்டேன் கதவதனைக்
காணேன் திறவு கோலையுமே!
உண்டே திரையும் ஒருபுறமாய்
ஊடே ஒன்றுந் தெரிந்திலதே!
அண்டை யாரோ பேசுகிறார்!
ஆஹா 'நீதான்' என்கின்றார்!
சண்டை சற்றே ஓய்ந்ததடா!
சத்தம் 'நீதான்' மாய்ந்ததடா!

ஆட்டுவிப்பவனின் ஆட்டத்துக்கு ஏற்பவே பந்து ஆடுகின்றது. வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயிப்பது பந்து அல்ல. ஆட்டக்காரர்கள் தான் பந்தை ஆட்டுவிக்கின்றார். பந்து வலமும் , இடமுமாய் ஆடிக் கொண்டிருக்கின்றது. அது போலவே மனிதனும் . மனிதன் உலகத்தில் ஒரு பந்தைப் போலவே ஒருவனால் ஆட்டுவிக்கப்படுகின்றான். மனிதனை ஆட்டுவிப்பவன் இறைவன். இறைவன் அறிவான் ஒரு மனிதனின் நலனையும், நலன் அல்லாததையும்..... இதைத் தெளிவுபடுத்தும் பாடல் இது.......

ஆடும் பந்து தெரிந்திடுமோ
ஆட்டந் தோல்வி வெற்றியதைச்
சாடும் வீரன் அடிக்கேற்பச்
சார்வ தல்லால் வலமிடமாய்

ஓடும் படியாய் நிலமீதில்
உருட்டி விட்ட வுன்னையவன்
நாடும் ஒருவன் நன்கறிவான்
நாளும் அறிவான் , நலமறிவான்

ருபாய்யாத்தில் சர்ச்சைக்குரிய கேள்வி ஞானம் நிறைந்த பாடல் இனி வருகின்றது. ஆடுபவன் மனிதன். ஆட்டுவிப்பவன் இறைவன். அப்படியானால் இறைவனின் ஆட்டுவிப்புக்கு ஆடும் மனிதனை , இறுதியில் கொடிய பாவம் புரிந்தால் அழிவினைப் பெற்றாய் என்று எப்படி விலக்கி வைக்க முடியும். என்று உமர் கய்யாம் இறைவனிடம் கேள்வி கேட்பது சிந்தனையை செலவு செய்யத் தூண்டுகின்றது அல்லவா?



போகும் பாதை எங்கனுமே
பொறியும் வைத்துக் குழிவெட்டி
ஏகும் போதே தள்ளிவிட
ஏதோ வழதியைக் கூட்டாக்கிச்
சாகும் வரையும் இட்ட விதி
சட்டப்படியெனை விட்டுப் பின்
ஆகும் கொடிய பாவமதால்
அழிந்தேன் என்றுஞ் சொல்வாயோ?

மனிதனையும் படைத்து, மனிதனை வழி கெடுப்பதற்கென்று சைத்தானையும் படைத்தவன் இறைவன். சைத்தானின் வலையில் விழுந்து மனிதன் பாவத்துள் வீழ்வது இயற்கையின் குற்றமா? மனிதனைப் படைத்த இறைவன் மனிதனை வழிகெடுப்பதற்கென்று சைத்தானையும் ஏன் படைக்க வேண்டும்? இது யார் குற்றம்? மனிதனின் குற்றமா? இருவரையும் படைத்த இறைவனின் குற்றமா? என்று வினவுகிறார் உமர் கய்யாம். இதுவும் சர்ச்சைக்கும் சிந்தனைக்குமுரிய பாடலாகும்.

அள்ளிய மண்ணோ எள்ளிது நீ
ஆக்கிய மனிதன் நோக்கமிலான்
ஒள்ளிய தீமை நீ வைத்தாய்
உற்றது மனிதன் குற்றமதோ?
உள்ளிய பாவம் தலைசூட்டி
ஒளிரும் வதனம் இருளாக்கித்
தள்ளி நீ விட்டாய் மன்னிப்பு
தயவாய்க் கொடுத்துப் பெறுவாயே.

பொதுவாக "உமர் கய்யாமின்" 'ருபாய்யாத்' மறுமைக்காகவே இம்மை படைக்கப்பட்டிருக்கின்றது. இம்மை மறுமையை வெல்வதற்கே பயன்படுத்தப்பட வேண்டும். இம்மையை நன்கு அனுபவிக்க வேண்டும். அந்த அனுபவிப்பு மறுமை அனுபவிப்புக்கு தம்மைத் தயார்படுத்தும் அனுபவிப்பாக இருக்க வேண்டும். என்னும் உந்துதலையும் , ஊக்கப்பாட்டையுமே உணர்த்தி நிற்கின்றது. சாதாரண வாசகர்களை விட, ஆழம் நிறைந்த வாசகர்களே 'ருபாய்யாத்தின்' உள்ளீட்டை உள்வாங்க முடியும் என்பது யதார்த்தம்.

## உலக மகாகவி அல்லாமா இக்பால்

அல்லாமா இக்பால் இஸ்லாமிய சிந்தனை வரலாற்றில் தோன்றிய மாபெரும் சிந்தனையாளர்களுள் ஒருவர். இருபதாம் நூற்றாண்டின் இஸ்லாமிய சிந்தனையில் தனது ஆழமான செல்வாக்கை பதித்த ஒரு யுக புருசர். இக்பால் முஸ்லிம் ‘உம்மத்’தின் பதின்மூன்று நூற்றாண்டு கால வரலாற்றில் தோன்றிய பல்வேறு சிந்தனை நீரோட்டங்களும் , கூட்டு மொத்தமான அனுபவங்களும் ஒன்று சேரும் ஒரு சமுத்திரம். அவரது கவிதைகளிலும் உரை நடைகளிலும் முஸ்லிம் உம்மத்தின் அபிலாசைகள் , வேட்கைகள் , கனவுகள் , அனுபவங்களைத் தரிசிக்க முடிகின்றது. அவர் ஒரு சாமான்ய கவிஞரல்லர். ஆங்கிலத்தில் higher poets என அழைக்கப்படும் பெருங் கவிஞர்களின் வரிசையில் அவர் அடங்குகிறார்.

சமான்யமான , சாதாரணமான கவிஞர்கள் மக்கள் மத்தியில் புகழ் பெறுவதையும் பிரபல்யமடைவதையும் நோக்கமாகக் கொண்டு அவர்கள் தோன்றிய காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றுள்ளன. மக்களின் கை தட்டுதல்களையும் ஆரவாரத்தையும் பெற்றுத் தருகின்ற விடயங்களையே தமது கவிதைக்குப் கருப்பொருளாகக் கொள்வர். இத்தகைய கவிஞர்களால் உயர்ந்த , மகத்தான் கவிதைகளைப் (Higher poetry) படைத்தல் முடியாது. உயர் கவிதை என்பது ஒரு கவிஞனின் ஆளுமைக்கும் அவனது சூழலுக்கும் இடையில் நடைபெறுகின்ற இடையறாத பாரதூரமான போராட்டத்தின் விளைவாகும்.

மகத்தான ஒரு தலைவனும் சிந்தனையாளனும் அவனைச் சூழ வாழும் மக்களின் சிந்தனை , கண்ணோட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் எவ்வாறு சமூகத்தில் ஒரு மாற்றத்தை தோற்றுவிக்கிறார்களோ , அது போன்ற ஒரு பணியையே ஒரு மகா கவியும் புரிகின்றார். அத்தகைய மகா கவி மக்களுக்கு விடுக்கும் செய்தி , அவரது சமகால சமூகத்தினதும் தேசத்தினதும் நிலையை விட உயர்நததாகவும் அமையலாம். அவரது காலத்தையும் தாண்டி பல்வேறு காலப்பரிவுகளில் பல சமூகங்களில் , பல நாடுகளில் அதன் செல்வாக்கை ஆழப்பதிக்கலாம். இவ்வகையில் அது காலத்தை வென்று வாழும் நித்தியத்துவத்தையும் தேசம் , நாடு , சமூகம் என்ற எல்லைகளைத் தாண்டிச் செல்லும் ஒரு சர்வதேசியத் தன்மையையும் பெறலாம்.



இக்பால் இத்தகைய ஒரு மகாகவி , யுக புருசர். ஒரே நேரத்தில் கவிஞராகவும் , தத்துவஞானியாகவும் அவர் விளங்கியதால் அவர் இலக்கியப் பணியில் ஒரு பெரும் அறை கூவலை எதிர் நோக்க வேண்டியிருந்தது. அதுவே தத்துவத்தைக் கவிதையில் வடிக்கும் ஒரு பணியாகும். இக்பால் தத்துவத்தைப் பாடலாக்கும் பணியில் வெற்றி கண்ட ஒரு மகத்தான தத்துவக் கவிஞராவார்.

### இலக்கியப் பணிக்குக் களம் அமைத்தோர்

இந்தியத் துணைக்கண்டம் மூன்று புகழ் பெற்ற முஸ்லிம் கவிஞர்களைத் தோற்றுவித்தது. மிர்ஸா , காலிப் , ஹாலி , இக்பால் ஆகிய மூவருமே இக்கவிஞர்களாவர். இவர்கள் மூவரும் பார்ஸியத்திலும் , உர்துவிலும் தங்களது கவிதைகளைப் படைத்தனர். காலிப் 1857ம் ஆண்டு நடைபெற்ற சுதரந்திரப் போரைக் கண்டு அனுபவித்தது மட்டுமன்றி முஸ்லிம்களின் கையிலிருந்து அரசியல் அதிகாரம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களைச் சென்றடைந்ததையும் நேரடியாகக் கண்டவர். 1857இல் நடைபெற்ற சுதந்திரப் போர் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியாளர்களின் இறுதியை உணர்த்தியது. இந்தக் கலகத்தை அடக்குவதற்குப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த கொடூரமான நடவடிக்கைகள் முஸ்லிம்களைப் பெரும் பாதிப்பிற்கு ஆளாக்கின. முஸ்லிம் சமூகம் விரக்தியும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுமற்ற ஒரு நிலையை எதிர் நோக்கியது.

அரசியல் புரட்சியின் பின்னர் தோன்றிய அந்த அவல நிலை , சமூகச் சீர்குலைவு அனைத்தாலும் காலிப் பாதிக்கப்பட்டார். அவரது கவிதைகளில் கால சமூகத்தில் நிலவிய சீர்கேட்டை விளக்கும் விரக்தி நிலையும் அதே நேரத்தில் எதிர் காலத்தை மனநம்பிக்கையோடு நோக்கும் , உறுதியும் ஒரே நேரத்தில் பிரதிபலிக்கின்றன. அவரது கவிதைகள் ஒரு எச்சரிக்கைத் தொனியாகவும் நம்பிக்கையின் குறியீடாகவும் உள்ளன. கால மாற்றங்களை உணர்ந்து முஸ்லிம் சமூகம் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்ற கருத்தை அவரது கவிதைகள் வலியுறுத்தின. முஸ்லிம் சமூகம் எதிர் காலத்தை நம்பிக்கையோடு நோக்கி, தனது சக்தியிலும் , வளங்களிலும் தங்கி நின்று செயல்பட வேண்டும் என்ற கருத்தும் அவரது கவிதைகளில் பொதிந்திருந்தன. இக்கால கட்டத்திலேயே அலிகார் இயக்கம் (Aligar Movement) தோன்றியது.

ஆங்கில மொழி அறிவையும் , மேற்கத்திய நவீன சிந்தனைகளில் முஸ்லிம்களை ஈடுபாடு கொள்ளச் செய்வதையும் அலிகார் இயக்கம் தனது அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. அலிகார் இயக்கத்தின் முன்னோடியான சேர் ஸெய்யித் அஹ்மத் கான் முஸ்லிம்கள் ஆங்கில மொழியைக் கற்பதன் அவசியத்தையும் மேற்கத்திய கருத்துக்களை தம்மோடு இணைத்துக் கொள்வதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அலிகார் இயக்கத்தின் செல்வாக்கு முஸ்லிம்களின் இலக்கிய முயற்சிகளிலும் பிரதிபலித்தது. இக்காலப் பிரிவில் தோன்றிய கவிதை , உரை நடைகளில் இந்தப் பண்பை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்திய முஸ்லிம் இயக்கத்தின் இந்தத் திருப்பத்தை இக்காலப் பிரிவில் தோன்றிய புகழ் பெற்ற கவிரான அல்தாப் ஹுஸைன் ஹாலியின் கவிதைகள் பிரதிபலிக்கின்றன. ஹாலி அவரது 'முஸத்தஸ்' என்ற கவிதைத் தொகுதியை 1879ம் ஆண்டு வெளியிட்டார். (காலிபின் மறைவு இக்காலப் பிரிவிலேயே ஏற்பட்டது)

அலிகார் பல்கலைக்கழகத்தை நிறுவிய ஸேர் ஸெய்யத் அஹ்மத் கான் ஹாலி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் அவரின் தீவிர நவீனத்துவக் கருத்தை (Modernism) ஹாலி ஆதரிக்கவில்லை. ஹாலி தனது "முஸத்தஸ்' என்ற கவிதைத் தொகுப்பில் முஸ்லிம்களின் கடந்த கால வரலாற்றுப் பாரம்பரியத்தின் பெருமை , சிறப்பு , பற்றிப் பாடி முஸ்லிம் சமூகத்தில் தன்னம்பிக்கை உணர்வை ஏற்படுத்தி இயக்கச் சக்தியை தோற்றுவித்தார். கால மாற்றத்திற்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் ஆற்றலும், சக்தியும் இஸ்லாமியப் பண்பாட்டில் காணப்படுவதையும் , முஸ்லிம்கள் தங்களது கடந்த காலப் பாரம்பரியத்தில் காலூன்றி , புதிய மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்ளல் வேண்டும் என்பதையும் அவரது கவிதைகள் வலியுறுத்தின.

காலத்தின் குரலாக ஒலித்த அவரது கவிதைகள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றன. தங்களது வரலாற்றுப் பாரம்பரியத்தின் இழப்பை மக்கள் உணர்ந்தனர். இக்காலப் பிரிவிலேயே அக்பார் அலஹாபாதியின் இலக்கியப் பிரவேசம் நிகழ்கின்றது. ஸேர்ஸெய்யத் அஹ்மத் கானின் நவீனத்துவ வாதத்தின் வெறுமையையும் அதன் பலவீனங்களையும் அவரது



கவிதைகள் மூலம் அக்பார் அலஹாபாதியும் இக்பாலின் இலக்கியப்பணிக்கு களம் அமைத்துக் கொடுத்தனர். ஹாலி , அக்பர் ஆகிய முப்பெருங் கவிஞர்களினதும் இலக்கியப் பங்களிப்பையும் , சமூக புனர் நிர்மாணப் பணியில் அவர்களது பங்கையும் ஓர் அறிஞர் மிகச் சிறப்பாக விளக்குகின்றார்.

Hali longed to have the building, Akbar demolished the undersirable portions and Iqbal has constructed the edifice. hali diagnosed the aliment, Akbar ordained abstentions and Iqbal priorities efficacious treatment. hali thus sang of the past, Akbar of the present and Iqbal sings of the future.

"ஹாலி ஒரு கட்டடத்தைக் கட்டியெழுப்ப விரும்பினார். அக்பார் அக்கட்டடத்தின் பொருத்தமற்ற பகுதிகளை உடைத்தார். இக்பால் அக்கட்டடத்தைக் கட்டி எழுப்பினார். ஹாலி நோய்க்கான காரணத்தைக் கண்டறிந்தார். அக்பார் நோய்க்கான பத்தியத்தைக் குறிப்பிட்டார். இக்பால் அதற்கான நிவாரணத்தைக் கண்டு பிடித்தார். ஹாலி கடந்த காலத்தைப் பற்றிப் பாட அக்பர் நிகழ்காலத்தின் குரலா விளங்க இக்பால் வருங்காலத்தைப் பற்றிப் பாடினார். (Sheik AkbaR Ali Iqbal His Poetry and massage, Lahore 1932p 19)

பொதுவாக நோக்குமிடத்து காலிம் , ஹாலியும் , அக்பரும் இந்திய முஸ்லிம்களை நோக்காகக் கொண்டு தமது கவிதைகளைப் படைத்தனர். ஆனால் இக்பால் முஸ்லிம் உலகிற்காகவும் , அதனைத் தாண்டி முழு மனித இனத்தினதும் விமோசனத்தை நோக்காகக் கொண்டு தனது கவிதைகளைப் புனைந்தார்.

* * *

# இசையும் இஸ்லாமியரும்

முஸ்லிம்களின் ஈடுபாட்டினாலும் பங்களிப்பினாலும் வளர்ச்சிடைந்த கலைகளுள் இசைக்கலையும் ஒன்று. முஸ்லிம்கள் இசைக் கலை என்று கருதியவற்றின் எடுத்துக் காட்டுக்கள் "ஆயிரத்தோர் இரவுகள்" கதைகளிலும் இப்னு அப்து ரப்பிஹீ எழுதிய அல் இக்துல் பரீத், "அல் இஸ்ஹானி" எழுதிய "கிதாபுல் அக்னீ" ஆகிய நூல்களிலும் பெருமளவு காணப்படுகின்றன. வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தக் கூடிய வகையில் முஸ்லிம்களின் இசைக்கலை அமைந்திருப்பதை காணமுடிகின்றது. இஸ்லாம் இசையை அனுமதிப்பதில் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்ற போதிலும் இசையின் ஆத்மீக விளைவுகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம் ஞானிகளான ஸூபியாக்கள் தத்தம் அனுபவங்களை இசை மூலம் வெளிப்படுத்தினர். முஸ்லிம் துறவிகளான தர்வேஷ்கள் தத்தம் ஆத்மீக ஆசாரங்களை நிறைவேற்ற இசையைப் பயன்படுத்தினர். இசையூட்டிய கிளர்ச்சியிலே இறைவனைத் தரிசித்து, பேரின்ப பரவச நிலை எய்திய ஞானிகளைப் பற்றிய சில தகவல்கள் வரலாற்று நூல்களிலே காணக் கிடக்கின்றன.

இசையின் ஆத்மீக விளைவுகள் பற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார். "மனித இதயத்தின் சர்வ சக்தியான இறைவன் இரகசியப் பொருளான நெருப்புப் பொறியொன்றை புதைத்து வைத்துள்ளான். அது பாடலாலும் இசையாலும் கிளர்ந்தெழுந்து, சாதாரண நெருப்பு பஞ்சில் பற்றிக் கொள்வது போல இதயத்தைப் பற்றி எரியச் செய்கின்றது. அதனால் மனிதன் தன்னை மறந்து பரவச நிலைக்கு ஆளாகி விடுகிறான். இந்த இசை நாதம் நம் ஆத்மாக்களின் உலகம் (ஆலமுல் அர்வாஹ்) என்கிறோமே அந்தச் சௌந்தரிய உலகிலிருந்து எழும் சப்தத்தின் எதிரொலியாய் இருக்கின்றது. அது மனிதனுக்கும் அந்த உலகுக்கும் உள்ள உறவை நினைவூட்டுகின்றது. இதனைப் பொதுவாக இருவகைப்படுத்தலாம். ஒன்று குரல் வழி இசை , மற்றது கருவி வழி இசை.

குரல் வழி இசையைப் பொறுத்தவரை பெரும்பாலும், அது இஸ்லாமிய சட்டங்களால் அனுமதிக்கப்பட்டவையே. பெருமானார் காலத்திலும் அவர்களுக்கு முற்பட்ட காலத்திலும் அவர்களுக்கு இருந்த அறபு இசையை வாய்வழி இசையாகவே கொள்ளலாம். அந்த இசை ஒட்டகையின் அணி நடையுடன் தொடர்புற்றிருந்தது. சொற்களை எளிய சுருதியில் இடைவெளிகளுடனும் குரல்



வேறுபாடுகளுடனும் உச்சஸ்தாயில் பாடுவதே அக்கால இசையாக இருந்தது. கலையுணர்வையும் சொற்பொருள் நட்பத்தையும் பொறுத்தவரை இதனை இசை என்று கூறமுடியாது. ஆயினும் குரல்வழி இசையாகக் கொள்ளலாம்.

ஒட்டகங்களை மேய்ச்சலுக்காக இட்டுச் செல்லும் போதும், போர்க்களத்திற்குப் படை நடத்திச் செல்லும் போதும், ஓய்வுநேரங்களைச் சந்தோசமாகக் கழிக்கும் போதும் பாடல்களை இப்படி அவர்கள் பாடி வந்தனர். சிலர் 'தப்' எனும் பறை , மிஸ்ஹர் எனும் புல்லாங்குழல் முதலிய எளிய கருவிகளையும் பயன்படுத்தினர். கலீபா உமரின் ஆட்சிக்காலம் வரை இதுவே அரேபிய இசையின் வடிவமாக இருந்தது.

கலீபா உமரின் மரணத்தின் பின்னர், அரேபிய இசையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. உமரின் ஆட்சிக் காலத்தின் போது ஹிஜாஸுக்குக் கொண்டுவரப்பட்ட பாரசீக யுத்தக் கைதிகளின் வரவால் பாரசீக இசை மரபும் புதிய இசைக்கருவிகளை மீட்டும் முறையும் அரேபியருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. உமரின் ஆட்சிக்காலம் வரை ஒழுக்கத்தைப் பேணி வந்த ஹிஜாஸின் செல்வர்கள் தமது சுகபோக வாழ்வுக்குத் தீனி போடலாயினர். கலீபா உதுமானின் பலவீனமும் ஆட்சி விவகாரங்களில் ஏற்பட்ட குழப்பங்களும் அவர்களின் சுதந்திரத்திற்கு வலுவூட்டின. பாரசீக இசை மரபால் ஈர்க்கப்பட்டு இசையிலே மூழ்கலாயினர். குரல் வழி இசையோடு மட்டும் நின்றிருந்த அவர்கள் கருவி வழி இசையிலும் அதிக ஆர்வம் செலுத்த ஆரம்பித்ததோடு , புதுப்புது இசை மரபுகளை அறிவதிலும் அனுபவிப்பதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். கலீபா அலி அவரின் மரணத்தைக் தொடர்ந்து ஹிஜாஸில் இசையைத் தொழிலாகக் கொண்ட ஆண்களும் பெண்களும் பகிரங்கமாக இசை விருந்து அளித்து வரலாயினர். சுருங்கச் சொன்னால் கி.பி. ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இசைக்குப் பெயர் போன நாடாக அரேபியா புகழ் பெறத் தொடங்கிற்று. பிற்காலத்திலே தோன்றிய ஆட்சி மரபினர் சுகபோக வாழ்வில் காட்டிய போகமும் ஆர்வமும் இத்தகைய சூழலுக்கு களம் அமைத்தன.

அரேபிய முஸ்லிம்கள் ஆட்சிக் காலத்திலேயே இசைக்கலையில் அதிக ஆர்வம் காட்டினர். உமையாக்களின் காலத்தில் வளர்ச்சி அடைய ஆரம்பித்த இசைக்கலை அப்பாஸிய கலீபாக்களான ஹாரூன், அல் மாமூன் ஆகியோரின் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. இக்காலங்களில் இசைக்கலை எவ்வகையிலும் தடை செய்யப்படாத ஒரு கலையாக வளர்ச்சியுற்றது.

கலீபா இரண்டாம் வலீத் இசையில் நாட்டம் கொண்டவராக மட்டுமன்றி, சிறந்த இசைக்கலைஞராகவும் விளங்கினார். பாடல்கள் இயற்றியதோடு யாழ் வாசிப்பதிலும் இசையமைப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவரைப்போலவே பெரும்பான்மையினரான உமையா கலீபாக்கள் இசையில் ஆற்றலும் ஆர்வமும் கொண்டிருந்தனர். இவர்களைத் திருப்தி செய்வதற்காகப் பெருந்தொகைப் பாடகிகள் அயல் நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டனர்.

முதலாம் யஸீதின் காலத்தில் இசையார்வம் மக்களிடையே அதிகமாகக் காணப்பட்டது. பாரசீக யுத்தக் கைதிகள் வரவினாலும் செல்வர்களின் சுகபோக விருப்பினாலும் ஏற்கனவே இசைக்குப் பெயர் போன இடமாக விளங்கிய மக்கா நகர் முதலாம்யஸீதின் ஆட்சிக்காலத்தில் இசையின் கேந்திரநிலையமாக திகழத் தொடங்கிற்று. மக்கா நகரச் செல்வர்களின் இசை வேட்கையைத் தணிப்பதற்காகவே உரோமப் பாரசீக பாடகிகளும், இசைக்கலைஞர்களும் பெருமளவில் அங்கு படையெடுத்தனர். அங்கிருந்து உமையாக்களின் தலைநகரமான தமஸ்கஸுக்குப் பாடகிகள் ஏற்றுமதி செய்யப்பட்டனர். சுருங்கச் சொன்னால் உமையாக்கள் காலத்தில் ஏனைய அறிவுத்துறைகளை விட இசைத்துறையே அவர்களின்முழுமையான ஆதரவைப் பெற்று விளங்கியது.

உமையாக்களின் ஆட்சிக்காலத்தில் இசைக்கலை ஆராய்ச்சியிலும் இசைத்துறையிலும் புகழ் பெற்ற பலர் இருந்தனர். அவர்களுள் துவைஸ் (632 ~ 710) என்பவர் குறிப்பிடத்தக்கவர். ஈஸா இப்னு அப்துல்லாஹ் என்பது இவரது இயற்பெயர். இவர் நபி பிரான் (ஸல்) அவர்கள் இறந்த தினத்தில் பிறந்தவர். மதீனாவிலேயே வாழ்ந்த இவர் , பின்னர் மதினாவிலிருந்து சிரியாவுக்குச் செல்லும் பாதையில் சுமார் இரு நாட் பிரயாண தொலைவிலுள்ள ஸுவைதா என்னும் இடத்தில் குடியேறி, மரணமாகும் வரை அங்கேயே வாழ்ந்தார். அரேபிய இசையின் தந்தையாகக் கருதப்படும் இவர் கலீபா உதுமானின் இறுதிக் காலத்தின் போதே இசை மேதையாகப் புகழ் பெற ஆரம்பித்தார். இசையைத் தொழிலாகக் கொண்டிருந்த இவரே முதன் முதல் அரேபிய இசைக்கு தாள லயத்தை அறிமுகஞ் செய்து வைத்தவர் என்று சொல்லப்படுகின்றது. மேலும் இவரே முதன் முதலில் காஞ்சிபுரம் என்னும் கருவியை இசைத்து அரபு மொழியில் பாடல்கள் பாடியவர் என்றும் கூறப் படுகின்றது. இவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் இப்னு ஹுரைஜ் (634~726) என்பவர். மக்காவைச் சேர்ந்த இவர்



இஸ்லாமிய உலகில் தோன்றிய நாற்பெரும் இசைக்கலைஞர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். (கிதாபுல் அங்னீ) இவரே முதன் முதலில் வீணையை இசைத்து அரபுப் பாடல் களை மக்காவில் பாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மதீனாவில் வாழ்ந்த பாடகரான ஸாயிப் காதிர் உரிமை இடப்பட்ட ஒரு பாரசீக அடிமை. அவர் தந்தை மதீனாவுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு பாரசீக யுத்தக் கைதி.

மதீனாவைச் சேர்ந்த மஃபத் (மர.734) மாலிக் ஆகியோர் குறிப்பிடத்தகுந்த உமையாக்கள் கால இசைக்கலைஞர்களுள் இருவர். இவர்களுள் மஃபத் என்பவர் முதலாம் வலீத் , இரண்டாம் யசீத் , இரண்டாம் வலீத் ஆகியோரின் அரசவையில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். ஒருமுறை இவருடைய இசையைக் கேட்டு, கலீபா இரண்டாம் யாசீத் தம் இருக்கையிலிருந்து துள்ளி எழுந்து, அலங்கார மண்டபத்தைச் சுற்றி நடனமாடினார் என்று கூறப்படுகின்றது. அதா அபீ ரபாஹ் என்னும் பெயர் கொண்ட மற்றோர் இசை மேதைஸரீக் என்னும் ஒருவகைப் புதுப்பாணியை அறபு இசைக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

ஈரானைச் சேர்ந்த யூனுஸ் அல் காதிப் (மர 765) என்பவர் உமையாக்கள் காலத்தைச் சேர்ந்த மற்றொரு சிறந்த இசை மேதையாவார். இசைக்கலையின் தோற்றம் சம்பந்தமாக இசைநூலை முதன் முதலில் எழுதிய முஸ்லிம் இவரேயாவார். இவருடைய இசைநூலே, பிற்காலத்தில் புகழ் பெற்ற இசைமேதை "அபுல் பராஜ் அல் இஸ்பஹானீ" தமது "அங்னீ" என்னும் பெருநூலை எழுதுவதற்கு மாதிரியாக அமைந்தது.

அப்பாஸியர்களின் ஆட்சிக்காலமே இசைத்துறையின் பொற்காலமாக விளங்கியது. இசைக்கலை தனது வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அவர்களின் காலத்திலேயே அடைந்தது. இசைக்கலையை ஆதரித்து வளர்த்த அப்பாசிய ஆட்சியாளருள் கலீபா மஹ்தீ (775 ~ 785)முதலிடம் பெறுகிறார். மக்காவைச் சேர்ந்த ஸியாத் (739 ~ 785) என்னும் இசைக்கலைஞரை இவர் பெரிதும் ஆதரித்தார்,

கலீபா மஹ்தீக்குப் பின்னர் , கலீபா காரூன் அல்ரஷீத்தின் (786 ~ 809) காலத்தில் , இசைக்கலை தனது வளர்ச்சியின் உச்சத்தையும் முழுமையையும் பெற்றது. அவருடைய அரசவை இசைக்கலைஞர்களுள் மோஸீல் நகரத்தைச் சேர்ந்த இப்ராஹீம் , இஸ்ஹாக் ஆகிய இருவரும்

சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். தந்தையும் தனயனுமான இவர்கள் சாஸ்திரீய சங்கீதத்திலே திறமை பெற்று விளங்கினர்.

அப்பாஸியாக்களின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த கலீல் இப்னு அஹ்மத் (718 - 767) என்பாரும் குறிப்பிடத்தகுந்த இசை மேதைகளுள் ஒருவர். முதன் முதலில் அரபு யாப்பிலக்கண நூலை எழுதிய பெருமையைத் தேடிப் கொண்ட இவர் அரபு இசைக் கலையின் விருத்திக்குப் பெரும் பணியாற்றினார். இராகங்கள் பற்றியும் தாள லயங்கள் பற்றியும் இவர் எழுதிய இரு நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் பிற்காலத்தில் முஹம்மத் இப்னு இஸ்ஹாக் அல் வர்ராக் (மர 995) எழுதிய பிஹ்ரிஸ்த் என்னும் நூலில் காணப்படுகின்றன.

அப்பாஸியாக்கள் காலத்தில் வாழ்ந்த வரலாற்றாசிரியர் அல் மஸ்ஊதி (ம.956) அபுல் பராஜ் அல் இஸ்பாஹானீ (897 - 967) முஹம்மத் இப்னு இஸ் ஹாக் அல் வர்ராக் (ம.995) ஆகியோரும் இசை பற்றி எழுதியுள்ளனர். மஸ்ஊதி என்பவர் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். முருஜீத் தஹப் (பொன் வயல்கள்) என்னும் நூலில் அரபு இசை பற்றியும் அவர் எழுதிய ஏனைய வரலாற்று நூல்களில் அயல் நாடுகளின் இசை பற்றியும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இவர் இசைக்கலை பற்றித் தனியாக நான்கு நூல்களையே எழுதினார். அவற்றுள் ஒன்று 'கிதாபுல் கியான்'' என்பது. இது புகழ் பெற்ற பாடகிகளைப் பற்றிய தகவல்களைத் தருகின்றது.

அப்பாஸியாக்களின் ஆட்சிக் காலத்தின் போது (குறிப்பாக 8ம் , 9ம். 10ம் நூற்றாண்டுகளில்) கிரேக்க மொழியில் எழுதப்பட்ட ஏராளமான இசை நூல்கள் அரபு மொழியில் பெயர்க்கப்பட்டன. பைத்தகரஸ் , பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் , அரிஸ்தோக்சினஸ் , இயூக்கிளித், நிகோமாச்சஸ் , முதலிய கிரேக்க மேதைகள் எழுதிய இசை நூல்கள் யாவும் மொழிபெயர்க்கப்பட்டன. இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுள் கிதாபுல் மஸாயில் கிதாபுல் நப்ஸ் (ஆத்மா பற்றிய நூல்) கிதாபுல் நகாம் (பெரிய இசை நூல்) ஆகியவை குறிப்பிடத்தக்க சில நூல்களாகும்.

கிரேகக இசை நூல்களின் செல்வாக்கு படிந்துள்ள மிகப் பழைய அரபு நூல்கள் அல் கிந்தியின் (803 - 873) நூல்கள் குறிப்பிடத்தக்கவை. முதலாவது அரபுத் தத்துவஞானி என்னும் புகழுக்குரிய இவர் இசைக் கொள்கையை உருவாக்குவதற்குக் கணிதத்தைப் பயன்படுத்தினார். இவர் பிரயோகித்த இம்முறை அரபு இசை வரலாற்றில் மிகச் சிறப்பான இடமொன்றை


இவருக்குப் பெற்றுக் கொடுத்தது. இவர் இசை பற்றிச் சுமார் ஒன்பது நூல்கள் எழுதினார். அவற்றுள் நான்கு நூல்கள் இன்றும் கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன. இவரே சுருதிகளின் சட்டங்கள் பற்றியும் பண்ணமைப்பு பற்றியும் முதலில் எழுதிய அரபு எழுத்தாளராவார். இவருடைய நூல்களில் தாளலயம், இசைக்கருவிகள் , பண்ணமைதி முதலியவை பற்றிய விபரங்கள் விளக்கமாகக் காணப்படுகின்றன. எச்.ஸி. பார்மர் என்பார் கூறுவது போல இவரது இசை நூல்கள் இவருக்குப் பின் தோன்றிய எழுத்தாளர்கள் மேல் சுமார் இரு நூற்றாண்டுகள் வரை கணிசமான செல்வாக்கைச் செலுத்தின. இவருடைய இசைக் கோட்பாடுகள் கிரேக்கரின் இசைக் கோட்பாடுகளை ஒத்திருப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஏ.எம்.அபூபக்கர் கூறுகையில் தற்காலத்தில் பயன்படத்தப்படும் பியானோ,ஆர்கன் போன்ற கருவிகளின் மாதிரிகளைக் கூட முஸ்லிம்கள் அமைத்திருந்தனர். இவை ஸ்பெய்னுக்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் அறிமுகம் செய்யப்பட்டன.

## ஸ்பெயினில் அரபு இசை.

அரபு இசைக்கலை அறிஞர்களுள் பெரும் புகழ் பெற்றவர் அல் பாரபீ (870 - 950) என்பவராவர். அலெப்போவை ஆட்சி செய்த ஸைபுத் தௌலா அல் ஹம்தானீ (944 - 967) யின் அரசவையில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற அறிஞராக விளங்கிய இவர் ஒரு தருக்கிய தத்துவஞானி எனப் போற்றப்படுபவர். மருத்துவம் , தத்துவம் , சூபித்துவம் முதலியதுறைகளில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்றிருந்த இவர் இசைக்கலையிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். இசைக் கொள்கை பற்றி இவர் பல நூல்கள் எழுதினாராயினும் , புகழ் வாய்ந்த பெரு நூல் "கிதாபுல் முஸீக்கீ அல் கபீர்'' (பெரிய இசை நூல்) என்பதாகும். இந் நூலில் ஒலியியற் கோட்பாடுகள் பற்றியும் அக்காலத்தில் வழக்கிலிருந்த இசைக்கருவிகள் பற்றியும் விபரித்துள்ளார். இவரது நூல்கள் இன்றும் அரபு இசைத்துறையில் ஆராய்ச்சி செய்வோருக்கு அரிய பொக்கிஷமாக விளங்குகின்றன.

புகழ் பெற்ற கணிதமேதையான அபுல் வபா (940 - 998) தாள லயம் பற்றி ஒரு நூல் எழுதினார். அலி இப்னு ஜீனாவின் மாணவரான இப்னு ஸைலா (ம. 1048) என்பாரும் இசையியல் பற்றி நூலொன்று எழுதினார். அவருடைய சம காலத்தவரும் பௌதீகவியலாளருமான இப்னு அல் ஹைதம்

(965 – 1039) இயூக்ளித் தின் நூல்களை ஆராய்ந்து இசை நூல் எழுதினார். எகிப்தில் வாழ்ந்த ஸ்பானியரான உமையா இப்னு அபூ அல் ஸல்த் என்பார் ரிஸாலா பில் மூஸிக் என்னும் பெயரில் இசைக் கொள்கையை விளக்கி நூலொன்றை இயற்றினார்.

## இசைக்கருவிகள்.

ஸ்பெயினில் முதன் முதலாக அரேபிய இசையைப் பரப்பியவர் இப்னு பிர்னாஸ் (ம.888) என்பவராவார். கலில் இப்னு அஹ்மதின் இசைக் கொள்கையையே இவர் அங்கு பரப்பினார். இவருடைய முயற்சியால் ஸ்பெயினில் வாழ்ந்த முஸ்லிம் அறிவியல் மேதைகள் இசைக் கலையில் ஆர்வமுற்று , ஆய்வுகள் செய்யலாயினர். மஸ்லமா அல் மஜ்ரீதி (ம.1007) அல் கிர்மானீ (ம. 1066) முதலிய ஸ்பானிய எழுத்தாளர்கள் "இக்வா னுஸ்ஸபா" இயக்கத்தைச் சேர்ந்த மேதைகளால் எழுதப்பட்ட இசைநூல்களை மக்களிடையே பிரபல்யப்படுத்தினர். இதே நேரத்தில் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த அபூ அல் பழ்ல் ஹஸ்தாய் என்ற யூதரும் 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த முஹம்மத் இப்னு அல் ஹத்தாத் (ம. 1165) என்பாரும் அரபு இசைக் கொள்கை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு நூல்கள் எழுதினர். புகழ்பெற்ற ஸ்பானிய தத்துவஞானியான இப்னு பாஜாஹ் (ம.1138) என்பவரும் இசைக் கொள்கை பற்றி நூல் எழுதினார். இவருடைய நூல் மேற்குலகின் இசைத்துறையில் பெரும் ஆதிக்கம் செலுத்தியது. மற்றொரு தத்துவஞானியான இப்னு ருஸ்து (1126 – 1198) அரிஸ்தோதிலின் 'கிதாபுல் நப்ஸ்' என்ற நூலுக்கு ஒரு விரிவுரை எழுதினார். அரிஸ்தோதிலின் இசைக் கொள்கையை மிகத் தெளிவாக விளக்கும் ஒரு நூலாக இந்த விரிவுரை அமைந்திருந்தது.

முஸ்லிம்களின் இசைக்கருவிகள் எண்ணிக்கையில் அதிகம். இசைக்கருவிகள் செய்வதை அவர்கள் ஒரு நுண்கலையாகக் கருதினர். இசைக்கருவிகள் தயாரிப்பது சம்பந்தமாகப் பல நூல்களும் அக்காலத்தில் எழுதப்பட்டன.

பண்டைய அரேபியர்களுக்கு அறிமுகமாயிருந்த இசைக்கருவிகள் 'யாழ்' போன்ற 'ஊத்' என்ற கருவியும் இரு நாண்களுள் ஒரு வகை வயலினுமாகும். பிற்காலத்தில் ஏற்பட்ட அயல் நாட்டுக் கலாச்சாரங்களின் தாக்கத்தால் பல புதுவகைக் கருவிகளை அரேபியர்கள் பயன்படுத்தலாயினர்.



இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த அரேபியர் பயன்படுத்திய யாழ் (ஊத்) 'மிஸ்ஹறா' என அழைக்கப்பட்டது. பின்னர் பல்வேறு வகையான யாழ்கள் பயன்படுத்தப்பட்டன. அவர்களால் பயன்படுத்தப்பட்ட யாழ் குடும்பத்தைச் சேர்ந்த கருவிகளுள் "ஊத் கதீம்", "ஊத் காமில்" ஷஹ்ரூத் ஆகியவை முக்கியமானவை. இவற்றுள் "ஊத் கதீம்" தற்காலத்தில் பயன்படுத்தப்படும் மண்டோலின் எனும் கருவியை ஒத்ததாக இருந்தது. ஊத் காமில் மிகப் பெரிய உருவத்திலும் ஷஹ்ரூத் வில் வடிவிலும் அமைந்திருந்தன. அரேபியர் பயன்படுத்திய நரம்பிசைக் கருவிகளுள் தன்பூர், தர்க்கீ தன்பூர், பிஙில்மா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பின்னர் முரப்பஃ என்னும் ஒரு வகை கித்தார் புழக்கத்திற்கு வந்தது. தட்டையான நீள் சதுர பெட்டி போன்ற அமைப்பைக் கொண்டிருந்த இக்கருவி கீதாரா எனவும் அழைக்கப்பட்டது.

அரேபியர் பயன்படுத்திய வில் இசைக் கருவிகளும் முக்கியமானவை. ஆரம்பத்தில் இவை "ரபாப்" எனும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன. பல்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் அமைந்திருந்த அவற்றுள் 'கமான்ஜ' ஙிஸ்ஹக் எனும் பெயர்களால் அறியப்பட்ட கருவிகள் குறிப்பிடத்தக்கவை. 'திறந்த நாண்' கருவிகளுள் 'ஜன்க்', 'ஸன்ஜ்', 'கானுன்', 'நுஸ்ஹா', 'ஸின்தீர்' ஆகியவை முக்கியமானவை.

புல்லாங்குழல் குடும்பத்தைச் சேர்ந்த கருவிகளுள் 'நாய்' என அழைக்கப்பட்ட இசைக்குழல் குறிப்பிடத்தக்கது. இது அளவைப் பொறுத்துபல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது இவ் வகைக் கருவிகளுள் நாய்பம், 'ஸம்ர்' 'ஷப்பா','ஜீவாக்', 'ஸப்பாரா' பூக் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் 'காஞ்சிரா' என்னும் கருவி உலோகத்தால் செய்யப்பட்டதாகும்.

காஞ்சிரா இனத்தைச் சேர்ந்த கருவிகளுள் 'தப்' என்பது குறிப்பிடத் தக்கது. இது பொதுவாகச் சகல வகையான காஞ்சிராக்களையும் குறித்ததாயினும் (சதுர வடிவான கருவியைக்குறிக்கவே விசேடமாகப் பயன்படுத்தப்பட்டது.) உருண்டை வடிவமான கருவியைக் குறிக்கவே விசேடமாகப் பயன்படுத்தப்பட்டது. உருண்டை வடிமான காஞ்சிராக்கள் அவற்றின் அளவுக்கும் அமைப்புக்குமேற்ப பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டன. அவற்றுள் 'தார்', 'தா இரா' என்பன குறிப்பிடத்தக்கன. இவை தவிர 'தப்ல்', 'நக்காரா', 'கஸ்அ', முதலான மத்தள இனத்தைச் சேர்ந்த கருவிகளும் பயன்படுத்தப்பட்டன.

முஸ்லிம்கள் பல்வேற வகையான இசைக்கருவிகளைப் பயன்படுத்திய அதேவேளை, புதிய இசைக்கருவிகளைப் கண்டுபிடிப்பதிலும் ஆர்வமுடையோராய் இருந்தனர். இந்த வகையில் இப்னு அல் பராபீ என்பார் 'ரபாப்:',' கானூன்' ஆகியகருவிகளைக் கண்டுபிடித்தாகவும் அல்ஸீனாம் என்பார் 'நாய் லாமீ' எனும் கருவிக்கு வடிவமைப்பு செய்ததாகவும் ஸல்ஸல் (ம. 791) என்பார். ஊத் அல் ஷபபூத் எனும் கருவியை அறிமுகம் செய்ததாகவும் ஸ்பெயினை ஆட்சி செய்த கலிபா இரண்டாம் ஹகம் (ம. 976) 'பூக் என்னும் கருவியைத் திருத்தியமைத்ததாகவும் ஸபீஉத்தின் அப்துல் மு:மின் (ம.1294) என்பார் 'நஸ்ஹா', 'முங்னீ' எனும் கருவிகளைக் கண்டுபிடித்ததாகவும் கூறப்படுகின்றது. ஜே.ஸி. ரேஸ்லா என்பார் இவ்வாறு கூறுகிறார்.

"முஸ்லிம்கள் , தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பியானோ, ஆர்கன் ஆகிய கருவிகளின் மாதிரிகளைக் கூட முதன் முதலில் அமைத்தனர். இத்தகைய கருவிகள் ஸ்பெயினுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் முஸ்லிம்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன". மேலும் உமையாக்கள் ஆட்சியில் இசையைப் போல் விருத்தியுற்ற கலை வேறெதுவுமில்லை. அக்கால பிரபல பாடகர்களாக, ஜெமீலா, ஹப்பாப்பா , ஸீல்மா , ஸகீனா மஹ்சாஸ் , ஸஈத் அப்துல்லாஹ் , சுரைஜ் போன்றோர் முக்கியமானவர்கள்.

* * *



# கீழைத்தேய இசைக்கலையும் புகழ் பெற்ற முஸ்லிம் இசைக்கலைஞர்களும்.

இசைக் கலையின் பொதுவான வளர்ச்சி பற்றியும் , இசைத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் மன்னர்களைப்பற்றியும் அவர்களது ஆதரவில் புகழ் பெற்று விளங்கிய இசைக் கலைஞர்களைப் பற்றியும் இதற்கு முந்திய கட்டுரையில் குறிப்பிடப்பட்டது.

இக்கட்டுரை தற்காலத்தைச் சேர்ந்த பிரபல்யம் வாய்நத முஸ்லிம் இசைக்கலைஞர்களைப் பற்றிச் சுருக்கமாக விளக்குகின்றது.

## ஒஸ்தாத் படே குலாம் அலிகான்.

அண்மைக்காலத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவரான ஒஸ்தாத் படே குலாம் அலிகான் மந்திரப்பஞ்சத்தில் ஆரம்பித்த உச்ச பஞ்சமம் வரை விசேடமான , மூன்று ஸ்தாயிகளை அலங்காரங்களுடன் பாடுவதில் வல்லவர். இதனால் இவர் இந்தியாவில் வடநாட்டில் மட்டுமன்றித் தென்நாட்டிலும் புகழ் பெற்றுள்ளார்.

## ஸ்தாதர் பயாஸ் கான்.

இவர் கியால் தரானா ஆகிய பாடல் முறைகளைச் சிறப்பாகப்பாடுவதில் திறமையுள்ளவர்.

## ஒஸ்தாத் அமீர் கான்.

இவர் விசேடமாக தர்பா திகாடா இராகத்திலும் அடானா இராகத்திலும் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். இவரது இசையினால் எத்தனையோ நட்சத்திரத் திரைப்படங்கள் பெரும் புகழ் பெற்றன. இவர் பாடும் பொழுது கமக் தான் என்ற தாள அலங்காரங்களுடன் பாடுவது உண்டு. இவரது சீடர்களில் சிலர் இலங்கையிலும் உள்ளனர்.

## ஒஸ்தாத் ஹூஸைன் கான்.

இவர் தான் வாத்தியத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். இவர் தாளம் வாசிக்கும் பொழுது விசேடமான அலங்காரங்களை வாசிப்பதுடன் ஜீம்ரா ஏக்தாள் முதலிய தாளங்களையும் லயவின்னயாசத்துடன் வாசிப்பார்.

மஜீத்கான்.

இவர் பத்கன் சர்வகலாசாலையில் போதனாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். வகுப்பறையில் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது பாங்கோசை கேட்டால் பாடங்களை நிறுத்தி விட்டுத் தொழுகைக்குச் சென்று விடுவார். இலங்கையிலும் இவரது சிஸ்யர்கள் பலர் இருக்கிறார்கள்.

## ஒஸ்தாதர் அலாவுத்தீன் கான்.

இவர் கல்கத்தாவைச் சேர்ந்தவர். அலிஅக்பர் கொலேஜ் என்ற இசைக்கல்லூரியை இவர் நிறுவினார். இலங்கையிலிருந்து இசைக்கல்விக்காக சென்ற லயனல் எதிரிசிங்க என்பவர் , ஒஸ்தாத் அலாவுத்தீன் கான் என்பவரிடம் கல்வி கற்று , பட்டம் பெற்று, சேவைபுரிந்துள்ளார். இவர் 1952 இல் இலங்கையில் முதன் முதலாக ஹேவூட் என்ற பெயரில் நுண்கலைக் கல்லூரி ஒன்றை உருவாக்கினார்.

## பிஸ்மில்லாஹ் கான்.

1965ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலக இசைக் கலைஞர்களுக்கான போட்டியில் கலந்து கொண்ட இவர் செனாய் வாத்தியக் கருவியை இசைத்த போது , அவருக்குரிய நேரம் முடிந்த பிறகும் ஆங்கிலேயர்கள் கரகோஷமிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததோடு மீண்டும் ஒரு முறை அதனை வாசிக்குமாறு கோரினர். இவர் செனாயை வாசிக்கும் போது தாள வாத்தியமாக நாகரா என்ற கருவியைப் பயன்படுத்தினார். சுருதிக்காக செனதாய் கருவியையே உபயோகித்தார். பாரதரட்ணம் என்ற அதியுயர் பட்டத்தை இந்திய அரசாங்கம் அவருக்கு வழங்கி கௌரவித்தது.

## ஸலாமத் அலி – நஸாமத் அலி

இவ்விருவரும் உடன் பிறந்த சகோதரர்கள் இவர்கள் மேற் குறிப்பிட்ட இசை மேதையான ஒஸ்தாத் படேகு லாம் அலிகான் என்பவரின் பேரர்களாவர். இவர்கள் பாகேஸ்வரி இராகம் , பூர்யா தனிரிசி இராகம் முதலான இராகங்களில் மிக இனிமையாகப் பாடுவார்கள்.

## ஒஸ்தாத் அல்லரக்கா என்றழைக்கப்படும் ஒஸ்தாத் அல்அக்ராம்

ஒஸ்தார் அலாவுத்தீன் கானின் சீடரான உலகப் புகழ்பெற்ற சித்தார் வாத்திய மேதையான பண்டிட் ரவிசங்கருக்கு இவர் தாள வாத்தியம் வழங்கி



வருகிறார். இவரது திறமையான வாத்தியத்தை மெச்சி கச்சேரிகள் முடிவுறும் தறுவாயில் ரவிசங்கர் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதுண்டு.

## ஒஸ்தாத் வலாயத் ஹூசைன் கான்.

இவர் 16ம் நூற்றாண்டில் அக்பர் சக்கரவர்த்தியின் அரச சபையில் இருந்த கலைஞர்களுக்குத் தலைவரான தான் சேன் என்பவரது சந்ததியில் வந்தவர். இவர் சித்தார் வாத்தியத்தை மிக வேகமாக வாசிப்பதில் வல்லவர். இலங்கையில் ஹேவூட் நுண்கலைக் கல்லூரியின் போதனாசிரியராக இருந்த சங்கீத விசாரத தயாரத்ன என்பவர் இவரது சீடரவார்.

## ஷேக் சின் மௌலானா

கர்நாடக இசைத்துறையில் நாதஸ்வர வித்துவானாகிய இவரைத் தெரியாவதர்கள் இல்லை எனலாம். நமது நாட்டிலும் பல இசைக் கச்சேரிகளில் கலந்து தனது திறமையை வெளிக்காட்டியுள்ளார்.

## ஏ.டீ. சுல்தான்.

கர்நாடக இசையில் திறமை வாய்ந்த இவர் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் புகழ் பெற்ற ஒரு கலைஞராவார்.

ஹார்மோனிய சக்கரவர்த்தி காதர் பாச்சா ஹார்மோனிய வாத்தியத்தில் அகில இந்தியாவிலும் மிகத்திறமை வாய்ந்தவர். வெள்ளையர் ஆட்சிக்காலதிதில் தூக்கு மேடைவரை சென்ற அவர் தனது திறமையைக் காட்டி விடுதலை பெற்று கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் சிறந்த பாடகராகிய நூர்ஜகான் பேசும் மெல்லிசை ராணி என்றழைக்கப்பட்டார். இன்று உலகப் புகழ் பெற்றுள்ள பாடகி லதா மங்கேஷ்கர் இவரது சீடராவார். அதுபோல் இசையமைப்பாளர் நௌசாத், மறைந்த பாடகர்களான சைகால், அல்ஹாஜ் முஹம்மத் ராஃபி ஆகியோர் ஹிந்தி இசைத்துறையில் தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டவர்களாவர். இன்று பாகிஸ்தானின் பிரபல பாடகராக விளங்கும் மெஹதி ஹஸன் தனது கஸல், கவாலி ஆகிய பாடல்கள் மூலம் ரசிகர்களை மெய்மறக்கச் செய்து விடுவார்.

இந்தியாவில் மட்டுமன்றி மேலைத்தேய கீழைததேய நாடுகளிலும் அந்நாட்டின் மொழி , கலாச்சாரத்திற்கேற்ப இசைவடிவங்களில் சிற் சில மாற்றங்களை அவதானிக்கலாம். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தோனேஷியாவின் மரபு வழி இசை வளர்ச்சியில் முஸ்லிம்களே பெரும்

பங்கு கொண்டுள்ளனர். மலேசியா, சிங்கப்பூர் முதலான தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளிலும் இந்தியாவைத் தழுவிய இசை வடிவங்கைளையும் பாடல் முறைகளையும் வளர்ப்பதில் முஸ்லிம்கள் மிக ஆர்வம் காட்டியுள்ளனர். அது போல், இந்தியாவின் இசை வளர்ச்சியின் தாக்கத்தால் இலங்கையின் இசைத்துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கும் முஸ்லிம்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாயுள்ளது.

1982ம் ஆண்டு இலங்கையில் இருந்த பிரபல நாடகக் கலைஞரான சாள்ஸ் டயஸ் என்பவரின் நாடகங்களுக்கு இசையமைப்பதற்காக இந்தியாவிலிருந்து ஒஸ்தாத் ஸ்த்கான் இங்கு வந்தார். அவர் இசையமைத்த பாடல்களை இன்றும் கேட்கக் கூடியதாய் உள்ளது. அதன் பின்னர் யோன்சில்வா என்ற நாடக ஆசிரியர் தனது நாடகங்களுக்கு இசையமைப்பதற்கென ஒஸ்தாத் அஸீஸ்கான் என்பவரை வரவழைத்தார்.

## மாஸ்டர் கௌஸ்

இந்தியாவின் பிரபல இசையமைப்பாளராக விளங்கிய நௌசாத் என்பவரின் இசைக்குழுவின் அங்கத்தவராக இருந்த மாஸ்டர் கௌஸ் இசைத்தட்டுகளுக்கு இசை வழங்கி உள்ளார். அவர் 'அசோகமாலா' என்ற திரைப்படத்திற்கு இசை அமைத்தார். இவரது மனைவியான குரீத் கௌஸ் உருதுப் பால்கள் பாடியுள்ளார். மாஸ்டர் கௌஸ் இலங்கையின் பல இசைக்கலைஞர்களை உருவாக்கினார். இதே போன்று இலங்கைக்கு வந்து இசைத்துறைக்குப் பெரும் சேவையாற்றிய கலாசூரி அல்ஹாஜ் மொஹிதீன் பேக் அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

மேலும் பிரபல பாடகர்களான ஏ.ஆர். எம். இப்றாஹிம், எஸ். ஏ. லத்தீப்பாய், ஷேக்.ஏ. ஜலால், அஹ்மட் மொஹிதீன், கலாசூரி ஏ.ஜே.கரீம் பிரபல இசையமைப்பாளரான எம்.எச்.எம்.ஸாலி, ரீ.எப்.லதீப், ஸல்தீன் ஆகியோரும் இன்று குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கை முஸ்லிம்களின் அபிமானம் பெற்ற பாடகரான காரைக்கால் தாவூத், இசைமுரசு அல்ஹாஜ் நாகூர் ஈ.எம். ஹனீபா, ஷேக் மஹம்மத், ஷேக்சின்ன மௌலானா, ஏ.டி. சுல்தான், சித்தார் வாத்திய மேதை கலீபல்லாஹ் ஆகியோரின் பங்களிப்பும் இசைத்துறையில் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று இந்தியா மட்டுமல்ல உலகம் முழுவதும் ஏ.ஆர். றகுமானின் இசையினால் மூழ்கிப்போயுள்ளது.



# இஸ்லாமியக் கட்டிடக்கலை

முஸ்லிம் கட்டிடக் கலையின் ஆரம்ப காலத்துப் பாரிய வேலை இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்களது காலத்தில் இடம் பெற்றது. இது புராதன பரிசுத்த ஸ்தலமான கஃபாவைப் புனர் நிர்மாணம் செய்யும் வேலையாகும். அது அபிசீனியத் தச்சனால் , உடைந்த கப்பலொன்றின் பகுதிகளைக் கொண்டு சுதேச பாணியில் கட்டப்பட்டது. அந்நேரத்தில் அரபிகளுக்குக் கட்டிடக்கலை பற்றிக் குறிப்பிடுகின்ற அளவுக்கு எதுவும் தெரியாது. அதன் சுவர்கள் மேரி (மரியம்) ஏசு (ஈசா) இப்றாஹீம், தூதுவர்கள் வானவர்கள் ஆகியவர்களின் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டது. உருவங்களுக்கு எதிரான இஸ்லாமியவெறுப்பு 6ம் நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்டது. இது குர்ஆனில் குறிப்பிடப்படாது ஹதீஸில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் பிரதான கட்டிடக்கலை மாதிரிகள் , பள்ளிவாசல், நினைவுச் சின்னம், கோட்டை , அரண்மனை ஆகியவையாகும். பொதுக் குளியல் அறைகள் , நீர்த்தாரைகள் , ஒருஅளவான வீட்டுக்கலை அலங்காரங்கள் ஆகியன பிரதான மாதிரிகளில் இருந்து பெறப்பட்டவையாகும்.

பள்ளிவாசல் அடிப்படையில் வணக்கத்திற்கான கட்டிடமாகவும் முஸ்லிம்களின் சகோதரத்துவ பிறப்பின் மத்திய நிலையமாகவும் விளங்கியது. அது ஆரம்ப காலத்திலும் பின்னர் இந்தியாவிலும் அமைந்தது போன்று இல்லாமையால் , கூரையிடப்படல் வேண்டுமென்ற அவசியமிருக்கவில்லை. கூரை ஒரு சுவருடன் அல்லது அதிக சுவர்களுடன் பொருத்தப்பட்டது. அல்லது தூண் வரிசைகளிலான கூரையாக அது இருந்தது. இது கட்டிடக்கலை விரிவாக்கமாக அமைந்ததுடன் அனேக இஸ்லாமிய நினைவுச் சின்னங்களின் (உ+ம்:~ தாஜ்மகால்) வடிவமைப்புகள் பிரதான மண்டப நுழைவாயில் மாதிரியிலிருந்து பெறப்பட்டது. மஸ்ஜிதிலுள் மிஃராப் மிம்பர், திரை மறைப்பு குர்ஆன் வைப்பதற்கான பெரிய மேசை வுழூச் செய்வதற்கான நீர்த்தாரை ஆகியவை பிரதான அமசங்களாகும். மிஃராப் கஃபாவின் திசையில் சுவரிலுள்ள மாடக் குழியாகும் (இது முதலில் மதீனாவில் கி.பி. 707 இல் அறிமுகப்படுத்தப்பட்டது) அது அதிகமாக வண்ணக்கரைப் பட்டைகளால் அலங்கரிக்கப்படுகின்றது. மிம்பர் என்பது உணர்த்தப்பட்ட பிரசங்க மேடையாகும்.

அது படிக் கட்டுக்களை கொண்டு மேற்கட்டுடன் ஆனதாக உள்ளது. திரை மறைப்பு மிஃராபைச் சுற்றி உள்ளது. அது சுல்தான் அல்லது கவர்னர் தொழுகையில் ஈடுபடும் பொழுது பாதுகாப்பாக அமைகின்றது. அவரது உத்தியோக வாசஸ் தலம் அதிகமாக மஸ்ஜிதின் சுவரொன்றுடன் இணைக்கப்பட்டுள்ளதாக இருந்தது.

குர்ஆன் மேசை அதிகமாகத் தூண்களின் மேல் எழுப்பபட்ட கல்மேசையாக இருந்தது. நீர்த்தாரை வில்வளைவான மேற் கட்டைக் கொண்டிருக்கும்.

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஆரம்ப பள்ளிவாசல்கள் சுதேசிகளால் கட்டப்பட்டது போன்று , ஆரம்ப காலத்துப் பாரிய பள்ளி வாசல்கள் ஈராக்கிலுள்ள பஸ்ராவிலும் , கூபாவிலும் கட்டப்பட்டன. அவைகள் வில்வளைவில்லாத தூண்களில் எழுப்பப்பட்ட கூரைகளைக் கொண்டிருந்தன.

இது இஸ்லாத்திற்கு முற்பட்ட கட்டிட அமைப்பு முறையிலிருந்து பெறப்பட்டதாகும். எகிப்தில் கி.பி. 673 இல் நான்கு மூலைகளுக்குமான மினாரத்கள் முதல் முறையாக கட்டிடத் தொகுதியுடன் இணைக்கப்பட்டன. இது சிரிய நாட்டு ரோமானியக் கோயிலின் மூலைக் கோபுரங்களின் மாதிரியில் இருந்து பெறப்பட்டதாக இருக்கலாம். இக்கோயில் பின்னர் பள்ளி வாசலாக மாற்றப்பட்டது. வேறு இடங்களில் (உ +ம் :- கைராவான் பள்ளிவாசல்) உயரமான தனி யான மினாரா சுற்றியுள்ள மறைப்பு ஒன்றின் நடுவிலிருந்து கட்டப்பட்டது.

முஸ்லிம் கட்டிடக் கலையின் தற்பொழுதுள்ள ஆரம்ப கால நினைவுச் சின்னம் (கி.பி. 643 இல் ஆரம்பமானது) இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் பல பகுதிகளிலும் இருந்து வந்த கைவினைஞர்களினால் பைத்துல் முகத்தஸிலுள்ள பாறைக்கல் மாடமாகும். இவ்விடத்திலிருந்து தான் இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தைத் தொடங்கிய தாகச் சொல்லப்படுகின்றது. அது பைத்துல் முகத்திஸிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களின் வட்ட வடிவத்தைப் பின்பற்றியதாக உள்ளது. இது வெளிப்புறத்தே உள்ள எண்கோண வடிவிலான மாடியமைப்பும் , பாறையைச் சுற்றித் தாங்கி நிற்கும் உள்ளமைந்த வட்டவடிவமான தூண்வரிசைகளும் , நான்கு பாரந்தாங்கிகளும் 12 தூண்களும் , மேற் கூரையைச் சுற்றிய பகுதிகளில் 16 யன்னல்களும் கொண்டு அமைந்துள்ளது. மாடம் ஆரம்பத்தில் பலகைகளினால் கட்டப்பட்டது.



அது அதன் பரிமாணங்களின் உச்ச அளவு துலக்கத்திற்கும் அதன் அலங்காரச் செழிப்புக்கும் தனிச் சிறப்புப் பெற்றதாகும். ஆரம்பத்தில் இதன் வெளிப்புறம் உட்புறம் போன்று மொசாயிக் அலங்காரங்களினால் அழகூட்டப்பட்டிருந்தது. தூண்களின் தலையுறுப்புகளில் செடி கொடியிலான சுருளொப்பனை அலங்காரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மாபிள் (பளிங்குக் கல்) மேலொட்டு மென்பூச்சுக்கள் செய்யப்பட்டுள்ளன. உட்புறமுள்ள பல வர்ண ஒட்டு அலங்காரங்கள் கேத்திர கணித வடிவங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. அரை வட்ட வில் வளைவுகளின் கட்டு உத்தரங்களின் கீழ், உலோகத் தகடுகளில் புடைபுகழ்வுச் சித்திரங்கள் செதுக்கப் பட்டுள்ளன.இவ்வலங்காரங்களில் பாரசீக , எகிப்திய , சீரியக் கூறுகளைக் காணக் கூடியதாக உள்ளது. பாறையிலுள்ள மாடம் தனிச்சிறப்புக்குரிய தொழுகையிடமாகும். இப்பொழுதுள்ள ஆரம்ப காலத்து கற்பாறைப் பள்ளிவாசல் டமஸ்கஸில் உள்ள நாற்சதுர கருவறை (கி.பி. 707 ஆரம்பமாகியது) வடிவமைப்பை ஒத்தது. அதில் உள்ளது போன்ற வளமிக்க உள் அலங்கார வேலைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இங்கு இஸ்லாமியக் கட்டிடக் கலையின் மகத்தான அலங்காரக் கலை பெருமையைப் பறைசாற்றும். முதல் முறையாக அறியப்பட்ட உதாரணமாக பல்நிறக் கூட்டெருமையான கேத்திர கணித வரைபட அமைப்பில் ஆக்கப்பட்ட கல்லில் துளைக்கப்பமட்ட யன்னல் வலைக்கட்டுகள் விளங்குகின்றன. இது உரோம , பைசாந்திய கருத்தியலின் விரிவாக்கமாகும்.

ஆரம்ப காலத்து சிரிய பாலைவன அரண்மனைகளின் தொகுப்பு மேற்கொண்ட அபிவிருத்திக்கு அத்திவாரமிடுகின்றது. குசையர் அம்றா மிக ஆரம்ப காலத்து (கி.பி. 715) நயம் நிறைந்த கட்டிடத் தொகுப்பாகும். அது தாழ்வாக வெளிநீட்டி நிற்கும் கற்களாலான வில்வளைவுகள் , வளைந்த கூரை , உருளை முக்கோண வடிவிலுள்ள உள்வளை வில்லாத கல்லிலான குவிகால்களையுடைய மாடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அது உருவக அமைப்பிலான சுவரோவியங்களையும் கண்ணாடியிலான பல் நிற மணிகள் பதிக்கப்பட்ட வேலைப்பாடுகளையும் கொண்டுள்ளது. இம் மாதிரியான அரண்மனைகள் பல்வேறு அளவுகளில் சிரியாவில் காணப்படுகின்றன.

அவைகளில் மிகவும் கவர்ச்சியானது மஸ்சட்டா ஆகும். இது மூலைக் கோபுரங்களையும் ஒவ்வொரு பக்கத்திற்கு ஒன்றான ஐந்து அரைவட்டக் கோபுரங்களையும் கொண்ட கட்டிடமாகும். இது பல்வேறு கட்டிடங்களில்

முடிவு பெற்ற ஒரு விசேட மண்டபத்தினைக் கொண்டிருந்தது. இதன் மனதைத் தொடும் அம்சம் செழிப்பான வர்ணக் கூரைப் பட்டைகளைக் கொண்ட மிகவும் நேர்த்தியான புடைப்பு அலங்காரமாகும்.

பக்தாதில் அப்பாஸிய வம்ச ஆட்சியின் கீழ் பிற்காலத்துக் கட்டிடக்கலைக்கான ஆக்கத்திறன் மிக்க மாதிரிகள் தோற்றம்பெற்றன. பக்தாத் ஆரம்பத்தில் அவசர அவசரமாக கட்டப்பட்ட நகரமாகும். கி.பி. 762 இல் ஆயிரக் கணக்கான வேலையாட்களைத் திரட்டி கட்டிட வேலைகள் தொடங்கப்பட்டன. கட்டிடத் திட்ட வரைபடம் நிலத்தில் சாம்பல் கோடுகளினால் கலீபா மன்சூரின் பார்வைக்காக வேண்டி வரையப்பட்டது. அது வட்டவடிவான 2638 மீட்டர் விட்டத்தையும் நாலு வாயில்களையும் கொண்டிருந்தது. அவ்வாயில்களுக்கு அவை இட்டுச் செல்லும் மாகாணங்களின் பெயர்கள் சூட்டப்பட்டன. நாணல் பாய்களினால் பிணைக்கப்பட்ட செங்கற் சுவர்கள் குறைந்தது நாலு வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டது. ஒவ்வொரு கதவுகளும் குனிந்து செல்லும் நுழை வாயில்களைக் கொண்டிருந்தன. அங்கு மினுங்குகின்ற மாடத்தைக் கொண்ட கேட்போர் கூடமொன்று இருந்தது.

இஸ்பஹானும் தொடக்கத்தில் அவ்வாறான வட்ட வடிவத்திட்டத்தில் 3000 மீட்டர் குறுக்கு நெடுக்கான அளவில் அமைக்கப்பட்டது. அதன் மத்தியில் அரண்மனையும் பெரிய பள்ளிவாசலும் அமைந்திருந்தது. அவ்வரண்மனை பாரிய சுரங்கப்பாதை வளைவு மண்டபத்தையும் கொண்டிருந்தது. அரச பெருமையைப் பறைசாற்றும் சாஸ்னியன் கருத்தியலின் செல்வாக்கில் அது கட்டப்பட்டது. இதுவே அப்பாஸியர்கள் பாரிய கேட்போர் கூடத்தையும் பொது அறைகளையும் கட்டக் காரணமாக அமைந்திருக்கக்கூடும்.

அப்பாஸியர்களின் கீழ் மஸ்ஜித்துக்ளின் வடிவங்கள் பெரிதும் வேறுபட்டன. பழைய வில்வளைவில்லாத மாதிரிகள் அடிக்கடி இடம் பெறுவனவாக இருந்தன. மக்காவிலும் வேறு இடங்களிலும் கூரை வில்வளைவு விதானங்களில் அமைக்கப்பட்டது. சில சுஸாவிலுள்ள பாரிய மஸ்ஜித்தைப் போன்று மாடம்
மிஃராப் பகுதியின் மேல் எழுந்து நிற்க வளைந்த கூரைகளில் அமைக்கப்பட்டன. பெரிய அமைப்பிலான சம்மா பள்ளிவாசலின் செங்கற்களினாலான வெளிப்புறச் சுவர்களில் அரைவட்டக் கோபுரங்கள் நகரின் காப்பு அரண் போன்ற உருவஅமைப்பில் எழுப்பப்பட்டுள்ளன. (கி.பி. 842) புடைப்பு இங்கு காணப்படும் ஒருவகை சந்திலான புடைப்பு அலங்காரம் மிகவும் பிரசித்தமானது.



சில மஸ்செட்டாவிலிருந்து பெறப்பட்டது போன்ற பாணியமைப்பில் மலர்களின் சுருள் மோதிகைகள் நிறைந்த ரோசாப் பூவணி முற்சதுர அலங்காரங்களை கொண்டுள்ளன. சில, ஆக்கிமோனிய காலத்து அம்சங்களைப் (ரோசாப்பூவணியுடனான படிப்படியான இடைவெளிகள் விட்டு அமைக்கப்பட்ட அரண் மதில்கள் ) பிரதிபலிக்கின்றன.

அப்பாஸிய கலீபாக்களினது ஆட்சியில் 8ம் , 9ம் நூற்றாண்டில் விசேடமான முக்கிய விருத்தி செங்கோணத்தில் அணிஅணியாக வில்வளைவு விதானங்களுடன் மிஃராபு அமைந்துள்ள சுவருடன் அமைத்தலின் தோற்றம் ஆகும். இதனால் கருவறைப் பிரகாரம் ஏற்படலாயிற்று. அதற்குச் சிறந்த உதாரணம் பைத்துல் முகத்தஸில் உள்ள அல்அக்சா பள்ளிவாசலாகும். (கி.பி. 760) இதை மேற்கில் இபின் துலூம் (கெய்ரோ) பள்ளி வாசலிலும் ஹைரவான் (தியூனிஸ்) , கர்டோவா மஸ்ஜித்களில் அடையாளங்களைக் காணக் கூடியதாக உள்ளது. ஹைரவாணிலுள்ள சதுரவடிவ மினாரத் , கொர்டாவுக்குச் சென்று அது மேற்கத்திய இஸ்லாத்தின் கட்டிடக் கலைப்பாணியாக மாறியது.

ஹைதரவானில் உள்ள பெரிய பள்ளிவாசல் (கி.பி. 670 தொடங்கியது) வரலாற்றில் ஆரம்ப காலத்துக் கட்டிடமாகும். அதன் வெளிப்புறச் சுவர்கள் அனைத்தும் சாந்து பூசப்பட்ட செவ்வக வடிவில் அமைந்துள்ளன. அதன் வெளி உறுப்புகள் பாரிய பரிமாணங்கள் கொண்டுள்ளன. சதுர வடிவில் அமைந்த மினாராவும் பாரிய பரிமாணத்தைக் கொண்டுள்ளது. தொழுகைக்கு உரிய இடம் 16 ஊடு பாதைகளைக் கொண்டு கட்டிடப் படத்தின் அரைப் பங்கைப் பிடித்துள்ளது. வழிபாட்டிடத்தின் கூரையைத் தாங்கி நிற்கும் தூண் வரிசைகள் நேர்த்தியான நுண்மையான பரிமாணங்களில் பழம் பெரும் வேலைப்பாடுகளுடன் உருளை வடிவில் அமைந்துள்ளன. வில் வளைவுகள் குதிரை இலாட வடிவில் உள்ளன. இவை இப்பிரதேசத்திற்குரியவை ஆகும். இவை தூண்களின் தலைப்புகளில் உள்ள பொறிப்புக் கட்டைகளில் பொருத்தகப்பட்டுள்ளன. இஸ்லாமிய ஆரம்பகாலத்து சற்று நேர்த்தி குறைந்த மெருகூட்டப்பட்ட பீங்கான் ஓடுகள் சந்தேகமின்றி பாரசீகத்திலிருந்து இறக்குமதியானவை. இவை மிஃராபைச் சுற்றி உள்ள சுவர்களில் பதிக்கப்பட்டுள்ளன. வாசல் புறத்தின் இருமருங்கிலும் காதேஸிலிருந்து பெறப்பட்ட சிவந்த மஞ்சல் நிறப் பாறையினால் இரு தூண்கள் உள்ளன.

ஹைதரவான் பள்ளி வாசல் கட்டப்பட்டதன் பின்பு கட்டப்பட்ட பள்ளி வாசல்கள் , அப்பள்ளியை ஒத்த தூண்வரிசைகளைக் கொண்டிருந்த போதும் அவை அதற்கு நிகரானவையாகக் கருதமுடியாது. உதாரணமாக 9ம் நூற்றாண்டின் கட்டப்பட்ட சபக்ஸ் மஸ்ஜித் அல்ஜியர்ஸ் பெரிய பள்ளிவாசல் (1018) தெலெம்ஸென் (1240) பள்ளிவாசல் ஆகியவற்றைக் கூறலாம். ஆயினும் கடைசி இரண்டு இடங்களிலும் முஸ்லிம்களின் அற்புதமான கண்டுபிடிப்புகளான நுண்கலைமிக்க தொங்கூசிப் பாறை அலங்காரமும் , குதிரை இலாட வடிவில் அமைந்த ஆழமான ஒரே சீரான வரிசையில் வளைவு (ARCH) அலங்காரமும் காணப்படுகின்றன. தெலெம்ஸென் பள்ளி வாசலில் இரண்டு மாதிரியான வளைவுகள் மிஃராபுடைய மேற்புறத்தோடு இணைந்ததாக மிக்க கவர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ள தெலெம்ஸென் பள்ளி வாசலிலும், சிதிபௌமதீனா போன்ற கவானின் குதிர லாட வடிவிற்கு அச்சு வார்ப்பு முறையிலான அடைப்புக்கலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரண்டும் குதிரை லாட வடிவுடன் சம்மட்டமான அமைப்பினால் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டும் சம்மட்டமான செவ்வக அலங்கார வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. திறந்த வெளியை விட வழிபாட்டிடமும் மடமும் பெரிய இடப்பிரச்சினைகளைக் கொண்டிருப்பதனால் மேற்குலகப் பள்ளிவாசல்களில் தூண்வரிசைகள் மிகப் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன.

உதாரணமாக தெலெம்ஸென் பள்ளிவாசலில், முழு இடப்பரப்பிலும் காற்பங்குக்கு குறைவான இடத்தையே முற்றம் பிடித்துள்ளது. முற்றம் தவிர்ந்த ஏனையவை வில் வளைவு விதானங்களுக்கு மேலாக உள்ள சமாந்தரமான தூண்களின் மேற்பரப்பு தட்டையான பலகையினால் மூடப்பட்டுள்ளன. புறமுனைப்புக் கோணங்களில் புதிதாக கும் மட்டங்கள் (DOMES) கூரையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு மிஃராப்,நுழைவாயில் மற்றும் சில இடங்களிலும் இடைவெளியாய் உள்ள பகுதிகளை மூடுவதற்கு கும்மட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. வடஆபிரிக்கக் கட்டிடக் கலையில் கதவு நிலைப் பொருத்துக்கு மேலே அமைந்துள்ள முனைப்பான கூரை ஒரு சிறப்பம்சமாகும். இது ஸ்பெயினிலிருந்து பெறப்பட்ட கட்டிடக் கலையாகும். அதன் கீழ்ப்புறப்பகுதியில்அலங்கார வேலைகள் செய்யப்பட்டள்ளன. (உ +ம்:- சிதி பௌ மதீனா, 13ம் நூற்றாண்டு) இவ்வடிவம் இன்றும் நவீன முறையில் வீடுகளுக்கு அமைக்கப்படுகின்றது. (உ+ம்:- கஸ்பாஹ், அல்ஜியர்ஸ்)



முதல் தரமான சமய சார்பற்ற மத்திய காலக் கட்டிடங்கள் பல வட ஆபிரிக்காவில் உள்ளன. அவைகளில் , சாந்து பூசிய செவ்வகக் கோபுரங்களைக் கொண்ட பிரமாண்டமான மர்ரகேச் சுவர்கள் தியூசினியா நாட்டின் தெர்போர்பா பகுதியிலுள்ள அணைக்கட்டு , மொரோக்கோ நாட்டிலுள்ள மெஹிடியா என்ற இடத்திலுள்ள காவல் அரண் கதவு , செல்லாவிலுள்ள என்ற இடத்திலுள்ள நுண் கலையம்சம் கொண்ட கதவு ஆகியவை அடங்கும். பின்னையத்தின் சம்மட்டமான எண்கோண வெளிப் புடைப்புப் பகுதியை யொட்டியுள்ள கோபுரங்கள் முனைப்பான கூம்புகளில் கீழ் நோக்கித் தாங்கும் தொங்கூசி , மாடக் குழிகளைக் கொண்ட உச்சியைத் தாங்கி நிற்கின்றன.

ஸ்பெயினில் அரேபியர் தமது தேவையைப் பொறுத்து அழிந்து போக எஞ்சிய தொழில் நுட்பத்தையும் விஸிகோத்திய கட்டக்கலை அம்சங்களை மட்டுமன்றி அவர்களது தொழில் நுட்பத்தையும் அராபியர்களால் உபயோகிக்கக் கூடியதாக இருந்தது.

தற்பொழுது அக்காலப் பகுதியின் மிகப் பழைய நினைவுச் சின்னமாக கொர்டோவாவில் கட்டப்பட்ட பள்ளி வாசல் உள்ளது, (கி.பி. 786 இல் கட்டப்பட்டது) இது விஸிகோதிக் கலையின் உண்மையான சிதறல்களையும் தொழில் நுட்பங்களையும் நினைவூட்டுவதாக உள்ளது. இங்கு காணப்படும் வில் வளைவு விதானங்கள் ஹைதரவான் , ஸ்பெக்ஸ் கட்டிடங்களில் காணப்படும் வர்ணங்களை ஒத்துள்ளன. அவற்றினது கற்பதிப்பு வேலைப்பாடுகள் இரண்டு வண்ணங்களைக் கொண்டுள்ளது. உரோமை நினைவு படுத்தும் காட்சியான தொழில் நுட்ப வளம் ஒன்றுள்ளது. (உ+ம் மெரிடாவிலுள்ள கால்வாய்) அது மிகவும் பரவலான தட்டையான கூரை யைத் தேவையான உயரத்திற்கு அமைக்கக் கையாளப்பட்டது. வில் வளைவு விதானங்கள் இரட்டிப்பாக்கப்பட்டன. முதலாவது விதானத்தின் மேல் இரண்டாவது விதானம் தெளிவாக அமைக்கப்பட்டது. மிஃராப் கூடம் மாத்திரம் குதிரை லாட வில்வளைவுக் கவான்கள் குறுக்கு வெட்டாக வர, எண்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டது. மிஃராபுக்கு மேலாக உள்ள மூடிய கட்டமைப்பு அவதானத்திற்குரியதாகும்.

அதன் தூண்வரிசைகள் இரட்டிப்பாக்கப்பட்டிருப்பது மாத்திர மில்லாமல், கீழேயுள்ள வில் வளைவுக் கவான்கள் பல்லுப் பல்லுப் போன்ற வடிவில் அமைந்துள்ளன. வில்விதானத்திற்கு இடையிலுள்ள வெளிகள் பல்லு

பல்லுப் போன்ற அரைவில் வளைவுக் கவான்களைக் கொண்டுள்ளன. அலங்காரங்கள் நிறையவுள்ளனவாக உள்ளன. மொட்டையான வில் விதானங்கள் சில இடையீட்டு இணைப்புக்களையும், சில பல்லுப் பல்லுபீ போன்ற கவான்களையும் சில வடிவியல் தட்டுக்களையும் கொண்டுள்ளன. சில இடங்கள் புதிய கண்டுபிடிப்பான எழில் மிகு பூ அலங்கார யன்னல்களையும், மீள மீள வளர்க்கும் கட்டிடக் கலை நுட்பத்தையும் கொண்டுள்ளன. செவியிலே உள்ள அல் ஹஸர் ஆரம்பத்தில் உமையாப்படைத் தளபதியின் மாளிகையாக இருந்தது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அது உச்ச மெரு கூட்டலைப் பெற்றது. ஆயினும் திரும்பத் திரும்பச் சீர் செய்யப்பட்டது. வெறுமையான குதிரை லாட வடிவங்களை வட ஆபிரிக்க பண்டைய கலை அம்சங்களைக் கொண்ட தூண்கள் தாங்கியுள்ளன. உட்பகுதியிலுள்ள கூரை ஓடுகள் விதவிதமான பல வண்ணக் கலை அம்சங்களைக் கொண்டதாக உள்ளன. பழைய செதுக்கு சித்திர வேலைக்குரிய சிற்ப ஒப்பனைக்குரிய , அரைச் சாந்துவின் சில சிதறல்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. வெளிப்புறங்கள் தொங்கூசி அலங்காரங்களுடன் உயர்ந்த முனைப்பான புகுமுக மண்டபங்களுடன் காட்சி தருகின்றன.

கிரனடாவிலுள்ள அல்ஹம்ராம் , ஆட்சியாளர்களின் மாளிகை என்பன, ஸ்பெயினில் முஸ்லிம் கட்டிடக் கலையின் சிறந்த எடுத்துக் காட்டாகும். வெளிப்புறத்திலிருந்து அதைப் பார்க்கும் பொழுது ஒரு கம்பீரமான கோட்டையைப் போன்று காட்சியளிக்கும் அக்கட்டிடம் , உட்புறத்தில் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்ட பூங்காக்கள் மறைப்பிட மண்டபங்கள் , ஆடம்பரமான அறைகள் , பள்ளி வாசல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. மாளிகையின் உட்புறம் முழுவதும் பல வர்ணப் பூச்சுக்களினால் அலங்கரிக்கப்பட்டு , பிரகாசமான ஓடுகள் நீட்டு வரிசைகளில் பதிக்கப்பட்டுள்ளன. சுவர்கள் களிமண் கட்டியினாலும் சுட்ட செங்கட்டிகளினாலும் எழுப்பப்பட்டு பாதுகாப்பான பூச்சுகளினால் மூடப்பட்ட பலகைகளினால் கூரை அமைக்கப்பட்டுள்ளதால் கட்டிடங்கள் பாரமற்றவையாகக் காணப்படுகின்றன. வளைவு விதானங்கள் பல்வேறு வில் வளைவுப் பாணியினைக் கொண்டுள்ளன. சில குதிரை இலாட அமைப்பிலும் சில உயரமான சற்றுக் கூர்மையான வட்ட அமைப்பிலும் உள்ளன. அவற்றில் அனேகமானவற்றில் பெரும்பாலும் ஒரே சீரான முக்கோண வடிவிலான கூரிய முனைகளைக் கொண்ட வில் வளைவுக் கவான்கள்



அற்புதமான தொங்கூசிப் பாறையை ஒத்த அழகுமிக்க பூச்சு வேலைப்பாடுகளுடன் காணப்படுவது ஒரு விசேட அம்சமாகும். அவைகளின் மேல் மூலைகள் உத்தரங்களின் பொருத்துக் கட்டை போன்று மேற்பரப்பில் அலங்காரப் பொருளினால் கடினமாக மேற் பூச்சு பூசப்பட்டுள்ளது. சில மட்டமான அலங்காரப் பூச்சு வேலைப்பாடுகள் புதிய கண்டு பிடிப்பு என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. ஒரு தனிஅலங்கார அமைப்பு நூற்றுக் கணக்கில் திரும்பத்திரும்ப மீட்டப்பட்டுள்ள ஒரு முறையே பெரும்பாலும் கையாளப்பட்டுள்ளது.

ஸ்பானிய மரபு முறைகள் வட ஆபிரிக்காவில், குறிப்பாக மொரொக்கோவில் நீடித்தன. டியுனீசிவுள்ள சுல்தானின்மாளிகை போன்ற கட்டிடங்கள் ஸ்பானிய அராபிய மூலம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டில் இப்பாரம்பரியம் உயிர்த்துடிப்புடன் இருந்தது. ஆயினும் அலங்காரப் பாணி நெகிழ்வு அற்ற தன்மையைப் பெற்று கேத்திர கணித வடிவமைப்பின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. சிறப்புமிகு கட்டிடங்களாக , தியூனிஜிலுள்ள ஹீசைனுடைய அரண்மனை , பெஸ்சில் உள்ள அர்ஸாத்~பென்~அப்த்~அஹத்அரண்மனை, தனிப்பட்டவர்களின் பெருந்தொகையான பாரியவீடுகள் ஆகியவை அடங்கும். இப்பிற்பட்ட காலத்துக் கட்டிடங்களிலும் வில் வளைவு விதானங்களின் கவர்ச்சியூட்டும் புராதன தூண்கள் உள்ளதைக் காணலாம். பைசாந்திய அல்லது வெவ்வியல் கட்டிடக் கலைப்பாணி போட்டியிடுவதை இத் தூண்கள் வெளிக் காட்டி நிற்கின்றன. உதாரணம் ஆரம்ப கால பள்ளிவாயில்களாக கீழ்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

01. குத்ஸ் பிரதேசத்தில் அமைந்துள்ள குப்பதுஸ்ஸஹ்ரா
02. திமிச்சில் உள்ள மஸ்ஜித் உமர்
03. கைரவான் பட்டணத்திலுள்ள ஜாமிஉல் கைரவான்
04. உக்பா பின் நாபித்
05. எகிப்திலுள்ள ஜாமிஉல் புஸ்தாத்
06. ஜாமி உத் மிச்சு
07. ஜாமிஉ அம்ரிப்னு ஆஸ்
08. டியுன்ஸிலுள்ள ஜாமிஉ ஸைதூஜியா
09. ஐரோப்பாவிலுள்ள குர்தபா மஸ்ஜித்
10. எகிப்தில் உள்ள இப்னு தூலான் மஸ்ஜித்
11. பாதிமீக்களால் கட்டப்பட்ட ஜாமிஉல் அஸ்உஹர்
12. மஸ்ஜிதுல் லாஹிர் பீ பரஸ்
13. மஸ்ஜித் அல்மன்ஸூர் கலாவூன்
14. மஸ்ஜித் அஸ்ஸூல்தான் ஹஸன்

# அழகிய இஸ்லாமும் அழகியற் கலைகளும்

மனித இனம் உட்பட இறைபடைப்புக்கள் யாவும் இயற்கை அழகைக்கண்டு மனமகிழ்கின்றன. இதயத்தைக் கொள்ளை கொள்கின்றன. ஆனந்தப் பரவசமடைகின்றன. இந்த வகையில் மனிதன் இன்சுவை , நறுமணம், அழகு என்பவற்றினால் ஆட்கொள்ளப்படுவதற்கு மனித இனத்தின் உள்ளார்ந்த உணர்வு அலைகளே காரணம். தன்னுள் பொதிந்து காணப்படும் உணர்வலைகளை வெளிப்படுத்துவதால் தான் கலையம்சங்களாக அவை பரிணாமமடைகின்றன. இக்கலையம்சங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் அவன் அறியத்தவறவில்லை. இவ்வாறான உணர்வு அம்சங்களில் அழகுணர்வு மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்று எனலாம். அழகுணர்வின் தனிச்சிறப்பின் வெளிப்பாடே அழகியற் கலைகளாக , சுடர்விட்டுப் பரம்பலடையலாயிற்று. எனவே அழகியற் கலை என்பதை தொகுத்து நோக்கினால் அழகுணர்வலைகளை கட்டியெழுப்புவதை குறிக்கோளாகக் கொண்டது எனலாம்.

### அ. இஸ்லாத்தின் அழகியற் கோட்பாடு

இஸ்லாத்தின், கொள்கையின் ஆணிவேர் ஏகத்துவமாகும். இவ்வடிப் படைத்தத்துவம் நம்பிக்கையை மட்டும் சார்ந்து நிற்கவில்லை. அது நம்பிக்கையாகப் பரிணமிக்கும் அதே வேளையில் வாழ்க்கைக்கான வழிமுறைகளையும், உயரிய சிந்தனைகளைத் தூண்டும் மார்க்கமாகவும் , உண்மை மதிப்பையும் , விமர்சனத்தையும், அறிவதற்கான வழி முறையாகவும் திகழ்கின்றது.

கலைகளைப் பொறுத்தமட்டில் அல்லாஹ் தான் படைப்பாளி என்ற உண்மையை ஏகத்துவம் எடுத்தியம்புகின்றது. அல்லாஹ்வையன்றி எந்தப் பொருளையும் படைக்க முடியாது. அவனே படைக்கின்றான். அழகையும் அழகான படைப்பினங்களையும் எல்லாவற்றையும் அல்லாஹ் தான் படைக்கிறான். அல்லாஹ் அழகானவன். அவன் அழகை விரும்புகிறான். அழகானவற்றை உருவாக்குவதில் அவனே மூல கர்த்தா, அவனே அவற்றின் தோற்றுவாய் , சகல படைப்பினங்களும் படைத்த இறைவன் கட்டளைப்படி இயங்குகின்றன. இக்கருத்துக்களின் அடிப்படையில் அழகானவற்றை மனிதன் படைக்கவில்லை மாறாக இறைவனே படைக்கின்றான். என்று இயற்கை மதம் இஸ்லாம் போதிக்கின்றது. இக்கருத்தை ஆழமாக சிந்தனை செய்தால் கலைஞர்கள் இறைவனால் படைக்கப்பட்டவற்றின் அழகை வெளிக்கொணரவும் வெளிப்படுத்திக் காட்சிப்படுத்தவும் மாத்திரமே செய்கின்றனர். அழகின் முற்று முழுப்படைப்பும் அல்லாஹ்வை மாத்திரமே சாரும். ஆகவே கலைஞன் செய்வது தெய்வீக சேவையும் , கிரியையுமன்றி வேறில்லை.



ஆரம்ப கால அரேபியா பக்கம் கவனம் செலுத்தினால் இஸ்லாமியருக்கு இஸ்லாம் மனித உயர்வுகளுக்கு மதிப்பளிக்கும் அதே வேளை இறைவனை நிந்தனை செய்வதையும் தடை செய்துள்ளது. பிறசமயத்தவர்களின் கடவுளை நிந்தனை செய்வதையும் பழித்துரைப்பதையும் இஸ்லாம் மிக வன்மையாக தடை செய்துள்ளதைக் காணலாம். ஆரம்ப காலக் கவின்கலைகள் மூட நம்பிக்கைகளுக்கும் மௌடீகக் கொள்கைகளுக்கும் அடிபணிந்து காணப்பட்டதுடன் இரண்டறக் கலந்திருந்தது இவற்றிற்கு அரேபிய நாடுகள் சிறப்பான உதாரணங்களாகும். புனித கஃபா ஆலயத்தில் நிர்வாணப்படங்கள் வரையப்பட்டிருந்தன. நாளுக்கு ஒரு சிற்பங்களை வாங்கும் மக்களும் அங்கு காணப்பட்டனர். இவற்றையெல்லாம் இஸ்லாம் முற்றாக தகர்த்தெறிந்து தடை செய்துள்ளது.

(எனவே இஸ்லாம் மனிதனை சித்திரமாக வடிப்பதற்கும் சிலையாக செதுக்குவதற்கும் ஊக்கமளிக்காமையினால் முஸ்லிம்களிடையே ஒரு சாரார் கருத்துப் பொருட்களின் (ABSTRACTARTS) வடிவங்களில் ஈடுபடலாயினர். சிற்பக்கலை காரணமாக இறைவனுக்கு இணையாக்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதால் இஸ்லாம் முற்றாகத் தடை செய்துள்ளது. ஆனால் நடைமுறையில் சிற்பக் கலை ஓவியம் , இசைக்கலை போன்றவற்றில் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் செயற்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.)

### சித்திரக் கலை

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்திலோ குலபா உர்ராஷிதீன்கள் காலத்திலோ ஓவியக்கலை விருத்தியடையவில்லை. உமையா ஆட்சியிலே இஸ்லாமிய ஆட்சியின் பரம்பல் விரிவடைந்து கொண்டே போன பொழுது , பிறசமயத்தவர்கள் இஸ்லாத்தின் பக்கம் இணைந்தனர். இன்னும் சிலர் இஸ்லாமிய ஆட்சியின் குடையின் கீழ் வாழ்ந்தனர்.

எனவே பிறசமயத்தவர்களின் காலாச்சாரப் பண்பாட்டு தாக்கங்களினால் முஸ்லிம்களும் இத்துறையில் ஈடுபாடு கொண்டிருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தேவாலயங்கள் , மண்டபங்கள் , மக்கள் அன்றாடம் பாவித்த பொருட்கள் இத்தகைய கலை வடிவங்களை காவி வந்தனர். பொதுவாக அன்றாடம் காணப்பட்ட சித்திரங்களை இரண்டு முக்கிய வகையாகப் பிரிக்க முடியும்.

1. சுவர் ஓவியங்கள் / சித்திரங்கள்
2. ஏட்டு வர்ண ஓவியங்கள்

சுவர் ஓவியங்கள் கட்டிட அமைப்புகளுடன் காணப்பட்டது. பல வர்ண நிறங்களினால் கீறப்பட்ட அல்லது எழுதப்பட்ட அலங்காரங்களை இது குறித்து நிற்கின்றது. பொதுவாக சுவரோவியங்கள் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. அந்தப்புர கன்னியர் கவரும் ஓவியங்கள் , வேட்டைக் காட்சிகள் , அரசர்கள் கவரும் பிறஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. இக்கலையானது பாரசீக பிரதேசங்களில் பிரபல்யம் பெற்றிருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## உமையா ஆட்சியிலே ஓவிய வளர்ச்சி

இஸ்லாமிய உலகு விரிவடைந்த காலப்பகுதியில் இக்கலை அக்கால சித்திரக்கலை வல்லுனர்களால் வளர்க்கப்பட்டது. ஆகவே அக்கால சுவரோவிய அமைப்புகள் யாவும் பாரசீக முறையை பின்பற்றியே முஸ்லிம்கள் வரையலாயினர்.

இரண்டாவது வகையான ஏட்டுவர்ண ஓவியங்கள் வர்ணங்களை பயன்படுத்தி நூற்கள் , ஏடுகள், ஓலைகள் , தோல்கள் போன்ற பல்வகைப் பொருட்களில் வரையப்பட்ட எழுத்தோவியங்கள் , மற்றும் அலங்கார வகைகளை குறிக்கும் ஈமான் கொண்ட அனேக இஸ்லாமியர் இம்முறையைப் பின்பற்றியே தமது உணர்வலைகளை வெளிப்படுத்தினர். இஸ்லாமிய தேசமெங்கும் ஓவியக்கலைஞர்கள் காணப்பட்டனர்.

உமையா ஆட்சியில் வட ஆபிரிக்கா , தென் ஐரோப்பிய மத்திய ஆசிய நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டன. அங்குள்ள செல்வாக்குமிக்க தேசங்கள் முஸ்லிம்களின் ஆட்சியின் நிழலில் தஞ்சமடைந்தன. அங்கிருந்து இஸ்லாத்தைத் தழுவியோர், மற்றும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்தோர்



சித்திரக்கலையை தம்முடன் கொண்டுவரலாயினர். சித்திரக்கலைஞர்கள் பலரும் இப்பிரதேசங்களில் காணப்பட்டனர்.

எனவே இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தில் அதாவது உமையா ஆட்சியில் இவர்களுக்கு தகுந்த மரியாதை அளிக்கப்பட்டது. இதனால் சித்திரக்கலை மிக வேகமாக பரவும் சூழ்நிலை தோன்றியது. உமையா ஆட்சிப் பரம்பலிலே அரசும், சமயமும் வெவ்வேறு திசைகளை நோக்கி நகர்ந்தபடியால் இக்கலை வளர்ந்தது. அக்கால மன்னர்கள் இஸ்லாமிய சட்டவரம்பை கடந்து சென்ற படியால் இக்கலை தோற்றம் பெற்றது என ஒரு சிலர் வாதிடுகின்றனர். மஸ்ஜித்துக்கள் தவிர்ந்த ஏனைய அரச கட்டடங்களில் மாளிகைகள் போன்றவற்றில் இஸ்லாம் வெறுத்தொதுக்கிய ஓவியங்கள் சிற்பங்கள் சிறப்படையலாயின. சித்திரக் கலைஞர்கள் இக்காலப் பகுதியில் பிரபல்யம் அடைந்தனர். காரணம் இக்கால கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். பெருமை அடைந்த இக்கலைஞர்கள் கலீபாக்களை கவர பல்வேறு ஓவியங்கள் பலதும் வரைவதில் அவர்கள் கூடிய கவனம் செலுத்தினர். இக்கலையானது இஸ்லாத்தின் தூய்மையை கெடுக்கலாயிற்று. இப்பிழையான போக்கை அக்கால இஸ்லாமிய அறிஞர்கள் மிக வன்மையாக எச்சரித்ததுடன் இதிலிருந்தும் மக்களைப் பாதுகாக்க பல திட்டங்களைச் செயற்படுத்தினர். இவ்வோவியங்கள் உமையா ஆட்சியின் மாளிகையான கர்பி (HARBY) அல்உம்ராத் (AL - UMMARATH) எனப்படும் இருமாளிகைகள் காணப்பட்டதை உதாரணமாகக கொள்ள முடியும். மேலும் மனிதன், விலங்குகள், பறவைகள் , தாவரங்கள் போன்ற பல அம்சங்கள் உள்ளடங்கிய ஓவியங்கள் அம்மாளிகைச் சுவர்களில் பொறிக்கப்பட்டன.

குளியல் அறைகளில் (Bath Room) பாலியல் முறைகளைத் தூண்டும் அரைகுறையாகப் பெண்கள் நடனமாடும் காட்சிகள் , ஆண்கள் வேட்டையாடும் காட்சிகள், அன்றாட வாழ்வையொட்டிய ஓவியங்கள் என்பன காணப்பட்டன. வரவேற்பு மண்டபங்கள் , வீடுகள் , அரச இருப்பிடங்களில் பூவேலைப்பாடுகளும் பொருத்தம் இயற்கை காட்சிகளை கொண்ட சித்திரங்கள் வரையப்பட்டன. பெரும்பாலும் பாரசீக மக்கள் கையாண்ட முறைகள் இக்கலை வளர்ச்சிக்கு உதவின. (பாரசீக ஓவியர்கள் 10ம் , 11ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த நிஷாப்பூர் மண்டபங்களிற் பொறிக்கப்பட்ட சில உருவங்கள் சசேனியத் தன்மையைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

மேலும் 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்த (1258) மங்கோலியப் போரில் சேதமாக்கப்பட்டன)

உமையா ஆட்சியில் பாரசீகம் தவிர்ந்த ஏனைய நாட்டு ஓவியக்கலையும் காணப்பட்டது. உரோமானியர்க் கலையம்சம் மேற்குலகு நடைமுறை தழுவியதாகும். ஒரு துணியில் பழங்களை ஏந்திய வண்ணம் கழுத்தை ஒரு பாம்பு சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதை அடையாளமாகக் கொண்ட பூமிப் பெண் தெய்வத்தின் (Earth Goddess) உருவப்படமும், மத்தியிலுள்ள இக்கலைப்படைப்பை சூழத்திராட்சைக் கொடிச் சுருளும் (குதிரை உடலுடனும் கழுத்திலிருந்து மனித உடலும் கையுமாக அமைந்த) கலப்பினப் பிறவிகளும் (இது புராதன கிரேக்க உருவம்) காணப்படுகின்றன. இந்த ஓவியம் மங்கலான பச்சை , இளம் தவிட்டு நிறம் மஞ்சட்பழுப்பு நிறம் , சிவப்பு ஆகியவற்றோடு கறுப்பு வெள்ளை நிறங்களும் கலந்ததாக இருக்கின்றது. இவ்வோவியங்கள் சிரியா பாலைவனத்தில் அமைந்துள்ள கஸ்ருஸ் ஹைறா (Kasral gHayr) மாளிகையில் காணப்படும் ஓவியம் ஆகும். மேலும் அரசர்கள் தமது உள்ளார்ந்த உணர்வு அலைகளின் வெளிப்பாடுகளை ஓவியங்களாக வரைய கலைஞர்களைப் பணித்தனர்.

## அப்பாஸியாக்கால – அழகியற்கலை

அழகியற் கலையிலும், அறிவியற் கலையிலும் வல்லரசாக பரிணமித்த வல்லவர்கள் அப்பாஸியரே! இவர்கள் முற்போக்கு சிந்தனைவாதிகள். நுண்ணறிவு, தேடல் , ஊக்கம் , பிரித்தாளும் ஆற்றல் பலவும் பொருந்தியவர்கள் இவர்களின் ஆட்சிப்பீடம் பக்தாத்தை மையமாகக் கொண்டபடியால் பாரசீக செல்வாக்கே மிகைத்துக் காணப்பட்டது. வரலாற்று ஆசிரியரான மக்தஸி அவர்கள் குறிப்பிடுகையில் ஈரான் , ஈராக்கைச் சேர்ந்த ஓவியக்கலைஞர்கள் போட்டி போட்டு சித்திரக்கலையை வளர்த்தனர் என்றார். மேலும் சித்திரக் கலைப் போட்டி பக்தாத் நகரிலே நடாத்தப்பட்டதெனவும் அங்கு பல்வேறு சித்திரக் கலைஞர்கள் கலந்து சிறப்பித்தனர் எனவும் குறிப்பிடுகின்றார்.

அப்பாஸிய மன்னர்களான மன்ஸூர் , அமீன் ஆகிய இருவரும் தமது உணர்வலைகளுக்கு உகந்த மாளிகைகளை உல்லாசப் படகுகள் போன்று வடிவமைத்தனர். ஸ்மர்ரா மாளிகையைக் கட்டிய மாமன்னர் முஃதஸிம் (கி.பி. 836) வேட்டைக் காட்சிகள் , பெண்நிர்வாணப் படங்கள் , விலங்குகள் , தாவரங்கள், பறவைகள் கொண்ட சுவரோவியங்கள் கொண்டு மாளிகையை அழகாக்கினார். இதே மாளிகையை இன்னொரு கலிபா (மன்னர் முத்த வக்கில் 2940, 000 00 திர்ஹம்கள் அப்போது (ஓவியங்களுக்காக) செலவு செய்தார். இவர்கள் அயல் நாட்டு பிற இனத்தவர்களைப் பயன்படுத்தினார்கள். எனவே சித்திரக் கலைவளர்வதற்கு பிற சமயத்தவர்களும் பங்கு கொண்டார்கள். ஸமர்ரா மாளிகை ஓவியங்கள் மேலைத்தேய , கீழைத்தேய மரபு பாணியில் உருவாக்கப்பட்டதாகும். இதன் சிறப்பு யாதெனில் முகவடிவ மாதிரியின் வெளிப்பாடாகும். இது உமையாக்காலத்தில் ஆரம்பமானாலும் இப்போதுதான் அழகான முனைப்பான தோற்றப் பாங்கை பெறுகின்றது.



இவை மனித உருவங்களைப் பிரதிபலிப்பதுடன் கோட்டுவடிவ ஓவியமாகும். ஈரானின் மிகச் சிறந்த ஓவியரான கமாலுத்தீன் பிஹ்ஜாத் முதன்மையானவர். இவர் 15ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உதயமானார். இவர் வரைந்த நிஷ்மியின் வீர காவியம் சிறப்பானதாகும். இவரது மாணவர் மிராக் இஸ்ஹானைச் சேர்ந்தவர். ஹேரத்தின் கட்டிடங்களை அழகுபடுத்தினார். அத்துடன் நிஸாமியின் குஷ்ரு ~ ஷீரீன் எனும் காதல் ஓவியங்களை வரைந்தார். மிடுக்கான தோற்றமுடைய இவரது ஓவியங்கள் பிரபல்யமானது.

(காஜிமலி ~ சிற்றோவியங்கள்; முஹம்மத் ~ வெளிப்புக் காட்சிகள்)

இயற்கையை அமீர் ஹம்ஸா (நபிகளாரின் சிறிய தந்தை) வீரகாவியம், மன்னர் ஹுமாயூனின் முயற்சியால் வரைந்தனர். நிஸாமியின் லைலா ~ மஜ்னூன் எனும் காதல் காவியத்திற்கு இவர் சிற்றோவியங்கள் வரைந்தளித்தார். மேலும் லக்கர் (Lacqer) முறையை வெளிப்படுத்தினார். ராஷா அப்பாஸ் 17ம் நூற்றாண்டின் பிரபல்ய சித்திரக் கலைஞர் உயிர்ப்பான தோற்றத்தை முற்போக்கு சிந்தனையுடன் புதிய முறையை கண்டறிந்தார். மிர்ஷர் அலி என்பவர் அரபெஸ்கியூ வடிவ முறையை வரைவதில் வல்லரசாகவும் வல்லவராகவும் திகழ்ந்தார். முஹம்மது ஸாமதானின் ஓவியக்கலை ஐரோப்பிய ஓவியக்கலைகளுக்கு சவால் விடப்படக் கூடியதாக அமைந்தது.

## இந்திய இஸ்லாமியரும் ஓவியக்கலையும்

(கி.பி. 1628) ஷாஜகான் ஆட்சியின் போது மொகலாய ஓவியக்கலையின் உச்சக் கட்டமாகும் என வரலாற்று ஆய்வாளர் ஸீ. எப். எம். அமீன் குறிப்பிடுகின்றார். இக்காலச் சித்திரக்கலைஞர்கள் இக்கலையில் கைதேர்ந்தவர்களாகவும் சிறந்த தொழில் நட்பம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். இயற்கைக் காட்சிகளை இரம்மியமான முறையில் வர்ணங்களைத் தீட்டி புதிய வடிவமைப்பை கையாண்டனர். கோடுகள் வரைவதிலும் , ஏனைய சித்திரக்கலையம்சங்களில் மனோகர் , தௌலத், பாக் (Park) முஹம்மத் நாதீர் , அஹ்பசதுர் , பால்சந்தி பிசித்திரா , சித்தார்மன், பக்ருல்லாஹ் போன்றவர்கள் முக்கியமானவர்கள். அரண்மனை , அரியணை , மண்டபங்கள் , பள்ளிவாசல்கள் , மருத்துவமனை போன்ற இடங்களில் இப்போதும் இவர்களது ஓவியங்களை காணமுடியும்.

மனித ஓவியங்கள் இக்கால எல்லையிலேயே மிகப் பிரபல்யமானது. உதாரணம் ஜவாங்கீர் அவர்களின் வாழ்க்கை ஓவியமாகத் தீட்டப்பட்டது. டில்லி நகரில் மம்லூக்கியா மன்னர்களின் காலத்தில் இந்திய இஸ்லாமிய சித்திரக்கலை சிறப்புற்றது. இந்திய ஓவியக்கலை ஈரானிய (கிழக்கு) சாயல்களைக் கொண்டிருந்தது. ஆகவே பாரசீக ஓவியம் பாரத நாட்டில் காலடி வைத்ததை நினைவு கூற முடியும். ஈரானியாவைச் சேர்ந்த ஆகாராஸா அவரது மகன் அபுல் ஹஸன் ஸமார்கந்தாதில் , உஸ்தாத் மன்சூர் , ஷரீப்கான் , பகவதி, போன்றோர் ஜவாங்கீர் மன்னர் காலத்து ஓவியக்கலைஞர்கள். இவர்கள் மன்னர்கள் , பிரபுகள் , சூபிக்கள் போன்ற வாழ்க்கை வரலாற்றை ஓவியமாகக் காட்டினர். மிருகங்கள் , பறவைகள் , மலர்கள் , மரங்கள் போன்றவற்றை நுண்ணறிவுடன் அழகாக பல நிறங்களில் வரைந்தனர்.

அக்பர் ஆட்சியிலே ஏராளமான சிற்றோவியங்கள் செதுக்கப்பட்டும் வரையப்பட்டும் பார்வைக்கு வைக்கப்பட்டன. அக்பர் அவர்களது ஆட்சியிலே பாரசீக ஓவியர்கள், பாரத ஓவியர்கள், ஏனைய சமய ஓவியக்கலைஞர்கள் பலரும் காணப்பட்டனர். இவரது ஆட்சியிலே மொகாலய ஓவியக்கலை எனப் புதுப்பொலிவு பெற்றது. 1526 (கி.பி.) நடந்த பானிபத் யுத்தத்திற்கு பின்னர் வட இந்தியா முகலாயர் வசமாயிற்று. பாபர் (1526 ~ 1530) உட்பட அனைத்து இஸ்லாமிய அரசர்களும் இந்திய ஓவியக்கலையை வளர்க்கப்பாடுபட்டனர். தற்போது இந்திய ஓவியக் கலைஞர் ஹூசைன் பிரபல்யமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## பொங்கும் இஸ்லாமும் பொது விஞ்ஞானமும்

விந்தைகள் பல புரிந்த முஸ்லிம்களின் விஞ்ஞானம் உலகலாவிய மக்களின் முன்னேற்றத்திற்கும் நாகரீகத்திற்கும் வழி அமைத்துக் காட்டியதை வரலாறு மறக்காது. விஞ்ஞானக் கலையானது இஸ்லாமியக் கோட்பாட்டின் ஒரு பகுதி எனலாம். இஸ்லாம் துளிர் விட ஆரம்பித்தவுடனே விஞ்ஞானத்திற்கான வித்தும் தூவப்பட்டுவிட்டதை நாம் காணலாம். குர்ஆன் தனியே ஆத்மீக கருத்துக்களை மட்டும் சொல்லவில்லை. மாறாக அது அறிவைத்தூண்டும் தீபமாகவும் உலக மக்களை ஆராயத் தூண்டும் புரட்சி மிக்க ஒரு வேத நூலாகவும் திகழ்கின்றது என்றால் மிகையில்லை.

எனவே முஸ்லிம்களிடம் மட்டும் குர்ஆன் விழிப்புணர்ச்சியைக் காட்டவில்லை. மாறாக உலக மாந்தர் அனைவரதும் உணர்வலைகளை ஆக்க பூர்வமான அறிவியலைத் தூண்டியதில் முதற்பங்கை வகிக்கின்றது.

குர்ஆனும் , நபிமணியும் காட்டிய அறிவியல் விழிப்புணர்வில் தனிஆர்வம் கொண்ட முஸ்லிம்களே ஒருகுறுகிய கால இடைவெளியில் தமது இலட்சியத்தில் மாபெரும் வெற்றியும் கண்டார்கள்.

நபிமணியின் காலத்திலே வித்திடப்பட்ட விஞ்ஞானம் அதற்கு பின்னர் கலீபாக்கள் காலத்தில் கிளைவிட்டு செழித்தது இவர்களை அடுத்து ஆட்சிபுரிந்த உமையாக்காலப் பகுதியில் பெரும் விருட்சமாக கிளைவிட்டு வளர்ந்து அவர்களை விட ஒரு படிமேழே அப்பாஸியர் ஆட்சியில் பூத்துக் குலுங்கி யாரும் அறியா கனி கொடுக்கலாயிற்று.

குர்ஆன் ஆனது, ஒட்டகை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது. வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது. பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது. என்று கவனிக்க வேண்டாமா........?

மனிதனை சிந்திக்க தூண்டியுள்ளது. இப்படி பல வசனங்களை நாம் குர்ஆனில் காண முடியும். குர்ஆனில் 750க்கும் மேற்பட்ட இடங்களில் இயற்கைத் தோற்றப்பாடுகள் பற்றிக் கூறி சிந்திக்குமாறும் , ஆராயுமாறும் அவதானிக்குமாறும் அன்பாக அறக்கட்டளை இடுகின்றது.

இஸ்லாமானது இயற்கை மார்க்கம். அது இறைவன் படைத்த அனைத்தையும் தூய மனதுடன் சிந்தனை கொள்ளச் செய்கின்றது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் விந்தைகளுக்கு அடித்தளமிட்ட குர்ஆனை உலகமாந்தர் அனைவரும் கடமைப்பட்டிருக்கின்றனர். இதை இஸ்லாமியர் மட்டுமல்ல ஏனைய கல்வியாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். உதாரணம் ஒன்றை இங்கு சுட்டிக் காட்ட முடியும். "இஸ்லாமிய சமூக அமைப்பு என்ற புத்தகத்தில் புதிராக லெவி என்ற அறிஞர் முஸ்லிம்கள் விஞ்ஞான விந்தையில் முன்னணியில் திகழ்வதற்கு இறைவனின் படைப்பினங்களை குர்ஆன் மூலம் அடையாளம் கண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டனர் என்கிறார்.

மற்றொரு அறவியல் அறிஞர் ஜோர்ஜ்ஸார்ட்டன் விஞ்ஞான விந்தைகளுக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல எமக்கும் குர்ஆன் அச்சாணியாக இருந்த பங்கினை மறக்க முடியாது என்கின்றார். நபிமணி (ஸல்) அவர்கள், ஆராய்ந்து பார்க்கும் கல்வியின் மூலம் சிறப்பை அடைய முடியும் என்பதை பல இடங்களில் இயம்பியுள்ளார்கள்.

எனவே ஆரம்ப அடித்தளமிட்ட அறிவியல், நபிமணியின் காலத்திலே இடப்பட்டு விட்டன. குர்ஆனின் வழித்துணையுடன் அறிவு ஆராய்ச்சியானது முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக அமைந்தது. ஆகவே இஸ்லாமானது பொதுவிஞ்ஞானத்திற்கு களம் அமைத்துக் கொடுத்ததை இஸ்லாமிய வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. பல்வேறு துறைகள் பரிணமித்தது போல பொது விஞ்ஞானக்கலையும் சுடரொளிவிடத் தொடங்கியது.

அறிவுப்பீடம் எனப்படும் "பைத்துல் ஹிக்மா" அல்லது "தாருல் ஹிக்மா" பக்தாத்தில் நிறுவப்பட்டுஅறிவு ஆராய்ச்சிகள், புத்தக மொழி பெயர்ப்பு விண்வெளி ஆய்வு என்று பல்துறைகளில் இப்போது நாஸா ஆய்வு கூடம் செயலாற்று வதைப்போல் அப்போது பைத்துல் ஹிக்மா அப்பாஸியர் ஆட்சியில் தனிப்பெரும் பங்கை அறிவியல்துறைகளில் ஆற்றியது. இஸ்லாமியரின் அறிவு ஆற்றல்கள் சிசிலியூடாக வடஆபிரிக்கைவக் கடந்து ஸ்பெயினை அடைந்தது பின்னர் பிரான்சை அடைந்து இங்கிலாந்தில் விஞ்ஞானத்திற்கு விருந்தளித்தது.

இஸ்லாம் வழங்கிய வள்ளலானது மனிதனுக்கும் மனிதனைப்படைத்த இறைவனுக்குமுள்ள தொடர்பை ஆராயாமல் இறைபடைப்பினங்களை இயற்கை வடிவில் ஆராய எழில் கொஞ்சும் இஸ்லாம் இயம்பியுள்ளது. இதனால் மனிதனின் சிந்தனா வட்டம் விரிவாக வியாபித்துக் கொண்டு சென்றதனால் எல்லையில்லா சமுத்திரமாக கல்வி அறிவு மாற்றமடையலாயிற்று.



மேலும் வாழ்க்கையுடன் தொடர்புடைய இவ்வம்சங்கள் பற்றிய உணர்வலைகளை ஏற்படுத்தி , இஸ்லாமிய நாகரீக கலாச்சார பண்பாடாகவும் , இஸ்லாமியரின் தேவையாகவும் அமைந்தது, கிரேக்க நாகரீகம் போல் அல்லாது மனித இனம் பற்றிய வரையறை மட்டும் பேணாது சகல துறை ஆய்வு முயற்சிகளுக்கும் முஸ்லிம்களைத் தூண்டிற்று. இதனால் விஞ்ஞான எழுச்சியி உத்வேகமடைந்தது.

இன்னுமொரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்புண்டு. விஞ்ஞான விந்தைகளைப் புரிந்த முஸ்லிம்களின் வரலாறுகள் இருட்டடிப்புச் செய்து, மத்திய காலப்பகுதியை இருண்டகாலப்பகுதி என மடையாகள் கட்டிய கதையாகியது. முஸ்லிம்கள் அறிவியலுக்கு செய்த பங்களிப்பை ஒரு சிலர் மூடிமறைக்க முற்பட்டுள்ளனர். வரலாற்று ஆசிரியர்கள் வேண்டுமென்றும் மறைத்துள்ளனர்.

இங்கு வரலாற்று ஆசிரியர் டாக்டர் திருமதி அன்னிபாஸந்தி குறிப்பிட்டதை கூறலாம். 8ஆம் நூற்றாண்டு தொடக்கும் 14ம் நூற்றாண்டான மத்திய காலப்பகுதியில் இஸ்லாமிய இளைஞரின் கையில் இயற்கை விஞ்ஞானம் வளர்ந்தது. அவர்கள் எத்திசை சென்றாலும் தம் உயிர் போல அறிவையும் கூடவே சுமந்து சென்று அறிவுத் தீபமேற்றினார்கள். அவர்கள் நாடுகளைப் பிடித்தார்கள். பிடித்த நாடுகளில் கல்லூரிகள் , பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள், (உதாரணம் எகிப்து அல் அஸ்கர்) சர்வகலாசாலை) ஆய்வுகூடங்கள் போன்ற பல்வேறு அறிவுத் தீபச்சுடரை ஏற்றிவிட்டனர்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஐரோப்பிய மாணவர்கள் இங்குள்ள கல்விநிலையங்களில் தஞ்சமடைந்தனர் என்று விவரிக்கின்றார். இன்னும் நாம் எடுத்து நோக்கினால் பேராசிரியர் ஹிட்டி குறிப்பிடுகையில் இஸ்லாமிய ஆட்சியிலிருந்து ஸ்பெயின் (அந்லூசிய) ஐரோப்பிய வரலாற்றிலே பிரகாசமான அத்தியாயங்களில் ஒன்றை உருவாக்கியது. அரபு மொழி பேசும் இஸ்லாமியரே மத்திய காலப்பகுதியில் அறிவுத் தீபங்களை உலகிற்கு வழங்கினர். (ஹிட்டி பக்கம் – 557) அவர் மேலும் கூறுகையில் (THE LEGACY OF ISLAM 11 – 12) என்ற நூலில், ஐரோப்பாவின் பெரும்பாகம் அறியாமையில் அவதியுற்ற போது ஸ்பெயின் முஸ்லிம்கள் ஒரு தலைசிறந்த நாகரிகத்தை உலகிற்கு அள்ளிவழங்கினார்கள். மேலும் கலை , மருத்துவம், தத்துவம் என்று பல்வேறு துறைகளில்பிரகாசித்தனர். இதனால் ஸ்பைன் செல்வாக்கு மிக்க ஐரோப்பிய நாடானது. இந்நாடே ஐரோப்பிய நாடுகளுக்கு அறிவை ஏற்றுமதி செய்யும் பிரதான வல்லரசாக திகழ்ந்தது. முஸ்லிம்களே அடித்தளமிட்ட விஞ்ஞான ஆய்வுக்கு ஐன்ஸ்டீன் இவ்வாறு புகழாரம் புரிகின்றார். முஸ்லிம் விஞ்ஞானிகள் அனைவருமே இயற்கை விஞ்ஞானமெனப் போற்றப்படும்

பௌதீகவியலில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர். மேலும் அவர் விவரிக்கையில் அறிவியலின் தந்தை அரிஸ்ரோட்டில் பௌதீகவியலில் விஞ்ஞானத்தில், முஸ்லிம் அறிஞர்கள் அனைவருமே சிறப்பறிவு பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.ஆகவே மனித ஆன்மாவை மட்டுமன்றி சடப்பொருட்கள், உயிரற்றவை, பறவைகள், விலங்குகள் போன்ற பல்வேறு ஆய்வுகளும் இஸ்லாமிய விஞ்ஞான விருந்தாகவே காணப்பட்டது. இங்கு கல்வி பற்றிய சிந்தனைக்கு பெரும் உரமூட்டியது இஸ்லாமே ஆகும்.

பௌதீகத்துறையில் பல்வேறு வளர்ச்சி நிலையின் எழுச்சி வேகத்தில் விவேகத்துடன் வேகமும் கொண்ட இஸ்லாமியரே வானியல் ஆய்வுக்கு அடித்தளம் அமைத்தவர்களாக வரலாற்றில் மின்னுகின்றனர். மேலும் அவர் தெரிவிக்கையில் அரபுநாட்டு வானவியல் அறிஞர்களின் தோள்களில் நின்றுதான் என்னால் வானகத்தை வளம்பாக்க முடிந்தது. என்று நியூட்டன் கூறியது போலவே இன்றைய பௌதீகவியல் (Physics) துறையின் மாபெரும் வளர்ச்சிக்கு காரணமாயமைந்தவரும் இன்றைய சார்புக் கொள்கையை (Theory of Relavity) உருவாக்கியவருமான ஐன்ஸ்டின் கூறியுள்ளார். இதிலிருந்து அன்றைய அரபு நாட்டு இஸ்லாமிய சிங்கங்கள் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆற்றிய பங்குதான் எண்ணிலடங்காதவை. அறிவியலிலும் இஸ்லாமியர் ஆற்றியபங்கை மறக்க முடியாது.

ஐரோப்பியர் நவீன தர்க்கவியலின் தந்தையாகவும் , அறிவியல் ஆராய்ச்சியின் முன்னோடியாகவும் கருதப்படும் ரோஜர் பேகன் (கி.பி. 1214) அரேபியர்களின் மாணவராவார். (எம். என். ரோய் இஸ்லாத்தின் வரலாற்று ரீதியான பங்கு) அவர் கொண்ட கிரேக்க அறிவு முழுவதையும் முஸ்லிம் தத்துவ ஞானிகளிடமிருந்து விஞ்ஞானிகளிடமிருந்துமே பெற்றுக் கெண்டனர். அவர் இப்னு ஹைதமின் நூலிருந்து மூக்குக்கண்ணாடிகள் குறித்து தனது அறிவைப் பெற்றுக் கொண்டார்.

ஸ்பெயினில் முஸ்லிம்களிடம் காணப்பட்ட பரீட்சை முறையை அவர் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்து வைத்ததுடன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழத்தை விருத்தி செய்து வைத்தார்.

ஐரோப்பவெங்கிலும் புதிய பல்கலைக்கழகங்கள் திறந்து வைக்கப் பட்டதுடன் இணைந்த விதத்தில் சிந்தனைப் போக்கில் செலவ்வாக்குச் செலுத்திய முக்கிய மையங்களாக பல்கலைக்கழகங்கள் தோற்றமடைந்தன. இங்கே தாவரவியல் , உயிரியல், பௌதீகம் , இரசாயனம், கணிதம் மொழிபெயர்ப்பு பல்கலைக்கழகங்களில் நூல்களாக மிக விரிவான முறையில் பயன்படுத்தி வந்தனர்.



இந்த மொழி பெயர்ப்புகளில் பல நூற்றாண்டு காலம் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் மிகச் சமீபகாலம் வரை இன்றியமையாதவையாக இருந்து வந்துள்ளன. உதாரணமாக, இப்னு சீனாவின் (அவிசினா) மருத்துவ நூல் பாரிஸ் பல்கலைக்கழகத்தினால் 18ம் நூற்றாண்டு வரையில் சுமார் 600 வருட காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது. (அவரின் படம் இன்னும் பிரான்சின் பல்கலைக்கழகத்தில் உள்ளது.) நாகரீகங்களைக் கட்டியெழுப்புவதில் பல்வேறு தேசங்களினதும் கலாச்சாரங்களினதும் கருத்துக்களைக் கொடுப்பதும் பெற்றுக் கொள்வதும் சம்மநதப்பட்டிருந்தால் அறிவியலின் வரலாற்றில் முஸ்லிம்கள் மிக முக்கியமான பங்கினை வகித்து வந்துள்ளார்கள் என்ற உண்மையை இன்று மேலைய உலகம் அங்கீகரிக்காமல் இருப்பது ஏன்? முஸ்லிம்களின் அறிவைத் தம்பால் உறிஞ்சிக் கொண்டதுடன் அவற்றை அதியுயர் மட்டத்தில் அபிவிருத்தி செய்து பின்னர் கொடுத்தார்கள். கிரேக்கர்களிடமிருந்து முஸ்லிம்கள் விஞ்ஞானத்தை உறிஞ்சிக் கொண்டு அறிவு பூரணத்துவம் அடையாத குறைபாடுடைய வடிவத்தில் இருந்தது என்ற உண்மையை இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். மேலும் அறிவைத் தேடும் முயற்சியில் ஒரு போதும் தளர்ந்துவிடக்கூடாது என வலியுறுத்திய சமய நம்பிக்கை காரணமாக அவர்களது இடையறாத முயற்சிகளும், ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வு முயற்சிகள் அறிவியலின் செயல் நெறியையும் அத்திவாரத்தையும் அடிப்படையில் மாற்றி அமைத்தன. அறிவைத்தேடுவதில் முஸ்லிம்கள் காட்ட வேண்டிய நாட்டம் மற்றும் அக்கறை என்பவற்றை திருநபி (ஸல்) அவர்களின் புகழ் பூத்த பல நபிமொழிகள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் அறிவியல்களின் அபிவிருத்தியிலும் ஊடுகடத்தலிலும் முஸ்லிம்கள் ஒரு பெரும்பங்கினையே வகித்து வந்துள்ளனர். இது சம்மந்தமான நூல்கள் மேலைத்தேய முஸ்லிம்களின் ஆதாரபூர்வமான அறிவியலை மூடிமறைத்துள்ளனர். இதற்கான சான்றாக பல நூறு முஸ்லிம் விஞ்ஞானிகள் உலகிற்கு அள்ளி வழங்கிய அறிவியல் சார்பாக வானவியற் கலைக்கு ஆற்றியுள்ள பணியை மதித்து 1935 ஆம் ஆண்டு அகில உலக வானவியலாளர்களின் பெயர்களை சந்திரன் முகப்பில் உள்ள மலைகள், பள்ளத் தாக்குகள், சமவெளிகள் என்பவற்றில் சூட்டியுள்ளனர். அதில் முஸ்லிம்களின் பதின் மூன்று பெயர்களை மட்டுமே மட்டுப்படுத்தியுள்ளனர். இது முஸ்லிம்களுக்குச் செய்யும் துரோக மனப்பாங்கைக் காட்டி நிற்கின்றன. எனவே முஸ்லிம்களின் அறிவியல் ஆற்றலை மதிப்பதாக இருந்தால் வரலாறுகளில் இடம்பெற்ற தவறுகளைத் திருத்த வேண்டும். அல்லது மீள எழுதப்படல் வேண்டும் என்பதும் எம் வேண்டுகோள்!

# இயற்கை அமைப்பும் அல்குர்ஆனும்

* அல்லாஹ் அவன் எத்தகையோன் என்றால் பூமியை விரித்து அதில் உறுதியான (பெரிய பெரிய) மலைகளையும் (நீண்ட) ஆறுகளையும் அவன் ஆக்கினான். ஒவ்வொரு கனிவர்க்கத்திலிருந்தும் (இருவகை கொண்ட ) ஜோடிகள் இரண்டை அதில் உண்டாக்கினான். இரவைப் பகலால் அவன் மூடுகின்றான். சிந்திக்கக் கூடிய கூட்டத்தினருக்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன.........(13:3)

* மேலும் பூமியில் அடுத்தடுத்த பல பகுதிகள் உண்டு. இன்னும் (அதில்) திராட்சைத் தோட்டங்களும் , விவாசாயப்பயிர் நிலங்களும் , கிளைகள் இல்லாதவையுமான பேரீச்சம்மரங்களும் உள்ளன. (அவைகளுக்கு) ஒரே வித நீர் புகட்டப்படுகின்றது. (அவ்வாறிருக்க) சிலவற்றை விடச் சுவையில் நாம் மேன்மையாக்கிவைக்கின்றோம்...... இதில் சிந்தித்து அறியும் மக்களுக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (13:4)

* பூமியின் மீது அது உங்களைக் கொண்டு அசையாதிருப்பதற்காக (பெரிய பெரிய மலைகளை உறுதியாக அவன் அமைத்தான்) (உங்கள் போக்குவரத்திற்குச் சரியான வழியை ) நீங்கள் அறிவதற்குப் (பல) பாதைகளையும், ஆறுகளையும் (அமைத்தான்) (16:15)

* பூமியை நாம் விரித்து அதில் அசையாத மலைகளையும் நட்டினோம். மேலும் ஒவ்வொரு பொருளையும் (அதற்குரிய) அளவின் படி அதில் நாம் முளைக்க வைத்தோம். (15:19)

* (இரட்சகன்) எத்தகையோன் என்றால் அவன் பூமியை விரிப்பாக அமைத்து அதில் உங்களுக்காக பாதைகளையும் ஏற்படுத்தினான். மேலும் வானத்திலிருந்து (மழை) நீரை இறக்குகிறான். இதைக் கொண்டு நாம் பலதரப்பட்ட தாவரங்களிலிருந்து பழவகைகளை வெளிப்படுத்தி விட்டோம். (என இரட்சகனின் தகுதி பற்றி மூஸா கூறினார்) (20:25)

* ஆரம்பத்தில் நிச்சயமாக வானங்களும் பூமியும் (இடைவெளியின்றி) இணைந்திருந்தன. பின்னர் அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் தண்ணீரிலிருந்து உண்டாக்கினோம் என்பதையும் இந்நிராகரிப்போர் பார்க்கவில்லையா? (இதைப் பார்க்கும் ) அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்களா?



* இன்னும் பூமி (மனிதர்களாகிய) அவர்களைக் கொண்டு அசைந்து விடாதிருப்பதற்காக அதில் உறுதியான மலைகள் நாம் ஆக்கினோம். அவர்கள் நேரான வழியைப் பெறுவதற்காக அதில் விசாலமான பாதைகளையும் நாம் ஆக்கினோம் (21: 30 – 31)

* நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து நீரை (மழையை) இறக்குகிறான். (அதனால்) பூமி பசுமையாகிவிடுகின்றது என்பதை (நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் நட்பமாக அறிகிறவன் (யாவையும்) நன்குணர்பவன். (22:63)

* (உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா) அல்லது பூமியைஉறுதியானதாக்கி அதனிடையே ஆறுகளையும் உண்டாக்கி அதற்காக(அதன் மீது கனமான மலைகளையும் அமைத்து, இரு கடல்களுக் கிடையில் தடுப்பையும் ஏற்படுத்தியவன் சிறந்தவனா? (இவைகளைச் செய்த)அல்லாஹ்வுடன் வேறு வணக்கத்திற்குரியவன் இருக்கின்றனரா? (இல்லை) நீங்கள் சிந்திப்பது மிகக் குறைவதாகும். (27 :61)

* பூமிக்குள் நுழைகின்றதையும் அதிலிருந்து வெளிப்படுகின்றதையும் , வானத்திலிருந்து இறங்குகின்றதையும் அதில் ஏறுகின்றதையும் அவன் அறிவான். (34:2)

* பூமியின் விஸ்தீரணத்தை அதன் சுற்றுப் புறங்களில் நிச்சயமாக நாம் (படிப்படியாக) குறைத்து வருவதை அவர்கள் காண வில்லையா? (13:41)

* அவனே பூமியை விரித்தான். அவனே அதிலிருந்து நீரையும் மேய்ச்சலையும் வழங்குகிறான். மலைகளை அவனே அதில் நிலை நாட்டினான். (79:30–32)

* அல்லாஹ் தான் வானங்களையும் பூமியையும் இவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் ஆறு நாட்களில் படைத்தான். (32:4)

* அல்லாஹ் தான் வானங்களைத் தூணின்றி உயர்த்தினான். அதனை நீங்கள் உங்கள் கண்களால் காண்கிறீர்கள். அன்றி அவற்றின் மீது அவனது ஆட்சியை நிலை நிறுத்தியுள்ளான். அவனே சூரியனையும் சந்திரனையும் தனது அதிகாரத்தினுள் வைத்துள்ளான். இவை ஒவ்வொன்றும் அவற்றுக்கு இடப்பட்ட காலத்திட்டத்தின்படி நடந்து விடுகின்றது. (13:2)

* அவனே ஏழு வானங்களையும் அடுக்கடுக்காகப் படைத்துள்ளான். இவை வானத்தின் அமைப்பு பற்றி மறை கூறும் வசனங்களல் சில. ஏழு வானங்களையும் பூமியையும் இவ்விரண்டிடையே காணப்படும் யாவற்றையும் ஆறு நாட்களில் படைத்ததாகக் கூறும் இறைவன் இவை பற்றிக் கூறும் மற்றொரு வசனம் கவனிப்போம்.

ஒன்றாக இருந்த வானங்களையும் பூமியையும் நாமே பிரித்தமைத்தோம் என்பதையும் உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம் என்பதையும் இதை நிராகரிப்போர் கவனிக்க வேண்டாமா? இதை அவர்கள் நம்பமாட்டார்களா பூமி மனிதர்களுடன் சாய்ந்து விடாதிருக்கும் பொருட்டு அதில் விசாலமான வழிகளையும் நாம் ஏற்படுத்தினோம். வானத்தைப் பத்திரமான ஒரு விதானத்தை போலும் நாம் அமைத்தோதம். (21:31:32)

* திருமறை , காலத்தை வென்ற ஒரு தெய்வீக திருமறை. வாழ்க்கைத்திட்டம் மனித வாழ்வின் சகலதுறைகளுக்கும் வழிகாட்டும் வேதப் புத்தகம். விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளை கூறும் விஞ்ஞான நூலோ அல்லது வேறு வகையான ஒரு துறையோடு சம்பந்தமான நூலோ அல்ல அது.

இறைவனின் மகத்துவத்தை உணர்ந்து அவனது சட்டங்களைப் பேணி நடக்க மனிதனுக்கு வழிகாட்டுவதோடு அது அருளப்பட்டதின் இந்த இலட்சியத்துடன் சம்பந்தப்படும் வரை பல்வேறு விடயங்களைப் பற்றியும் அது விளக்குகின்றது. அவ்வாறான இடங்களிலெல்லாம் தனிப்பட்ட ஒரு விடயத்தை விளக்குவது இதன் நோக்கமல்ல. தனது பிரதான இலட்சியத்திற்கு மனிதனை வழிநடத்துவதே அதன் இலட்சியமாகும்.



எனவே இயற்கை அமைப்பு பற்றியோ நியதிகள் பற்றியோ வானநூல்களை அல்லது பொது ஆராய்ச்சி நூல்களை போன்று தொடர்ச்சியாக திருமறை ஆராய்சசி செய்வதில்லை. என்ற உண்மைகளை மனதில் கொண்டு அது கூறும் விடயங்களை நாம் ஆராயக் கடமைப்பட்டுள்ளோம்.

தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் (ஓர் அத்தாட்சியாகும்) இது (யாவையும்) நன்கறிந்தோனும் மிகைத்தோனுமான அல்லாஹ்வால் அமைக்கப்பட்டது. (உலர்ந்து வளைந்த) பழைய பேரிச்சங் கம்பைப்போல் ஆகும் வரையில் சந்திரனுக்கு நாம் பல பட்சங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். சூரியன் சந்திரனை அணுகமுடியாது. இரவு பகலை முந்த முடியாது. (இவ்வாறே கிரகங்களும் நட்சத்திரங்களும்) ஒவ்வொன்றும் (தன்னுடைய வட்ட வரையறைக்குள் நீந்திச் செல்கின்றன) (36: 37 – 40)

இவ்வசனங்கள் சூரியன் சந்திரன் போன்றவையும் இதர நட்சத்திரங்களுக்கும் வரையறுக்கப்பட்ட நியதிகள் உள்ளன. என்றும் அவை அவற்றுள் சுழல்கின்றன என்றும் கூறுகின்றன.

பூமி முளைப்பிக்கும் (புற் பூண்டுகளையும்) யாவற்றையும் தாவரங்களையும் சோடி சோடியாகப் படைத்து இவர்கள் (இதுவரை) அறியாத (மற்ற) வைகளையும் படைப்பவன் மிகத்தூயவன்
(36:36)

என்ற வசனம் பொருட்களை இறைவன் சோடி சோடியாகப் படைத்துள்ளான். என்ற ஒரு விதியை அறிவிக்கின்றது. அதுமட்டுமல்ல இறைவனின் படைப்புக்கள் இத்தனை தான் என்று மனிதன் திட்டமாக அறிவிக்க முடியாது. ஏனெனில் மனிதன் அறியாத மற்றும் பல சிருஷ்டிகளை இறைவன் படைத்திருக்கின்றான். என்றும் இவ் வசனம் கூறுகின்றது.

திருமறை கூறும் இயற்கை விதிகள் அனைத்தையும் இங்கு எடுத்துக் கூறவோ அளவு தற்கால அறியவில் கருத்துக்களுக்கு எத்துணை தூரம் ஒத்து அல்லது மாறுபட்டுள்ளன என்று விளக்குவதோ எனது நோக்கமல்ல. மறைகூறும் இயற்கை பற்றிய சில விதிகளை நினைவூட்டுவதே எனது முயற்சியாகும்.

திருமறை கூறும் இவ்விதிகளை விளங்கிக் கொள்ளவும் இவற்றின் உண்மையை உலகிற்கு உணர்த்த எல்லா வகையாலும் முயல்வதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

மறை கூறும் உண்மைகளை ஆராய்ச்சி மூலம் நிரூபிக்க நமது அறிவு இன்னும் பக்குவமடையாது இருக்கலாம். அதற்காகமறை கூறும் நியதிகளை நாம் ஏற்கக் கூடாது என்பதில்லை.

ஆகவே திருமறை கூறும் ஏதாவது ஒரு விடயத்தை நிரூபிக்க நமக்கு முடியாவிட்டால் அதைப் பூரணமாக நிரூபிக்க முயல்வதே நமது கடமையாகும். நமக்கு விளங்கவில்லை என்பதற்காக அதை மறுக்கவோ மறைக்கவோ முயல்வது ஆகாத காரியமாகும்.

மனித வாழ்வில் இலட்சியத்தையும் அவனது கடமைகளையும் அவன் வாழவேண்டிய முறைகளையும் உணர்த்துவது திருமறையின் பிரதான இலட்சியமாகும். பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகப் படைக்கப்பட்ட மனிதன் தனது எஜமானனின் ஆற்றல்களை உணர்ந்து அவனைத் துதி செய்து அவனுக்கு வழிபட்டு வாழ்வதற்கு மனிதனைத் திருத்துவதற்கு வேண்டிய முறையில் அவசியமான விடயங்களை தான் இறைவன் கூறியுள்ளான்.

எனவே, தான் இவ்விதமான ஒவ்வொரு வசனத்தின் இறுதியிலும் இப்படியெல்லாம் இருந்தும் இவர்களின் இறைவனை வழிபட வேண்டாமா? என்று உணர்வு பெற வேண்டி என்றோ? சிந்திக்க வேண்டாமா? என்றோ கூறப்பட்டுள்ளன. இவ்விடயங்களை நாம் உணர வேண்டுமல்லவா?

* * *



## புவியியல் துறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு.....

புவியியல் துறைக்கு முஸ்லிம்கள் அளித்த பங்களிப்பு மகத்தானது. அவர்கள் அரபியில் மட்டுமன்றி பாரசீக மொழியிலும் பல சிறந்த ஆக்கங்களை தந்துள்ளனர். இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்து இருந்தமையால் அத்திலாந்திக் சமுத்திரம் முதல் பசுபிக் வரை பிரயாணம் செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அத்துடன் புனித ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக மிக நீண்ட தூரப் பிரயாணங்களை மேற் கொள்ள வேண்டி இருந்தது. இதனால் பாதைகள் , பிரதேசங்கள் , மக்களது வாழ்க்கை முறைகள் பற்றியெல்லாம் அறியும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் கிரேக்க உரோமர்கள் உட்பட முன்னர் எந்தவொரு சமூகமும் அடையாத வகையில் புவியியல் அறிவை அவர்கள் பெற்றனர். அப்பாசியக் கலீபா ஹாரூன் ரஷீதின் காலத்தில் மொழி பெயர்க்கும் பணி ஆரம்பமாகும் முன்னரே முஸ்லிம்கள் புவியியல் துறையில் ஈடுபாடு கொண்டிருந்தனர். இதனால் அத்துறை சம்பந்தமான நூல்களை தேடிக்கற்பதிலும் அவற்றை மொழி பெயர்ப்பதிலும் ஆர்வம் காட்டினர்.

## புவியியல் துறைகளில் முஸ்லிம்கள் ஈடுபடக் காரணம்

புவியியல் துறையில் முஸ்லிம்கள் ஈடுபடவும் அத்துறை சம்பந்தான நூல்களை மொழிபெயர்க்கவும், பிரதி பண்ணவும், எழுதவும் கவனம் செலுத்துவதற்கும் குர்ஆனும், அவர்கள் வாழ்ந்த சூழலும் பிரதான காரணங்களாக அமைந்தன. குர்ஆன் முஸ்லிம்களை நோக்கி, இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அவர்கள் இதயங்கள் மீது தாழிடப்பட்டு விட்டதா? எனக் கேட்பதுடன் தொடர்ந்து பல விடயங்களையும் இயற்கைக் காட்சிகளையும் சுட்டிக் காட்டுகின்றது. அதன் பின் நீங்கள் அறிய வேண்டாமா? சிந்திக்க வேண்டாமா? உணர வேண்டாமா? என்பது போன்ற வினாக்களை தொடுப்பதன் மூலம் முஸ்லிம்களை ஆராயும் படி தூண்டியது. எனவே தான் குர்ஆனை ஓதிய மக்கள் அதில் பூமி, வானங்கள், கிரகங்கள், மழை, காற்று, மின்னல், தாவரம், விலங்கு, பாதை, அருவி, கடல்போன்றவை பற்றிய கருத்துக்களைக் கண்ட போது அவற்றை ஆராய முற்பட்டனர். இதனால் பௌதீகவியல், மானிடவியல், பிரதேசவியல் போன்ற புவியியல் அம்சங்களை அவர்களால் அறிய முடிந்தது.

அவர்கள் வாழ்ந்த சூழ்நிலையைப் பொறுத்தவரை புவியியல் தொடர்பான அறிவைப் பெற அது அவர்களைத் தூண்டியது. நிலையான நட்சத்திரங்கள் கிரகங்களது இயக்கம், பருவகால மாற்றங்கள் முதலானவற்றை அறிவது அவர்களுக்கு நிர்ப்பந்தமாக இருந்தது. பரந்தபாலைவனப் பிரதேசங்களில் நீண்ட தூரம் பிரயாணங்களை மேற்கொள்ள அத்தகைய அறிவும் அவசியப்பட்டது. அத்துடன் நாடோடிகளாய் இருந்த ஆரம்பகால அரபிகள் அவர்களது கால்நடைகளை வளர்ப்பதற்காக மேய்ச்சல் தரைகளையும் நீர்நிலைகளையும் தேடி அடிக்கடி நகர வேண்டி ஏற்பட்டது. இதனால் பாலைவனப் புல்நிலங்கள், நீர் நிலை, செடி, கொடி, விலங்கினம் முதலியவைபற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இவற்றைப் பற்றி செய்யுளாகவும், வாய்மொழியாகவும் பரப்பி வந்தனர். எனவே புவியியல் நூல்களை மொழி பெயர்க்க ஈடுபட முன்னரே புவியியல் தொடர்பான விடயங்களில் அவர்களுக்கு ஈடுபாடும் அனுபவமும் இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

இஸ்லாமிய அரசுகளது ஆதிக்கம் பரந்து விரிவுற்றதன் பயனாக முஸ்லிம்கள், முஸ்லிம்கள் வாழும் பல்வேறு நாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது அவசியமாயிற்று. ஹஜ் முஸ்லிம்களுக்கு கட்டாயக் கடமையாக இருந்தபடியால் பல நாடுகளில் இருந்து பல்வேறுபட்ட மக்கள் மக்கா வர வேண்டிய அவசியமாய் இருந்தது.

அறிவு தேடியும் வியாபார நோக்கங்களுக்காகவும் முஸ்லிம்கள் பல நாடுகளுக்கு பிரயாணங்களை மேற் கொண்டனர். அது போன்ற பல காரணங்களால் முஸ்லிம்கள் ஒருவரையொருவர் சந்தித்து நாடுகள் பற்றியும், நகர் பற்றியும் , போக்கு வரத்துப் பாதை மற்றும் புவியியல் ரீதியான நிலமைகள் பற்றியும் அறியும் வாய்ப்பு கிடைத்தது.

இஸ்லாமிய ஆதிக்கத்தின் கீழ் பல நாடுகள் இருந்தமையால் ஒவ்வொரு நாட்டிலும் நிர்வாகத்தைச் சீரமைக்கவும், வரி அறவிடவும், பொருளாதார உற்பத்திகளை மேற்கொள்ளவும் அந்தநாடுகள் பற்றிய தகவல்களைப் பெற வேண்டிய அவசியமும் இருந்தது. ஆண்டு தோறும் ஹஜ்ஜின் போது முஸ்லிம்கள் அனைவரும் மக்காவில் ஒன்று கூடியமை அத்தகைய செய்திகளை பெற வாய்ப்பாகவும் தூண்டுதலாகவும் அமைந்தது. எனவே ஹஜ் சமய ஒருமைப்பாடை மட்டுமன்றி முஸ்லிம் நாடுகளிடையே உள்ள வரித் தொடர்பையும் புவியியல் அறிவையும் அது முஸ்லிம்கள் மத்தியில் பரவச் செய்தது.



தபாற் சேவை முறையை கைக்கொண்டதன் காரணமாகவும் பரந்த அரசை நிறுவியதன் காரணமாகவும் போக்குவரத்து சாதனங்களும் வசதிகளும் வளர்ச்சியுற்றதன் காரணமாகவும் பாதை , நாடுகள் பற்றிய அறிவு விரிவுற்றது. சில முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகளில் பல ஆண்டுகளாக பிரயாணம் செய்தனர். வேறு சிலர் முஸ்லிம் அல்லாத தூரப் பிரதேசங்களுக்கும் பிரயாணம் செய்தனர். இப்பிரயாணிகள் தமது அனுபவங்களையும் தாம் கண்டு களித்த இயற்கைக் காட்சிகளையும் மக்களது பழக்கவழக்கங்களையும் பொருளாதார அரசியல் நிலமைகளையும் பற்றிய தெளிவான தகவல் வெளியிட்டனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஹஜ் மட்டுமன்றி ஏனைய கடமைகளும் அவர்களைப் புவியியல் துறையில் ஈடுபட வைத்தன. தொழுகையின் போது கஃபா இருக்கும் திசையை அறியவும், தொழுகை நேரத்தை அறியவும் நோன்பு நோற்கவும், திறக்கவும் புவியியல் அறிவு அவசியம். ஸக்காத்தைப் பொறுத்த வரையில் கூட விளைபொருட்களின் தன்மைகள், அவை உற்பத்தியாகும் சுவாத்திய நிலமைகள், அறுவடை காலம் போன்றவற்றை நிர்ணயிக்க புவியியல் அறிவு அவசியமாயிற்று. எனவே முஸ்லிம் புவியியலாளர்கள் இத்துறையில் முயற்சித்து ஆக்க பூர்வமான சிந்தனைகளை முஸ்லிம்களுக்கும் பிறருக்கும் வழங்கினர்.

புவியியல் நூல்கள் பிற மொழியில் இருந்து அரபி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதனால் முஸ்லிம்கள் இத்துறையில் மேலும் கவனம் செலுத்த வாய்ப்பு கிடைத்தது. அந்நூல்களை முன் மாதிரியாகக் கொண்டு புதிய நூல்களை எழுதவும் ஆய்வுகளை மேற் கொள்ளவும் தமது புவியியல் அறிவை மேலும் விருத்தி செய்யவும் வசதியாக அமைந்தது. பொதுவாக முஸ்லிம்கள் புவியியல் நூல்களை மொழி பெயர்ப்பதுடன் அல்லது அவற்றைப் பயன்படுத்தி திருப்தி கொள்ளாத உலகின் நாலாபக்கங்களும் கடல் அல்லது தரைமார்க்கமாக பிரயாணங்களை மேற் கொண்டு ஆய்வு செய்தனர். இதனால் கிரேக்க பாரசீக இந்திய கருத்துக்களில் காணப்பட்ட ஊடகங்கள் பிழைகள் என்பவற்றை சுட்டிக் காட்டி நியாயமானதும் உண்மையானதுமான கருத்துக்களை ஆதார பூர்வமாக முன் வைத்தனர். அவர்களது ஆய்வுகளுக்கு குர்ஆனின் கருத்துக்கள் பெரிதும் துணை நின்றன எனவே முஸ்லிம்களது புவியியல் நோக்கங்கள் கிரேக்க பாரசீக இந்திய ஆக்கங்களில் மறுபிரதியாக அமையாது மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. அவர்களது கருத்துகள் நூலுருவில் பதிக்கப் பட்டமையால் அவை நவீன சமூகத்திற்கும் வழிகாட்டிகளாக அமைந்தன. இனி முக்கியமான புவியியலாளர்களையும் , நூல் உள்ளடக்கத்தையும் சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

| | புவியியலாளரின்பெயர் | நூல்அல்லது உள்ளடக்கம் |
|---|---|---|
| 1. | அல்குவாரிஸ்மி (780 ~ 850) | "கிதாபு ஸீரத்தில் அர்ள்" |
| 2. | அல்ஹிந்தி (831~870) | "றஸ்முல் மஃமூர் மினல் அர்ள்" "ரிஸாலா பில் பிஹார் வல் மத்தி வல் ஜஸர்" (கடலும் அதன் வற்றுப் பெருக்கும்) |
| 3. | அபூ மஃஷர் | * இந்துசமுத்திரம் , அரபுக் கடல் ஆகியவற்றில் வீசும் மொன்சூன் காற்றுக்கள். * சமுத்திர நீரோட்டங்கள் * வற்றுப் பெருக்கு என்பன பற்றி |
| 4. | இப்னு குர்தாத்பிஹ் (ம:912) | "அல்மஸாலிக் வல் மமாலிக்" (பாதைகளும் இராஜ்யங்களும்) |
| 5. | அல் யாஃகூபி (ம:897) | "கிதாபுல் புல்தான்" |
| 6. | குதாமா | "கிதாபுல் கராஜ்" என்ற நூலின் 11ஆம் அத்தியாயம் (அப்பாஸிய இராஜ்யத்தின் தபால் நிலையங்கள் , பாதைகள் பற்றி) |
| 7. | இப்னுல் பகீஹ் | "கிதாபுல் புல்தான்" (ஈரான் பற்றி) |
| 8. | இப்னு ருஸ்தா | "அல் அஃலாகுன்நபீஸா" (பெறுமதியான பொருள்கள்) என்ற நூலின் 7ம் அத்தியாயம் (பாதைகள் பற்றி) |
| 9. | அல்மஸ்ஊதி | "முருஜீத் தஹப் வமஆதினுல் ஜவாஹிர்" (பொன் வயல்களும் வைரச் சுரங்கங்களும்) "கிதாபுத் தன்பீஹ்" |
| 10. | ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை | "ஹீதூதுல் ஆலம்" (உலகின் எல்லைகள்) |



| | | |
|---|---|---|
| 11. | அல்பல்கீ | "ஸீவரும் அகாலிம்" (காலநிலைப் பிரதேசங்கள் பற்றிய அறிவின் மிகச் சிறந்த பிரிவுகள்) |
| 12. | இப்னு ஹவ்கல் | "அல் மஸாலிக் வல் மாமலிக்" |
| 13. | அல்முகத்தஸி (பி.947/948 | "அஹ்ஸனுல் தாகஸீம் பீ மஃரிபதில் அகாலீம்"(காலநிலைப் பிரதேசங்கள் பற்றிய அறிவின் மிகச்சிறந்தபிரிவுகள்) |
| 14. | இப்னுபழ்லான் | வொல்கா, கஸ்பியன் பகுதிகள் பற்றி |
| 15. | அபூ துலப் | "அஜாஇபுல் புல்தான்" |
| 16. | அல்ஹாயிக் (ம. 945) | "கிதாப் ஜஸீரதுல் அரப்" |
| 17. | மஹல்லபி | சூடானின் புவியியல் பற்றி |
| 18. | ஸீலைமான் (கடலோடி) | "அக்பாருஸ் ஸீன் வல் ஹிந்து" (இந்தியா, சீனா பற்றி) |
| 19. | பஸீர்க் இப்னு ஷஹ்ரி யார் (கடலோடி) | 'அஜாயிபுல் ஹிந்து" (இந்தியாவின் அற்புதங்கள்.) |
| 20. | நாஸிரேகுஷ்ரு 1003,பாரசீகம் | "ஸபர் நாமா" (எகிப்து ஜெரூசலம் பற்றி) |
| 21. | அல்கஸ்வீனி 1203 ~ 1283 பாரசீகம் | "அஜாயிபுல் புல்தான்" "ஆதாரும் பிலாத்" "அஜாயிபுல் மகலூ காத்தாத் வ ஙராயிபுல் மௌஜீதாத்" |
| 22. | அல்திமிஷ்கி மரணம் ம.1327 டமஸ்கஸ் | "நுஹ்பதுல் தஹர் பீ அஜாயி புல் பாரி வல் பஹ்ர்" |
| 23. | அபுல்பிதா 1273 டமஸ்கஸ் | "தக்வீமுல் புல்தான்" |
| 24. | ஹம்துல்லா முஸ்தவ்பி 14ம் நூ.ஆ. பாரசீகம் | "நுஸ்ஹதுல் கலூப்" (இஸ்லாமிய உலகின் பௌதிக , மானிடப் புவியியல் பற்றியது) |
| 25. | ஹாபீஸ் அப்ரூ ம.1429 பாரசீகம் | "ஸீப்ததுல் தவாரீஹ்" (மொராக்கோவிலிருந்து கிர்மான் வரையிலான புவியியல் பற்றி) |

| | | |
|---|---|---|
| 26. | அப்துல் அஸீஸ் அல்பக்ரி<br>1040 ~ 1094<br>கோர்டோவா | புவியியல் அகராதி<br>“அல் மஸாலிக் வல் மமாலிக்” |
| 27. | அல் ஸீஹ்ரி | “கிதாபுல் ஜீக்ராபிய்யா”<br>(கிரேக்கர்களின் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டது) |
| 28. | அல் மாஸினி<br>1080 ~ 1169<br>கிரானடா | “நுஹ்பத்துல் அல்பாப் வநுக்பத்துல் அஃஜாப்”<br>“நுக்பத்துல் அத்ஹான் பீஅஜாயிபில் புல்தான்”<br>“அல் மஅறிப் அன்பழ்லி அஜாயிபில் புல்தான்”<br>“நுக்பத்துல் கிபார் பீ கஷ்ஆரில் ப பிஹார்” |
| 29. | அல்முனஜ்ஜிம்<br>முஸ்லிம் ஸ்பெயின் | “கிதாபுல் ஆகாமுல் மர்ஜான் பீ திக்ரில் மதாஇனில் மஷ்ஹீரா பிகுல்லி மகான்”<br>(நகரங்களைப் பற்றிய புவியியல் அகராதி) |
| 30. | அபூமுஹம்மத்<br>அல் அப்தாரி<br>வலன்சியா | வட ஆபிரிக்காவினூடாக மக்கா சென்றுதிரும்பிய பிரயாண அனுபவங்கள் பற்றி |
| 31. | இப்னு ஜீபைர்<br>பி.1145<br>வலன்சியா | “ரிஹாலத் இப்னு ஜீபைர்” (பிரயாண அனுபவங்கள்) ம.த. கடலைச் சூழ்ந்த முஸ்லிம் பிரதேசங்களின் புவியியல் நிலை பற்றி) |
| 32. | இப்னுஸஈத் அல் மஃறிபி<br>ம.1274 | “கிதாபு ஜீக்ராபி பில் அகாலிம்”<br>(பல்வேறு நாடுகளின் புவியியல்பற்றி) |



# வானியற்கலையின் வளர்ச்சிப் பாதையிலே முஸ்லிம்கள்......

முஸ்லிம்கள் வாழ்ந்த சூழ்நிலையும் சமயமும் இத்துறையில் அவர்களை ஆர்வத்துடன் ஈடுபடச் செய்தது. சந்திர ஆண்டை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமிய அனுஷ்ட்டானங்கள் ஒழுங்குபடுத்தபட்டிருப்பதால் முஸ்லிம்கள் இத்துறையில் கடமையுணர்வுடன் ஈடபட்டு வந்தனர். இதே வேளையில் குர்ஆன், நட்சத்திரங்கள், கோள்கள், மேகங்கள், பற்றிப் பொதுவாகவும் சிறப்பான தமான கருத்துக்களைக் கூறி முஸ்லிம்களை வானவியல் துறையில் ஈடுபடத் தூண்டியது. குர்ஆனின் கருத்துக்களையும் முன்னோர்களது அனுபவங்களையும் பெற முஸ்லிம்கள் இத்துறையில் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தனர்.

உமையா ஆட்சியின் இறுதிப் பகுதிகளில் அறிவு , ஆராய்ச்சித் துறைகளில் அதிக கவனம் செலுத்திய முஸ்லிம்கள் அப்பாஸியக் காலத்தில் நிறுவப்பட்ட “பைதுல் ஹிக்மாவின்” துணையுடன் துரிதவேகத்தில் முன்னேறினர். பிறமொழி நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டதால் பாரசீகக் கிரேக்க இந்திய வானவியற் கருத்துக்கள் அவர்களுக்கு கிடைத்தன. அத்துடன் அப்பாஸியக் கலீபாக்களும் வானவியற் துறை வளர்ச்சிக்கு அவசியமான வசதிகளைச் செய்து கொடுத்தனர். இதனால் பைதுல் ஹிக்மாவின் ஓர் அம்சமாக இருந்தது. அரச ஆதரவுடன் இத்துறை வளர்ச்சி கண்டது. முஸ்லிம்கள் முன்னைய வானிலை ஆராய்ச்சியாளர்களது கருத்துக்களை நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றில் காணப்பட்டகருத்துக்களை சுட்டிக் காட்டி திருத்தி விட்டதுடன் சில புதிய
கருத்துக்களையும் வெளியிட்டனர். உதாணரமாக தெமையின் வானியல் சித்தாத்தங்களில் காணப்பட்ட தவறுகளை அல்பதானி, அல் பிதுருஜி , யாபிர், பின் அப்துல்லாஹ் போன்றோர் சுட்டிக் காட்டியும் திருத்தினர்.

வானியல் ஆய்வுக்கென 12க்குமேற்பட்ட ஆய்வு நிலையங்களை அக்கால முஸ்லிம்கள் நிறுவினர். இந் நிலையங்கள் அரச ஆதரவுடனும் தனிமைப்பட்டவர்களின் உதவியுடனும் இயங்கி வந்துள்ளன. அவற்றின் மூலம் முடிவுகள் தகவல்களாகவும் , அட்டவணைகளாகவும் , உபகரணங்களாகவும் வெளிவந்தன.

இத்துறையில் அதிக ஆர்வம் கொண்டிருந்த கலீபா மன்சூர் பொதுவாகத் தனது அலுவல்களை நட்சத்திர சட்டங்களுக்கு அமைய ஒழுங்கு படுத்திக் கொண்டார். .இவரிடம் நௌகத் போன்ற பாரசீக நட்சத்திர வியலாளர்கள் பலர் பணிபுரிகின்றனர். இப்றாஹிம் அல்பஸாரி அவரது மகன் முகம்மது மக்துன், அலிஇப்னு ஈசா அபூ ஸஹ்ல் போன்ற பலர் கலிபாவிடம் பணிபுரிந்து வந்தனர். கலீபாவின் வேண்டுகோளுக்கு இணங்க முஹம்மது இப்றாஹிம் அல்பஸார்

எனும்அறிஞர் ஒரு தலைசிறந்த இந்திய வானவியல் நூலை அஸ்ஸிந்து வல்ஹிந்து அத்தபீரு எனும் பெயரில் மொழி பெயர்த்தார். வானியற் துறையின் ஓர் அடிப்படை நூலாக கருதப்பட்ட இந்நூல் கலீபா மாமூன் காலம் வரை பயன்படுத்தப்பட்டது.

மன்சூருக்கு அடுத்து வந்த அப்பாசியக் கலீபாக்களும் வானவியற்துறை வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தினர். பொதுவாக சமூக மட்டத்திலும் அக்காலத்தில் வானியற் துறை அறிஞர்களுக்கு அதிக மதிப்பிருந்தது. அத்துடன் அவர்களுக்கு சம்பளம், உணவு மற்றும்வசதிகள் அரசசெலவில் வழங்கப்பட்டது. கலீபாக்களது அரசியல் சொந்த விவகாரங்கள் தலையிட்டு ஆலோசனை கூறும் அளவிற்கு அவர்களுக்கு மதிப்பிருந்தது. இதனால் வானியற் துறை நன்கு தடை இன்றி துரிதமாக வளர்ச்சியுற்றது. வானியல் ஆய்வு கூடங்கள் அமைப்பதில் முஸ்லிம்கள் முன்னின்றார்கள்.

முஸ்லிம்கள் வானியற் கலைக்கு ஆற்றியுள்ள பணியை மதித்து 1935ஆம் ஆண்டு அகில உலக வானவியலாளர் சங்கம் பின்வரும் பதின்மூன்று பிரபல முஸ்லிம் வானவியலாளர்களின் பெயர்களை சந்திரனின் முகப்பில் உள்ள மலைகள் பள்ளத்தாக்குகள் சமவெளிகள் என்பவற்றிற்கு சூட்டியுளள்து.

(ஆதாரம் முஸ்லிம்களும் அறிவியலும்.)

1. மஸ்ஹெல்லா மரணம் கி.பி. 815
2. அல் மாமூன் மரணம் கி.பி. 833
3. அல்பர்கானி
4. அல்பதானி மரணம் கி.பி. 929
5. தாபித் மரணம் கி.பி. 901
6. அஸ்சூபி மரணம் கி.பி. 986
7. அல்ஹஸன் அல்ஹைதம் மரணம் கி.பி. 986
8. அல்ஸஹ்லி மரணம் கி.பி. 1087
9. ஜாபின் பின் அப்துல்லா மரணம் கி.பி.1145
10. நாஸிர் சுத்தின் மரணம் கி.பி.1274
11. அல்பித்ரூஜி மரணம் கி.பி. 1204
12. அபுல்அல் வபா மரணம் கி.பி.1331
13. உலூஹ் பேக் மரணம் கி.பி.1449



# கணிதக் கலைச்சோலையிலே முஸ்லிம்கள்.

முஹம்மதுசரீப் – றம்ஸீன்

அறிவு எங்கிருந்தாலும் அதைத்தேடிப் பெற வேண்டும். இது முஸ்லிம்கள் மீதுள்ள கடமை. இதனால் இயக்கப்பட்ட இஸ்லாமியர் உலிகில் பல இடங்கள் தேடியலைந்து அறிவு ஆராய்ச்சிகளை மேற் கொண்டனர். கருத்தறிவுச் சிந்தனைகள், எழுத்துருவில் உள்ள நூல்கலெல்லாம் கிடைத்தவை. அனைத்ததையும் படித்து உணர்ந்து சிந்தித்து சீரிய புதிய ஆக்கங்களை வெளியிட்டனர்.

சோக்கிரட்டீஸ் , பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் , கெலன் , பைத்தகரஸ், போன்ற பல்வேறு அறிஞர்களின் சிந்தனை வடிவங்களை கிரேக்க லத்தீன் மொழிகளிலிருந்து அரபு மொழயில் மொழி பெயர்த்தனர்.

இஸ்லாம் இயற்கையில் காலடி எடுத்து வைக்கும் முன் எகிப்து, பாபிலோன், பகுதிகளில் நாகரிக வளர்ச்சியின் பயனாக கணிதக்கலை, மருத்துவக் கலை, வாணியற்கலை பலவும் வளர்ந்து கொண்டிருந்தன. கிரேக்கத்தில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்த இக்கலைகள் அலெக்ஸாண்ரியாவில் தங்குமிடம் அமைத்துக் கொண்டது. யூக்கிளிட், டொலமி போன்ற பல்வேறு அறிஞர்கள் மேலும் இக்கலைகளுக்கு உரமூட்டினர். பின்னர் இக்கலைகளில் இந்தியா , பாரசீகம், சீனா போன்ற பல்வேறு நாடுகளில் அறியவில், ஆய்வுகள் அடைக்கலம் அடையலாயிற்று.

தற்போது இடைவெளி உண்டாகி ஆமை வேகத்தில் அறிவியல் நடை போட்ட அந்நேரத்தில் கணிதக்கலைகளை கையிலெடுத்த இஸ்லமியச் சிங்கங்கள் குதிரை வேகத்தில் இக்கலையை வளர்க்க துள்ளு நடை போட்டு விரைந்து கணிதத்தில் கணி உலகெங்கும் கொடுக்கலாயினர்.

கிரேக்க சிந்தனைகள் தத்துவங்கள் எல்லாவற்றையும் செயல்வடிவம் அமைத்த பெருமை முஸ்லிம்களை சாரும். கணிதக்கலைகளை கட்டி கட்டிடம் அமைத்த இஸ்லாமிய இளைஞர்களை இன்றும் உலகில் இனிய நினைவு கூறுகின்றனர்

அன்றும் இன்றும் என்றும் அறிவியலின் ஆரம்பத்தாய் கணிதமே! தர்க்க வாத சிந்தனைகளைக் கூட கணிதவியலே அடிப்படை என்கிறார். கார்ட்பிரேலாஹார்டி என்ற மேனாட்டின் அறிஞர் MATHE MATICS IS ABOUT BEAUTIFUL PATTERNS OF LOGICAL THOUGHT "அதாவது" கணிதம் என்பது தர்க்கமுறைச்சிந்தனை எழிற்கோலங்கள் பற்றியது

என்பது அவருடைய கருத்து – ஏனெனில் கணிதம் என்பது அறிவுக் கூர்மையுடன் ஆழப்பதிந்ததொன்று.

நுண்ணறிவின் விளை நிலம் கணிதமாகும். நுணுக்கசாலைகளின் இருப்பிடமும் கணிதமே என்றால் மிகையில்லை.

ஒலி, மொழி, வண்ணங்கள் போன்றவற்றின் எழிற்கோலங்களை உருப்படுத்திக் காட்ட கவின்கலைகளுக்கு ஒப்பானது கணிதம் என்று என்னால் ஊகிக்க முடிகின்றது.

"கணிதம் அறிவியலின் இதயம்" ஆகும். என்னும் ஒப்பற்ற ஒரு கலையே கணிதம், அறிவியலுக்கு முழு உருவம் கணிதக் கலை கொடுப்பதற்கு காரணம் ஏனைய சகோதரக் கலைகளின் உணர்வலைகளின் நரம்புகளில் கணித கருவின் அருவிகள் பாய்வதே அடிப்படைக் காணரமாகும்.

கணிதவியலின் எண்கள் கருக்கட்டிய தாய் இந்தியா என்று மாவை முஸ்தபா விவரிக்கின்றார். இவ்வாறு இந்தியா பெற்றெடுத்த கணிதக் கலையை வளர்த்தெடுத்தனர் முஸ்லிம்கள். அரபி மொழி வழி கணிதக் கலைச் சொற்கள் பலவும் உருவாயின.

அறியப்படாத ஒன்றைக் கண்டு பிடிக்கும் "X", சைபர் , ஸீரோ, (zero) அல்ஜிப்ரா , அரபியில் பயன்பஃத்திய பல சொல்லில் சில வகையே.

எண்ணும் எழத்தும் கண்ணெனத் தகும் என்று ஆன்றோர் அறிவிப்பதில் எண் கலையினது கணிதம் , விஞ்ஞானம் , தொழில் நுட்பங்களையும் , எழுத்து என்பது கலை , பண்பாடு இலக்கியங்கள் என்று விரிந்து வியாபித்துள்ளது. இன்று இவ்விரு துருவங்களிலும் வெற்றிக் கொடியை மத்திய காலப்பகுதியில் ஏற்றியவர்கள் முஸ்லிம்களே!

சித்தாந்த மொழி பெயர்ப்பின் மூலம் இந்திய எண்கள் அரபுலகுக்கு அறிமுகம் செய்வதில் முன்னின்றார்கள். உமையாத்தளபதி ஹஜ்ஜாஜ் யூக்ளிட்டின் Elements எனும் நூலை முதன் முதலாக அரபுக்கு மாற்றியமைத்தார், ரஹ்மான், முகம்மத் ஆகியோர் இந்நூலுக்கு விளக்கவுரை எழுதினார்கள். அல்புஸ்ஜானி (கி.பி. 998) என்பவரும் கிரேக்க நூலை மொழி பெயர்த்தவர். எண்கணிதம் , அட்சரகணிதம், தள உருவங்கள், தசமங்கள், பெருக்கல் , பகுத்தல் கேத்திரகணிதம் Leaey of Islam என்ற நூலில் (பக்கம் 376) இவற்றைக் கண்டு பிடித்தவர்கள் முஸ்லிம்கள் என்று காராடீ வோக்ஸ் குறிப்பிடுகின்றார். "அல் ஜப்பர்" என்ற அற்புதபதமே அல்ஜிப்ராவாக மாற்றமடைந்த வேகத்தை உலக வரலாறுகளில் காணமுடியும்.



இந்து அராபிய எண்களை இன்றும் உலகு நன்றியுடன் அவற்றைப் பாவிப்பதிலும் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் கூடிய கவனம் செலுத்துகின்றன. உரோம எண்கள் மூவாயிரத்தை தாண்டாத வேளையில் இந்து அராபிய எண்கள் பல நூறாயிரம் கோடியை எண்ணி எல்லை இல்லாமல் போவதைக் காணலாம். கடைசியாக இஸ்லாமிய கணித மேதைகளைப் பற்றி குவாரஸ்மி , உமர்கய்யாம் , அபுல்வபா , அபுல்காசிம் , அபுல் அப்பாஸ் , அல்பதாரி , காமில் , அபூநஜீர் , முஹம்மத் அல்பஸாரி போன்ற பல்வேறு அறிஞர்கள் கணித கலைச் சேவையில் என்றும் மணம் கமழும் பூக்களே!

* * *

# இஸ்லாமியரும் இரசாயனவியலும்

விஞ்ஞானத்தின் முதல் குழந்தை தான் இரசாயனம் , என்ற வகையில் இஸ்லாமியருக்கும் இரசாயனத்திற்கும் இடையிலான தொடர்பு அதிகமெனலாம். இரசாயனம் அல்லது இரசவாதம் என்ற இரசாயனவியல் சொல்லுக்கு அரபு சொல்லான "அல்ஹீமியா"விலிருந்து Chemistry என்னும் ஆங்கிலப் பதம் ஆரம்பமானது. 17ம் நூற்றாண்டு வரை இக்கலை வளர்ச்சி இஸ்லாமியரின் விரல்களுக்கிடையில் வளர்ந்து வந்தன.

அலக்ஸ்சாந்திரியாவில் இருந்து பெறப்பட்ட இரசாயனவியல் முஸ்லிம்களின் விஞ்ஞான வளர்ச்சியில் பெரும் பங்கேற்றுள்ளது. ஆரம்பகால உமையாவம்ச ஆட்சியாளரான இளவரசர் காலித் இப்னு யஸீத் சிரியாவைச் சேர்ந்த மரியானா என்பவரிடம் இக்கலையை கற்றுக் கொண்டார். இவர் பல்வேறு மொழிகளில் காணப்பட்ட நூல்களை அரபுக்கு மொழிபெயர்த்ததுடன் இவர் சொந்தமாகவும் நூலைத் தொகுத்துக் கொண்டார். தற்சமயம் அந்நூல்கள் எவையும் இல்லை.

ஜாபிர் இப்னு ஹய்யான் என்ற இரசாயனவியல் மாமேதையை நாம் ஆராய்ந்தால் இவரை மேலைத்தேச மக்கள் நன்றியுணர்வுடன் "ஜெபர்" என்று அன்புடன் அழைப்பர். இவர் நவீன இரசாயனவியல் தந்தையாக மதிக்கப்படுகின்றார். கி.பி. 776 இல் Kufa (கூபா) நகரில் பிறந்தது. தூஸ் என்னும் ஊரில் வாழ்ந்து வரலானார். பின்னர் பாரசீகத்தின் பேரொளி நகரான பக்தாத் வரலானார். கிதாபுல் ஸப்ஈன் கிதாபுல் மீதான உட்பட 22 இரசாயன நூல்களை எழதிக் குவித்தார்.

பல்வேறு வகையான உலோகங்கள் , அல்லுலோகங்கள் , சேர்வைகள் கலவைகள் , குடுவைகள் இரசாயன உபகரணங்கள் என்பன இவரது கண்டுபிடிப்புகளில் சிலவகையாகும். வேறெந்த இரசாயனவாதியையும் விட இவர் பரிசோதனை , பகுப்பாய்வு , அனுமானங்கள் , எடுகோள் என்பவற்றை சரியாக கணக்கிட்டார். கோட்பாடு , கொள்கை , தத்துவம் , பாகுபாடு , இரசாயனப்பெயரீடு, செய்முறை போன்றவற்றிற்கு மகத்தான பங்களிப்பு நல்கினார். இன்றும் மேற்குலகு நன்றி பாராட்டுகின்றது.

அடிப்படை உலோகமான ஈயம் , செம்பு , இரும்பு என்பவற்றிலிருந்து மர்மமான ஒரு பொருளின் துணைகொண்டு தங்கமாகவோ, வெள்ளியாகவோ தர முடியும் என்ற கோட்பாட்டை முன் வைத்தார்.



ஆய்வுகூடங்கள் தாருல் ஹிக்மா என்ற பெயரில் இயங்கின. இவையாவற்றையும் மருத்துவக் கலை போன்று ஏனைய கலைகளுக்கும் முஸ்லிம்கள் பயன்படுத்தினர். முஹம்மத்பின் ஸ்கர்தா அம்ராதீ ஒரு முக்கியமான இரசவாதியே! மருத்துவமேதையான இவருடைய கிதாபுல் அஸ்ரார், கிதாபுல் ஸிர்ரில் , என்பன முக்கியமான இரசாயனவியல் நூல்களே ! இந்நூல்கள் பாகுபாடு மிருகம், தாவரம் , கனிப்பொருள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தன.

இப்னு தஹ்ஸியா என்பவர் அர்ராஸியின் சம காலத்தவர். நுட்பமான இரசவாதியான இவர் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். கிதாபுல் உஸீலில்கபிர் என்ற நூல் பிரபல்யமிக்கதாகும். இவரைத் தொடர்ந்து இப்னு உமை பல்வேறு நூல்குறிப்புகளை எழுதினார். எனினும் புகழ் பெற்ற நூலாக கிதாபுல்மா வல்வரக்வல் அர்ழ் வந்நஜ்மிய்யா. மேலும் அபுல்கலம் அல் இராகி என்ற புகழ் மிக்க இரசாயனவியல் நூலை உருவாக்கினார். அபுமூஸாஜாபிர் புகழ் பூத்த இன்னொருமேதை. கிதாபுல் ஷிபாக் அல் ஷர்க்கி , தக்மி போன்றவை பெயர்குறிப்பிடப்பட்ட நூல்கள்.

முஸ்லிம் இரசாயனவியலாளர்கள் உலோகங்களைத்தூய்மையாக்கவும், உருக்குத் தயாரிக்கவும், இரும்பைத்துருப்பிடிக்காது பாதுகாக்கவும் , ஆடை , தோல் என்பவற்றிற்கு நிறச் சாயம் ஊட்டவும் , கண்ணாடி உற்பத்திக்கு மங்கனீரொட்சைட்டைப் பாவித்தும் , வினாகிரியிலிருந்து அசட்டிக் கசிட் தயாரிக்கவும் அறிந்திருந்தனர். அரபு மொழியிலான இரசவாத நூல்கள் கி.பி. 12ம் நூற்றாண்டில் இருந்து ஐரோப்பிய மொழிகளுக்கு மாற்றப்பட்டது. அரபு பதங்களிலிருந்து பெற்றுக் கொண்ட பெயர்கள் கையாளப்படுகின்றன.

மேற்குலகின் இன்றைய விஞ்ஞான அறிவியல் மறுமலர்ச்சிக்கு மத்திய கால முஸ்லிம்கள் ஆற்றிய பணி மகத்தானது. எனினும் அவர்களின் ஆய்வையும் அணுகுமுறைகளையும் , அடிப்படையாகக் கொண்டு மேனாட்டு விஞ்ஞான விருந்தாளிக் கூட்டம் தமதாய்வுகளை மேற் கொண்ட போதும் முஸ்லிம்களின் பங்களிப்பை அவர்களில் பெரும்பாலானோர் அங்கீகரிப்பதில்லை. ஓரக்கண்பார்வை கொண்டே உற்று நோக்குகின்றனர். என்பதை சுட்டிக் காட்ட வேண்டிய கடப்பாடு முஸ்லிம்களுக்குண்டு.

# இஸ்லாமிய மனிதகுல விஞ்ஞான சாதனைகளில் ஜார்ஜ்சார்ட்டனின் பகுப்பு முறை

விஞ்ஞான வரலாற்று ஆசிரியர்களில் மிகப் புகழ் பெற்ற பேரறிஞராக உலகில் விளங்குபவர் ஜார்ஜ்சார்ட்டன் என்பவராவார். இவரது அறிவியல் வரலாற்று நூல்களுள் "விஞ்ஞான வரலாற்றுக்கு ஒரு முன்னுரை (இன்ரெக்டொக்சன் ரு தி கிஸ்ரி ஒப் சயன்ஸ்)" என்ற நூல் குறிப்பிடத்தக்க ஒரு படைப்பாகும்.

இது வரை மனிதர்களால் நிகழ்த்தப்பெற்ற அறிவியல் சாதனைகள் ஒவ்வொன்றையும் அரை நூற்றாண்டு கொண்ட காலகட்டங்களாக பகுத்துள்ளார். ஒவ்வொரு அரைநூற்றாண்டு விஞ்ஞான சாதனைகளையும் ஒரு முக்கிய விஞ்ஞானியோடு தொடர்புபடுத்துகிறார். இவ்வகையில் அவரது விஞ்ஞான சாதனை வளர்ச்சிக் கணக்கெடுப்பு கி.மு. 450இலேயே தொடங்கி விடுகின்றது. முதல் கட்டமாக கி.மு. 450 ~ 400 ஐ கிரேக்க பெருஞ் சிந்தனையாளர் பிளெட்டோவின் காலமாகக்கணித்துள்ளார். இததைத் தொடர்ந்து விஞ்ஞான சாதனைக் காலகட்டங்களாக அரிஸ்ரோட்டில் , யூக்ஸிட் , ஆக்கிமிடிஷ் ஆகியோர் காலங்களாகக் குறிப்பிடுகிறார். அதன் பின் கி.பி. 600 ~ 700 வரையுள்ளகாலத்தை சீனாவின் விஞ்ஞான சாதனைக் கால கட்டமாகக் கணித்துள்ளார். இக்காலப்பகுதியில் அறிவியல் சாதனைகளை நிகழ்த்தியவர்களில் தலையாயவர்களாக ஹிஸியன், ஸாங்கி சிங் ஆகிய இருவரின் காலகட்டமாகக் கணித்துள்ளார். இதன் பின்னர் கி.பி. 750~1100 வரையான காலப்பகுதியை இஸ்லாமிய விஞ்ஞான வளர்ச்சிக்காலப்பகுதியாக 350 ஆண்டுகள் முழுக்க முழுக்க முஸ்லிம்கள் விஞ்ஞான வளர்ச்சிக்கான காலமாகவே அமைந்துள்ளதை விபரிக்கின்றார். இக்காலகட்டத்தில் முஸ்லிம் விஞ்ஞான விற்பன்னர்கள் அறிவியல் துறைகளின் ஆற்றல்மிகு தலைவர்களாக ஐரோப்பியர் குவாரஸ்மி, அர்~ராஸி, மஸ்ஊதி, அல்வபா, அல்பிரூனி, இப்னு சினா, உமர்கையாம் போன்றவர்களைக் குறிப்பிடுகின்றார்.

இக்காலகட்டத்தில் அறிவியல் வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டவர்களில் அராபியர், துருக்கியர் ஆஃப்கானியர், பாரசீகர் என முஸ்லீம் இனத்தவர்கள் அடங்கியுள்ளனர். இவர்கள் அறிவியல் துறையின் பெரும்பிரிவுகாளன கணக்கியல் (Algerpraists), வேதியல், இயற்பியல், மருத்துவவியல், பூகோளவியல், கணித வியல், வானவியல், போன்றவற்றில் மாபெரு சாதனை நிகழ்த்தியவர்காளக போற்றப்படுகின்றனர்.



ஜார்ஜசார்ட்டனின் இவ்விஞ்ஞான வரலாற்று நூலில் முதன் முறையாக மேனாட்டார் பெயர் கி.பி. 1100 க்குப் பிறகே குறிக்கப்படுகின்றது. கிரிமோனாவைச் சேர்ந்த ஜெரார்ட், ரோஜர் , பேக்கர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டாவும் கூட அவர்கள் அறிவியலில் பெரும் சாதனை எதனையும் நிகழ்த்தியவர்களாக குறிக்கப்படவில்லை.

அதன் பின்னர் உலக அறிவியல் சாதனையாளர்களாகத் தொடர்ந்து முஸ்லிம் விஞ்ஞானிகளும் அவர்களது அறிவியல் சாதனைகளுமே குறிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அடுத்து வந்த 250 ஆண்டுகளில் அறிவியல் துறையில் அருஞ்சாதனைகள் நிகழ்த்தியவர்களாக இப்னு ருஷ்து , நஸிருதின் தூஸி , இப்னு நபீஸ் போன்றோரின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

அறிவியல் வரலாற்று ஆசிரியர்கள் ஜார்ஜசார்ட்டனின் கணிப்பில் இருந்து கி.பி. 750 இலிருந்து கி.ப. 1350 வரை சுமார் 600 ஆண்டு காலம் அறிவியல் துறை வளர்ச்சி என்பது முழுக்கமுழுக்க முஸ்லிம்களாலேயே நடைபெற்று வந்துள்ளது என்பது வரலாற்றுப் பூர்வமாகக் கணித்துக் கூறப்பட்டுள்ளது. தெளிவாகின்றது. அதன் பிறகே , முஸ்லிம்களின் அறிவியல் கண்டு பிடிப்புச் செய்திகள் லத்தீன் , கிப்று , மொழி பெயர்ப்புகள் மூலம் ஐரோப்பா எங்கும் பரவிய பின் ஐரோப்பயிர்கள் இதில் முனைப்புக் காட்டினார்கள் என்பது புலனாகின்றது. 20ம் நூற்றாண்டின் மாபெரும் (விஞ்ஞானி) ஜார்ஜ் சாட்டனின் பகுப்புமுறையில் தவறு இருக்காதல்லவா!

(ஆதாரம் :~ டைம்ஸ் சஞ்சிகை)

* * *

# மருத்துவக் கலை வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பு..

மருத்துவக் கலை மனித வரலாற்றில் ஆரம்பத்திலிருந்து தோற்றம் பெற்றது. காலசூழ்நிலைக்கேற்ப அவ்வப்போது ஏற்பட்ட நோய்களுக்கு மருந்துகளைக் கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பதன் மூலம் இதனை மனிதன் வளர்த்து வந்தான். இவ்வாறு வளர்த்து வந்த மருத்துவ கலைக்கு முஸ்லிம்கள் அளித்த பங்களிப்பு மகத்தானது.

குர்ஆன் தன்னை ஒரு நோய் நிவாரணி எனப் பிரகடனம் செய்திருப்பதும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மருத்துவம் செய்வதற்கு தூண்டுதல் வழங்கியிருப்பதும் முஸ்லிம்கள் இத்துறையில் அதிக அக்கறை செலுத்தக் காரணமாய் அமைந்தது. அவர்கள் சன்மார்க்க வேலைக்கு உழைத்தது போன்றே மருவத்துவக் கலை வளர்ச்சிக்கும் உழைத்து வந்துள்ளனர். கிரேக்க , பாரசீக, உரோம , இந்திய மருத்துவப் பாரம்பரியங்களை அழிவுறாது பாதுகாத்ததுடன் அவற்றை ஆராய்ந்து புதிய முறைகளையும் கண்டு பிடித்தனர். அத்துடன் பண்டைய மருத்துவ வகைகளில் தவறுகளைச் சுட்டிக் காட்டி திருத்தியும் விட்டனர். பிரயோக பரிசோதனை முறையிலான புதிய மருத்துவ முறைகளை அறிமுகப்படுத்தியும் பல புதிய மருத்துவக் கோட்பாடுகளை நிறுவியும் மருத்துவத்துறை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தனர்.

இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் அரபு சமூகத்தவர்கள் பல்வேறு மருத்துவ முறைகளை அறிந்து வைத்திருந்தனர். விதவிதமான மூலிகைகளைப் பயன்படுத்தி தமக்கு ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை செய்து வந்தனர். சிலவகைத் தாவரங்களையும் கற்களையும் அதிகம் பயன்படுத்தினர். அக்காலப் புகழ் மிக்க வைத்தியர்களுள் ஒருவராக ஹாரிஸ் இப்னு கல்தா காணப்பட்டார். இவர் பாரசீக வைத்திய முறைகளையும் தெரிந்து வைத்திருந்தார். எனினும் அக்கால மருத்துவ முறைகளில் பெரும் பாலானவை மூட நம்பிக்கைளாக , சூனியம், மாந்திரீகம், போன்றவற்றுடன் தொடர்புபட்டிருந்தன. அவற்றின் வளர்ச்சிக்காக அறிவியலுடன் தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளபடவில்லை.

இஸ்லாத்தின் வருகையின் பின் அந்த சமூகத்தில் காணப்பட்ட அர்த்தமற்ற முறைகள் நபிகளால் தடை செய்யப்பட்டன. அத்துடன் இரத்தம் குத்தி எடுத்தல் போன்ற சில பயனுள்ள மருத்துவ முறைகளை நபிமணி ஏற்கனவே இருந்ததை அனுமதித்தார்கள். புதிய பல மருத்துவ வகைகளையும் சிகிச்சை முறைகளையும் விளக்கிக் காண்பித்தார்கள். அவர்களது நோய் நிவாரணம் பற்றிய இத்தகைய ஹதீஸ்களை பல அறிஞர்கள் "அத்திப்பன் நபவி" எனும் தலைப்பில் தொகுத்துள்ளனர்.



இவர்களது மகத்தான இம்முயற்சி பற்றிப் பேராசிரியர் மார்கிகேரியோத் (margolioth) தனது Lectures on Arb histroians என்னும் நூலில் "Gratar industry and effeort: tjan in any analogousKcase" அதனோடு வேறு எதனையும் ஒப்பிட முடியாத அளவு கடும் ஒத்துழைப்பை புரிந்தன மகத்தான முயற்சி எனக் குறிப்பிடுகின்றார். ஒரு ஹதீஸ் அங்கீகரிக்கப்பட முன்னர் அதன் ஆதாரபூர்வமான தன்மையை உறுதிப்படுத்த தேவையான அத்தனை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

நபிகள் தம் போதனைகள் மூலமும் , மருத்துவத் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்கள். ஒரு முறை "அல்லாஹ்வின் அடியார்களே நீங்கள் மருந்துகளைக் கொண்டு பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள் மரணத்தைக் தவிர மற்றெல்லா நோய்களுக்கும் அல்லாஹ் மருந்துகளைப் படைத்துள்ளான். ஆனால் மனிதர்கள் அதனை அறியாதுள்ளனர்" எனக் கூறினார். மற்றொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு நோய்க்கும் மருந்துண்டு அம்மருந்தினை பயன்படுத்தினால் அல்லாஹ்வின் அருளால் நோய்குணமடையும் என்றார்கள். நபிகளாரின் இத்தகைய போதனைகள் நோய்களுக்கு சிகிச்சை செய்யும் படியும் பொருத்தமான மருந்து வகைகளைக் கண்டு பிடிக்கும் படியும் முஸ்லிம்களைத் தூண்டின. இதனால் முஸ்லிம்கள் நபிகள் காலத்திலும் அவரை அடுத்து வந்த காலங்களிலும் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்காக உழைத்து வந்தனர். குலபாஉர் ராஷிதின்களின் காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்ததனால் அரபியரல்லாத நாகரிகமற்ற மக்களுடன் முஸ்லிம்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. இதனால் பல புதிய நோய்கள் பற்றியும் அவற்றுக்கான மருத்துவச் சிகிச்சை முறைகள் பற்றியும் அவர்களுக்குத் தெரிய வந்தன. உமையாக்காலத்தில் இஸ்லாமிய அரசு மேலும் விரிவுற்றதனால் இத்துறையில் முன்னரிலும் பார்க்க கூடிய அறிவும் அனுபவமும் முஸ்லிம்களுக்கு கிடைத்தன. குறிப்பாக இக்காலப்பிரிவில் பிற மொழி மருத்துவ நூல்களை மொழி பெயர்க்கும் பணி தனிப்பட்ட முறையில் இடம் பெறத் தொடங்கியதால் பண்டைய கிரேக்க, பாரசீக, இந்திய மருத்துவ சிகிச்சை முறைகளை முஸ்லிம்களால் அறிந்து கொள்ள முடிந்தது.

இந்த வகையில் முஸ்லிம்கள் மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு துரித வேகத்தில் முன்னேறிச் செல்லும் வேளையில் மேற்குலகம் இத்துறையில் மிகவும் பின்தங்கிக்காணப்பட்டது. உதாரணமாக தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தனியான மருத்துவ மனைகளில் வைத்து அரச

செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த வேளையில் வலீத் பின் அப்துல் மலிக் காலத்தில், பிரான்சிய மன்னர் அந்நோயாளர்கள் அவர்கள் செய்த பாவம் காரணமாகவே இவ்வுலகில் கடவுளின் சாபத்திற் குள்ளாகி நோயுற்றிருப்பதாகக் கூறி அவர்களைத் தீயிட்டு எரிக்கும் படிகட்டளையிட்டான். மனநோயாளர்களைப் பொறுத்தவரை ஐரோப்பியர் அவர்களைப் பாவிகள் எனக் கருதி அவர்களின் கால்களைப் சங்கிலியால் பிணைத்து உணவு உடை கொடுக்காது வதைத்த வேளை இஸ்லாமிய உலகில் மனநோயாளர்கள் அனுதாபத்துடன் நோக்கப்பட்டு நூரி மருத்துவ முறையின்படி சிகிச்சையளிக்கப்பட்டனர். இவர்களுக்கென தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு அறையிலும் இரு பணியாளர்கள் இருந்து அவர்களைப் பராமரித்தனர். தினமும் அவர்களுக்கு தூய உணவும் உடையும் வழங்கப்பட்டன. இறைவழிபாட்டில் ஈடுபடவும் குர்ஆனைச் செவியுரவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இவ்வாறு நோயாளர்களை தனியாக வைத்து சிகிச்சையளிக்கும் முறையும் நபியவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதே. உதாரணமாக போராட்டங்களில் காயமுற்றவர்களை மஸ்ஜிதுன் நபவியின் ஒரு பக்கத்தில் கூடாரம் அமைக்கப்பட்டு அதில் வைத்து சிகிச்சையளிக்கும் ஏற்பாடு செய்தார்கள். யுத்தத்தின் போது காயமுற்றிருந்த ஸஅத் (ரலி) அவர்களுக்கு இவ்வாறே சிகிச்சையளிக்கப்பட்டது.

உமையாக் காலத்திலும் தனிப்பட்டோரால் மேற்கொள்ளப்பட்ட மொழி பெயர்ப்பு பணி அப்பாசியக் காலத்தில் அரச ஆதரவுடன் நடைபெற்றதனால் கிரேக்க மருத்துவ மேதைகளான கெலன் , ஹிபோகிரடிஸ் போன்றோரின் நூல்கள் அரபு மொழியில் பெயர்க்கப்பட்டன. கி.பி. 750 ~ 900 வரையிலான காலங்களில் இம் மொழிபெயர்ப்புப்பணி உச்ச நிலையை அடைந்தது. ஹனீப் பின் இஸ்ஹாக் இப்பணியில் ஈடுபட்ட குறிப்பிடத்தக்க அறிஞராவார். இவர் ஹிபோக்கிரடிசின் 06 முக்கிய மருத்துவ நூல்களையும் கெலனின் 39 கட்டுரைகளையும் , போலின் 07 நூல்களையும் அரபியில் மொழி பெயர்த்தார். அத்துடன் சுயமாகவே பல மருத்துவ நூல்களையும் இவர் எழுதினார். ஈஸாபின் யஉறியா என்பாரும் கெலனின் 17 மருத்துவ நூல்களை மொழி பெயர்த்துள்ளார்.

ஈராக்கின் ஐயார் பிரதேசத்தில் வாழ்ந்த ஸாதிக் பின் குர்ஆக் என்பாரும் ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளராவார். இவர் மருத்துவம் சம்பந்தமான பல நூல்களை எழுதியுள்ளார். இந்நூல்களில் 31 பாகங்கள்



எகிப்தில் அச்சிடப்பட்டுள்ளன. தலை , மார்பு , வயிறு முதலிய பகுதிகளைத் தாக்கும் நோய்கள் , அவற்றுக்கான காரணங்கள் , நோயின் அறிகுறிகள், சிகிச்சை முறைகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் இவரது நூல்களில் காணப்படுகின்றன.

கிரேக்க மருத்துவ மேதை கெலனின் உடற்கூற்று மருத்துவம் பற்றிய 7 பிரதான நூல்கள் காலத்தால் அழிந்து விட்டன. அவற்றின் அரபு மொழி பெயர்ப்பு நூற்கள் மட்டுமே எங்கும் இன்றும் கிடைக்கின்றன. மஃமூனினால் நிறுவப்பட்ட பைதுல் ஹிக்மா, மருத்துவத் துறையில் ஈடுபடுவோருக்கும் மொழி பெயர்ப்பாளர்களுக்கும் எப்போதும் ஊக்கமளித்துவந்தது. இதனால் இஸ்லாமிய உலகில் மருத்துவத்துறை அதிக செல்வாக்குடன் துரித வளர்ச்சி கண்டது.

உமையா காலத்தில் அரபு தேசிய மொழியாக்கப்பட்டதால் அரபியரல்லாதோரும் அரபியில் தேர்ச்சி பெறும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. இதனால் அரபியில் பெயர்க்கப்பட்ட மருத்துவ நூல்களைப் பலரும் படிக்கவும் ஆராயவும் முற்பட்டனர். இது முஸ்லிம்களது மருத்துவ அறிவு விரிவுற பெரும் துண்டுதலாய் அமைந்தது. எனவே முஸ்லிம் அறிஞர்கள் மருத்துவத் துறையில் அதிக கவனம் செலுத்தி நூற்களை மொழி பெயர்த்ததுடன் புதிய மருந்துகளைக் கண்டு பிடிப்பதிலும் சிகிச்சை முறைகளை அறிமுகப் படுத்துவதிலும் நவீன கருவிகளை பிரயோகிப்பதிலும் அதிக கவனம் செலுத்தினர்.

மருத்துவக் கல்லூரிகள் , ஆய்வுகூடங்கள் , மருத்துவ மனைகள் , மருந்துக் கடைகள் போன்றவற்றை நிறுவி இத்துறையின் வளர்ச்சிக்கு உதவினர். முஸ்லிம்கள் மத்தியில் எண்ணற்ற அறிஞர்கள் இத்துறையில் ஈடுபட்டதனால் உலகெங்கும் போதிய மருத்துவர்கள் தோன்றினர். இத்தகைய மருத்தவர்கள் மருத்துவத் துறையில் மட்டுமன்றி வேறு பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான மருத்துவர்களின் எண்ணிக்கை அபரிமிதமாய் இருந்ததனால் அவர்களைக் கணக்கிட்டுக் கூற முடியாது. என வரலாற்றாசிரியர் ஜோர்ஜ் ஸைதான் குறிப்பிடுகின்றார். ஹி. 3ம் நூற்றாண்டில் கலீபா முதவக்கிலின் குடும்ப வைத்தியர்காளக மட்டும் 56 பேர் இருந்ததாகவும் ஸைபுத் தௌலாவுக்கு 24 வைத்தியர்கள் இருந்ததாகவும் அறியப்படுகின்றது. இத்தகைய எண்ணற்ற மருத்துவர்களுள் மிகவும் முக்கிமானவர்களாக அர்ராஸி , ஹுனைன் பின் இஸ்ஹாக், அலி இப்னு ஸீனா, இப்னு மைமூன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

வைத்தியர்களைப் பரீட்சித்து தகுதியுடையவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் பழக்கமும் காணப்பட்டது. இத்தகைய பரீட்சையை நடத்துபவர் பிரதம வைத்தியராக கருதப்பட்டார். அவர்களுள் முக்கியமானவர்களாக பக்தாத்தில் வாழ்ந்த ஸினான் பின் ஸாபித், எகிப்தில் வாழ்ந்த ஹஸ்புத்தீன் ஆகியோர் விளங்குகிறார்கள். மஃமூன் , முஃதஸிம் காலங்களில் மருந்து கலப்பவர்களுக்கும் பரீட்சை நடாத்தப்பட்டது.

சில வைத்தியர்கள் இராணுவத்திற்கென்றும் வேறுசிலர் கலீபாக்கள் , அமீர்களுக்கென்றும் நியமிக்கப்பட்டிருந்தனர். இத்தகையோருக்கு அரசு சம்பளம் வழங்கியது. இவர்களைத் தவிர பொதுவான வைத்தியர்கள் குடிகளுக்கு மருத்துவம் செய்து வந்தனர். அத்தகையவர்களில் சிலர் குறிப்பிட்ட நோய்களில் மாத்திரம் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தனர். குறிப்பாக கண் மருத்தவத் துறையில் தேர்ச்சி பெற்ற பலர் எகிப்தில் காணப்பட்டனர். பெண்கள் சம்பந்தப்பட்ட நோய்களில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களும் கணிசமாகக் காணப்பட்டனர். பெண்கள் குழுவொன்றும் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருந்தது. அவர்களுள் ஸ்பெய்னைச் சேர்ந்த அல் அபித் என்பாரின் மகளும், சகோதரியும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் பெண்களுடன் சம்பந்தமான மருத்துவத் துறையில் தலை சிறந்து விளங்கியதுடன், குறிப்பகாக ஸ்பெய்ன் கலீபா மன்ஸூரின் குடும்பப் பெண்களுக்கு மருத்துவம் செய்தனர்.

ஆய்வு நுணுக்கங்களைப் பயன்படுத்தி நோய்களைக் கண்டறிவதிலும் அவற்றுக்கு சிகிச்சையளிப்பதிலும் முஸ்லிம் மருத்துவர்கள் தலைசிறந்து விளங்கினர். சிறு நீரின் தன்மை, இதயத் துடிப்பு ஆகியவற்றை அவதானிப்பதன் மூலம் நோய்களைக் கண்டறியும் முறையை முஸ்லிம்களே முதலில் அறிமுகம் செய்தனர். ஆரம்பத்தில் சூடான மூலிகைகள் மூலம் மருத்துவம் செய்த முஸ்லிம்கள் காலப்போக்கில் நவீன மருந்து வகைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்தி மருத்துவம் செய்தனர். குஷ்ட ரோகம் போன்ற கொடிய நோய்களுக்கான சிகிச்சை முறைகளையும் அறிமுகப்படுத்தியதுடன், சத்திர சிகிச்சை முறைகளையும் கண்டுபிடித்தனர்.

வைத்திய முறைகளில் ஒன்றான நாட்டு வைத்திய முறையையும் அவர்கள் அறிந்திருந்தனர். யஹியா பின் காலித், அல்பர்மகியின் காலத்தில் இந்தியாவிலிருந்து நாட்டு வைத்திய முறைகளை அறிவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. யூனானிய , இந்திய வைத்தியக் குறிப்புக்களையும் , நூல்களையும் மொழி பெயர்த்ததன் மூலம் முஸ்லிம்கள் சுயமாக இத்துறையில்



ஈடுபட வாய்ப்புக் கிடைத்தது. பின் இத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டதுடன், புதிய மருந்து மூலிகைகளும் உபகரணங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இத்துறையில் தலைசிறந்த வைத்தியர்கள் தோன்றினர். இதைவிட இன்றும் பிரபல்யம் பெற்று விளங்கும் "எகிவ்பன்சர்" மருத்துவமுறையையும் முஸ்லிம்களே முதன் முதலில் அறிமுகம் செய்தனர். அப்பாசியரது எழுச்சிக் காலத்தில் பரவலாக மருத்துவ மனைகளும் ஆய்வுகூடங்களும் மருந்துக் கடைகளும் அமைக்கப்பட்டிருந்தன. பொதுவாக மேற்குலகம் இத்தகைய மருத்துவ நுணுக்கங்களையும் அறிஞர்களையும் முஸ்லிம்களிடமிருந்தே பெற்றது. இன்று கூட பிரான்சியரிடம் காணப்படும் மருந்து மூலிகைகள் உபகரணங்கள் நோய்கள் போன்றவற்றின் பெயர்களில் கணிசமானவை அரபுப் பெயர்களாக அல்லது அரபிகளால் கையாளப்பட்ட ஹிந்தி பாரசீக மொழிப் பெயர்களாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. எனவே அன்று முஸ்லிம்களின் கையில் தான் அறிவியல் உலகு இருந்தது. அதாவது கி.பி.8ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 13ம் நூற்றாண்டு வரை ஆகும். என்பதற்கு சான்றாக ஜான்ஸ்டினின் பகுப்பாய்வு தகுந்த உதாரணமாக அமையும் என நான் நினைக்கிறேன்.

இனி முக்கியமான மருத்துவநிபுணர்களைப் பற்றிச் சுருக்கமாக நோக்குவோம். முஸ்லிம் மருத்துவ வரலாற்றில் புகழ் பெற்று விளங்கும் மருத்துவ அறிஞர்களுள் ஸகரிய்யா அல் ராஸி (865 ~ 925) யும் ஒருவர். அல் ராஸி, "ஐயத்துக்கிடமற்ற முறையில் இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் மருத்துவருமாவார்" என மக்ஸ் மேரோப் (max meyerthof) குறிப்பிடுகின்றார்.(ஆதாரம் முஸ்லிம்களும் அறிவியலும்)

மருத்துவம் பற்றி 17க்கு மேற்பட்ட நூல்களை இவர் எழுதியதாகக் கூறப்படுகின்றது. அவற்றுள் 20 தொகுதிகளைக் கொண்ட "அல்ஹாவி" மிகப் பிரபல்யம் வாய்ந்ததாகும். அல் ராஸியின் காலம் வரை இருந்து வந்த

கிரேக்க, ஸிரிய , இந்திய ஆரம்பகால அரேபிய மருத்துவ முறைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. சுகாதாரம் , நோய்களும் அவற்றின் அறிகுறிகளும் அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் மருந்துகளும் ஆகிய அம்சங்களை இந்நூல் பொதிந்திருக்கின்றது. இன்று இந்நூலில் பத்துப் பாகங்கள் மட்டுமே கிடைக்கின்றன. சிசிலி மன்னரான முதலாம் சாள்சின் கட்டளைப்படி Contiens என்ற பெயரில் இந்நூல் முதன் முதலாக லத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டது. இது 17ம் நூற்றாண்டில் ஐரோப்பிய மருத்துவக் கல்லூரிகளிற் பாட நூலாகப் பயன்படுத்தப்பட்டதாக பேர்ணால் எழுதுகிறார்.

மற்றொரு பிரபல நூலான 'அல் ஜீதாரி வல் ஹஸ்பா' இன்று பெரியம்மை , சின்னம்மை பற்றி எழுதப்பட்ட மிக ஆதாரபூர்வமான நூலாக விளங்குகின்றது. இது லத்தீனும் ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டதோடு , 1849 க்கும் 1866க்கும் இடைப்பட்ட காலத்தில் 40க்கும் அதிகமான தடவை பதிக்கப்பட்டுள்ளது. பெரியம்மையை ஒரு நோய் என்ற வகையில் விளக்கும் முதல் நூலாகவும் , சின்னமைக்கும் பெரியம்மைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை முதன் முதலில் எடுத்துக் காட்டிய நூலாகவும் இது விளங்குகின்றது.

அல் ராஸி , மகப்பேற்று மருத்துவம் (Gynecology) பெண் நோய் மருத்துவம் (Obsterics) சிறுநீரகம் என்பவற்றிலுண்டாகும் கற்கள் என்பன பற்றியும் எழுதினார். கீழைத்தேசத்திலுள்ள பொதுவான நோய்கள்சிலவற்றுக்கான பரிகாரங்கள் பற்றிய இவரது ஆய்வுக் கட்டுரையும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் புகழ் பெற்ற சத்திர சிகிச்சை நிபுணராகவும் திகழ்ந்தார்.

லத்தின் உலகில் அலி அப்பாஸ் என்ற பெயரில் பிரபல்யமான அலி இப்னு அல் அப்பாஸ் என்பவர் குறிப்பிடத்தக்க மற்றொரு மருத்துவராவார். இவரால் எழுதப்பட்ட "கிதாபுல் மாலிகி" மருத்துவ விஞ்ஞானத்தின் கோட்பாடு ரீதியானதும் செயல்முறை சார்ந்ததுமான ஒரு கலைக்களஞ்சியமாகும். வில்லியம் ஹார்விக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நுரையீரலுக்குரிய குருதிச் சுற்றோட்டம் (capillary Circulation) எனும் இரத்த ஓட்ட முறை பற்ற



விளக்கப்பட்டது. இந்நூல் இருபது சொற்பொழிவுகளைக் கொண்டது. இப்னு ஸினாவின் "கானூன்" எனும் நூலின் தோற்றம் வரை இது மருத்துவத் துறையிலே புகழ் பெற்ற நூலாக விளங்கியது.

குழந்தை பிறக்கும் முறை பற்றி இவரே முதன் முதலிற் சரியான விளக்கமளித்தார். நோயாளிக்கு மருந்தைக் கொண்டல்ல , உணவைக் கொண்டே சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடும் அலி அப்பாஸ் ஒரு நோயாளியைச் சாதாரண எளிமையான மருந்தைக் கொண்டு குணப்படுத்தச் சாதகமான கூறுகள் தென்படின் பல்வேறு கலவைகளைக் கொண்ட மருந்துகளை அவனுக்குக் கொடுக்கக் கூடாது என்றும் குறிப்பிடுகிறார்.

இப்னு ஸீனா என்ற சுருக்கமான பெயரிலும் அவிஸின்னா என்ற லத்தீன் பெயரிலும் அழைக்கப்படும் அபூ அலி அல் ஹீசைன் அல் சீனா (890 – 1037) மத்திய கால மருத்துவத் துறை வளர்ச்சியின் உச்சத்திற்குக் காரணமாக அமைந்தவராவார். இவர் 99 நூல்களை எழுதியதாக புரொக்கல்மன் குறிப்பிடுகிறார். இவற்றுள் 17 மருத்துவம் பற்றியதாகும். மருத்துவ நூல்கள் "கானூன் பில் திப்" மிகப் பெரியதும் முக்கியதமானதுமாகும். ஐந்து பாகங்களைக் கொண்ட இந்நூல் 760 வகையான மருந்துகளை , பொது மருத்துவம் , எளிய மருந்துகள் , உடலின் அனைத்துப் பகுதிகளையும் பாதிக்கும் நோய்கள் என்பனபற்றி விளக்கும் ஒரு கலைக்களஞ்சியமாகும்.

"இந்நூல் நீண்ட காலமாக மருத்துவத்துறையின் வேதநூல் போன்று கருதப்பட்டது" என ஒஸ்வர் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார். இந்நூல் 12ம் நூற்றாண்டில் கிரிமோனாவைச் சேர்ந்த ஜெரார்ட் என்பவரால் லத்தின் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. 15ம் நூற்றாண்டின் பின்னைய முப்பது வருட காலத்திலே பதினாறு முறையும் 16ம் நூற்றாண்டில் 20 முறையும் பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் வெளியிடப்பட்டதிலிருந்து இந்நூலின் மகத்துவத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்நூலின் முதலாம் பாகம் மனித உடல், ஆன்மா, நோய்கள், அவற்றின் அறிகுறிகள், பொதுச் சுகாதார விதிகள், பொதுவான சிகிச்சை முறைகள், பற்றிக் கூறுகின்றது. இரண்டாம் பாகத்தில் நோய்களின் அறிகுறிகள்

அகர வரிசையில் விளக்கப்படுகின்றன. மூன்றாம் பாகத்தில் தலைமுதல் கால் வரையுள்ள உறுப்புகளைப் பாதிக்கும் நோய்கள் பற்றியும் பொதுநோய்கள் பற்றியும் கூறப்படுகின்றன. நான்காம் பாகத்தில் காய்ச்சல் , வீக்கம், உடைவு, முறிவு, நஞ்சுவகைகள், சருமநோய்கள், அறுவைச் சிகிச்சை, என்பன விளக்கப் படுகின்றன. ஐந்தாம் பாகம் கலவை மருந்துகளையும் சிகிச்சை முறைகளையும் கூறுகின்றது. இப்பெருநூலுக்கு எண்ணற்ற மருத்துவ மேதைகள் விளக்கவுரைகள் எழதினர். இந்நூல் 12 முதல்17 ஆம் நூற்றாண்டுவரை சென்லூயிஸ் மொன்ட் பொல்வலியர் பல்கலைக்கழகங்களிற் பாடநூலாகப் பயன்படுத்தப்பட்டது.

இப்னு சினாவின் புகழுக்குக் காரணமான மற்றொரு நூல் "அஷ் ~ ஷிபா" ஆகும். இன்னுமொரு நூலிலே உள நோய்களுக்கான மருந்துகளும் சிகிச்சை முறைகளும் விளக்கப்பட்டுள்ளன. உள மருந்தியல் (Psycho - pharmacology) பற்றி எழதப்பட்ட முதல் நூல் இதுவாகும்.

நீராலும், மண்ணாலும் நோய்கள்பரவுகின்றன என்பதையும் சயரோகம் தொற்றும் தன்மை வாய்ந்தது என்பதையும் இவர் நிறுவினார்.

இப்னு ஸீனாவுக்கு அடுத்ததாக, பிரபல்யம் வாய்ந்த மற்றொரு மருத்துவ நிபுணர் , ஸ்பெயினைச் சேர்ந்த அல் ஸைஹராவி (936 ~ 1013) ஆவார். இவருடைய முழுப்பெயர் அபுல் காசிம் கலப் இப்னு அப்பாஸ் அல் ஸைஹ்ராவி (லத்தீன் பெயர் ~ அபுல் காஸிஸ் ) என்பது. இவர் ஸ்பானியக் கலீபா இரண்டாம் ஹகதின் அரச சபை மருத்துவராகப் பணிபுரிந்தார்.

இவரது புகழ் பெற்ற நூலான "அல் தஸ்ரீப்" முப்பது பகுதிகளைக் கொண்டது. இந்நூலின் இறுதிப்பகுதி அறுவைச் சிகிச்சை பற்றிக் கூறகின்றது. கண் , காது , பற்களோடு தொடர்புடைய அறுவைச் சிகிச்சை முறைகளை விளக்கும் இவர் , அறுவைச்சிகிச்சைக்காண உபகரணங்கள் பற்றியும் மாதிரிப் படங்கள் மூலம் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். காயங்களைச் சுடுதல், சிறுநீரகத்தில் உள்ள கற்களைச் சிறுநீர்ப்பையில் வைத்தே அழித்தல். சில நோய்களுக்காக குருதி நாளத்தை வெட்டிக் குருதியை வெளியேற்றல் போன்ற வைத்திய முறைகளும் இந்நூலில் எடுத்துக் காட்டப்படுகின்றன. மேலும், பெண்களின் நோய்கள் , மகப்பேறு மருத்துவம் என்பனவும் விளக்கப்படுகின்றன.

மேலை, கீழைத் தேசங்களில் அறுவை மருத்துவத் துறையின் முன்னேற்றத்திற்கு இந்நூல் பெரும் பங்களிப்பு செய்துள்ளது. மேற்படி நூலின் அறுவைச் சிகிச்சை பற்றிய பகுதி லத்தின் மொழிக்குப் பெயர்க்கப்பட்டு , ஸலானோ , மொன்ட் பொல்லியர் பல்கலைக்கழகங்களில் பல நூற்றாண்டுகளாக அறுவைச் சிகிச்சைக்குரிய பாடநூலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.



பக்தாதைச் சேர்ந்த அலி இப்னு ஈஸா , கண்ணோய்கள் பற்றி மிகச் சிறந்த ஒரு நூலை எழுதினார். லத்தீனில் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல் 18ம் நூற்றாண்டில் நடுப்பகுதி வரைக் கண்ணோய்கள் பற்றி ஐரோப்பாவில் ஆதாரபூர்வமான நூலாகக் கருதப்பட்டது.

எகிப்திய மருத்துவ மேதைகளுள், ஐரோப்பாவில் அல்ஹேஸன் என அழைக்கப்படும் இப்னு அல் ஹைதம் (965 ~ 1020) குறிப்பிடத்தக்கவர். கண்ணோயியல் துறையில் பல காலம் வரை உண்மையென்று நம்பப்பட்டு வந்த தவறான கருத்துக்களைத் தவிடுபொடியாக்கி , உலகம் இன்று வரை ஏற்கின்ற கருத்துக்களை நிறுவிப் பெரும் புகழ் பெற்ற மேதைகளுள் ஒருவர் இவர். இவருக்குப் புகழை ஈட்டிக் கொடுத்த நூல் "கிதாபுல் மனாழிர்" ஆகும். "வெளிப்பொருள்களிலிருந்து ஒளிக்கதிர்கள் கண்ணுக்கு வருகின்றனவே தவிர அதுகாலவரை நம்பப்பட்டு வந்தாற் போல் கண்களிலிருந்து ஒளிக்கதிர்கள் அப்பொருள் மேற் சென்று பதிவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டி , பார்வையின் இயல்பு பற்றிக் கிரேக்கர் நம்பி வந்த கருத்தை இவரே முதலிற் திருத்தியமைத்தார் இவரது விளக்கங்கள் வெறும் கருதுகோள்களிலோ, ஊகங்களிலோ தங்கியிருக்க வில்லை. மாறாக உடலமைப்பியற் சோதனைகளையும் கேத்திரகணித ஆய்வு களையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தன" என டிரோப்பர் குறிப்பிடுகின்றார்.

விழித்திரையே பார்வைக்குரிய பகுதி என்ற கண்டு பிடிப்பு உட்பட, கண்ணொளியியற் , துறையில் நிலைபேறான பல கண்டுபிடிப்புகளை இவர் செய்திருக்கிறார். இரு கண்கள் மூலமாகவும் பார்க்கின்ற போது ஒரே பொருள் எவ்வாறு கண்களுக்குப் புலனாகின்றது என்பதனையும் இவர் விளக்கினார்.

மேற்குலகில் அவரோஸ் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற மாபெரும் தத்துவஞானியான இப்னு ருஷ்த் (ம.1198) பதினாறு மருத்துவ நூல்களை எழுதினார். மருத்துவத்தின் பொதுவிதிகள் பற்றி இவர் எழுதிய "குல்லியா பித் திப்" 'Colliget' என்ற பெயரில் லத்தீனுக்கு மொழிபெயர்க்கப்பட்டு , ஐரோப்பாவில் பல தடவை புதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் ஏழு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி உடலமைப்பியல் பற்றியும், 2ஆம் பகுதி உடற்றொழிலியல் பற்றியும் , 3ஆம் பகுதி நோயியல் பற்றியும், 4ஆம் பகுதி நோய்களை இனங்காணல் பற்றியும், 5 ஆம் பகுதி மருந்தியல் பற்றியும், 6ஆம் பகுதி உடனலவியல் பற்றியும், 7ஆம் பகுதி சிகிச்சை முறைகள் பற்றியும் கூறுகின்றன. இதனை ஒரு மருத்துவக் கலைக்களஞ்சியம் என்றே கூறலாம். இவரது மருத்துவ நூல்களுள் இதுவொன்று மட்டுமே இன்று கிடைக்கக் கூடியதாக உள்ளது.

கொள்ளை நோயாகக் கருதப்படும் பிளேக் நோய் பற்றி மிகச்சிறந்தவொரு நூலை முதன் முதலில் எழுதியவர் இப்னு காதிமா (1348 ~ 1369) ஆவார். ஸ்பெயினைச் சேர்ந்த அல்மீரியாவில் 1348 ~ 49 இல் பரவிய கொள்ளை நோயே இந்நூலை எழுத அவரைத் தூண்டியது. பிளெக் நோய் பரவும் முறை , அதற்கான சிகிச்சை முறைகள் என்பன பற்றி முன்னர் கிரேக்கர் அறிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நவீன மருத்துவவியலின் மூலகர்த்தாக்களுள் ஒருவரான இப்னு அல் நபீஸ் (1210 ~ 1289) இப்னு ஸீனாவின் கானூன் என்னும் நூலுக்கு விளக்கவுரை எழுதினார். அவ்விளக்கவுரையில் காலன் (Galen) இப்னு ஸீனா ஆகிய இருவரினது அபிப்பிரயாங்களுக்கும் முரண்பட்ட வகையில் நுரையீரலுக்குரிய குருதிச் சுற்றோட்டம் பற்றி முற்றிலும் சரியான விளக்கத்தைக் கொடுத்தார். மைக்கல் ஸேவிட்டஸ் (1556) ரெல்டொ கொலம்போ ஆகியோரின் கண்டுபிடிப்பிற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே இக்கருத்து வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"அல் கிதாபுஷ் ஷாதமில் பித் திப்" என்பது இவரால் எழுதப்பட்ட ஒரு மருத்துவக் கலைக்களஞ்சியமாகும். கண் வைத்தியத் துறையில் அரேபியர் பெற்றிருந்த முழுமையான அறிவின் பொழிப்பாக விளங்கும் நூல் ஒன்றினையும் இவர் எழுதினார்.

மேற் கூறப்பட்டவர்களோடு இன்னும் நூற்றுக்கணக்கானோர் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்குப் பணிபுரிந்துள்ளனர். பிரபல முஸ்லிம் வாழ்க்கைச் சரிதை நூலாசிரியர்களான அல் கிப்தி இப்னு கலிகான் , இப்னு அபீ உஸைபியா போன்றோர் இவர்களைப் பற்றி விரிவான விளங்கங்களை அளித்துள்ளார்கள்.

இவ்விடத்தில் யூனானி மருத்துவத்துறையை இன்றுவரை இஸ்லாமியரே கூடுதலாக வளர்த்து வருகின்றனர். அதே போல் ஆயுள் வேத வைத்தியத்துறைக்கு அவர்களின் பங்களிப்பை அளவிடத்தான் முடியுமோ!

எனது தந்தை மதிப்புக்குரிய முஹம்மது அலியார் முஹம்மது சரீப் அவர்கள் சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் வைத்திய கலாநிதி பட்டம் பெற்று மருத்துவக்கலையை பரம்பரை பரம்பரையாக வளர்த்தெடுப்பதில் சிறப்பாக செயற்படுகின்றார்.



# அறிவியல் பாதையில் இஸ்லாமிய அரசுகள்

இஸ்லாமிய ராச்சியங்களின் ஒத்துழைப்பானது அறிவியல்துறை வளர்ச்சிக்கு முக்கிய ஆணி வேராக அமைந்தது. அதைத் தங்களின் இன்றிமையாக் கடனாகவும் பொறுப்பாகவும் கருதினர்.

அறிவியலுக்கு கிடைக்கும் மகத்தான வெற்றியை இஸ்லாத்திற்கும் இராச்சியத்திற்கும் கிடைக்கும் வெற்றியாகக் கொண்டாடினர்.

இதைப்பற்றிப் புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளர் H.A.R. கிப் அவர்கள் தெரிவிக்கையில் "இஸ்லாத்தின் அறிவியல் விஞ்ஞான மறுமலர்ச்சி~ உயர் பதவிகளில் இருந்தோரின் நல்லாதரவு கொடைத்தன்மையும் சார்ந்திருந்தது" என்றார். மேலும் அவர் விபரிக்கையில் முஸ்லிம் சமுதாயம் வலிமை குறைந்து கொண்டு செல்கையில் அறிவியல் வளர்ச்சிக்கு அதன் ஆற்றலையும் வீரியத்தையும் இழந்தது. ஆனால் ஏதாவது ஒரு தலைநகரில் அரசர்களும் அமைச்சர்களும் இன்புறும் நிலைக்காகவோ இலாபத்துக்காகவோ அல்லது புகழ்ச்சிக்காகவோ அறிவியல் வளர்ச்சியின் பாதைக்கு மெருகூட்டி அதன் சுடரை நாலாபகுதிக்கும் வெளிச்சம் கொடுக்க அவர்கள் தவறவில்லை எனத் தெரிவிக்கின்றார். இஸ்லாமியரின் (இயக்கம்) முனைப்பான பங்கு கொண்டு விரைவான வளர்ச்சிக்கு அதன் நேர் சரியான பாதையைத் தெரிந்து கொண்டது. உலகளாவிய நோக்கில் அமைந்த ஒப்பற்ற இஸ்லாமிய நெறியானது "வயலுக்கு வயல் வரம்பு தேவை" அருவிக்கு அருவிக்கரை தேவை ஆனால் வரம்புகளுட் கரைகளும் தடுப்புச்சுவர்களாக அமைவதை இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. அதை முற்றாக வெறுக்கின்றது. இந்த இலட்சியங்களை நோக்கமாகக் கொண்ட இஸ்லாமிய இராச்சியங்களும் அதன் தீபங்களை ஏற்றி வைத்தன. அறிவியலை வரவேற்று இ.ஸ்லாமிய நிழலில் ஒதுங்கி வாழ தகுந்த இடத்தையும் இஸ்லாமியர் வழங்கியதை வரலாறு இன்று நன்றி கூறுகின்றது. வேறு ஒரு வார்த்தையில் கூறினால் இஸ்லாமிய அரசுகள் நாடு, இனம், சாதி, மதம், மொழி போன்ற வேற்றுமையை உடைத்தெறிந்து அனைவரும் இறைபடைப்புக்களே என்ற உண்மையை வெளியிட்டன.

தரமான அறிஞர்களுக்கும் கல்வி மான்களுக்கும் இஸ்லாமிய அரசுகள் பரிசு வழங்கி உரிய கௌரவம் வழங்கி இஸ்லாமிய அறிஞர்களுடன் ஒத்துழைக்க வழிகோலியது. மேலும் ஆய்வு அறிஞர்களிடம் மிகத்தாராளத் தன்மையோடு அன்றைய அரசுகளும் அறிஞர்களும் நடந்துகொண்டதை வரலாறுவிளக்குகின்றது.

## அறிவியல் வளர்ச்சியின் தடைக்கற்கள்

முக்கியமான பகுதி ஒன்றை விபரிக்கலாம் என்று நினைக்கிறேன். குர்ஆனின் மாபெரும் புரட்சியும் நபி மணியின் அறிவியல் ஒளித்தீபங்களும் அதன் சுடரைப் பரப்பிய வேளையில் அதாவது மின்னல் வேக வளர்ச்சி பெற்ற அறிவுத் தேடல் அபார முயற்சி பெற்ற காலப்பகுதியில் விஞ்ஞான விந்தைகளையும் அறிவியல் பழங்கைளயும் உலகிற்கு வழங்கிய வேளையில் திடீர்த்திருப்பம் அரசியல் குழப்பம் அறிவியல் கலை நலிவுக்கு அடித்தளமாக அமைந்தது. கி.பி.1100-கி.பி. 1350 வரை முற்றாக ஸ்தம்பிதம் அடையாவிட்டாலும் பாரிய இடைவெளிகளை உண்டாக்கிற்று.

"இஸ்லாமியர் மீது கொண்ட மங்கோலியப் படையின் வெறி" மங்கோலிய கொடுங்கோல் மன்னன் ஜெங்கிஸ் கானின் படை எடுப்பினால் மக்களின் அன்றாட வாழ்க்கையின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்படலாயிற்று. சமூக சூழல் மாற்றமடைந்தது. போர்ப் பிணக்குகள் எந்த நாட்டில் காணப்படுமோ அங்கு அபிவிருத்தி, அறிவியல் அபிவிருத்தி, பொருளாதாரம், மனித உயிர் எல்லாம் அழிந்து விடுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய அரசுகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. அரசர்களும் அமைச்சர்களும் சுகபோக வாழ்க்கையில் மிதந்தனர். விஞ்ஞானிகள் சிறைப்பிடிக்கப்பட்டனர். அறிவியல் ஆய்வு கூடங்கள் நூல்நிலையங்கள் என்பன சிதைக்கப்பட்டன. எனவே இஸ்லாமிய விஞ்ஞானிகளும் கல்வி மான்களும் நிலைகுலைந்தனர். இதனால் பாதிக்கப்பட்ட அறிவியல் வளர்ச்சியின் சாதனைகள் பழங்கதையாக மாறத் தொடங்கின.

மத்திய கிழக்கின் வழியினூடாக அறிவியல் கண்டு பிடிப்புகள் மிகச் சடுதியாக ஸ்பெயினை (அந்தலூசியா) அடைந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருந்த வேளையில், அதாவது அங்கு அறிவியல் பூக்கள் மலர்ந்து மணம் வீசிய இத்தருணத்தில் இஸ்லாமியர் தலையில் மற்றொரு இடி இறங்கிற்று. அது தான் மறக்கமுடியாத சிலுவை யுத்தம். இதனால் அறிவியல் அடைக்கலம் அற்று, திக்கு திசையற்று பறக்க முடியாத வேளையில் தக்க தருணத்தில் ஐரோப்பா பக்கம் காற்று வீச அறிவியல் அங்கு தஞ்சமடைய வேண்டிய தகுந்த நேரமாகியது.



இங்கே ஒன்றைச் சுட்டிக் காட்டலாம். இஸ்லாமிய அறிவியல் பூக்களின் மணம்மேலை நாடுகளில் வீசத் தொடங்கியது. "ரோஜாபேர்க்கன்"குறிப்பிடுகையில் பாரதத்தைச் சேர்ந்த அடிலார்ரிட் , செஸ்ரைட் சேர்ந்த நொபாட் , திவோலையைச் சேர்ந்த பிளட்டோ , தெனிந்தியாவைச் சேர்ந்த ஹெர்மன் , புருகஸ் ஸைச் சேர்ந்த தருடொல்ப் , கிரிமோனாவைச் சேர்ந்த ஜேராட் ஆகியோரும் முழு ஐரோப்பாவையும் இங்கிலாந்தையும் சேர்ந்த கல்விமான்களும் பிரதானமாக அறிவியல்களைக் கற்றுக் கொள்வதற்கும் அவற்றை இலத்தீன் , கிப்ரு மற்றும் ஏனைய மொழிகளில் மொழி பெயர்க்கவும் 12ம் நூற்றாண்டில் ஸ்பெயினில் வந்துகுவிந்தார்கள்" என்றார்.

இஸ்லாமிய நூல்களையும் சுவடிகளையும் லத்தீன் , அரபு , கிப்ரு, பாரசீகம் , உருது போன்ற பல்வேறு மொழிகளில் பெற்று அவற்றை மொழி பெயர்ப்புச் செய்து தங்களின் அறிவியல் அடித்தளத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இப்போது அறிவியல் விஞ்ஞானக் கொடியை மேலைத்தேசம் தூக்கிப் பிடித்தது. இதனால் அபரிமித அறிவியல் வளர்ச்சியை அவர்கள் கண்டு கொண்டனர். விரைந்தெடுத்த அறிவியல் புரட்சியினால் ஐரோப்பிய புரட்சியும், எழுச்சியும் இரு துருவங்களாக நிமிர்ந்து கொண்டன.

இவ்விடத்தில் ஒன்றை நாம் நினைவுபடுத்த முடியும் ஐரோப்பிய கைத்தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர்கள் முதலில் முஸ்லிம்கள் என்பதை இன்னும் நினைவு கூறுகின்றனர்.

ஐரோப்பியர் அறிவியல் வளர்ச்சி கண்டபடியால் உலகெங்கும் தமது வல்லாதிக்கத்தை நிலை நாட்டியது மட்டுமல்ல, மனிதரை அடிமைப்படுத்தி, வளங்களைச் சுரண்டி இனக்குரோதத்தை வளர்த்து, தங்களின் நாட்டை வளப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு அடிமைப்பட்ட நாடுகளில் மத்திய கிழக்கு முஸ்லிம்நாடுகள் அதன் காலணியில் காணப்பட்டது. இதனால் அறிவியல் விஞ்ஞான வளர்ச்சி மட்டுமல்ல சமூக பொருளாதார சமய நடவடிக்கைகள் அனைத்தும் பாதிப்படைந்தன. மேலும் சில முஸ்லிம் அரசுகள் ஐரோப்பியரின் வழிகாட்டலைப் பின்பற்றி தன் ஆதிக்கத்தை இழந்து பெயரளவில் இஸ்லாமிய அரசுகளாக இருந்தன. இன மத உணர்வோ! அரசியல் வளர்ச்சியோ சிந்தனை எழுச்சியோ! அவ்வரசுகள் மேற் கொள்ளவில்லை. என்றால் பிழை இருக்காது.

மேற்கண்ட பலஅரசியல் போக்கைத் தவிர சமுதாய சிந்தனையாளர்களுள் அறிவியல் வளர்ச்சிக்கு தடைக்கற்களாக 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த சில இஸ்லாமிய அறிஞர்கள் இருந்துள்ளனர். இஸ்லாமிய நெறிகளுக்கு உகந்தது இல்லை எனப் பிரச்சாரமும் செய்தனர். அவர்கள் அக்காலத்தில் பெற்றிருந்த புகழும் சமுதாய அந்தஸ்தும் இவர்கள் கருத்துகளுக்கு இஸ்லாமியரிடையே எதிர்ப்பு ஏற்படவில்லை.

இதன் விளைவாக இஸ்லாமியரின் அறிவுக்கலை சார்ந்த பல நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக அறுபடத் தொடங்கியது. மேலும் அறிவியலை ஆராய்ந்து கொணடிருந்த மேற்குலகுடனும் தொடர்பு விடுபட்டிருந்தது. மேற்குலகு கிளர்தெழுந்து எழுச்சியடைந்த இந்த வேளையில் இஸ்லாமிய அறிவியல் ஆனது ஒரு தனித்திட்டாகி முழுமையாகப் பலமிழந்து காணப்பட்டது.

அயர்ந்து உறங்கிக் கொண்ட இஸ்லாமிய சமூகம் காலப்போக்கில் காலனித்துவம் முடிவிற்கு வந்த படியால் தனியுரிமை பெற்ற அரசுகள் உருவாகின. எனினும் அறுபட்ட அறிவியலை மீண்டும் முயற்சி செய்து புதுப்பிக்கவோ? புதுமையளிக்கவோ? அப்போது அது அநாதரவாக அழுது கொண்டிருந்தது.

*    *    *



# இப்போது இஸ்லாமியரின் அறிவியல் வளர்ச்சிப் போக்கு.....

மத்திய கிழக்கில் முஸ்லிம் தேசங்களில் இறைவன் கொடுத்த வளம் பொருளாதாரத் துறைகளில் அநாதரவாகத் திகழ்கின்றது. எனினும் அந்நாடுகள் அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து முற்று முழுதாக விடுபட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் இவர்களின் எண்ணெய் வளங்களைச் சூறையாடி முடிக்கின்றனர். மேலும் அவர்கள் அறிவியல் ஆர்வம் காட்டும் பங்கில் எம்வர் பத்து வீதம் கூடக் காட்ட முடியவில்லை என்பதுதான் தற்போது காணப்படும் கசப்பான உண்மை.

தங்கள் மூலவளங்களைப் பயன்படுத்தி தங்களிடையே அறிவூலங் களையும் அறிஞர் பெருமக்களையும் பெரும் வரியாக உருவாக்கும் சிந்தனை மோகம் இன்னும் கருக்கட்டிய அமைப்பு போதாது என்று கூறினால் பொருத்தமாக இருக்கும். இன்று எம்மவரில் உலகப் புகழ்பூத்த அறிவியல் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் இருக்கிறார்கள் பௌதீக வியலுக்காக நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானியர் அப்துல் ஸலாம். இந்திய ஏவுகணைத் தயாரிப்பாளரும் அணுப்பரிசோதனைப் பிதாவுமான அபுல்கலாம் பாகிஸ்தானிய அணுப்பரிசோதைன இயக்குனர் ஜவ்பார்கான் போன்று பல துறை ஆயிரம் அறிவியல் மேதைகளை அடுக்கிச் சொல்ல முடியும்.

மேலைய உலகம் இஸ்லாமிய நாகரிகத்தின் அறிவியல் முன்னேற்றங்களை எவ்வாறு உறிஞ்சிக் கொண்டது? ஒரு புறம் இருக்க மறுபுறம் இவ்வறியலினால் இஸ்லாமிய நாடுகள் அழிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளதை கோடிட்டுக் காட்ட முடியும். எவ்வாறாயினும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் பாதையில் காலடி எடுத்து வைத்து துரித மின்னல் வேகத்தில் வளர்ச்சிடைந்து கொண்டிருக்கும் இஸ்லாமிய அரசுகளில் ஈரான் , பாகிஸ்தான், ஈராக் , ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற நாடுகள்மிக முக்கியமானவை. எனினும் தற்போதைய நவீன தொழில் நுட்பங்களில் போட்டி போடக் கூடிய அணுவாயுத வல்லரசுகளில் பாகிஸ்தானும் இடம் பிடித்துள்ளது. எழுச்சி பெற்றுள்ள இவ் விஞ்ஞான முன்னேற்றம் மக்களின் நல்வாழ்வையும் அமைதியையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

இன்றைய நவீன அறிவியலுக்கு ஆழமான அடித்தளங்களை அமைத்த அன்றைய இஸ்லாமியர் அழுத்தமாக அமைத்துச் சென்றனர். அதற்கு அடிப்படைக் காரணம் குர்ஆனும் , நபி மணி வாழ்க்கையுமே என்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

எனவே இன்றுள்ள இனி வரப்போகும் இஸ்லாமிய இளைஞர்களே! சற்று சில வினாடிகள் அறிவுக்காக சேமியுங்கள்! முஸ்லிம்களாகிய நாம் ஆழ்ந்து மறந்து கனவு கண்டு மேலைத்தேசத்தாரின் விஞ்ஞான விந்தைகளில் மிதந்தும் அதை மெச்சியும் புகழும் இவ்வேளையில் கிளர்ந்தெழுந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எம் சகோதர முஸ்லிம்கள் சாதனை புரிந்தது போல் மீண்டும் புத்துணர்ச்சியும் புது எழுச்சியும் பெற்று நாம் மனிதநாகரிகத்திற்கும் மானுட முன்னேற்றத்திறகும் பங்களிப்புச் செய்ய வேண்டிய மிலேனியம் காலம் வந்து விட்டது.

"எழுந்திடு இறை படைப்பை ஆராய்ந்து பார்
புதுமையைக் கண்டறிவாய்"

முற்றும்.
வஸலாம்.

* * * *



# துணை நின்றவை

1. குர் ஆன் தர்ஜ்ஜீமா
2. அழகியற் கலைகள்
3. இஸ்லாமிய சிந்தனை
4. அல் ஹஸனாத்
5. அறிவியலும் அண்ணலாரும்
6. இலங்கை ~ தேசிய பத்திரிகைகள்
7. இஸ்லாமிய வரலாறு
8. கலைக் களஞ்சியம்
9. தாது
10. கூரியார்
11. இஸ். சஞ்சிகைகள்
12. இஸ்லாமிய நாகரிகம்



## நூலாசிரியர் பற்றி............

முஹம்மது சரீப் றம்ஸீன் ~ முஹம்மது சரீப் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் பட்டாணிச்சி புளியங்குளத்தில் வசிப்பவரான இவர் தொழிற்றகமையுடைய கலைப்பட்டதாரியும் விசேட (கணிதம்) பயிற்சி பெற்ற சிறந்த கணித ஆசிரியராவார்.

சிறுவயதிலிருந்தே இயற்கையை இரசித்து கலைப்படைப்புகளாக , கொண்டு வரவேண்டுமென்ற ஆர்வத்தில் கலை இலக்கியத்தில் இளைய பருவத்தில் காலடி எடுத்து வைத்தார். கவிதை , கட்டுரை , சிறுகதை என்பவற்றை வானொலி , பத்திரிகையில் வெளியிடுவதில் முதன்மையானவர்

சர்வதேச ஆசிரியர் தினம் கல்வி உயர் கல்வி அமைச்சினால் மாபெரும் விழாவாக கொண்டாடிய சமயம் ஆசிரியர்களுக்கிடையிலான படைப்பிலக்கிய கவிதைப் போட்டியில் "நல்லாசான்" என்ற இவரது கவிதை தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பிடித்து பாராட்டையும் பல கௌரவத்தையும் அடைந்து கொண்டது. ஜனாதிபதி இளைஞர் விருதிற்ககாக இவரது கட்டுரை தேசிய மடட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இவ்வாறு பல்வேறு இலக்கியப் போட்டியில் தேசிய மாகாண மாவட்டங்களில் வெற்றியீட்டிய இவர் "இஸ்லாமியக் கலைகள் " எனும் நூலை வெளியிடுகின்றார். இந்நூலானது இஸ்லாமிய கலை , பண்பாடு கலாசாரங்களை இஸ்லாமியருக்கு மட்டும் வழங்காது பல்லின மக்களுக்கும் உணர்வூட்டும் ஒரு நூலாக அமைகின்றது. என்பதில் ஐயமில்லை.

பல்துறைக்கலைஞர்
கண்ணையா

ISBN -No :- 955 - 96911-1-4

Jeyniga Centre , 155, Mannarroad, Kurumankadu, Vavuniya.